JACOB'S GREAT MINDS | Transforming *Lives*

Only @ Rs. 300

முதல் முயற்சியில் அரசு வேலை

## TNPSC

- Group I, II, II A
- Group IV
- VAO • Police
- Sub Inspector
- Banking
- Neet

1 LAKH PRIZE money for Topper



Under the guidance of

# JACOB SIR

Father of **TNPSC Aspirants**

Enjoy the Process, Sure shot Results

JACOB'S GREAT MINDS

@sjacob369 (JACOB'S TNPSC FREE COACHING)

**9488017496 , 9443774996**

DON'T CALL

*Gpay to* **9095851757** | *Whatsapp Screenshot to* **8668176209**

NAGERCOIL & MARTHANDAM


முதல் முயற்சியில்
சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ்
JACOB'S GREAT MINDS
444
காலிப்பணியிடங்கள்
கடந்த SI தேர்வில் அதிகளவில் மாணவர்கள் வெற்றி பெற்று தற்போது பயிற்சியில் உள்ளனர்
போலிஸ் தேர்வில் மாநிலத்தில் முதல் மாணவனை உருவாக்கிய பயிற்சி மையம்
தமிழகம் முழுவதும் மாணவர்களுக்கு ஆன்லைன் பயிற்சி
பொது அறிவு மற்றும் உளவியில் பகுதிக்கு தனிக் கவனம்
Only for 100 Students
₹9999
₹6999
கட்டாயத் தமிழுக்கு அதிரடி பயிற்சி
உடல்தகுதி தேர்வுக்கு சிறப்பு பயிற்சி
21 - 03 - 2022 முதல் வகுப்புகள் ஆரம்பம்
Gpay to 9095851757
Whatsapp Screenshot to 8668176209
CONTACT: 9488017496 , 9443774996
JACOB'S GREAT MINDS
@sjacob369 (JACOB'S TNPSC FREE COACHING)
மரம் வளர்ப்போம்! இயற்கை வளம் பேணுவோம்! புவி காப்போம்!

## 6 ஆம் வகுப்பு - தமிழ்
## முதல் பருவம்

### இன்பத்தமிழ்

- ஆசிரியர் பாரதிதாசன்.
- இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளை பாடியுள்ளார்.
- இவர் புரட்சிக்கவி, பாவேந்தர் என்றும் போற்றப்படுகிறார்.

**சொல்லும் பொருளும்**

- நிருமித்த - உருவாக்கிய, விளைவு - விளைச்சல், சமூகம் - மக்கள் குழு,

### தமிழ்க்கும்மி

- ஆசிரியர் பெருஞ்சித்திரனார்.
- இயற்பெயர் மாணிக்கம்.
- 'பாவலரேறு' என்னும் சிறப்பு பெயர் பெற்றவர்.
- கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார்.

**சொல்லும் பொருளும்**

- ஆழிப்பெருக்கு - கடல் கோள், மேதினி - உலகம், ஊழி - நீண்டதொருகாலப்பகுதி, உள்ளப்பூட்டு - அறிய விரும்பாமை.

### வளர் தமிழ்

**மூத்தமொழி**

- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
  இனிதாவது எங்கும் காணோம்" - பாரதியார்.
- "என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்" - என்று தமிழ்மொழியை வியந்தவர் பாரதியார்.

**வளமை மொழி**

- தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
- தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்மொழி.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கியங்களைக் கொண்டது.
- திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்களைக் கொண்டது.
- சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.
- துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள்.
- கட்டுரை, புதினம், சிறுகதை போன்றவை உரைநடை வடிவங்கள்.
- "தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" என்ற வரிகள் இடம்பெறுவது - தொல்காப்பியம்.
- "இதுநீ கருதினை ஆயின்" - சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம்.

**எளிய மொழி**

- தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளன.
- வலஞ்சுழி எழுத்துக்கள் - அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துக்கள் - ட, ய, ழ

**சீர்மை மொழி**

- சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.

❖ பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் என்று வழங்கினர்.
❖ பாகு + அல் + காய் = பாகற்காய்
❖ சீரிளமை = சீர்மை + இளமை
❖ பூவின் ஏழு நிலைகள் - அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்.
❖ தாவர இலைப் பெயர்கள்

தாள் - நெல், வரகு
ஓலை - பனை, தென்னை
தழை - மல்லி
கூந்தல் - கமுகு
தோகை - கரும்பு, நாணல்

இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கத்தில் உள்ள சில தமிழ் சொற்கள்

உலகம் - தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை நூல்களில் இடம்பெற்றுள்ளது.
வேளாண்மை - கலித்தொகை, திருக்குறள்
உழவர் - நற்றினை
மகிழ்ச்சி - தொல்காப்பியம், திருக்குறள்
அரசு - திருக்குறள்.

## கனவு பலித்தது

❖ "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி" ............................ ஔவையார்.
❖ "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" ........................... தொல்காப்பியம்.
❖ "கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி" ............................ கார்நாற்பது.
❖ "நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு" ........................... பதிற்றுப்பத்து.
❖ "கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர்" .................... நற்றிணை.
❖ "தினையளவு போதாச் சிறுபுல்நீர்
நீண்ட பனையளவு காட்டும்" .................. கபிலர்.

## சிலப்பதிகாரம்

❖ ஆசிரியர் இளங்கோவடிகள்.
❖ சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர்.
❖ காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
❖ ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம்.
❖ முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் போற்றப்படுகிறது.
❖ சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.
❖ திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது.
❖ "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" - இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்)
❖ "ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும்" - இளங்கோவடிகள்.

### சொல்லும் பொருளும்

❖ கொங்கு - மகரந்தம், திங்கள் - நிலவு, அலர் - மலர்தல், திகிரி - ஆணைச்சக்கரம். பொற்கோட்டு - பொன்மயமான சிகரத்தில், மேரு - இமயமலை, நாமநீர் - அச்சம் தரும் கடல், அளி - கருணை.

## காணி நிலம்

- ஆசிரியர் பாரதியார்.
- இயற்பெயர் சுப்பிரமணியன்.
- எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.
- 'வானை அளப்போம் கடல் மீனையளப்போம்' - மகாகவி பாரதியார்.
- பாடல் - காணி நிலம் வேண்டும்
  பராசக்தி காணி நிலம் வேண்டும் - பாரதியார்.
- காணி - நில அளவைக் குறிக்கும் சொல்.
- மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்.
- சித்தம் - உள்ளம்.

JACOB'S GREAT MINDS

## சிறகின் ஓசை

- பறவைகள் இடம் பெயர்தலை 'வலசைபோதல்' என்பர்.
- நீர் வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன.
- நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன.
- சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை 'கப்பல் பறவை' (frigate bird). இது தரையிரங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.
- "நாராய் நாராய் செங்கால் நாராய்" - என்று பாடியவா சத்திமுத்தப்புலவர்.
- "காக்கை குருவி எங்கள் சாதி" - என்று பாடியவர் பாரதியார்.
- தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏழுவீர் ஆயின் - பறவைகள் வலசை வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.
- ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதைய ஆய்வில் உறுதியாகிறது.
- வெளிநாட்டுப் பறவைகளுக்கு புகலிடமாகத் திகழ்கிறது தமிழ்நாடு.
- அழிந்து வரும் பறவையினம் சிட்டுக் குருவி. சிட்டுக்குருவி கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.

### தகவல் துளி

- இந்தியாவின் பறவை மனிதர் - டாக்டர் சலீம் அலி.
- தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் ' சிட்டுக்குருவியின் வீழ்ச்சி ' என்று பெயரிட்டவர். - டாக்டர் சலீம் அலி.
- உலகிலேயே நெடுந்தொலைவு (22,000 கி.மீ) பயணம் செய்யும் பறவையினம் 'ஆர்டிக் ஆலா'.
- பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி.
- உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் 20.

## கிழுவனும் கடலும்

- கிழவனும் கடலும் ( The oldman and the sea )
- 1954 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் எர்னெஸ்ட் ஹெமிங்வே.

## திருக்குறள்

- வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்பு பெயர்கள் உண்டு.
- அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகள் கொண்டது.
- பதிணென் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.
- திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டது.
- திருக்கறளானது உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து என பல சிறப்புப் பெயர்களில் வழங்கப்படுகிறது.
- நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## அறிவியல் ஆத்திசூடி

- ஆசிரியர் நெல்லை சு.முத்து
- தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர் என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை சு.முத்து. இவர் அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர்.
- விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர்.
- எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர்.
- ஔடதம் - மருந்து

## கணியனின் நண்பன்

- காரல் கபெக் என்பவர் 'செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர். இவர் 1920 ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார். அதில் ரோபோ என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார்.
- ரோபோ என்ற சொல்லுக்கு அடிமை என்பது பொருள்.
- 1997 ஆம் ஆண்டு மே மாதம் சதுரங்கப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ் என்பவர் கலந்து கொண்டார். ஐ.பி.எம். என்னும் நிறுவனம் உருவாக்கிய 'டீப் புளூ' என்னும் மீத்திறன் கணினி அவருடன் போட்டியிட்டது.
- உலகிலேயே முதன்முதலாக சவுதி அரேபியா ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளது. அந்த ரோபோவின் பெயர் சோபியா.
- ஐக்கிய நாடுகள் சபை புதுமையின் வெற்றியாளர் என்னும் பட்டத்தைச் சோபியாவுக்கு வழங்கியுள்ளது.

**தகவல் துளி**

- சர்.சி.வி. இராமன் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் இராமன் விளைவு என்னும் கண்டுபிடிப்பை வெளியிட்டார்.
- இந்த கண்டுபிடிப்பு அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத்தந்தது. இதுவே அறிவியலுக்கான முதல் நோபல் பரிசு ஆகும். எனவே பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் தேசிய அறிவியல் நாள் என கொண்டாடி வருகிறோம்.

# 6 ஆம் வகுப்பு - தமிழ்

## இரண்டாம் பருவம்
## மூதுரை

- ஆசிரியர் - ஔவையார்.
- இவருடைய பிற நூல்கள் - ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி.
- மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை எனப்பொருள்.
- இந்நூலில் 36 பாடல்கள் உள்ளன.
- பாடல் - மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
- சொற்பொருள் - சீர்தூக்கின் - ஒப்பிட்டு பார்ப்பது.

## துன்பம் வெல்லும் கல்வி

- ஆசிரியர் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- சிறப்புப்பெயர் - மக்கள் கவிஞர்
- பாடல் - ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே
  ஏன் படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே.

JACOB'S GREAT MINDS

## கல்விக்கண் திறந்தவர்

- தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்.
- இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றியவர்.
- மதிய உணவு திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- கல்வி புரட்சிக்கு வித்திட்டவர்.
- காமராசரைக் கல்விக் கண் திறந்தவர் என்று பாராட்டியவர் தந்தை பெரியார்.
- சிறப்புப் பெயர்கள் - பெருந்தலைவர், படிக்காத மேதை, கர்மவீரர், கறுப்பு காந்தி, ஏழைப்பங்காளர், தலைவர்களை உருவாக்குபவர்.
- இவரது நினைவாக மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமாராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976 இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

## நூலகம் நோக்கி

- ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய நூலகம் சீனாவில் (Tianjin Binhai Library) உள்ளது.
- முனைவர்.இரா.அரங்கநாதன் நூலக விதிகளை உருவாக்கியவர். இவர் 'நூலக அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.
- தமிழக அரசால் சிறந்த நூலகர்களுக்கு டாக்டர்.எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.
- பார்வையற்றவர்களுக்கான நூல்கள் - பிரெய்லி நூல்கள் எனப்படுகின்றன.

**அண்ணா நூற்றாண்டு நூலகம்**

- அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் எட்டுத் தளங்கள் **உள்ளது**.
- தரைத்தளம் - சொந்த நூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள்

- முதல் தளம் - குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள். இரண்டாம் தளம் - தமிழ் நூல்கள். மூன்றாம் தளம் - கணினி அறிவியல், தத்துவம், அரசியில் நூல்கள். நான்காம் தளம் - பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி. ஐந்தாம் தளம் - கணிதம், அறிவியல், மருத்துவம். ஆறாம் தளம் - பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை. ஏழாம் தளம் - வரலாறு, சுற்றுலா. எட்டாம் தளம் - நூலகத்தின் நிர்வாகப் பரிவு.

## ஆசாரக்கோவை

- ஆசிரியர் - பெருவாயின் முள்ளியார்.
- ஊர் - கயத்தூர்
- ஆசாரக்கோவை என்பதற்கு 'நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு' என்பது பொருள்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. 100 வெண்பாக்கள் கொண்டது.
- பாடல் - நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு.

## கண்மணியே கண்ணுறங்கு

- தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்து பாடுவதால் தாலாட்டு (தால்+ஆட்டு) என்று பெயர்பெற்றது.

## தமிழர் பெருவிழா

- பொங்கல் விழா தமிழர் திருநாள் என போற்றப்படுகிறது.
- மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்னும் பொருளும் உண்டு.
- மஞ்சுவிரட்டு என்பது மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்படுகிறது.
- திருவள்ளுவர் கி.மு.31 இல் பிறந்தவர். திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் 31 ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும்.
- தை முதல் நாளில் திருவள்ளுவராண்டு தொடங்குகிறது. தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்படுகிறது.
- வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை இந்திரவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

### அறுவடைத் திருநாள்

- அறுவடைத் திருநாள் ஆந்திரா, கர்நாடகா, மகாராட்டிரா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் "மகரசங்கராந்தி" என்றும்,
- பஞ்சாப் மாநிலத்தில் "லோரி" என்றும்,
- குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் "உத்தராயன்" என்றும் கொண்டாடப்படுகிறது.

## மனம் கவரும் மாமல்லபுரம்

- நரசிம்மவர்ம பல்லவ அரசன் மற்போரில் சிறந்தவன் என்பதால் "மாமல்லன்" என்றும் எனப்பட்டார்.
- நரசிம்மவர்மனின் தந்தை மகேந்திரவர்ம பல்லவர் ஆவார்.
- மாமல்லபுரத்தில் காணவேண்டிய இடங்கள் - அர்ச்சுனன் தபசு, கடற்கரைக் கோவில், பஞ்சபாண்டவர் ரதம், ஒற்றைக்கல் யானை, குகைக்கோவில், புலிக்குகை, திருக்கடல் மல்லை, கிருஷ்ணரின் வெண்ணெய்ப் பந்து, கலங்கரை விளக்கம்.

➢ சிற்பக் கலை நான்கு வகைப்படும். அவை குடைவரைக்கோயில்கள், ஒற்றைக் கல் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள், புடைப்புச் சிற்பங்கள். இந்த நான்கு வகைகளும் காணப்படும் ஒரே இடம் மாமல்லபுரம்.

## நானிலம் படைத்தவன்

- ஆசிரியர் - முடியரசன்.
- இயற்பெயர் - துரைராசு.
- பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
- "திராவிட நாட்டின் வானம்பாடி" என்று பாராட்டப்பெற்றவர்.
- இப்பாடல் "புதியதொரு விதி செய்வோம்" என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.
- பாடல் - கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டு பெருவெளியை எனத் தொடங்கும்.
- சொற்பொருள்
  சமர் - போர், கழனி - வயல், மறம் - வீரம், கலம் - கப்பல்.

## கடலோடு விளையாடு

- ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலான தொழில்பாடல்களும், விளையாடுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் ஆகியவையும் நாட்டுப்புறப்புறப் பாடல்களுள் அடங்கும்.
- இப்பாடல் சு.சக்திவேல் தொகுத்த "நாட்டுப்புற இயல் ஆய்வு" என்னும் நூலின் இடம் பெற்றுள்ளது.
- பாடல் - விடிவெல்லி நம்விளக்கு
  ஜலசா விரிகடலே பள்ளிக்கூடம் - எனத் தொடங்கம்.

## வளரும் வணிகம்

- 'உமணர் போகலும்' - நற்றிணை
- 'பாலொடு வந்து கூழொடு பெயரும்' - குறுந்தொகை
- 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' - அகநானூறு
- வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றிச் செல்லும்போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிகச்சாத்து என்பர்.
- பழங்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து மிளகு, தேக்கு, முத்து, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இறக்குமதி - சீனாவிலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு முதலியவையும், அரேபியாவிலிருந்து குதிரைகளும் வாங்கப்பட்டன.
- வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
  பிறவும் தமபோல் செயின் - திருக்குறள்
- வணிகரை "நடுவு நின்ற நன்னெஞ்சினோர்" என்று பட்டினப்பாலை பாராட்டுகிறது.
- 'கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாது' - பட்டினப்பாலை.
- சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
  கோடாமை சான்றோர்க்கு அணி. - திருக்குறள்.

தகவல் துளி

❖ நீண்ட நீண்ட காலம் - நீ,
  நீடு வாழ வேண்டும் ...................... என்ற பாடல் வரிகள் கவிஞர் அறிவுமதி.
❖ இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை.
  இஸ்ரோவின் தலைவர் சிவன்

- 2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். அவர் உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்றார்.
- புள் என்பதன் வேறுபொருள் பறவை.
- சத்திமுத்தப்புலவரால் பாடப்பட்ட பறவை நாரை
- ஆய்த எழுத்தின் வேறு பெயர் முப்புள்ளி, எ஋ கு.
- குழந்தைகள் தினம் - நவம்பர் 14
- மாணவர் தினம் - அக்டோபர் 15
- ஆசிரியர் தினம் - செப்டம்பர் 5
- தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12
- கல்வி வளர்ச்சி நாள் - ஜூலை 15

JACOB'S
GREAT MINDS

# 6 ஆம் வகுப்பு - தமிழ்

## மூன்றாம் பருவம்
## பாரதம் அன்றைய நாற்றங்கால்

- ஆசிரியர் - தாராபாரதி
- தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன்.
- ‘கவிஞாயிறு’ என்னும் அடைமொழி பெற்றவர்.
- புதிய விடியல், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.
- தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் - திருக்குறள்.
- இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- **பாடல் -** புதுமைகள் செய்த தேசமிது, பூமியின் கிழக்கு வாசலிது

## தமிழ்நாட்டில் காந்தி

- 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார்.
- 1919 ல் ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கொடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது.
- 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்கு சென்றார்.
- காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் - மதுரை.
- ஜி.யூ.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார்.
- திருக்குறள் அவரை கவர்ந்த நூலாகும்.
- 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் உ.வே.சா வரவேற்புக்குழு தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.
- “இந்த பெரியவரின் (உ.வே.சா) அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது” என்று கூறினார் காந்தியடிகள்.

## வேலுநாச்சியார்

- இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றை முறையாக கற்றுக் கொண்டார்.
- சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்துகொண்டார்.
- காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமணரம் அடைந்தார்.
- ஆங்கிலேயர்களை எதிர்த்து திண்டுக்கல் கோட்டையில் வேலுநாச்சியார் தங்கி ஒரு படையைத் திரட்டி பயிற்சி அளித்தார்.
- திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அங்கு நடுவே வேலுநாச்சிய்யார் அமர்ந்திருந்தார். அவரை சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகள் பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.
- மைசூரிலிருந்தும் ஐதர் அலி ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் அனுப்பி வைத்தார்.

- ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப்பிரிவிற்கு குயிலியும் தலைமை ஏற்றனர்.
- காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கியேரின் படை தோற்று ஓடியது.
- வேலுநாச்சியார் ஆங்கிலேயரிடமிருந்து மீண்டும் சிவகங்கையை கி.பி.1780 ஆம் ஆண்டு மீட்டார்.
- வேலுநாச்சியாரை ஆங்கிலேய அரசிடம் காட்டிக் கொடுக்க மறுத்ததால் உடையாள் என்னும் பெண் கொள்ளப்பட்டாள். சிவகங்கை செல்லும் வழியில் உடையாளுக்காக நடுகல் நடப்பட்டது.
- வேலுநாச்சியாரின் காலம் **1730 - 1796**

## பராபரக்கண்ணி

- ஆசிரியர் - தாயுமானவர்.
- தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது இப்பாடல்.
- இந்நூல் "தமிழ் மொழியின் உபநிடதம்" என்று அழைக்கப்படுகிறது.
- பராபரக்கண்ணி என்னும் தலைப்பில் 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகையாகும்.

சொல்லும் பொருளும்

- தண்டருள் - குளிர்ந்த கருணை, செம்மையருக்கு - சான்றோர்க்கு

## நீங்கள் நல்லவர்

- ஆசிரியர் - கலீல் கிப்ரான். இவர் லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்.
- இப்பாடப்பகுதியை கலீல் கிப்ரான் எழுதிய நூலை கவிஞர் புவியரசு "தீர்க்கதரிசி" என்னும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

## பசிப்பிணி போக்கிய பாவை

- புத்த பீடிகை மணிபல்லவ தீவில் உள்ளது. அத்தீவின் காவலர் தீவதிலகை.
- அங்கள்ள பொய்கையின் பெயர் கோமுகி, 'கோ' என்றால் பசு, முகி என்றால் முகம் என்று பொருள்.
- மணிமேகலா தெய்வம், மணிமேகலையை அழைத்துச்சென்ற தீவு - மணிபல்லவத் தீவு.
- வைகாசித் திங்கள் முழு நிலவு நாளில் இப்பொய்கையில், நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும், அது ஆபுத்திரன் கையில் இருந்த 'அமுதசுரபி' என்னும் பாத்திரம்.
- மணிமேகலையின் கையில் இருந்த அமுதப்பாத்திரத்தில் முதன் முதலில் உணவு இட்டவர் ஆதிரை.

## பாதம்

- ஆசிரியர் - எஸ்.ராமகிருஷ்ணன்.
- உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் இவரின் படைப்பகள்.
- இக்கதை 'தாவரங்களின் உரையாடல்' என்னும் சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## ஆசியஜோதி

- ஆசிரியர் - தேசிய விநாயகனார்.
- கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.
- ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய 'லைட் ஆ்ஃப் ஆசியா' என்னும் நுலைத் தழுவி எழுதப்பட்டது.
- இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.
- கும்பி - வயிறு, பூதலம் - பூமி

## மனித நேயம்

- இந்தியாவில் அமைதிக்கான முதல் நோபல் பரிசினைப் பெற்றவர் - அன்னை தெரசா.
- அமைதிக்கான இரண்டாம் நோபல் பரிசினைப் பெற்றவர் 'கைலாஷ் சத்யார்த்தி'.
- 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' என்னும் இயக்கத்தைத் தொடங்கியவர் கைலாஷ் சத்யார்த்தி.
- கைலாஷ் சத்யார்த்தி கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார்.
- உலக குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார்.

- ✓ குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தை குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது - கைலாஷ் சத்யார்த்தி.
- ✓ "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை" - அன்னை தெரசா.
- ✓ தமக்கென முயலா நொன்றாள் பிறர்க்கென<br>முயலுநர் உண்மையானே - புறநானூற்று பாடல் அடிகள்.
- ✓ "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" - வள்ளலார்.

## முடிவில் ஒரு தொடக்கம்

- விபத்தில் மூளை செயலிழந்துவிட்ட தங்களது மகனின் **இத**யத்தை கொடையாகத் தந்த மருத்துவ தம்பதியினர் - அசோகன், புஷ்பாஞ்சலி.
- சிறுமிக்குப் பொருத்தப்பட்ட இதயத்திற்**கு**ரிய இளைஞனின் பெயர் ஹிதேந்திரன்.

### தகவல் துளி

- வ.உ.சிதம்பரனார் வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை கொண்டிருந்தார்.
- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் "சுதேசி நாவாய் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- அன்பினில் இன்பம் காண்போம், அறத்தினில் நேர்மை காண்போம் - இவ்வரிகளை எழுதியவர். - புலவர்.அ.முத்தரையனார். மலேசியக் கவிஞர்.
- தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - கவிமணி, இயல்பு நவிற்சி அணி.

## *6 ஆம் வகுப்பு – தமிழ் இலக்கணம்*

### *அலகு – 1*

### *இலக்கணமும் மொழித்திறனும்*

### *மொழி அறிவோம்*

- *தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது.*
- *உயிர் எழுத்துகள் பன்னிரெண்டு*
- *மெய் எழுத்துகள் பதினெட்டு, ஆக மொத்தம் முப்பது.*

*(எ.கா). அண்ணா*

  - *அ – உயிரெழுத்து*
  - *ண் – மெய்யெழுத்து*
  - *ணா – உயிரும் மெய்யும் சேர்ந்து வந்த உயரிமெய் எழுத்து.*

- *உயிரும் மெய்யும் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன.*
- *அடிப்படையான தமிழ் எழுத்துகள் முப்பது மட்டுமே.*

### *குறில் நெடில் உண்டாவது எப்படி?*

- *அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்க்குறில் எழுத்துகள் உண்டாகின்றன.*

  *க் + அ = க (கடல்), க் + இ = கி (கிளி)*

- *ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஏழும் நெடில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய் நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.*

  *க் + ஆ = கா (காகம்), க் + ஈ = கீ (கீரைகள்).*

- ***வண்மை** என்பதன் பொருள் கொடைத் தன்மை. **வன்மை** என்பதன் பொருள் கொடுமை.*

### *அலகு – 2*

- *எழுத்துகளுக்கு இடையே நட்பும் உண்டு, இனமும் உண்டு. மெல்லின எழுத்தும், அதன் நட்பு எழுத்தான வல்லின எழுத்தும் அடுத்தடுத்து வருவது இயல்பு.*
- *ங்க; ஞ்ச; ண்ட; ந்த; ம்ப; ன்ற*
- *'ங்' என்ற எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். (எ.கா) சி**ங்க**ம், த**ங்கை**.*
- *'ஞ்' , 'ச' இரண்டும் நண்பர்கள். இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ.கா) ம**ஞ்ச**ள், அ**ஞ்சா**தே.*
- *மேலும். ண்ட, ந்த, ம்ப என்ற எழுத்துகளும் நண்பர்கள் (எ.கா) **பண்ட**ம், **பந்த**ல், **கம்ப**ன், தெ**ன்ற**ல்.*
- *இந்த இயல்பை புரிந்துகொண்டால் எழுதும்பொழுது பிழையின்றி தமிழில் எழுதலாம்.*

### *அ. தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள்*

### *(உடனிலை மெய்மயக்கம்)*

- *தமிழில் சில எழுத்துகள் தன் எழுத்தோடு மட்டும் சேர்ந்து வரும். (எ.கா) **பக்க**ம், அ**ச்ச**ம், மொ**த்த**ம், அ**ப்ப**ம்.*
- *க், ச், த், ப் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகள்.*

### *ஆ. தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துகளுடன் சேரும் எழுத்துகள்.*

### *(வேற்றுநிலை மெய்மயக்கம்)*

*(எ.கா) சார்பு, வாழ்க்கை.*

- *ர், ழ் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் சேர்ந்து வராது.*

**இ. தன் எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துகளும் உள்ளன.**

(எ.கா) ற் – குற்றம், மேற்கு. ன் – அன்னம், அன்பு

- தமிழில் அ என்னும் எழுத்து மனிதனைக் குறிக்கிறது.

**மயங்கொலிப் பிழை**

- தமிழில் ல, ழ, ள இம்மூன்றையும் வேறுபாடு இல்லாமல், ஒரே மாதிரி ஒலிக்கிறோம். அதனால், எழுதும்போது பிழை ஏற்படுகிறது. இதனை மயங்கொலிப் பிழை என்கிறோம்.

**தமிழின் அடிப்படைச் சொற்கள்**

- தமிழ்ச்சொற்கள் நான்கு வகைப்படும். அவை
- பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.
- இவற்றுள் முதன்மையானவை பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்.
- செல்வி வந்தாள் என்னும் சொற்றொடரில் செல்வி என்பது பெயர்ச்சொல். வந்தாள் என்பது வினைச்சொல். வினை என்றால் செயல் என்று பொருள்.

## அலகு – 3

**ஒரு சொல் பலபொருள்**

- ஆற்றுணா – ஆறு + உணா
- ஆறு என்பது வழியைக் குறிக்கிறது.
- ஆறு என்னும் சொல்லுக்குத்தான் எத்தனை பொருள்கள்?

  ஆறு – ஓர் எண் (6)

  ஆறு – இயற்கையான இருகரைகளுக்கு இடையில் நீர் ஓடும் பரப்பு

  ஆறு – வழி

  ஆறு – தணி

**இரட்டைக்கிளவி**

- ஒலியை உணர்த்தும் சொற்கள் இரண்டு இரண்டாகவே சேர்ந்து வரும். அவ்வாறு வரும்பொழுது, அஃது ஒலிக்குறிப்பை வெளிப்படுத்தும். இதனைப் பிரித்தால் பொருள் தராது.
- தணதண, கணகண, சளசள
- இலக்கணத்தில் இதனை இரட்டைக்கிளவி என்பர். இரட்டை என்றால் இரண்டு, கிளவி என்றால் சொல்.

## அலகு – 4

**சுட்டெழுத்துகள்**

- அவன், இவன், அவள், இது, அவை என்னும் சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ, பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன.
- தமிழில் அ, இ என்ற எழுத்துகளை சுட்டெழுத்துகள் என்கிறோம். பழங்காலத்தில 'உ' என்பதும் சுட்டெழுத்துதான். 'உ' எழுத்து, பல பணிகளைச் செய்தது.
- உதுக்காண் என்றால், 'சற்று தொலைவில் பார்' என்பது பொருள்.
- உப்பக்கம் என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள்
- உம்பர் என்றால், 'மேலே' என்பது பொருள்.
- இப்பொழுது சுட்டிச்சொல்ல நாம் 'உ' எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை.

## அலகு – 5

**செய்யுள் மொழி**

- எவன் கொலோ?

- திருக்குறளில் இடம்பெறும் இச்சொற்கள் தரும் பொருள் என்ன? ஏனோ? என்ன பயன்கருதியோ? என்பது பொருள். செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தம் தருவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் - கொல்.
- இது பெரும்பாலும் ஐயப்பொருளில் வரும்.
- ஒரு பெண்ணைப் பார்த்து 'மான் கொல்? மயில் கொல்?' என்றால், இவள் மானோ, மயிலோ எனக் கூறுவதாகப் பொருள்.

### அளபெடை

- உப்பு.... உப்பு.... என்று கூவுவார்கள். அல்லது உப்போஒஒஒ... உப்பு என்பார்கள். இதேபோல் மாஅஅஅம்பழம் என்று கூவி விற்கிறார்கள். இவ்வாறு நீட்டி ஒலிப்பதனை அளபெடை என்பர் இலக்கணத்தார்.
- உப்பூஉஉஉ – என்பது உயிர் அளபெடை. ஏனென்றால், உ என்னும் உயிர் எழுத்து நீண்டு ஒலித்தது.
- பொய்யய்... என்பது ஒற்றளபெடை. ஏனென்றால், ய் என்னும் மெய் எழுத்து நீண்டு ஒலித்தது.

- தமிழில் பேசும்பொழுது பிழைகள் நேராமல் இருக்க நாம் திணை, பால், எண், இடம் பற்றி அறிதல் வேண்டும்.

### 1. திணை

- உயர்திணை, அஃறிணை எனத் திணை இரண்டு வகைப்படும்.
- மனிதர் உயர்திணை ஆவர்.
- மனிதர் அல்லாத உயிருள்ளவையும் உயிரற்றவையும் அஃறினை ஆகும். பெயர்சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் எனப் பிரிக்கிறோம்.
- வீரன், அம்மா, நடிகன், கண்ணகி – உயர்திணைப் பெயர்கள்
- பூ, மரம், பூனை, குருவி – அஃறிணைப் பெயர்கள்.

### 2. பால்

- பால் என்பது மற்றொருவகைப் பிரிவு
- பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஐந்து பால்களாகப் பரிக்கிறோம்.
- ஆண்பால் – அவன், அண்ணன்
- பெண்பால் – அவள், அரசி
- பலர்பால் – அவர்கள், இளைஞர்கள்
- ஒன்றன்பால் – அது , குதிரை
- பலவின்பால் – அவை, மாடுகள்
- ஆண்பால் பெயர்ச்சொல் ஆண்பால் வினைமுடிவையே பெறும். (எ.கா.) அவன் வந்தான்.

## அலகு – 6

### 1. மாத்திரை

- இலக்கணத்தில் மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல். மாத்திரை என்பது சிறிய ஒலியளவு.
- கண் சிமிட்டும் நேரம் அல்லது விரல் சொடுக்கும் நேரம் மாத்திரையின் கால அளவாகும்.
- மெய்யெழுத்து – அரை மாத்திரை
- உயிரெழுத்து (குறில்) – ஒரு மாத்திரை
- உயிரெழுத்து (நெடில்) – இரு மாத்திரை

- உயிர்மெய் (குறில்) – ஒரு மாத்திரை
- உயிர்மெய் (நெடில்) – இரு மாத்திரை

இந்த அளவைத் தாண்டும் ஒலியளவை அளபெடை என்கிறோம்.

### 2. எண்

- ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும்.
- ஒன்றினைக் குறிப்பது ஒருமை, ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.
- எ.கா. பூ – ஒருமை, பூக்கள் – பன்மை.
- பெயர் ஒருமையில் இருந்தால், வினைமுடிபும் ஒருமையிலேயே இருக்க வேண்டும். (எ.கா.) திருடன் பிடிபட்டான்.
- பெயர் பன்மையில் இருந்தால், வினைமுடிபும் பன்மையிலேயே இருத்தல் வேண்டும்.
  (எ.கா.) திருடர் பிடிபட்டனர்.

### 3. இடம்

- தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றாகும்.
- நான், அவன் வீட்டுக்கு போனேன். நீ ஏன் வரவில்லை?
- இச்சொற்றொடரில்,
- நான் – தன்மை, நீ – முன்னிலை, அவன் (அவள், அது) – படர்க்கை.
- பன்மையில் வரும்போது நாங்கள் – தன்மை, நீங்கள் – முன்னிலை, அவர்கள் - படர்க்கை.
- தன்மை என்பது தன்னைக் குறிப்பது.
- முன்னிலை என்பது முன்னால் இருப்பவரைக் குறிப்பது.
- படர்க்கை என்பது தன்மை, முன்னிலை அல்லாத மற்றவரைக் குறிப்பது.

### காலம்

- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்கள் உள்ளன.
- ‘பார்’ என்னும் வினைச்சொல் காலத்திற்கு ஏற்றபடி பின்வருமாறு மாறுகிறது.
- பார்த்தேன் (இறந்தகாலம்)
- பாக்கிறேன் (நிகழ்காலம்)
- பார்ப்பேன் (எதிர்காலம்).

JACOB'S GREAT MINDS

## அலகு – 7

### அடிப்படை

- எழுத்து, சொல், சொற்றொடர் என மூன்றும் மொழியின் அடிப்டைக் கூறுகள்.
- அ – எழுத்து
- அன்பு – சொல்
- அன்பே தெய்வம் – சொற்றொடர்.
- சொல் என்பதனை மொழி, பதம், கிளவி, வார்த்தை எனவும் சொல்லலாம்.
- சொற்றொடரை வாக்கியம் எனவும் சொல்கிறோம்.

### எழுத்து

- எல்லா எழுத்துக்களுக்கும் அடிப்படையானது ஒலி.
- ஒவ்வோர் எழுத்தும் ஒரு பணியை செய்கிறது.
- அ, இ, உ – சுட்டும் எழுத்துகள் (உ – பயன்பாட்டில் இல்லை)
- எ, ஏ, யா, ஆ, ஓ, - ஆகியவை வினா எழுப்பும் எழுத்துகள்

- *ஏ – என்பது சொல்லின் முதலிலும், இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும்.*

## *அலகு – 8*

### *நால்வகைச் சொற்கள்*

- *இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.*

### *பெயர்ச்சொல்*

- *ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.*
- *(எ.கா.) பாரதி, பள்ளி, காலை.*

### *வினைச்சொல்*

- *வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.*
- *(எ.கா.) வா, எழுது, விளையாடு.*

### *இடைச்சொல்*

- *பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது.*
- *(எ.கா.) உம் – தந்தையும் தாயும்*
- *மற்று – மற்றொருவர்*
- *ஐ – திருக்குறளை*

### *உரிச்சொல்*

- *பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.*
- *(எ.கா.) மா – மாநகரம்*
- *சால – சாலச்சிறந்தது.*

## தமிழ் எழுத்துகளின் வகை தொகை

- குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 1 மாத்திரை.
- நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 2 மாத்திரை.
- மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை.
- ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு அரை மாத்திரை.
- ஓரெழுத்துச் சொல் - 2 மாத்திரை.
- வல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் - 4 மாத்திரை.
- மெல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் - 4 மாத்திரை.
- இடையின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் - 4 மாத்திரை.
- ஆய்த எழுத்து இடம்பெறும் சொல் - 2 ½ மாத்திரை.
- ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லும், உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லும் பயன்படுத்தவேண்டும். (எ.கா) ஓர் ஊர், ஒரு கடல்.
- உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லும்,
- உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லும் பயன்படுத்த வேண்டும். (எ.கா) அஃது இங்கே உள்ளது. அது நன்றாக உள்ளது. நாட்டுப்பற்று - Patriotism. கலைக்கூடம் - Art Gallery
- இயல்பு நவிற்சி அணியை ‘தன்மை நவிற்சி அணி’ என்றும் கூறுவர்.


முதல் முயற்சியில்
சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ்
JACOB'S GREAT MINDS
444
காலிப்பணியிடங்கள்
கடந்த SI தேர்வில் அதிகளவில் மாணவர்கள் வெற்றி பெற்று தற்போது பயிற்சியில் உள்ளனர்
போலிஸ் தேர்வில் மாநிலத்தில் முதல் மாணவனை உருவாக்கிய பயிற்சி மையம்
தமிழகம் முழுவதும் மாணவர்களுக்கு ஆன்லைன் பயிற்சி
பொது அறிவு மற்றும் உளவியில் பகுதிக்கு தனிக் கவனம்
Only for 100 Students
₹9999
₹6999
கட்டாயத் தமிழுக்கு அதிரடி பயிற்சி
உடல்தகுதி தேர்வுக்கு சிறப்பு பயிற்சி
21 - 03 - 2022 முதல் வகுப்புகள் ஆரம்பம்
Gpay to 9095851757
Whatsapp Screenshot to 8668176209
CONTACT: 9488017496, 9443774996
JACOB'S GREAT MINDS
@sjacob369 (JACOB'S TNPSC FREE COACHING)
மரம் வளர்ப்போம்! இயற்கை வளம் பேணுவோம்! புவி காப்போம்!

## 7 ஆம் வகுப்பு – தமிழ்

## முதல் பருவம்

## எங்கள் தமிழ்

- ஆசிரியர் நாமக்கல் கவிஞர்.
- இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலை போராட்ட வீரர்.
- 'காந்தியக் கவிஞர்' என அழைக்கப் படுகிறார்.
- தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்.
- மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி இவரது படைப்புகள்.
- 'கத்தி யின்றி ரத்த மின்றி யுத்த மொன்று வருகுது' – நாமக்கல் கவிஞர்.

## ஒன்றல்ல இரண்டல்ல

- பெயர் – உடுமலை நாராயண கவி.
- தமிழ் திரைப்பட பாடலாசிரியர், நாடக எழுத்தாளர்.

### சொல்லும் பொருளும்

ஒப்புமை – இணை, முகில் – மேகம், அற்புதம் – விந்தை, உபகாரி – வள்ளல்.

## பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

- தமிழில் பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே வேறுபாடு உண்டு. எனவே தமிழை 'இரட்டை வழக்கு மொழி' என்பர்.
- எளியநடையில் தமிழ்நுல் எழுதிடவும் வேண்டும் இலக்கண நுல் புதிதாக இயற்றுதல் வேண்டும் – பாவேந்தர் பாரதிதாசன்.
- எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்<br>திரியும் தத்தமில் சிறிது உள வாகும் – நன்னூல்.
- பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி, எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவதும், நினைக்கப்படுவதும் கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும். – மு வரதராசனார்.

## காடு

- பெயர் – சுரதா.
- இயற்பெயர் – இராசகோபாலன்.
- சுப்புரத்தின தாசன் என்பதன் சுருக்கமே சுரதா.
- உவமைக் கவிஞர் என அழைக்கப்படுகிறார்.
- அமுதும் தேனும், தேன்மழை, துறைமுகம் ஆகிய நூல்கள் இவரது படைப்புகள்.

### பாடல்

**கார்த்திகை தீபமெனக்**<br>**காடெல்லாம் பூத்திருக்கும் - எனத்தொடங்கும்.**

- இப்பாடல் கிளிக்கண்ணி என்னும் பாவகையைச் சார்ந்தது.

### சொல்லும் பொருளும்

- ஈன்று – பற்று, களித்திட – மகிழ்ந்திட, கொம்பு – கிளை, நச்சரவம் – விடமுள்ள பாம்பு, அதிமதுரம் – மிகுந்த சுவை, விடுதி – தங்கும் இடம், வாரணம் – யானை.

## அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

- ஆசிரியர் – ராஜமார்த்தாண்டம்.
- கவிஞர், இதழாளர்.
- ‘கொல்லிப்பாவை’ என்னும் சிற்றிதழை நடத்தினார்.
- ராஜமார்த்தாண்டம் கவிதைகள் என்னும் நூலுக்காக தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்றார்.
- சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து ‘கொங்குதேர் வாழ்க்கை’ என்னும் தலைப்பில் நுலாக்கினார்.

## விலங்குகள் உலகம்

- உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. ஆசிய யானை, ஆப்பிரிக்க யானை.
- ஆசிய யானைகளில் ஆண் யானைகளுக்கு தந்தம் உண்டு. பெண் யானைக்கு தந்தம் இல்லை.
- ஆப்பிரிக்க யானைகள் இரண்டுக்குமே தந்தம் உண்டு.
- தமிழ்நாட்டில் வனகல்லுரி அமைந்துள்ள இடம் – மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்)
- புலிதான் காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு.
- உலகில் ஆசியச் சிங்கம், ஆப்பிரிக்க சிங்கம் என இரண்டு வகைச் சிங்கங்கள் உள்ளன.
- இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் கிர் சரணாலயத்தில் மட்டுமே ஆசிய சிங்கங்கள் உள்ளன.
- இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.
- இந்தியாவில் சருகுமான், மிளாமான், வெளிமான் எனப் பல வகையான மான்கள் உள்ளன.

## இந்திய வனமகன்

- அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தை சேர்ந்தவர் ஜாதவ்பயேங்.
- இவர் பிரம்மப்புத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மிகப்பெரிய தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கினார்.
- இவர் ‘இந்தியாவின் வனமகன்’ எனப்படுகிறார்.
- 2012 ல் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு இந்திய வனமகன் என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது.
- 2015 ல் இந்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கியுள்ளது.
- கௌகாத்தி பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கியுள்ளது.

## திருக்குறள்

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- முதற்பாவலர், பொய்யில் புலவர், சொந்நாப்போதார் போன்ற சிறப்பு பெயர்களால் குறிக்கப்படுகிறார்.
- தமிழ்நூல்களில் ‘திரு’ என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள் ஆகும்.
- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பகுப்புக் கொண்டது.
- இதில் அறம் – 38, பொருள் – 70, இன்பம் – 25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன.
- அதிகாரத்திற்கு 10 குறள்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.
- இதற்கு முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி போன்ற பிற பெயர்களும் உள்ளன.

## புலி தங்கிய குகை

பாடல்

சிற்றில் நற்றுண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன் – காவற்பெண்டு

- காவற்பெண்டு சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர்.
- கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கினார்.
- இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.
- புறநானுறு எட்டுத்தொகை நுல்களுள் ஒன்று.

## பாஞ்சை வளம்

- நா. வானமாமலை தொகுத்து வெளியிட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல் என்னும் நுலில் இருந்து எடுக்கப்பட்டது.

## தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

- தேசியம் உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி மக்கள் தொண்டு செய்தவர்.
- 1908 ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் பிறந்தார்.
- பெற்றோர் உக்கிர பாண்டியத்தேவர் – இந்திராணி அம்மையார்.
- இவர் இளமையிலே அன்னையை இழந்ததால் இசுலாமியர் ஒருவரால் பாலுூட்டி வளர்க்கப்பட்டார்.
- தொடக்கக் கல்வியைக் கமுதியிலும், உயர்நிலைக் கல்வியை மதுரை பசுமலைப் பள்ளியிலும் ராமநாதபுரத்திலும் பயின்றார்.
- தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் சொற்பொழிவாற்றும் திறன் பெற்றவர்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச்சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பலதுறைகளில் ஆற்றல் உடையவர்.
- தென்னிந்தியாவில் பசும்பொன்னுக்கும் வட இந்தியாவில் திலகருக்கும் ஆங்கில அரசு வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது.
- திரு.வி.க இவரை ‘தேசியம் காத்த செம்மல்’ என்று பாராட்டினார்.
- இவர் அரசியல் குரு வங்கச் சிங்கம் நேதாஜி .
- பசும்பொன் அழைப்பை ஏற்று நேதாஜி கி.பி. 1939 ல் செப்டம்பர் மாதம் 6 நாள் மதுரை வந்தார்.
- நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவர் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.
- விடுதலைக்குப் பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் நடத்தினார்.
- அவர் முதன் முதலில் சாயல்குடி என்னும் ஊரில் விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
- பசும்பொன் நினைவிடத்தில் அக்டோபர் முப்பதாம் நாள் ஆண்டுதோறும் தமிழக அரசு விழா நடத்துகிறது.
- இவருக்கு இந்திய அரசால் 1995 ல் தபால் தலை வெளியிடப்பட்டது.
- ‘தென்னாட்டுச் சிங்கம்’ என அறிஞர் அண்ணா பாராட்டியுள்ளார்.
- முத்துராமலிங்கர் பேச்சு உள்ளத்தில் இருந்து வருகிறது, உதடுகளிலிருந்து அல்ல – இராஜாஜி
- 1937 ல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 1946 ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- 1952,1957,1962 தேர்தல்களிலும் வெற்றிப் பெற்றார்.
- 1934 ல் மே 12,13 ஆகிய தேதிகளில் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தனார். தொடர் போராட்டத்தால் 1948ல் அச்சட்டம் நீக்கப்பட்டது.
- 1939 ல் ஜுலை எட்டாம் நாள் மதுரை வைத்தியநாத ஐயர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்த திட்டமிட்டார்.
- ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தினார்.
- உழுபவர்களுக்கே நிலம் என்றார்.
- பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கச் செய்தார்.
- பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.
- உலகப்போர் சமயத்தில் மத்திய பிரதேசத்தின் தாமோ என்னும் நகரில் உள்ள இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டுப் போர் முடிந்தபிறகுதான் விடுதலை செய்யப்பட்டார்.
- தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் முத்துராமலிங்கத்தேவர் ஆவார்.
- திருமணம் செய்து கொள்ளாமல் தியாக வாழ்வு வாழ்ந்தார்.
- விவேகானந்தரின் தூதுவராகவும், நேதாஜியின் தளபதியாவும் கருதப்பட்டார்.
- பெண்களை இழிவுப்படுத்தும் செயலான கூந்தல் நடைபாதை வரவேற்பை மறுத்தார்.
- கி.பி. 1963ல் அக்டோபர் 30 இறந்தார்.
- 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விருதுநகரில் போட்டியிடப் பெருந்தலைவர் காமராசர் முன் வந்தார். நகராட்சிக்கு வரி செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்னும் நிலை இருந்தது. எனவே ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக் காமராசர் பெயரில் வரி கட்டி அவரைத் தேர்தலில் போட்டியிட வைத்தார்.

## கப்பலோட்டிய தமிழர்

- பாடப்பகுதி ரா.பி. சேதுவின் கடற்கரையினிலே என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.
- இவர் ‘சொல்லின் செல்வர்’ என போற்றப்படுகிறார்.
- இவரது ‘தமிழின்பம்’ என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல்.
- ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம் – ஊரும் பேரும், மேடைப்பேச்சு போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

- வா.உ.சி இயற்றிய நூல்கள் மெய்யறிவு , மெய்யறம்
- சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் – திலகர்.
- வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம் – பாரதியார்.

# 7 ஆம் வகுப்பு – தமிழ்

## இரண்டாம் பருவம்

## கலங்கரை விளக்கம்

- ஆசிரியர் : கடியலூர் உருத்திரங்கண்ணனார்.
- சங்க காலப் புலவர். இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
- பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் 'தொண்டைமான் இளந்திரையன்'.
- வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத்திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற பிறகுக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுது ஆற்றுபடை இலக்கியம் ஆகும்.

### சொல்லும் பொருளும்

- மதலை – தூண், சென்னி – உச்சி, ஞெகிழி – தீச்சுடர், உரவுநீர் – பெருநீர்ப் பரப்பு, அழுவம் – கடல்.

### எட்டுத்தொகை நூல்கள்

| | |
|---|---|
| நற்றினை | பரிபாடல் |
| குறுந்தொகை | கலித்தொகை |
| ஐங்குறுநூறு | அகநானூறு |
| பதிற்றுப்பத்து | புறநானூறு |

### பத்துப்பாட்டு நூல்கள்

| | |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | மதுரைக்காஞ்சி |
| பொருநராற்றுபடை | நெடுநெல்வாடை |
| சிறுபாணாற்றுப்படை | குறிஞ்சிப்பாட்டு |
| பெரும்பாணாற்றுப்படை | பட்டினப்பாலை |
| முல்லைப்பாட்டு | மலைபடுகடாம் |

JACOB'S GREAT MINDS

## கவின்மிகு கப்பல்

- ஆசிரியர் : மருதன் இளநாகனார்.
- சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
- கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பத்தைந்து பாடல்களை பாடியவர் இவரே.
- மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.
- அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது.
- அகநானூற்றை 'நெடுந்தொகை' எனவும் அழைப்பர்.
- எட்டுத்தொகை நூல்கள் : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

### சொல்லும் பொருளும்

- வங்கூழ் – காற்று, வங்கம் – கப்பல், நீகான் – நாவாய் ஓட்டுபவன், எல் – பகல், மாட ஒள்ளெரி – கலங்கரை விளக்கம்.

- நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையான நூல் தொல்காப்பியம். இந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது.
- கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
  நாவாயும் ஓடா நிலத்து - திருக்குறள்.
- பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை விரிவாக விளக்குகிறது.
- உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் – என்று பெரிய கப்பலை அகநானூறு குறிப்பிடுகிறது.
- அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
  பெருங்கலி வங்கம் என்று பெரிய கப்பலை பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.
- சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிபிடப்பட்டுள்ளன.
- தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர்.
- கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை, இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.
- நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம்பெற்றுள்ளது.
- கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய் – மணிமேகலை.
- கப்பல்களில் நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.
- ‘கண்ணடை’ என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும்.
- தச்சுமுழம் என்னும் நீட்டலளவையால் கப்பலின் நீளம், அகலம், உயரம் முறையே அளவிடப்படுகிறது.
- பெரிய படகுகளில் முன்பக்கத்தை யானை, குதிரை, அன்னம் முதலியவற்றின் தலையைப் போன்று வடிவமைப்பதும் உண்டு. இவை கரிமுக அம்பி, பரிமுக அம்பி என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.
- தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று வாக்கர் என்னும் ஆங்கிலேயர் கூறியுள்ளார்.
- தமிழர்கள் கப்பல் கட்டும் கலையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ என்னும் கடற்பயணி வியந்து பாராட்டியுள்ளார்.
- இரும்பு ஆணிகள் துருப்பிடித்துவிடும் என்பதால் மரத்தினாலான ஆணிகளையே தமிழர்கள் பயன்படுத்தினர். இந்த ஆணிகளைத் தொகுதி என்பர்.
- கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும்.
- கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர்.
- கப்பலைச் செலுத்தவதற்கு உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும்.
- கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

- கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.
- நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
  வளி தொழில் ஆண்ட உரவோன் மருக – புறநானூறு – வெண்ணிக்குயத்தியார்.
- கலம் என்றால் கப்பல்.கரைதல் என்றால் அழைத்தல், கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் இது கலங்கரை விளக்கம் எனப்பட்டது.
- கலம் தந்த பொற்பரிசம் கழித்தோணியால் கரை சேர்க்குந்து – புறநானூறு.

## ஆழ்கடலின் அடியில்

- ஆசிரியர் : ஜூல்ஸ் வெர்ன்.
- 'அறிவியல் புனைகதைகளின் தலைமகன்' என்று புகழப்படுவர் ஜூல்ஸ் வெர்ன்.
- இவர் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். அறிவியல் கண்டுபிடிப்புகள் பல கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே அவற்றைப் பற்றித் தமது புதினங்களில் எழுதியவர்.
- எண்பது நாளில் உலகத்தைச் சுற்றி, பூமியின் மையத்தை நோக்கி ஒரு பயணம் உள்ளிட்ட பல புதினங்களைப் படைத்துள்ளார்.
- அவர் எழுதிய ஆழ்கடலின் அடியில் என்னும் புதினம் குறிப்பிடத்தக்க ஒன்று.

## இன்பத்தமிழ்க் கல்வி

- ஆசிரியர் : பாரதிதாசன்.
- கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடகநூலுக்கு சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.

**பாடல்**

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான் – பாரதிதாசன்.

- வெற்பு – மலை, கழனி – வயல், பரிதி – கதிரவன்.

## அழியாச் செல்வம்

- நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.
- இந்நூல் பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
- இது நானூறு வெண்பாக்களால் ஆனது.
- இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர்.
- திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
- இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

**பாடல்**

- வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை - சமண முனிவர்.

**சொல்லும் பொருளும்**

- வைப்புழி – பொருள் சேமித்து வைக்கும் இடம் , விச்சை – கல்வி, பரி – குதிரை.

- வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
  வேகாது வேந்த ராலும்
  கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்

*நிறைவன்றிக் குறைவு றாது ………………….. தனிப்பாடல் திரட்டு.*

## வாழ்விக்கும் கல்வி

- ஆசிரியர் : திருக்குறளார் வீ. முனிசாமி.
- திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார் வீ. முனிசாமி.
- நகைச்சுவை ததும்பும் தமது பேச்சால் மக்களைக் கவர்ந்தவர் இவர்.
- வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் என்னும் இவரது நூல் பெரும் புகழ் பெற்றது. இக்கட்டுரை சிந்தனைக் களஞ்சியம் என்னும் இவரது நூலிலிருந்து தரப்பட்டது.

## பள்ளி மறுதிறப்பு

- இக்கதையை எழுதியவர் சுப்ரபாரதிமணியன் .
- இவர் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சிறுகதை, புதினம் , கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்.
- கனவு என்னும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார்.
- பின்னல், வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## ஒரு வேண்டுகோள்

- ஆசிரியர் : தேனரசன்.
- தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.
- இவர் வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார்.
- இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்.
- மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

## கீரைப்பாத்தியும் குதிரையும்

- ஆசிரியர் : காளமேகப்புலவர்.
- காளமேப்புலவரின் இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைத்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார்.
- திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.
- இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல்திட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன.

**பாடல்**

- கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
  வெட்டி மறிக்கின்ற மேன்மையால் ………………… காளமேகப்புலவர்.

## பேசும் ஓவியங்கள்

- ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி, படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர்.
- சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்தாகக் கூறப்பட்டுள்ளது.
- தற்காலத்தில் துணி ஓவியங்களை 'கலம்காரி ஓவியங்கள்' என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.
- ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவிமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் வரைவர். இத்தகைய ஓலைச் சுவடிகளை தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் காணலாம்.
- தந்த ஓவியங்களை கேரள மாநிலத்தில் அதிகம் காணலாம்.
- கண்ணாடி ஓவியங்களை உருவாக்கும் ஓவியர்கள் அதிகமாக தஞ்சாவூரில் மிகுதியாக உள்ளனர்.
- கருத்துப்பட ஓவியம் அரசியல் கருத்துகளை எளிமையாக விளக்குவதற்கு பயன்படுகிறது.
- இந்தியா இதழில் பாரதியார்தான் கருத்துப்படங்களை முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தினார். கருத்துப்பட ஓவியத்தின் மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம் ஆகும்.
- ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா. இவரது பாணி ஓவியங்கள் பிற்காலத்தில் நாட்காட்டிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டன.
- நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதுப்படுபவர் கொண்டையராஜு .
- நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்.
- 'புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்' – நெடுநெல்வாடை
- 'புனையா ஓவியம் புறம் போந்தன்ன' – மணிமேகலை
- ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.
- இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
  துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறத்தவும் – பரிபாடல்

## தமிழ் ஒளிர் இடங்கள்

- இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று.
- இந்நூலகம் கி.பி. 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன.

### தமிழ்ப் பல்கலைக்கழகம்

- செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் கி.பி. 1981 ல் தோற்றுவிக்கப்பட்டது.
- இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.
- வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது தமிழ்நாடு எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது.
- இங்கு கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல் புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன.
- இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப்பயிற்சியை இப்பல்கலைக்கழகம் வழங்குகிறது.

## உ.வே.சா நூலகம் – சென்னை

- கி.பி. 1942 ல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.
- இங்கு 2128 ஓலைச் சுவடிகளும், 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

## கீழ்த்திசை நூலகம் – சென்னை

- இந்நூலகம் கி.பி. 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன.
- கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன.
- இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகிறது.

## கன்னிமாரா நூலகம் – சென்னை

- கி.பி. 1896 ல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும்.
- இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.
- இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.
- இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி இங்குப் பாதுகாக்கப்படுகிறது.
- இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் மறைமலை அடிகள் நூலகமும் செயல்பட்டு வருகிறது.

## வள்ளுவர் கோட்டம் - சென்னை

- திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் சென்னைக் கோடம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் என்னும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் கட்டுமானப் பணிகள் கி.பி. 1973ல் தொடங்கி 1976ல் முடிக்கப்பட்டது. இது திருவாரூர்த் தேர் போன்ற வடிவில் அமைக்கப்பட்டு அதனை இரண்டு யானைகள் இழுத்துச் செல்வது போன்று கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது.
- தேரின் மொத்த உயரம் 28 அடி.
- வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும் பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும் இன்பத்துப்பால் செந்நிறப் பளிங்குக் கல்லிலும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன.
- மேலும் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

## திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி

- இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது.
- 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அன்று திறந்துவைக்கப்பட்டது.
- பாறையிலிருந்து சிலையின் உயரம் மொத்தம் 133 அடி. இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது.
- அறத்துப்பாலின் அதிகாரங்களை உணர்த்துவதுபோல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.
- பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றின் அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொன்னூற்றைந்து அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.
- திருவள்ளுவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது.

## உலகத் தமிழ் சங்கம் – மதுரை

- மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது.

- கி.பி. 1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் படி இக்கட்டடம் கட்டப்பட்டது.
- கி.பி. 2016 ஆம் ஆண்டு இக்கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.
- உலகத் தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. தருமிக்குப் பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய திருவிடையாடல் புராணக் காட்சி இதன் நுழைவாயிலில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.
- தொல்காப்பியர், ஔவையார் , கபிலர் ஆகியோரின் முழுஉருவ வெண்கலச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.
- மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைந்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடமும் சங்கத்தமிழ்க் காட்சிக்கூடமும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

### சிற்பக் கலைக்கூடம் – பூம்புகார்

- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார்.
- இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன.
- இங்கு மருவூர்ப்பாக்கம் என்னும் கடல் பகுதியும் பட்டினப்பாக்கம் என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.
- இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.
- மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது.
- கலைக்கூடத்திற்கு அருகில் இலஞ்சிமன்றம், பாவைமன்றம், நெடுங்கல்மன்றம் ஆகியன அமைந்து உள்ளன.

### தகவல் துளி

- காட்டை குறிக்கும் வேறு பெயர்கள்
  கா, கால், கான், கானகம், அடவி, அரண், புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம்.
- ‘நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை சொல்வாரடீ’ – பாரதியார்.
- குழந்தை வரைந்தது பறவைகளை மட்டுமே வானம் தானாக உருவானது – கலாப்பிரியா

JACOB'S GREAT MINDS

# 7 ஆம் வகுப்பு – தமிழ்

## மூன்றாம் பருவம்

### விருந்தோம்பல்

- பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்னுறை அரையனார் ஆவார்.
- இவர் கி.பி நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
- பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இது நானூறு பாடல்களைக் கொண்டது.
- ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது.
- பாடல் – மாரியொன்று இன்றி வறந்திருக்க காலத்தும்
  பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்.
- சொல்லும் பொருளும் ; மாரி – மழை, மடமகள் – இளமகள்.

### வயலும் வாழ்வும்

- நாட்டுப்புறப்பாடலை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர்.
- பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை மலை அருவி என்னும் நூலில் கி.வா. ஜகந்நாதன் தொகுத்துள்ளார்.

### திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

- பாண்டியர்களின் தலைநகரமாக மதுரை விளங்கியது. அவர்களது இரண்டாவது தலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.
- திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி என்று திருஞானசம்பந்தரும், தண்பொருநைப் புனல் நாடு என்று சேக்கிழாரும் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.
- திருநெல்வேலியின் சிறப்புமிக்க மலையாகிய பொதிகை மலை இலக்கியங்களில் பாராட்டப்பட்டு உள்ளது. இளங்கோவடிகள் பொதிகை மலைக்கு முதலிடம் கொடுத்து பாடியுள்ளார்.
  "பொதியி லாயினும் இமய மாயினும்
  பதியெழு அறியாப் பழங்குடி"
- இலக்கியங்களில் திரிகூடமலை என வழங்கப்படும் குற்றாலமலை மலைவளத்தைப் பற்றி திரிகூட இராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சி நூலில் பாடியுள்ளார்
  "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
  மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"
- திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனைத் தண்பொருநை நதி என்று முன்னர் அழைத்தனர்.
- தாமிரபரணியாறு பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரித்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது.
- நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.
- தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் இருந்தது.
- இங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

*"முத்துப்படு பரப்பிற் கொற்றை முன்றுறை (நற்றிணை 23:6)"*
*"கொற்கையில் பெருந்துறை முத்து (அகம்273)"*

- பொருநை எனப்படும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நெல்லை மாநகரின் அமைப்பு சிறப்பானது. நகரின் நடுவே நெல்லையப்பர் திருக்கோவில் அமைந்துள்ளது. இதனை திருஞானசம்பந்தர் பாடலின் மூலம் அறியலாம்.
  "திங்கள் நாள்விழா மல்கு திருநெல்
  வேலியுறை செல்வர் தாமே"
- நெல்லை மாநகரில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது . காவற்புரை என்றால் சிறைச்சாலை. அரசரால் தண்டிக்கப்பட்டவர் இங்கு சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.
- மேலவீதியை அடுத்துக் கூழைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பது தானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத் தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது.
- அக்கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்துள்ளது.
- வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு.
- பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும் அவன் தேவியாகிய மங்கையர்க்கரசியை மகளிர் எதிர்கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்றும் வழங்கப்படுகின்றன.
- நாயக்க மன்னரின் தளவாயாக விளங்கிய அரியநாயகரின் வழித்தோன்றல் வீரராகவர். அவரது பெயரில் அமைந்த ஊர் வீரராகவபுரம் எனவும், அவரது துணைவியார் மீனாட்சி அம்மையார் பெயரில் உள்ள ஊர் மீனாட்சிபுரம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றன.
- அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர்.
- சங்கப் புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தமிழுக்கு செழுமை சேர்த்துள்ளனர்.
- அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு. போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்கு உரியது திருநெல்வேலி.
- முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வேணுவனம் என்னும் பெயரும் இருந்துள்ளது. மூங்கில் காடு என்பது அதன் பொருளாகும்.
- திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் பழந்தமிழர்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.
- தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன.
  பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்த நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

## திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

- கடிகைமுத்துப் புலவர், அவர் வெங்கடேசுவர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.
- தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கிற இடம்தான் சீவலப்பேரி என்கிற முக்கூடல், முக்கூடல் பள்ளு என்னும் பிரபந்தம் முக்கூடலைப் பற்றியதுதான்.

- பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் நெல்லையப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்தார்.
- பிள்ளைப் பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பாடியுள்ளார்.
- ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார்திருநகரி இருக்கிறது. பூர்வத்தில் இதற்குத் திருக்குருகூர் என்று பெயர். நம்மாழ்வார் தமது ஈடுபாட்டை ஆயிரம் தமிழ்ப்பாட்டில் (திருவாய்மொழியில்) வெளியிட்டார்.
- காயல்பட்டணத்தில் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் சீதக்காதி என்ற பெரிய வாணிகர் இருந்தார்.
- சங்கரன் கோயிலில் பெரிய சிவஸ்தலம், அம்பாள் கோமதித் தாய். கோமதித்தாய் பற்றி உண்மையான பக்தியும் தமிழ்ப் பண்பும் வாய்ந்த ஒரு பாடல். அதைப் பாடியவர் திருநெல்வேலி அழகிய சொக்கநாதர் ஆவார்.
- குற்றாலத்தைப் பற்றி திருஞானசம்பந்தர் "நுண் துளி தூங்கும் குற்றாலம்" என புகழ்ந்து பாடியுள்ளார்.
- குற்றாலத்தைப் பற்றி மாணிக்கவாசகரும் ஒரு பாடல் பாடியுள்ளார். அவை
  "உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
  கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
  குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே
  கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!.
- குற்றாலத்தை பற்றி குற்றாலக் குறவஞ்சி என்னும் பெயரில் திரிகூட இராசப்பா கவிராயர் பாடியுள்ளார்.
- டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்; தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்; இரசிகமணி, என்று சிறப்பிக்கப்பட்டவர்; இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்.
- இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.
- இப்பாடப்பகுதியில் இடம்பொற்றுள்ள கட்டுரை இதய ஒலி என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது.
- திருப்புகழ் என்னும் நூலைப் பாடியவர் அருணகிரிநாதர்.
- காவடிச்சிந்தை பாடியவர் அண்ணாமலையார்.

## இயல் இரண்டு

### புதுமை விளக்கு

- பாடல் : வையம் தகளியா வார்கடலே நெய்யாக
  வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
  சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
  இடர்ஆழி நீங்குகவே என்று ---------------- பொய்கை ஆழ்வார்.

  சொல்லும் பொருளும் : வையம் – உலகம், சுடர்ஆழியான் – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்.

- பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர்.
- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி பொய்கை ஆழ்வார் பாடியதாகும்.

- பாடல் : அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
  இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி
  ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
  ஞானத்தமிழ் புரிந்த நான் ------------------- பூதத்தாழ்வார்.

  சொல்லும் பொருளும் : தகளி – அகல்விளக்கு, நாரணன் - திருமால்.

- பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர்.
- இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை இயற்றியுள்ளார்.

- தெரிந்துக் கொள்வோம்
  ஒரு பாடலின் இறுதி எழுத்தோ அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர். (அந்தம் – முடிவு, ஆதி – முதல்).
- தெரிந்து கொள்வோம்
  திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகும். இதனைத் தொகுத்தவர் நாதமுனி ஆவார். பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர்.

## அறம் என்னும் கதிர்

- பாடல் : இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
  வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
  அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
  பைங்கூழ் சிறுகாலைச் செய் ----------------முனைப்பாடியார்.
- சொல்லும் பொருளும் : நிலன் – நிலம், பைங்கூழ் – பசுமையான பயிர்.
- முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர். இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு,
- இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது. அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் அறநெறிச்சாரம் என்னும் பெயர் பெற்றது.

## ஒப்புரவு நெறி

### பொருள் ஈட்டலும் ஒப்புரவும்

- பாவேந்தர் பாரதிதாசனும் உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய் என்றார்.
- வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு.
  “செல்வத்துப் பயனே ஈதல்
  துய்ப்போம் எனினே தப்புந பலவே’‘. என்கிறது புறநானூறு.
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கியவர். இவர் திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்.
- நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார்.

## உண்மை ஒளி

- ஜென் என்னும் ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு தியானம் செய் என்பது பொருள்.

- புத்த மதத்தைச் சார்ந்த துறவியரில் ஒரு பிரிவினரே ஜென் சிந்தனையாளர்கள்.
- இவர்கள் பெரும்பாலும் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமது சிந்தனைகளைச் சிறு நிகழ்ச்சிகள், எளிய கதைகள் ஆகியவற்றின் மூலம் விளக்கினர்.

## இயல் மூன்று

### மலைப்பொழிவு

- சொல்லும் பொருளும் --- தாரணி – உலகம்.
- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் கவியரசு என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகிறார்.
- காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் போன்ற இலக்கிய வடிவங்களில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.
- ஏராளமான திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார்.
- இவர் தமிழுலக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.
- இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது அறிவுரைகளையும் கூறும் நூல் இயேசுகாவியம் ஆகும்.

### தன்னை அறிதல்

- சே. பிருந்தா புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர்.
- மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

### கண்ணியமிகு தலைவர்

- காயிதே மில்லத் அவர்கள் கண்ணியமிகு என்னும் அடைமொழியால் அழைக்கப்படுகிறார்.
- அவர் திருச்சி தூயவளனார் கல்லூரியில் பயின்றார்.

#### ஆடம்பரம் அற்ற திருமணம்

- காயிதே தம் ஒரே மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார்
- பெண் வீட்டாரிடம் மணக்கொடை பெறுவது பெருகியிருந்த அக்காலத்தில் மணக்கொடை பெறாமல் அத்திருமணத்தை நடத்தினார்.
- மேலும் "மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன் " என்று வெளிப்படையாக அறிவித்தார்.

#### மொழிக்கொள்கை

- இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.
- தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

#### நாட்டுப்பற்று

- இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது.
- அப்போது தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாக தெரிவித்து அந்தத் தலைவர் அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.

- அவரது இயற்பெயர் முகம்மது இசுமாயில். ஆனால் மக்கள் அவரை அன்போடு காயிதே மில்லத் என்று அழைத்தனர். 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள்.

## அரசியல் பொறுப்புகள்

- காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.
- இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார்.
- இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

## கல்விப்பணி

- திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

தகவல் துளி

- தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார் --------------- அறிஞர் அண்ணா.
- இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது அவர் நல்ல உத்தமமான மனிதர் ------------- தந்தை பெரியார்.

## பயணம்

- பாவண்ணன் சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களிலும் எழுதி வருகிறார்.
- கன்னட மொழியிலிருந்து பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- வேர்கள் தொலைவில் இருக்கின்றன, நேற்று வாழ்ந்தவர்கள், கடலோர வீடு, பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிரயாணம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- பிரயாணம் என்னும் நூலில் உள்ள பயணம் என்னும் சிறுகதை இங்குத் தரப்பட்டுள்ளது.

JACOB'S GREAT MINDS

## 7 ஆம் வகுப்பு – தமிழ் இலக்கணம்

### இயல் - 1
### சார்பெழுத்துகளின் வகைகள்

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம்.
- முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம்.
- சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.
- உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனச் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

### இயல் – 2
### பெயர்ச்சொல்

- பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்

*1. பொருட்பெயர்*

- பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.
- (எ.கா.) மரம், பறவை.

*2. இடப்பெயர்*

- ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) சென்னை, பள்ளி

*3. காலப்பெயர்*

- காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) நிமிடம், நாள் , வாரம், சித்திரை, ஆண்டு

*4. சினைப்பெயர்*

- பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) கண், கை, இலை, கிளை.

*5. பண்புப்பெயர்*

- பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

*6. தொழிற்பெயர்*

- தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.
- (எ.கா.) படித்தல், ஆடுதல், நடித்தல்.

### அலகு - 3
### இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

*இடுகுறிப்பெயர்*

- நம் முன்னோர் சில பொருள்களைக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.
- (எ.கா.) மண், மரம், காற்று
- இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

*1. இடுகுறிப் பொதுப்பெயர்*

- ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறிப்பது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) மரம், காடு.

*2. இடுகுறிச் சிறப்புப்பெயர்*

- ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) மா, கருவேலங்காடு.

**காரணப்பெயர்**

- நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) நாற்காலி, கரும்பலகை
- காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என காரணப்பெயர் இரு வகைப்படும்.

*1. காரணப் பொதுப்பெயர்*

- காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.
- (எ.கா.) பறவை, அணி.

*2. காரணச் சிறப்புப்பெயர்*

- குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச் சிறப்புப்பெயர் ஆகும்.
- எ.கா. வளையல், மரங்கொத்தி.
- தமிழ்மொழியில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளது. பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே உள்ளன.

## அலகு - 4
## குற்றியலுகரம், குற்றியலிகரம்

**குற்றியலுகரம்**

- கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.
- (எ.கா.) காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**முற்றியலுகரம்**

- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும். வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும். இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.
- (எ.கா.) புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு.

**குற்றியலுகரத்தின் வகைகள்**

- குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்படும்.

*1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்*

- தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'நெடில் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும். இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.
- (எ.கா.) பாகு,, மாசு, பாடு, காது, ஆறு.

**2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்**

- ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'ஆய்தத் தொடர் குற்றியலுகரம்' எனப்படும்.
- (எ.கா.) எஃகு, அஃது.

**3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

- தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'உயிர்த்தொடர் குற்றியலுகரம்' எனப்படும்.
- (எ.கா.) அரசு, கயிறு, ஒன்பது, வரலாறு.

4. வன்தொடர்க் குற்றியலுகரம்

- வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'வன்தொடர் குற்றியலுகரம்' எனப்படும்.
- (எ.கா.) பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று.

**5. மென்தொடர்க் குற்றியலுகரம்**

- மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'மென்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.
- (எ.கா.) பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று.

**6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

- இடையின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'இடைத்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.
- (எ.கா.) எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.

**குற்றியலிகரம்**

- வரகு+யாது இந்த இரு சொற்களையும் சேர்த்து விரைவாக ஒலிக்கும்போது வரகியாது என ஒலிப்பதை அறியலாம். முதல் சொல்லின் இறுதியில் உள்ள 'கு' என்னும் எழுத்து 'கி' என்று ஒலிக்கிது. அதுவும் முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைத்து ஒலிக்கிறது.
- இவ்வாறு தன் ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் 'குற்றியலிகரம்' எனப்படும்.
- குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.

**இடம் – 1**

- குற்றியலுகரச் சொற்களைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்டு சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும். அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைத்து ஒலிக்கிறது.
- (எ.கா,) கொக்கு + யாது = கொக்கியாது, தோப்பு + யாது = தோப்பியாது.

**இடம் – 2**

- 'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது). இதில் 'மி' யில் (மி = ம்+இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும் போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.
- (எ.கா.) கேள்+மியா = கேண்மியா, செல்+மியா = சென்மியா.
- குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே உள்ளது.

## அலகு – 5
## நால்வகைக் குறுக்கங்கள்

- ஒவ்வோர் எழுத்துக்கும் அதை ஒலிப்பதற்கு உரிய கால அளவு உண்டு. இதை மாத்திரை என்பர். சில எழுத்துகள் சில இடங்களில் தமக்குரிய கால அளவைவிடக் குறைவாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் எழுத்துகளைக் குறுக்கங்கள் என்கிறோம்.

### ஐகாரக்குறுக்கம்

- ஐ, கை, பை என ஐகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. வையம், சமையல், பறவை என சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்த ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.
- ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.
- ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும்.

### ஔகாரக்குறுக்கம்

- ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. ஔவையார், வௌவால் எனச் சொற்கள் முதலில் வரும்போது தனக்கரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்.
- ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலம் வராது.

### மகரக்குறுக்கம்

- அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- வலம் வந்தான் என்பதில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.
- போலும் என்னும் சொல்லைப் போன்ம் என்றும், மருளும் என்னும் சொல்லை மருண்ம் என்னும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர். இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

### ஆய்தக் குறுக்கம்

- அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.
- முள்+தீது என்பது முஃடீது எனவும், கல்+தீது என்பது கஃறீது எனவும் சேரும். இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

JACOB'S
GREAT MINDS

## அலகு – 6
## வழக்கு

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என வழக்கு இருவகைப்படும்.

### இயல்பு வழக்கு

- ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு ஆகும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.
    1. இலக்கணமுடையது
    2. இலக்கணப்போலி
    3. மரூஉ

### இலக்கணமுடையது

- நிலம், மரம், வான், எழுது – ஆகிய சொற்கள் தமக்குரிய பொருளை எவ்வகை மாறுபாடும் இல்லாமல் இயல்பாகத் தருகின்றன. இவ்வாறு இலக்கண நெறி மாறாமல் நிற்கும் சொல் இலக்கணமுடையது ஆகும்.

### இலக்கணப்போலி

- இல்லத்தின் முன் பகுதியை இல்முன் எனக் குறிக்க வேண்டும். ஆனால் அதனை நம் முன்னோர் 'முன்றில்' என மாற்றி வழங்கினர். கிளையின் நுனியைக் கிளைநுனி என கூறாமல் நுனிக்கிளை எனக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு முறைப்படி அமையாவிடினும், இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.
- இலக்கணப்போலியை முன்பின்னாகத் தொக்க போலி எனவும் குறிப்பிடுவர்.
- (எ.கா) புறநகர், கால்வாய், தசை, கடைக்கண்.

### மரூஉ

- தஞ்சாவூர் என்னும் பெயரைத் தஞ்சை என்றும், திருநெல்வேலி என்னும் பெயரை நெல்லை எனவும் வழங்குகிறோம். இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- (எ.கா.) கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு.

### தகுதி வழக்கு

- ஏதேனும் ஒரு காரணத்தினால் பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது தகுதி வழக்கு ஆகும். தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.
    1. இடக்கரடக்கல்
    2. மங்கலம்
    3. குழூஉக்குறி

### 1. இடக்கரடக்கல்

- பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது இடக்கரடக்கல் ஆகும்.
- (எ.கா.) கால் கழுவி வந்தான்.
  குழந்தை வெளியே போய்விட்டது.
  ஒன்றுக்கு போய் வந்தேன்.

### 2. மங்கலம்

- செத்தார் என்பது மங்கலமில்லாத சொல் என நம் முன்னோர் கருதினர். எனவே செத்தார் எனக் குறிப்பிடாமல் துஞ்சினார் எனக் குறிப்பிட்டனர். நாம் இக்காலத்தில் இயற்கை எய்தினார் என்று குறிப்பிடுகிறோம்.
- இவ்வாறு மங்கலமில்லாத சொற்களை மங்கலமாக வேறு சொற்களால் குறிப்பதை மங்கலம் என்பர்.

- *(எ.கா) ஓலை – திருமுகம்*
  *கறுப்பு ஆடு – வெள்ளாடு*
  *விளக்கை அணை – விளக்கை குளிரவை*
  *சுடுகாடு – நன்காடு*

### *3. குழூஉக்குறி*

- *பலர் கூடியிருக்கும் இடத்தில் சிலர் மட்டும் தமக்குள் சில செய்திகளை பகிர்ந்துகொள்ள விரும்பினால் மற்றவர்கள் புரிந்துகொள்ள இயலாத வகையில் சொற்களைப் பயன்படுத்துவர். இவ்வாறு ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக்கொள்ளும் சொற்கள் குழூஉக்குறி எனப்படும்.*
- *(எ.கா.) பொன்னைப் பறி எனல் (பொற்கொல்லர் பயன்படுத்துவது)*
  *ஆடையைக் காரை எனல் (யானைப்பாகர் பயன்படுத்துவது)*

## *போலி*

- *சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெற்று அதே பொருள் தருவது போலி எனப்படும். போலி என்னும் சொல் போல இருத்தல் என்பதிலிருந்து தோன்றியது.*
  1. *முதற்போலி*
  2. *இடைப்போலி*
  3. *கடைப்போலி*

### *1. முதற்போலி*

- *பசல் – பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் – மையல் ஆகிய சொற்களில் முதல் எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.*
- *இவ்வாறு சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது முதற்போலியாகும்.*

### *2. இடைப்போலி*

- *அமச்சு – அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரயர் – அரையர் ஆகிய சொற்களின் இடையில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.*
- *இவ்வாறு சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்கு பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது இடைப்போலியாகும்.*

### *3. கடைப்போலி*

- *அகம் – அகன், நிலம் – நிலன், முகம் – முகன், பந்தல் – பந்தர், சாம்பல் – சாம்பர் ஆகிய சொற்களில் இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.*
- *இவ்வாறு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்கு பதிலாக வேறு ஒரு எழுத்து அமைந்து அதே பொருள் தருவது கடைப்போலியாகும்.*

### *முற்றுப்போலி*

- *மூவகைப் போலிகள் மட்டுமன்றி வேறு ஒரு வகைப் போலியும் உண்டு.*
- *ஐந்து – அஞ்சு  இதில் அஞ்சு என்னும் சொல் ஐந்து என்னும் சொல்லின் போலி வடிவமாகும். அஞ்சு என்ற சொல்லில் உள்ள எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டு இருந்தாலும் அஃது ஐந்து என்னும் பொருளையே தருகிறது.*
- *இவ்வாறு ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி எனப்படும்.*

## இயல் – 7
## இலக்கிய வகைச் சொற்கள்

- இலக்கிய வகைச் சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைப்படும்.

### இயற்சொல்

- எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் இயற்சொல் எனப்படும்.
- *(எ.கா.) கடல், கப்பல், எழுதினான், படித்தான்.*

| | |
|---|---|
| மண், பொன் | பெயர் இயற்சொல் |
| நடந்தான், வந்தான் | வினை இயற்சொல் |
| அவனை, அவனால் | இடை இயற்சொல் |
| மாநகர் | உரி இயற்சொல் |

### திரிசொல்

- கற்றவர்களுக்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொல் எனப்படும்.
- *(எ.கா.) வங்கூழ், அழுவம், சாற்றினான், உறுபயன் இவற்றிற்கு முறையே காற்று, கடல், சொன்னான், மிகுந்த பயன் எனப்பொருள் தரும்.*

| | |
|---|---|
| அழுவம், வங்கம் | பெயர் திரிசொல் |
| இயம்பினான், பயின்றான் | வினைத் திரிசொல் |
| அன்ன, மான | இடைத் திரிசொல் |
| கூர், கழி | உரித் திரிசொல் |

### திசைச் சொல்

- சாவி, சன்னல், பண்டிகை, இரயில் முதலிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அல்ல. பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் வழங்கி வருபவையாகும். வடமொழி தவிர பிற மொழிகளிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

### வட சொல்

- வடமொழி எனப்படுவது சமஸ்கிருத மொழிச்சொற்கள் ஆகும். இவ்வாறு வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.
- *(எ.கா.) வருடம், மாதம், கமலம், விடம், சக்கரம்*
- வடசொற்களைத் தற்சமம், தற்பவம் என இருவகையாகப் பிரிப்பர்.
- கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவது தற்சமம் என்பர். லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், விஷம் என்பதை விடம் என்றும் தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதைச் தற்பவம் என்பர்.

## அலகு – 8
## ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

- ஈ, பூ, கை இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.
- நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத் தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

## ஓரெழுத்து ஒருமொழி சொற்கள்

*1. ஆ – பசு 2. ஈ – கொடு 3. ஊ – இறைச்சி 4. ஏ – அம்பு 5. ஐ – தலைவன்*
*6. ஓ – மதகுநீர் தாங்கும் பலகை 7. கா – சோலை 8. கூ – பூமி 9. கை – ஒழுக்கம் 10. கோ – அரசன்*
*11. சா – இறந்துபோ 12. சீ – இகழ்ச்சி 13. சே – உயர்வு 14. சோ – மதில் 15. தா – கொடு*
*16. தீ – நெருப்பு 17. தூ – தூய்மை 18. தே – கடவுள் 19. தை – தைத்தல் 20. நா – நாவு*
*21. நீ – முன்னிலை ஒருமை 22. நே – அன்பு 23. நை – இழிவு 24. நோ – வறுமை 25. பா – பாடல்*
*26. பூ – மலர் 27. பே – மேகம் 28. பை – இளமை 29. போ – செல் 30. மா – மாமரம்*
*31. மீ – வான் 32. மூ – மூப்பு 33. மே – அன்பு 34. மை – அஞ்சனம் 35. மோ – முகத்தல்*
*36. யா – அகலம் 37. வா – அழைத்தல் 38. வீ – மலர் 39. வை – புல் 40. வெள – கவர்*
*41. நொ – நோய் 42. து – உண்.*

## பகுபதம்

- *வேலன், படித்தான் ஆகிய சொற்களில் வேலன் என்னும் சொல்லை வேல் + அன் எனப் பிரிக்கலாம். படித்தான் என்னும் சொல்லை படி + த் + த் + ஆன் எனப்பிரிக்கலாம்.*
- *இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர். பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்.*

## பெயர்ப்பகுபதம்

- *பகுபதமாக அமையும் பெயர்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.*

## வினைப்பகுப்பதம்

- *பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.*
- *(எ.கா) உண்கிறான் – உண் + கின்று + ஆன்*

## பகுபத உறுப்புகள்

- *பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுத், விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியவையாகும்.*
- *பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். இது கட்டளையாவே அமையும்.*
- *பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால் ஆகியவற்றையோ, முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது விகுதி ஆகும்.*
- *பகுபதத்தின் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.*
- *பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.*
- *பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். (எ.கா.) வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்*
    - *வா – பகுதி, இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்*
    - *த் – சந்தி, இது ந் எனத் திரிந்து இருப்பது விகாரம்*
    - *த் – இறந்தகால இடைநிலை*
    - *அன் – சாரியை*
    - *அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.*

## பகாப்பதம்

- *மரம், கழனி, உண், எழுது ஆகிய சொற்களை மேலும் சிறிய உறுப்புகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாது. சொல் பகாப்பதம் எனப்படும் இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.*
- *பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உண்டு.*

- (எ.கா.) பெயர்ப் பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, காற்று
- வினைப் பகாப்பதம் – நட, வா, படி, வாழ்
- இடைப் பகாப்பதம் – மன், கொல், தில், போல்
- உரிப் பகாப்பதம் – உறு, தவ, நனி, கழி.

## இயல் – 9
## தொழிற்பெயர்

- ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.
- (எ.கா.) படித்தல், ஆடல், நடிப்பு, எழுதுதல், பொறுத்தல்
- தொழிற்பெயரை விகுதி பெற்ற தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் என வகைப்படுத்துவர்.

### விகுதி பெற்ற தொழிற்பெயர்

- நடத்தல், உண்ணல், வாழ்வு, வாழ்க்கை ஆகிய பெயர்களில் நட, உண், வாழ் ஆகிய வினைப்பகுதிகள் தல், அல், வு, கை ஆகிய விகுதிகளோடு சேர்ந்து தொழிற்பெயர்களாக அமைகின்றன.
- வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயர் எனப்படும்.
- தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, தி, சி, வி, மை போன்றவை தொழிற்பெயர் விகுதிகளாக வரும்.
- (எ.கா.) தருதல் – தல், கூறல் – அல், அட்டம் – அம், விலை – ஐ, வருகை – கை, பார்வை – வை, போக்கு – கு, நட்பு – பு, மறைவு – வு, மறதி – தி, உணர்ச்சி – சி, கல்வி – வி, செய்யாமை – மை.

### முதனிலைத் தொழிற்பெயர்

- வானில் இடி இடித்தது
- சோறு கொதி வந்தது
- இடி, கொதி என்னும் சொற்கள் இடித்தல், கொதித்தல் என்னும் சொற்களின் பகுதிகளாகும். இவ்வாறு ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொற்களின் பகுதியை முதனிலை என்பர். முதனிலை எவ்வகை மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.
- (எ.கா.) செல்லமாக ஓர் அடி அடித்தான்
- அறிஞர் அண்ணா தம் பேச்சால் புகழ் பெற்றார்
- இவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் விகுதி பெறாமல் தம்பொருளை உணர்த்துகின்றன.

### முதனிலை திரிந்த தொழிற்பெயர்

- தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்.
- உணவின் சூடு குறையவில்லை.
- இத்தொடர்களில் பேறு, சூடு ஆகிய சொற்களில் பெறு, சுடு என்னும் பகுதிகளின் முதலெழுத்து நீண்டு, பேறு, சூடு எனத் திரிந்து தொழிற்பெயர்களாக மாறி உள்ளன. இவ்வாறு முதனிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.
- (எ.கா.) விடு – வீடு, மின் – மீன், கொள் – கோள், உடன்படு – உடன்பாடு.

## இயல் – 10
## அணி இலக்கணம்

### அணி

- அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். ஒரு செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகு பெறச் செய்தலை அணி என்பர்.

### உவமை அணி

- மயில் போல ஆடினாள்
- மீன் போன்ற கண்.
- இத்தொடரில் நடனம் ஆடும் பெண்ணோடு மயிலையும், கண்ணுடன் மீனையும் ஒப்பிட்டுள்ளனர். இவ்வாறு ஒப்பிட்டு கூறப்படும் பொருளை உவமை அல்லது உவமானம் என்பர். உவமையால் விளக்கப்படும் பொருளை உவமேயம் என்பர். இத்தொடரில் வந்துள்ள 'போல' 'போன்ற' என்பவை உவம உருபுகளாகும்.
- (எ.கா) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
  இகழ்வார்ப் பொறுத்தல் தலை
- ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி எனப்படும். போல, புரைய, அன்ன, இன்ன, அற்று, இற்று, மன, கடுப்பு, ஒப்ப, உறழ போன்றவை உவம உருபுகளாகும்.

### எடுத்துக்காட்டு உவமை அணி

- தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
  கற்றனைத்து ஊறும் அறிவு
- மணற்கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். மனிதர்கள் கற்கம் அளவிற்கு ஏற்ப அறிவு பெருகும் என்பதே இக்குறளின் கருத்தாகும். இதில் தொட்டனைத்து ஊறும் மணற்கேணி என்பது உவமை, மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு என்பது உவமேயம். இடையில் 'அதுபோல்' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.
- இவ்வாறு உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடாராகவும் வந்து உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

### இல்பொருள் உவமையணி

- மாலை வெயிலில் மழைத்தூறல் பொன்மழை பொழிந்ததுபோல் தோன்றியது.
- காளை கொம்பு முளைத்த குதிரை போலப் பாய்ந்து வந்தது.
- இத்தொடர்களில் 'பொன்மழை பொழிந்தது போல்', 'கொம்பு முளைத்த குதிரை போல' என்னும் உவமைகள் வந்துள்ளன. உலகில் பொன் மழையாகப் பொழிவதும் இல்லை. கொம்பு முளைத்த குதிரையும் இல்லை. இவ்வாறு உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதை இல்பொருள் உவமை அணி என்பர்.

### உருவக அணி

- ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை உவமையாகக் கூறுவது உவமை அணி எனப்படும். உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும். இதில் உவமிக்கப்படும் பொருள் முன்னும் பின்னுமாக அமையும்.
- 'தேன் போன்ற தமிழ்' என்று கூறுவது உவமை ஆகும். தமிழாகிய தேன் என்னும் பொருளில் 'தமிழ்த்தேன்' என்று கூறுவது உருவகம். வெள்ளம் போன்ற இன்பத்தை 'இன்ப வெள்ளம்' என்று கூறுவதும், கடல் போன்ற துன்பத்தைத் 'துன்பக்கடல்' என்று கூறுவதும் உருவகம் ஆகும்.

  வையம் தகளியா வார்கடலே நெய்யாக
  வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
  சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை

இடர்ஆழி நீங்குகவே என்று

- இப்பாடலில் பூமி அகல்விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே இப்பாடல் உருவக அணி ஆகும்.

### ஏகதேச உருவக அணி

- அறிவு என்னும் விளக்கைக் கொண்டு அறியாமையை நீக்க வேண்டும்.
- இத்தொடரில் அறிவு விளக்காக உருவகப்படுத்தப்பட்டு உள்ளது. அறியாமை இருளாக உருவகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.
- பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
  கருமமே கட்டளைக் கல் (திருக்குறள்)
- வள்ளுவர் மக்களின் செயல்களைப் பொன்னின் தரத்தை அறிய உதவும் உரைகல்லாக உருவகம் செய்துவிட்டு, மக்களது உயர்வையும், தாழ்வையும் பொன்னாக உருவகம் செய்யவில்லை. எனவே இக்குறள் ஏகதேச உருவக அணி ஆகும்.

## இயல் – 11
## ஆகுபெயர்

- ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.
- (எ.கா) வீட்டுக்கு வெள்ளை அடித்தான்.
- இத்தொடரில் வெள்ளை என்பது வெண்மை நிறத்தைக் குறிக்காமல் வெண்மை நிறமுடைய சுண்ணாம்பைக் குறிக்கிறது.
- பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய ஆறு வகையான பெயர்ச்சொற்களிலும் ஆகுபெயர்கள் உண்டு.

### பொருளாகுபெயர்

- மல்லிகை சூடினாள்
- மல்லிகை என்னும் ஒரு முழுபொருளின் யெர் அதன் ஓர் உறுப்பாகிய மலரைக் குறிக்கிறது. இவ்வாறு பொருளின் பெயர் அதன் சினையாகிய உறுப்புக்கு ஆகிவருவது பொருளாகுபெயர் எனப்படும். இதனை முதலாகு பெயர் எனவும் கூறுவர்.

### இடவாகு பெயர்

- சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது.
- தமிழ்நாடு என்னும் பெயர் அவ்விடத்தைச் சேர்ந்த விளையாட்டு அணியைக் குறிப்பதால் இஃது இடவாகு பெயர் ஆகும்.

### காலவாகு பெயர்

- திசம்பர் சூடினாள்
- இத்தொடரில் திசம்பர் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால் இது காலவாகு பெயர் ஆயிற்று.

### சினையாகு பெயர்

- தலைக்கு ஒரு பழம் கொடு
- இத்தொடருக்கு ஆளுக்கு ஒரு பழம் கொடு என்பது பொருளாகும். இவ்வாறு சினையின் (உறுப்பின்) பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.

### பண்பாகு பெயர்

- இனிப்பு தின்றான்

- இத்தொடரில் இனிப்பு என்னும் பண்புப் பெயர் தின்பண்டத்தைக் குறிப்பதால் இது பண்பாகு பெயர் ஆயிற்று.

### தொழிலாகு பெயர்

- பொங்கல் உண்டான்
- இத்தொடரில் பொங்கல் (பொங்குதல்) என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் உருவான உணவினைக் குறிப்பதால் இது தொழிலாகு பெயர் ஆகும்.

### இரட்டைக்கிளவி

- தங்கை விறுவிறுவென நடந்து சென்று தோட்டத்தில் மலர்ந்த மலர்களைக் கலகலவெனச் சிரித்தபடியே மளமளவெனக் கொய்யத் தொடங்கினாள்
- இத்தொடரிலுள்ள விறுவிறு, கலகல, மளமள ஆகிய சொற்கள் இரண்டிரண்டாக இணைந்து வந்துள்ளன. இவ்வாறு இரட்டையாக இணையாக வந்து பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்களை இரட்டைக்கிளவி என்பர்.

### அடுக்குத்தொடர்

- சிறுவர்கள் விளையடிக்கொண்டிருந்தனர். அமுதன் திடீரென பாம்பு பாம்பு பாம்பு என்று கத்தினான். எங்கே எங்கே? என்று கேட்டபடியே மற்ற சிறுவர்கள் அவனருகே ஓடிவந்தனர். "இல்லை இல்லை. சும்மாதான் சொன்னே" என்று சொல்லிச் சிரித்தபடியே ஓடினான் அமுதன். "அவனை பிடி பிடி பிடி என்று கத்திக்கொண்டே மற்றவர்கள் துரத்தினார்கள்.
- இப்பகுதியில் சில சொற்கள் இரண்டு, மூன்று, நான்கு முறை இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அச்சம், விரைவு, சினம் போன்ற காரணங்களால் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தொடர்ந்து வருவதை அடுக்குத்தொடர் என்பர். அடுக்குத் தொடரில் பலமுறை இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் பொருளுடையது.

### அடுக்குத்தொடர் இரட்டைக்கிளவி – ஒப்பீடு

- அடுக்குத்தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கு பொருள் உண்டு. இரட்டைக்கிளவியைப் பிரித்தால் அது பொருள் தருவதில்லை.
- அடுக்குத் தொடரில் ஒரே சொல் இரண்டு முதல் நான்கு முறை வரை வரும். இரட்டைக்கிளவியில் ஒரு சொல் இரண்டு முறை மட்டுமே வரும்.
- அடுக்குத்தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும். இரட்டைக் கிளவியின் சொற்கள் இணைந்தே நிற்கும்.
- அடுக்குத் தொடர் விரைவு வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும்.

JACOB'S GREAT MINDS

# 8 ஆம் வகுப்பு - தமிழ்
## முதல் பருவம்
## தமிழ்மொழி வாழ்த்து - பாரதியார்

- பாடல் - வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
  வாழிய வாழியவே!
- ஆசிரியர் - பாரதியார்.
- இந்தியா, விஜயா போன்ற இதழ்களை நடத்தி விடுதலை போருக்கு வித்திட்டவர்,
- சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை நூல்களை எழுதியவர்.
- சிந்துக்கு தந்தை, செந்தமிழ்த்தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார்.

## தமிழ்மொழி மரபு

- தொல்காப்பியத்தின் ஆசிரியர் - தொல்காப்பியர்.
- நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
- எழுத்து, பொருள், சொல் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது.
- ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களை உடையது.
- பாடல் - நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
  கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

### சொல்லும் பொருளும்

- விசும்பு - வானம், வழா அமை - தவறாமை, தழாஅல் - தழுவுதல் (பயன்படுத்துதல்).

### அளபெடை

- வழாஅமை, தழாஅல் ஆகிய சொற்களில் உள்ள ழ என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவுகளில் ஒலிக்க வேண்டும்.

| இளமைப் பெயர்கள் | ஒலி மரபு |
|---|---|
| புலி - பறழ் | புலி - உறுமும் |
| சிங்கம் - குருளை | சிங்கம் - முழங்கும் |
| யானை - கன்று | யானை - பிளிறும் |
| பசு - கன்று | பசு - கதறும் |
| கரடி - குட்டி | கரடி - கத்தும் |

## தமிழ் வரிவடிவ வளர்ச்சி

### எழுத்துகளின் தோற்றம்

- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை 'ஓவிய எழுத்து' என்பர்.
- ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை 'ஒலி எழுத்து நிலை' என்பர்.

### தமிழ் எழுத்துக்கள்

- கல்வெட்டுகள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.
- வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.

- தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும்.
- முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.
- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துக்கள் **"கண்ணெழுத்துகள்"** என்று அழைக்கப்பட்டன.
- இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' (சிலம்பு) என்னும் தொடரால் அறியலாம்.

## வரிவடிவ வளர்ச்சி

- தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டன.
- பழங்காலத்தில் பாறைகளில் செதுக்கும் போது நேர்க்கோடுகளும், ஓலைகளில் எழுதும் போது வளைகோடுகளையும் அதிகமாக பயன்படுத்தினர்.

## புள்ளிகளும் எழுத்துகளும்

- எகர ஒகர குறில் எழுத்துக்களைக் குறிக்க எழுத்துக்களின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக. எது (எ என்ற எழுத்திற்கு மேல் புள்ளி வைத்தால் குறில் (எது), எ மட்டும் இருந்தால் நெடில் (ஏது) )
- அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாக கருதப்பட்டன. ( க. = கா, த.= தா).
- ஐகார எழுத்துக்களைக் குறிப்பிட எழுத்துக்களின் முன் இரட்டைப்புள்ளி இட்டனர். (..க= கை).
- எகர வரிசை உயிர்மெய் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துக்காளகக் கருதப்பட்டன. (கெ..=கௌ, தெ..=தௌ).
- மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துக்களை குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

## எழுத்துச் சீர்திருத்தம்

- தமிழ் எழுத்துக்களில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் **வீரமாமுனிவர்.**
- அவர் எகர ஒகர வரிசை எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தார்.
- எ என்னும் எழுத்திற்குக் கீழ்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.
- அதேபோல ஏகார, ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துக்களைக் குறிக்க இரட்டைக் கொம்பு (ே), இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ோ) புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

## பெரியார் எழுத்து சீர்திருத்தம்

- இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா, ஆகிய எழுத்துக்களை என எழுதினர். அதே போல னை, லை, ளை போன்ற எழுத்துக்களை என எழுதினர்.
- இக்குறைகளை நீக்குவதற்கு தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்.

- ஆசிரியர் - இரா.இளங்குமரனார்.
- 'செந்தமிழ் அந்தணர்' என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் பள்ளி ஆசிரியராக பணியாற்றியவர்.
- இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- **'தேவநேயம்'** என்னும் நூலைத் தொகுத்துள்ளார்.
- திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

- தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். சொன்றி, சோறு என்பவை அவ்வழியில் வந்தவை.
- எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியர் மொழி.
- மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓர் எழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்டு எழுத்துக்கள் உடைய மொழி என்று மூன்று வகையாக்குவர்.
- ஓர் எழுத்து மொழி எவை எனின் நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.
- குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே என்பார்.
- காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.
- மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. மா என்பது விலங்கையும் குறிக்கும்.
- ஏய் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது.
- அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ். அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.
- அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர் எயினியர்.

## ஓடை

- ஆசிரியர் - வாணிதாசன்.
- தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வொர்த்' என்று புகழப்படுபவர்.
- அரங்கசாமி என்ற எத்திராசலு என்பது அவரின் இயற்பெயர்.
- பாரதிதாசனின் மாணவர்.
- தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு, ஆகிய மொழிகளில் வல்லவர்.
- கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப் பெயர்களை பெற்றவர்.
- இவருக்கு பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது.
- தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களுள் சில.

## கோணக்காத்துப் பாட்டு

- காங்கேய நாடு - கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று.
- புலவர் செ.இராசு தொகுத்த பஞ்சக்கும்மிகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வெங்கம்பூர் சாமிநாதன் இயற்றிய காத்து நொண்டிச் சிந்திலிருந்து இப்பாடப்பகுதி இடம்பெற்றுள்ளது.

## நிலம் பொது

- அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் சுகுவாமிஷ் பழங்குடியினர். அவர்களின் தலைவன் சியாட்டல்.
- இப்பகுதி பக்தவத்சல பாரதி எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது.

## வெட்டுக்கிளியும் சருகுமானும்

- தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர்.
- காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினர். தாங்கள் பேசும் மொழியை 'ஆல்ஆப்பு' என்று அழைக்கின்றனர்.

### முக்கிய தினங்கள்

- உலக ஈர நில நாள் பிப்ரவரி 2.
- உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16.
- உலக இயற்கை நாள் அக்டோபர் 3.
- உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6.
- உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு தினம் அக்டோபர் 5.

## திருக்குறள்

- திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும்.
- முப்பால் - அறம், பொருள், இன்பம்.
- அறத்துப்பால் - பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்களை கொண்டது.
- பொருட்பால் - அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என மூன்று இயல்களை உடையது.
- இன்பத்துப்பால் - களவியல், கற்பியல் என இரண்டு இயல்களை உடையது,

## நோயும் மருந்தும்

- நோயின் தன்மை மூன்று வகைப்படும்.
- நீலகேசி ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்று. சமண சமய கருத்துடையது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக பத்துச் சருக்கங்களைக் கொண்டது.
- சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## வருமுன் காப்போம்

- ஆசிரியர் - கவிமணி எனப் போற்றப்படும் தேசிக விநாயகனார்.
- குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்.
- ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை ஆகிய கவிதைத் தொகுப்புகளையும்,
- உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.
- மலரும் மாலையும் என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டதே வருமுன் காப்போம்.

## தலைக்குள் ஓர் உலகம்

- ஆசிரியர் - சுஜாதா
- சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன்.
- மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.
- என் இனிய எந்திரா, மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், தூண்டில் கதைகள் போன்ற பல நூல்களை உருவாக்கியுள்ளார்.

- தொண்ணூறு நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.
- மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது.
- அறிவாற்றல், பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இவற்றையெல்லாம் மூளையின் இடது பகுதி பார்த்துக் கொள்கிறது. நம் மொழி அறிவு கூட இடது பகுதியே.
- மூளையின் வலது பாதியால் தான் நாம் வடிவங்களை உணர்கிறோம். கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதிதான்.
- வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம்.
- வலது பகுதி அதிகமாக இருப்பவர்கள் நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளபவர்கள் இன்ன பிறர் ஆவர்.
- இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள் போன்றோர் ஆவர்.

JACOB'S
GREAT MINDS

# 8 ஆம் வகுப்பு - தமிழ்
# இரண்டாம் பருவம்

## கல்வி அழகே அழகு

- பாடல் -- கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
  மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
- கலன் என்பது அணிகலனைக் குறிக்கிறது.
- ஆசிரியர் - குமரகுருபரர்.
- காலம் - 17ஆம் நூற்றாண்டு.
- நூல்கள் - கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.
- இவர் எழுதிய 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூல் கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் உடையது.

## புத்தியைத் தீட்டு

- பாடல் - கத்தியைத் தீட்டாதே - உந்தன்
  புத்தியைத் தீட்டு
- ஆசிரியர் - ஆலங்குடி சோமு.
- திரைப்பட பாடல் ஆசிரியராக புகழ்பெற்றவர்.
- சிவகங்கை மாவட்டம் ஆலங்குடியில் பிறந்தவர்.
- தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

## பல்துறைக் கல்வி

- இளமையில் கல் என்பது முதுமொழி.
- தமிழ் இலக்கியங்கள் பற்றி திரு.வி.க பின்வருமாறு குறிப்பிடுகிறார்.
  - இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு,
  - இயற்கை இன்பக்கலம் கலித்தொகை,
  - இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்,
  - இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி,
  - இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம்,
  - இயற்கை அன்பு பெரியபுராணம்,
  - இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்.
- திரு.வி.க என்று அனைவராலும் குறிப்பிடப்படும் திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார் ஆவார்.
- அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர்.
- சிறந்த மேடைப் பேச்சாளர்.
- 'தமிழ்த்தென்றல்' என அழைக்கப்பட்டவர்.
- இவர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அலகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- இவரது 'இளமை விருந்து' என்னும் நூலிலிருந்து இப்பகுதி எடுத்தாளப்பட்டது.

**தகவல் துளி**

- ❖ ஐ.நா அவையின் முதல் பெண் தலைவர் விஜயலெட்சுமி பண்டிட் ஆவார். அவர் கூறிய சொற்கள் ; "கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்".
- ❖ குலோத்துங்கன் என்பவர் கல்வி பற்றி கூறிய பொன்மொழி - "ஏடன்று கல்வி ; சிலர் எழுதும் பேசும் இயலன்று கல்வி ; பலர்க் கெட்டா தென்னும் வீடன்று கல்வி ; ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி ; அது வளர்ச்சி வாயில்".

## ஆன்ற குடிபிறத்தல்

- ❖ ஆசிரியர் - பி.ச. குப்புசாமி, சிறுகதை ஆசிரியர்.
- ❖ ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி "ஜெயகாந்தனோடு பல்லாண்டு" என்னும் நூலை எழுதியுள்ளார்.
- ❖ இவரின் ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியனின் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டது.

## திருக்கேதாரம்

- ஆசிரியர் - சுந்தரர்
- சுந்தரர் தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்,
- சிறப்பு பெயர் - நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.
- இவர் அருளிய தேவாரப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறை ஆகும்.
- இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாக கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தை படைத்தளித்தார்.
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தொகுப்பே தேவாரம் ஆகும்.
- தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி.
- தே+ஆரம் - இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றும், தே+வாரம் - இனிய இசை பொருந்திய பாடல்கள் எனவும் பொருள் கொள்ளலாம்.
- பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.
- பாடல் - பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக்
  கண்ணின் ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய

**சொல்லும் பொருளும்**

பண் - இசை, கனகச்சுனை - பொன் வண்ண நீர்நிலை, மதவேழங்கள் - மதயானைகள், முரலும் - முழங்கும், பழவெய் - முதிர்ந்த மூங்கில்.

## பாடறிந்து ஒழுகுதல்

- கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல்.
- 150 பாடல்களைக் கொண்டது.
- குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்று ஐந்து பிரிவுகளை உடையது.
- கலித்தொகையை தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
- நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.
- பாடல் - ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்
  போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை.

**சொல்லும் பொருளும்**

அலந்தவர் - வறியவர், செறாஅமை - வெறுக்காமை, கிளை - உறவினர், மறாஅமை - மறவாமை, பொறை - பொறுமை.

## நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

- சிந்து சமவெளி அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன.
- தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன,
- நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமன் பொருட்கள் கிடைத்துள்ளன.
- பழங்காலத்தில் பானை செய்யும் சக்கரத்தினை 'திருவை' என அழைப்பர்.
- பானை செய்தலைப் 'பானை வனைதல்' என்று சொல்வது மரபு.
- மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சி நிலைதான் சுடுமண் சிற்பக்கலை. இதற்கு 'டெரகோட்டா' என்று ஆங்கிலத்தில் பெயர்.
- கல்மூங்கில், மலைமூங்கில், கூட்டுமூங்கில் என மூங்கில்கள் மூன்று வகை உண்டு.
- பாய்களில் பலவகை உண்டு. அதில் கூட்டு மூங்கில்களே கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றது.
- குழந்தைகளைப் படுக்கவைப்பது தடுக்குப்பாய், உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப்பாய், படுக்கவும், உட்காரவும் உதவுவது திண்ணைப்பாய், திருமணத்துக்குப் பயன்படுவது பட்டுப்பாய்.
- முற்காலத்தில் பாய்மரக்கப்பல்களில் பயன்பட்டதுகூடப் பாய்தான். இதனை புறநானூறு "கூம்பொடு மீப்பாய் களையாது என்னும் அடியால் குறிப்பிடுகிறது.
- தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.
- பிரம்பு என்பது கொடிவகையைச் சேர்ந்த தாவரம். இதன் தாவரவியல் பெயர் கலாமஸ் ரொடாங் (Calamus rotung) ஆகும். தமிழகத்தில் இப்போது இஃது அருகிவிட்டது. நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

## தமிழர் இசைக்கருவிகள்

- இசையை குரல்வழி இசை, கருவி வழி இசை என இரண்டாக பிரிப்பர்.
- இசைக்கருவிகளை இசைத்து பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.
- நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
  பாணன் சூடான் பாடினி அணியாள் --- புறநானூறு.

**இசைக் கருவிகளின் வகைகள்**

- தோல் கருவிகள் - முழவு, முரசு.
- நரம்புக்கருவிகள் - யாழ், வீணை.
- காற்றுக்கருவிகள் - குழல், சங்கு.
- கஞ்சக்கருவிகள் - சாலரா, சேகண்டி.

**இசைக்கருவிகள்**

**உடுக்கை**

- இதன் உடல் பித்தளையால் ஆனது. வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் பொருத்தப்பட்டிருக்கும்.
- பெரிய உடுக்கையைத் தவண்டை என்பர். சிறு உடுக்கையைக் குடுகுடுப்பை என்பர்.
- தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் --------- சம்பந்தர் தேவாரம்.

## குடமுழா

- ஐந்து முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது.
- ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும். இதன் காரணமாக இதனைப் பஞ்சமகா சப்தம் என்றும் அழைப்பர்.
- இது கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும்.

## குழல்

- இதனை வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர்.
- மூங்கில் மட்டுமின்றி சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன.
- கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் என பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.
- குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
  மழலைச்சொல் கேளா தவர் ............. திருக்குறள்

## கொம்பு

- வகை - காற்றுக்கருவி.
- இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர். கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்ட இக்கொம்பினை ஊதுவர்.
- ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இசைக்கப்பட்டுள்ளன.

## சங்கு

- கடலில் இருந்து எடுக்கப்படுவது, வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை 'வலம்புரிச்சங்கு' என்பர். சங்கின் ஒலியை 'சங்கநாதம்' என்பர்.
- இலக்கியங்களில் இதனை 'பணிலம்' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
- சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
  பங்கயக் கண்ணானைப் பாடேஅலார் எம்பாவாய் ............... திருப்பாவை

## சாலரா

- இதனைப் பாண்டில் எனவும் அழைப்பர். இதனை இக்காலத்தில் 'ஜால்ரா' என்பர்.

## சேகண்டி

- வட்ட வடிவமான மணி வகையைச் சேர்ந்தது சேகண்டி.
- இதனை 'சேமங்கலம்' என்றும் அழைப்பர். இதனைக் கோவில் வழிபாட்டின் போதும் இறுதி ஊர்வலத்தின் போதும் இசைப்பர்.

## திமிலை

- பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்கு தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும். மணற்கடிகார வடிவத்தில் இக்கருவி அமைந்திருக்கும்.
- இதனைப் 'பாணி' என்னும் பெயரால் அழைப்பர்.
- சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
  வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி ........ பெரியபுராணம்.

## பறை

- பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது ஆகோட்பறையை முழங்குவர்.
- இக்காலத்தில் தப்பு என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. இதனை முழக்கிக் கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் ஆகும்.

## மத்தளம்

- மத்து என்பது ஓசையின் பெயர். மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் அடியார்க்கு நல்லார்.
- மத்தளத்தின் நடுப்பகுதி பெருத்தும், கடைப்பகுதி சிறுத்தும் காணப்படும்.
- இதனை முதற்கருவி என்பர். தஞ்சை பெரியகோயில் கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவரும் இருந்தார் என்பர்.

- மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
  முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ் ............. நாச்சியார் திருமொழி.

**முரசு**

- தமிழர்கள் போர்த் துணையாகக் கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும்.
- படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்று மூன்று வகையான முரசுகள் பழந்தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன.
- தமிழ் மக்களிடம் முப்பத்தாறு வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- 'மாக்கண் முரசம்' என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

**முழவு**

- ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக் கட்டப்பட்ட கருவியாகும்.
- மண்ணமை முழவு என்று பொருநராற்றுப்படையில் இப்பெயர் இடம் பெற்றுள்ளது.
- காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன.
- கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம் ............. புறநாநூறு.

**யாழ்**

- பேரியாழ், செங்கோட்டியாழ் மிகப் பழமையானவை.
- யாழின் வகைக்கு ஏற்ப அதில் இருக்கும் நரம்புகளின் எண்ணிக்கை வேறுபடுகிறது.
- இருபத்தொரு நரம்புகளைக் கொண்டது பேரியாழ்.
- பத்தொன்பது நரம்புகளைக் கொண்டது மகரயாழ்.
- பதினான்கு நரம்புகளைக் கொண்டது சகோடயாழ்.
- யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது என்பர்.

**வீணை**

- யாழ் போன்ற அமைப்பையுடைய நரம்புக்கருவி. இஃது ஏழு நரம்புகளை கொண்டது.
- பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாக கூறப்படுகிறது.

## வளம் பெருகுக

- பாடல் - பெருநீரால் வாரி சிறக்கபாடல் இருநிலத்து
  இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார.
- ஆசிரியர் பெயர் அறிய முடியாத நூல்களுள் ஒன்று 'தகடூர் யாத்திரை'.
- தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது.
- இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.

## மழைச்சோறு

- மழை பெய்யாத காலத்தில் மக்கள் ஒன்றுகூடி உப்பில்லாச் சோறு உண்பர் இதனை கண்ட வானம் மனமிறங்கி மழை பெய்யும் இதனை 'மழைச்சோற்று நோன்பு' என்பர்.
- பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள கொங்குநாட்டு மழைச்சோற்று வழிபாடு எடுத்தாளப்பட்டது.

## கொங்குநாட்டு வணிகம்

- வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.
- தொல்காப்பியம், போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையார் மலைந்த பூவும் எனச் சேரரை முன் வைக்கிறது.
- சேரர்களின் நாடு 'குடநாடு' எனப்பட்டது. இவர்களின் தலைநகர் வஞ்சி.
- இந்நகர் மேற்கு மலைத்தொடரில் தோன்றி அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது. இதனை கரூவூர் என்றும் அழைப்பர்.
- தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்கள் ஆகும்.
- சேரர்களின் கொடி - விற்கொடி, பூ - பனம்பூ.

**சேரநாட்டின் எல்லைகள்**

- பண்டைய சேரநாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்த பகுதியாக விளங்கியது என்பர்.
- சேலம் மற்றும் கோவைப் பகுதிகள் 'கொங்குநாடு' என்று பெயர்பெற்றன.

**கொங்கு மண்டலம்**

- 'கொங்கு மண்டலச்சதகம்' என்னும் நூலை எழுதியவர் கார்மேகக் கவிஞர்.
- கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை என்று அழைக்கப்படும் 'அமராவதி' ஆகிய ஆறுகள் வளம் செழிக்க செய்கின்றன.

**சேரர்களின் வணிகம்**

- சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர். செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவரை "கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்" என்று அழைக்கப்பட்டான்.
- கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்கள் அடக்கினர்.
- முசிறி சேரர்களின் வலிமையான துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது.
- முசிறியிலிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.
- பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன.
- இதனை, மீனோடு நெற்குவைஇ
  மிசையம்பியின் மனைமறுக்குந்து ................ புறம்.
  கலந்தந்த பொற்பரிசம்
  கழித்தோணியால் கரைசேர்க்குந்து ............... புறம். எனும் பாடல்களின் மூலம் அறியலாம்.
- உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை,
  நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
  கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்.......அகப்பாடல், என்னும் பாடலின் மூலம் அறியலாம்.

**கொங்குமண்டலப் பகுதிகளில் இன்றைய வணிகம்**

**நீலகிரி**

- நீலகிரி மாவட்டம் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறைந்தது. புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, துப்பாக்கி வெடிமருந்துத் தொழிற்சாலை, தைலமரம் (யூகலிப்டஸ்) எண்ணெய்த் தொழிற்சாலை ஆகியனவும் உள்ளன.

**கோயம்புத்தூர்**

- 'கோவன்புத்தூர்' என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது.

**திண்டுக்கல்**

- இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. எனவே 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று சிறப்பிக்கப்படுகிறது.

- அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் இது. இங்குதான் சின்னாளப்பட்டி சுங்குடிச் சேலைகள் புகழ்பெற்றவை.

### ஈரோடு

- பரப்பளவில் ஈரோடு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. தமிழ்நாட்டிலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில்தான் நடைபெறுகின்றது.

### திருப்பூர்

- இன்று திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது.
- இந்தியாவில் முதல் ஆயத்த ஆடைப் பூங்காவான 'நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா" இங்குதான் உள்ளது.
- தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

### நாமக்கல்

- பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி இம்மாவட்டத்தில்தான் உள்ளது.
- முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றது.

### சேலம்

- மாங்கனி நகரம் என்னும் சிறப்பு பெயர் கொண்டது சேலம்.
- இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில்தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.
- தமிழ்நாட்டின் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே.
- ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காடு இம்மாவட்டத்தில்தான் உள்ளது.

### கரூர்

- கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு 'வஞ்சிமாநகரம்' என்னும் பெயருமுண்டு.
- கிரேக்க மாலுமி தாலமி, கரூரைத் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

### தகவல் துளி

- தூத்துக்குடி - முத்து நகரம், சிவகாசி - குட்டி ஜப்பான், மதுரை - தூங்கா நகரம், திருவண்ணாமலை - தீப நகரம்.

## காலம் உடன் வரும்

- கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- சிறந்த சிறுகதைகளுக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர்.
- கன்னிவாடி, குணச்சித்திரங்கள், உப்புக்கடலைக் குடிக்கும் பூனை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

JACOB'S GREAT MINDS

## 8 ஆம் வகுப்பு - தமிழ்

## மூன்றாம் பருவம்

### படைவேழம்

- ஆசிரியர் - செயங்கொண்டார்.
- செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.
- இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராக திகழ்ந்தார்.
- இவரைப் “பரணிக்கோர் செயங்கொண்டார்” என்று பலபட்டடைச் சொக்கநாக புலவர் புகழ்ந்துள்ளார்.
- கலிங்கத்துப்பரணி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழில் முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும்.
- இது முதலாம் குலோத்துங்கச் சோழனின் கலிங்கத்து வெற்றியை பற்றி பேசுகிறது.
- இந்நூலைத் “தென்தமிழ் தெய்வப்பரணி” என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார்.
- 599 தாழிசைகள் கொண்டது.
- பரணி - போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம்.

### விடுதலைத் திருநாள்

- ஆசிரியர் - மீரா. (இயற்பெயர் - மீ. இராசேந்திரன்)
- இவர் கல்லூரிப் பேராசிரியர் ஆவார்.
- ‘அன்னம் விடு தூது’ என்னும் இதழை நடத்தினார்.
- ஊசிகள், குக்கூ, வா இந்தப் பக்கம், கோடையும் வசந்தமும் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

### பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

- இவர் கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளியில் பயின்றார்.
- காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத்திட்டத்தை விரிவுபடுத்தி சத்துணவுத் திட்டம் என பெயர் வைத்தார்.
- பெற்றோர் - கோபாலன் - சத்தியபாமா.
- இந்திய அரசு ‘பாரத்’ என்னும் மிகச் சிறந்த நடிகருக்கு வழங்கும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.
- மதுரை மாநகரில் **ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை** சிறப்பாக நடத்தினார். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.
- சென்னைப் பல்கலைக்கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கியது.
- தமிழக அரசு அவர் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.
- இந்திய அரசு, மிக உயரிய விருதான பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988 ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைபடுத்தியது.
- எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017 - 2018) தமிழக அரசால் சென்னையிலும், மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### அறிவுசால் ஔவையார்

- சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
  ஆதல் நின்னகத்து அடக்கிச் --- எனத் தொடங்கும் பாடல் . ஔவையார்.

## ஒன்றே குலம்

- ஆசிரியர் - திருமூலர்.
- அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர்.
- திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது.
- இந்நூலை தமிழ் மூவாயிரம் என்பர். இது பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக உள்ளது.
- பாடல் - ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
- நமன் என்றால் எமன் எனப்பொருள்

## மெய்ஞ்ஞான ஒளி

- ஆசிரியர் - குணங்குடி மஸ்தான் சாகிபு.
- இயற்பெயர் - சுல்தான் அப்துல்காதர்.
- சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.
- எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
- இப்பாடப்பகுதி குணங்குடியார் பாடற்கோவை என்னும் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.
- பகராய் - தருவாய், பராபரம் - மேலான பொருள்.

## அயோத்திதாசர் சிந்தனைகள்

- சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் ஆவர். அவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.
- இவர் “தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை” எனப்பட்டார்.
- இயற்பெயர் - காத்தவராயன். ஊர் - சென்னை.
- அயோத்திதாசர் பண்டிதர் என்பவரிடம் இவர் கல்வியும் சித்தமருத்துவமும் பயின்றார். அதனால் ஆசிரியரின் பெயரையே தம் பெயராக மாற்றிக் கொண்டார்.
- அயோத்திதாசர் தமிழ் மட்டுமின்றி பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார்.
- 1907 ல் சென்னையில் ‘ஒருபைசாத்தமிழன்’ என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார்.
- அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள் - போகர் எழுநூறு, அகத்தியர் இருநூறு, சிமிட்டு இரத்தினச் சுருக்கம், பாலவாகடம்.
- புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
- திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

- 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும், அமைப்பைத் தோற்றுவித்தார்.
- சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## மனித யந்திரம் - சிறுகதை

- ஆசிரியர் - புதுமைப்பித்தன்.
- இயற்பெயர் - சொ. விருத்தாச்சலம். ‘சிறுகதை மன்னன்’ என்று புகழப்பட்டவர்.
- கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், சாபவிமோசனம், பொன்னகரம், ஒருநாள் கழிந்தது போன்றவை இவரது சிறுகதைகளுள் புகழ்பெற்றவை.

- மாகாணி, வீசம் போன்றவை அக்காலத்தில் வழக்கிலிருந்த அளவைப்பெயர்களாகும்.
- அணா, சல்லி, துட்டு என்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயப் பெயர்களாகும்.
- பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய். அதனால்தான் இன்றும் பேச்சுவழக்கில் அரை ரூபாயை எட்டணா என்றும், கால் ரூபாயை நாலணா என்றும் கூறுகின்றனர்.

## உயிர்க்குணங்கள்

- ஆசிரியர் - இறையரசன். இயற்பெயர் - சே.சேசுராசா.
- ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி, கன்னிப்பாவை என்னும் நூலை எழுதினார்.

- மார்கழித் திங்களில் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து, பிற, பெண்களையும் எழுப்பிக் கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி, இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு. இதனைப் ‘பாவை நோன்பு’ என்பர். அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை.
- இதேபோலச் சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- நிறை - மேன்மை, பொறை - பொறுமை, மையல் - விருப்பம், இகல் - பகை.

## இளைய தோழனுக்கு

- நட<br>நாளைமட்டுமல்ல<br>இன்றும் நம்முடையதுதான்
- ஓடிவந்து கைகுலுக்க<br>ஒருவருமில்லையா?<br>உன்னுடன் நீயே<br>கைகுலுக்கிக் கொள் ஒருவருமில்லையா?<br>உன்னுடன் நீயே<br>கைகுலுக்கிக் கொள்!
- ஆசிரியர் - மு. மேத்தா.
- வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
- புதுக்கவிதையைப் பரவலாக்கியவர்களில் முன்னோடியாக திகழ்ந்தவர்.

- கண்ணீர்ப் பூக்கள். ஊர்வலம், சோழநிலா, மகுடநிலா உள்ளிட்ட பல நூல்களையும் திரையிசைப்பாடல்களையும் எழுதியுள்ளார்.
- கல்லூரிப் பேராசிரியர் ஆவார். இவரின் 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்னும் புதுக்கவிதை நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

## சட்டமேதை அம்பேத்கார்

- விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீமாராவ் ராம்ஜி சக்பால்.
- பிறப்பு - அம்பேத்கார் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் ராம்ஜி சக்பால் - பீமாபாய் இணையருக்கு பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார்.
- ஊர் - மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே ஆகும்.
- கல்வி - அம்பேத்கார் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியை தொடங்கினார்.
- மகாதேவ் அம்பேத்கார் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என மாற்றிக் கொண்டார்.
- பின்னர் அவர் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார்.
- பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார்.
- 1915 இல் 'பண்டைக்கால இந்திய வணிகம்' என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.
- 'இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தளித்தார். அச்சில் வெளிவந்த அம்பேத்காரின் முதல் நூல் இதுவே.
- பின்னர் 'இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்' என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.
- 1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்.
- 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும், 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சினை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
- 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.
- 1930 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற முதலாம் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டார்.
- 1930, 1931, 1932 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்டமேசை மாநாட்டிலும் கலந்துகொண்டவர் அம்பேத்கர்.
- பூனா ஒப்பந்தம் - ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் வலியுறுத்தினார். இதன் விளைவாக, இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாக பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இதுவே பூனா ஒப்பந்தமாகும்.
- 1935 ஆம் ஆண்டு மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டார்.

- 'ஒடுக்கப்பட்ட பாரதம்' என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார்.
- சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் 'சமாஜ் சமாத சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கினார்.
- 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.
- 1947 ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில், அம்பேத்கார் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கார் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting committee) உருவாக்கப்பட்டது.
- இக்குழுவில் இடம்பெற்றோர் - கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே.எம்.முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி.பி. கைதான் ஆகியோர் உறுப்பினராக இடம்பெற்றனர்.
- இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21 ல் ஒப்படைத்தது.
- புத்த சமயம் மீது பற்றுகொண்ட அவர் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சகணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- அவர் எழுதிய 'புத்தரும் அவரின் தம்மமும்' என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது.
- 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் காலமானார்.
- இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.
- அம்பேத்காரின் பொன்மொழி - "நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு ; இரண்டாவது தெய்வம் சுயமரியாதை; மூன்றாவது தெய்வம் நன்னடத்தை".
- இரட்டைமலை சீனிவாசன் - 1930 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார்.

## பால் மனம்

- ஆசிரியர் - கோமகள்.
- கோமகளின் இயற்பெயர் - இராஜலெட்சுமி.
- இவரது "அன்னை பூமி" என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினை பெற்றுள்ளது. தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் பெற்றுள்ளார்.
- உயிர் அமுதாய், நிலாக்கால நட்சத்திரங்கள், அன்பின் சிதறல் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- பால் மனம் என்னும் இக்கதை அ. வெண்ணிலா தொகுத்த 'மீதமிருக்கும் சொற்கள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## இலக்கணம்
## எழுத்துக்களின் பிறப்பு

- உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- வல்லின மெய் எழுத்துக்கள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துக்கள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

- இடையின மெய் எழுத்துக்கள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.
- பறவைகளின் ஒலிமரபு --- ஆந்தை அலறும், காகம் கரையும், சேவல் கூவும், குயில் கூவும், கோழி கொக்கரிக்கும், புறா குனுகும், மயில் அகவும், கிளி பேசும், கூகை குழறும்.
- வினை மரபு --- சோறு உண், முறுக்குத் தின், சுவர் எழுப்பு, தண்ணீர் குடி, பால் பருகு, கூடை முடை, பூக் கொய், இலை பறி, பானை வனை.

- காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல - எதிர்பாரா நிகழ்வு.
- கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல - ஒற்றுமையின்மை.
- பசு மரத்து ஆணி போல - எளிதில் மனத்தில் பதிதல்.
- விழலுக்கு இறைத்த நீர் போல - பயனற்ற செயல்.
- நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல - தற்செயல் நிகழ்வு.

JACOB'S
GREAT MINDS

## 8 ஆம் வகுப்பு - தமிழ் இலக்கணம்
## எழுத்துக்களின் பிறப்பு

### பிறப்பு

- எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

### எழுத்துகளின் இடப்பிறப்பு

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

## வினைமுற்று

- மலர்விழி எழுதினாள், கண்ணன் பாடுகிறான். இத்தொடர்களில் எழுதினால், பாடுகிறான் ஆகிய இச்சொற்களின் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்கள், முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் அனைத்திலும் வரும்.

### தெரிநிலை வினைமுற்று

- ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.
- (எ.கா.) எழுதினாள்
    - செய்பவர் - மாணவி காலம் - இறந்தகாலம்
    - கருவி - தாளும் எழுதுகோலும் செய்பொருள் - கட்டுரை
    - நிலம் - பள்ளி செயல் - எழுதுதல்

### குறிப்பு வினைமுற்று

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாக காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | |
|---|---|
| பொருள் - பொன்னன் | சினை - கண்ணன் |
| இடம் - தென்னாட்டார் | பண்பு - கரியன் |
| காலம் - ஆதிரையான் | தொழில் - எழுத்தன் |

### ஏவல் வினைமுற்று

- பாடம் படி, கடைக்கு போ
- இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும்.

### வியங்கோல் வினைமுற்று

- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும், ஐந்து பால்களையும், மூன்று இடங்களையும் காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

- (எ.கா.) வாழ்க, ஒழிக, வாழியர்.

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களிலும் வரும். |
| ஒருமை, பண்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பண்மை வேறுபாடுகள் இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும் | விகுதி பெற்றே வரும். |

## எச்சம்

- படித்தான், படித்த, படித்து - ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.
- படித்தான் என்னும் சொல்லில் பொருள் முற்றுப் பெறுகிறது. எனவே இது வினைமுற்று ஆகும்.
- படித்த, படித்து ஆகிய சொற்களில் பொருள் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். இது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

### 1. பெயரெச்சம்

- பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும்.
  (எ.கா.) படித்த மாணவன், படித்த பள்ளி
- பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.
  (எ.கா.) பாடிய பாடல் - இறந்தகாலப் பெயரெச்சம்
  பாடுகின்ற பாடல் - நிகழ்காலப் பெயரெச்சம்
  பாடும் பாடல் - எதிர்காலப் பெயரெச்சம்

JACOB'S GREAT MINDS

### தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்கள்

- எழுதிய கடிதம் - இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும், இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.
- சிறிய கடிதம் - இத்தொடரில் உள்ள சிறிய என்னும் சொல்லின் செயலையோ காலத்தையோ அறிய முடியவில்லை. பண்பினை மட்டும் குறிப்பாக அறிய முடிகிறது. இவ்வாறு செயலையோ காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்பு பெயரெச்சம் எனப்படும்.

### 2. வினையெச்சம்

- படித்து என்னும் சொல் முடித்தாள். மகிழ்ந்தார் போன்ற வினைச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.
  (எ.கா.) படித்து முடித்தான், படித்து வியந்தான். இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

### தெரிநிலை, குறிப்பு வினையெச்சங்கள்

- எழுதி வந்தான் - இத்தொரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும், இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு

செயலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

- மெல்ல வந்தான் - இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாக்க் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பிட்டு உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

### முற்றெச்சம்

- வள்ளி படித்தனள்
- இத்தொடரில் 'படித்தனள்' என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்று பொருளைத் தருகிறது.
- வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்று கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

## வேற்றுமை

### வேற்றுமையின் வகைகள்

- வேற்றுமைகள் எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.

### முதல் வேற்றுமை

- பெரும்பாலான சொற்றொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய மூன்று உறுப்புகள் இடம் பெற்றிருக்கும். எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும். முதல் வேற்றுமையை "எழுவாய் வேற்றுமை" என்றும் குறிப்பிடுவர்.

  (எ.கா.) பாவை வந்தாள்.

### இரண்டாம் வேற்றுமை

- இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.
- கபிலர் பரணைரைப் புகழ்ந்தார். கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.
- இவ்விரு தொடர்களிலும் இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) எந்தப் பெயருடன் இணைகிறதோ அப்பெயர் செயப்படுபொருளாக மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் "செயப்படுபொருள் வேற்றுமை" என்றும் கூறுவர்.
- இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்.

  (எ.கா) ஆக்கல் - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

  அழித்தல் - பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்.

### மூன்றாம் வேற்றுமை

- ஆல், ஆன், ஒட, ஓடு ஆகிய நான்கும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் ஆகும். இவற்றுள் ஆல், ஆன் ஆகியவை கருவிப்பொருள், கருத்தாப் பொருள் ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும். கருவிப் பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.
- கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி - மரத்தால் சிலை செய்தான்.

- ஒன்றை செய்வதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி - உளியால் சிலை செய்தான்.
- கருத்தாப்பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும். பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா - கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது.
  தானே செய்வது இயற்றுதல் கருத்தா - சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது.
- ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும்.
  (எ.கா.) புறந்தூய்மை நீரான் அமையும்.
- ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். (எ.கா.) தாயொடு குழந்தை சென்றது. அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

### நான்காம் வேற்றுமை

- நான்காம் வேற்றுமைக்கு உரிய உருவு 'கு' என்பதாகும். இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.
  - கொடை - முல்லைக்கு தேர் கொடுத்தான்
  - பகை - புகை மனிதனுக்கு பகை
  - நட்பு - கபிலருக்கு நண்பர் பரணர்
  - தகுதி - கவிதைக்கு அழகு கற்பனை
  - அதுவாதல் - தயிருக்கு பால் வாங்கினான்.
  - பொருட்டு - தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.
  - முறை - செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ
  - எல்லை - தமிழ்நாட்டுக்கு கிழக்கு வங்கக்கடல்

### ஐந்தாம் வேற்றுமை

- இன், இல் ஆகியவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இவை நீங்கள், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும்.
  - நீங்கள் - தலையின் இழிந்த மயிர்.
  - ஒப்பு - பாம்பின் நிறம் ஒரு குட்டி.
  - எல்லை - தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்.
  - ஏது - சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.

### ஆறாம் வேற்றுமை

- அது, ஆது, அ ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.
- இவ்வேற்றுமை உரிமைப் பொருளில் வரும். உரிமைப்பொருளை 'கிழமைப் பொருள்' என்றும் கூறுவர்.
  (எ.கா.) இராமனது வில். நண்பனது கை.

### ஏழாம் வேற்றுமை

- ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு கண், மேல், கீழ், கால், இல், இடம் போன்ற உருபுகளும் உண்டு.
- இடம், காலம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும்.
  (எ.கா.) எங்கள் ஊரின்கண் மழை பெய்த்து. இரவின்கண் மழை பெய்த்து.

### எட்டாம் வேற்றுமை

- இது விளிப்பொருளில் வரும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே "விளி வேற்றுமை" என்கிறோம். இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு. அண்ணன் என்பதை அண்ணா என்றும், புலவர் என்பதைப் புலவரே என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

## வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும்

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| முதல் (எழுவாய்) | இல்லை | ஆனவன், ஆவான், ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| இரண்டாம் | ஐ | இல்லை | செயப்படுபொருள் |
| மூன்றாம் | ஆல், ஆன், ஒடு, ஓடு | கொண்டு, வைத்து, உடன், கூட | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| நான்காம் | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை |
| ஐந்தாம் | இல், இல் | இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும் | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது |
| ஆறாம் | அது, ஆது, அ | உடைய | கிழமை |
| ஏழாம் | கண் | | இடம், காலம் |
| எட்டாம் (விளி) | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |

## தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

### தொகைநிலைத் தொடர்

- இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்பர்.
- தொகைநிலைத் தொடர் 1. வேற்றுமைத்தொகை, 2. வினைத்தொகை, 3. பண்புத்தொகை, 4. உவமைத்தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித்தொகை என ஆறுவகைப்படும்.

### வேற்றுமைத்தொகை

- திருக்குறள் படித்தாள்
- இத்தொடர் திருக்குறளைப் படித்தாள் என விரிந்து நின்று பொருள் தருகிறது. இரு சொற்களுக்கும் இடையில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருவு மறைந்து வந்துள்ளன. இவ்வாறு இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.
  - 1. திருவாசகம் படித்தான் - (ஐ) இரண்டாம் வேற்றமைத்தொகை
  - 2. தலைவணங்கு - (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை
  - 3. சிதம்பரம் சென்றான் - (கு) நான்காம் வேற்றுமைத்தொகை
  - 4. மலைவீழ் அருவி - (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை
  - 5. கம்பர் பாடல் - (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை
  - 6. மலைக்குகை - (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை

#### உருபும் பயனும் உடன்தொக்க தொகை

- பணப்பை
- இது பணத்தைக் கொண்ட பை என விரிந்து பொருள் தருகிறது. பணம், பை என்னும் இரு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் 'கொண்ட' என்னும் சொல்லும் (உருபின் பயன்) மறைந்து வந்துள்ளன.
- இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் (பயன்) மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை எனப்படும்.

#### இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

- (எ.கா) பால் - (பாலைக் கொண்ட குடம்)

### மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

- (எ.கா.) பொற்சிலை - (பொன்னால் ஆகிய சிலை)

### நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

- (எ.கா.) மாட்டுக்கொட்டகை - (மாட்டுக்கு கட்டப்பட்ட கொட்டகை)

## வினைத்தொகை

- ஆடுகொடி, வளர்தமிழ்
- இத்தொடர்களில் ஆடு, வளர் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே கொடி, தமிழ் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலம் காட்டாத பெயரெச்சங்களாக உள்ளன. அதாவது காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி உள்ளன.
- மேலும் இவை முறையே ஆடிய கொடி, ஆடுகின்ற கொடி, ஆடும் கொடி எனவும் வளர்ந்த தமிழ், வளர்கின்ற தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருகின்றன.
- இவ்வாறு காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சத்தை வினைத்தொகை என்பர்.

## பண்புத்தொகை

- வெண்ணிலவு, கருங்குவளை
- இத்தொடர்களில் வெண்மை, கருமை என்னும் பண்புகள் நிலவு, குவளை என்னும் பெயர்ச்சொற்களைத் தழுவி நிற்கின்றன. ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வெண்மையான நிலவு, கருமையாகிய குவளை என்னும் பொருள்களைத் தருகின்றன.
- இவ்வாறு பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

## இருபெயரொட்டு பண்புத்தொகை

- பனைமரம்
- இத்தொடர் பனையாகிய மரம் என விரியும், மரம் என்பது பொதுப்பெயர். பனை என்பது மரங்களுள் ஒன்றனைக் குறிக்கும் சிறப்புப்பெயர். இவ்வாறு சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்க, இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர்.

## உவமைத்தொகை

- மலர்விழி - இத்தொடர் மலர்போன்ற விழி என்ற பொருள் தருகிறது. மலர் - உவமை, விழி - உவமேயம். இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

## உம்மைத்தொகை

- இரவுபகல், தாய்தந்தை
- இத்தொடர்கள் இரவும் பகலும், தாயும் தந்தையும் என விரிந்து பொருள் தருகின்றன. இதில் சொற்களின் இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது. இவ்வாறு சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.

## அன்மொழித்தொகை

- பொற்றொடி வந்தாள் (தொடி - வளையல்)
- இத்தொடரில் பொற்றொடி என்பது பொன்னாலான வளையல் எனப் பொருள் தருகிறது. இத்தொடர் வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள் என்னும் பொருள் தருகிறது. இதில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் 'ஆகிய' என்னும்

அதன் பயனும் மறைந்து வந்து, வந்தாள் என்னும் சொல்லால் பெண் என்பதையும் குறிப்பதால் இது மூன்றாம் வேற்றுமைப் புறந்து பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

- இவ்வாறு வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலை தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை (அல்+மொழி+தொகை) எனப்படும்.

## தொகாநிலைத் தொடர்

- ஒரு தொடரில் இரு சொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அதனைத் தொகாநிலைத் தொடர் என்பர்.
- தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும்.

1. **எழுவாய்த் தொடர்**
   - (எ.கா) மல்லிகை மலர்ந்தது. - இதில் மல்லிகை என்னும் எழுவாயைத் தொடர்ந்து மலர்ந்தது என்னும் பயனிலை அமைந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இஃது எழுவாய்த் தொடர் ஆகும்.
2. **விளித்தொடர்**
   - (எ.கா) நண்பா படி. - இதில் நண்பா என்னும் விளிப்பெயர் படி என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது விளித்தொடர் ஆகும்.
3. **வினைமுற்றுத் தொடர்**
   - (எ.கா) சென்றனர் வீரர். - இதில் சென்றனர் என்னும் வினைமுற்று வீரர் என்னும் பெயரைக்கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.
4. **பெயரெச்சத் தொடர்**
   - (எ.கா) வரைந்த ஓவியம் - இதில் வரைந்த என்னும் எச்சவினை ஓவியம் என்னும் பெயர்ச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.
5. **வினையெச்சத் தொடர்**
   - (எ.கா) தேடிப் பார்த்தான் - இதில் தேடி என்னும் வினையெச்சச் சொல் பார்த்தான் என்னும் வினைமுற்றுச் சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினையெச்சத் தொடர் ஆகும்.
6. **வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்**
   - (எ.கா) கவிதை எழுதினார். - இதில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.
7. **இடைச்சொல் தொடர்**
   - (எ.கா) மற்றுப் பிற - இதில் மற்று என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது இடைச்சொல் தொடர் ஆகும்.
8. **உரிச்சொல் தொடர்**
   - (எ.கா) சாலவும் நன்று - இதில் சால என்னும் உரிச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது உரிச்சொல் தொடர் ஆகும்.
9. **அடுக்குத்தொடர்**
   - (எ.கா) நன்று நன்று நன்று - இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளதால் இஃது அடுக்குத்தொடர் ஆகும்.

## புணர்ச்சி

- தமிழ், அமுதம் ஆகிய இரு சொற்களையும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். தமிழமுதம் என்று ஒலிக்கிறது.
- இவற்றுள் முதலில் உள்ள சொல்லை நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர். இவ்விரு சொற்களும் சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன. இவ்வாறு நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம்.
- நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) சிலை + அலகு = சிலையழகு (லை=ல்+ஐ)
- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) மண் + அழகு = மண்ணழகு
- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிர்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + உண்டு = பொன்னுண்டு.
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + சிலை = பொற்சிலை (சி=ச்+இ)

### இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். (எ.கா.) தாய் + மொழி = தாய்மொழி (இரு சொற்களிலும் எம்மாற்றமும் நிகழவில்லை)
- உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு ல்+ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ, வேறு எழுத்தாகத் திரியவோ, மறையவோ இல்லை)
- இருண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ, வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப்புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும்.
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகம். (எ.கா.) தமிழ் + தாய் = தமிழ்த்தாய்
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம் ஆகும். (எ.கா) வில் + கொடி = விற்கொடி
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து மறைவது கெடுதல்விகாரம் ஆகும். (எ.கா) மனம் + மகிழ்ச்சி = மனமகிழ்ச்சி.
- இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதுண்டு. (எ.கா.) நாடகம் + கலை = நாடகக்கலை. இதில் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது. தோன்றல் விகாரத்தின்படி 'க்' என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

## வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

- ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர்.
- எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை. இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.

### வல்லினம் மிகும் இடங்கள்

- அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.

- (எ.கா.) அந்தப்பக்கம், இந்தக்கவிதை
- எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்.
    - (எ.கா.) எந்த்த்திசை? எந்தச்சட்டை?
- இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) தலையைக் காட்டு, பாடத்தைப்படி.
- நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) எனக்குத் தெரியும், அவனுக்குப் பிடிக்கும்.
- இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்.
    - (எ.கா.) எழுதிப் பார்த்தாள், ஓடிக் களைத்தான்.
- உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) பெற்றுக்கொண்டேன், படித்துப் பார்த்தார்.
- எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைபெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) செல்லாக்காசு, எழுதாப்பாடல்
- உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்
- உருவகத்தில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.
- எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) பத்துப்பாட்டு, எட்டுப்புத்தகம்.
- அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்கைளை அடுத்து வல்லினம் மிகும்.
    - (எ.கா.) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?
- திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.
    - (எ.கா.) கிழக்குக்கடல், மேற்குச்சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.
- மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) மரம்+சட்டம்=மரச்சட்டம், வட்டம்+பாறை=வட்டப்பாறை.

## வல்லினம் மிகா இடங்கள்

- எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.
    - (எ.கா.) தம்பி படித்தான், யானை பிளிறியது.
- அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.
    - (எ.கா.) அது சென்றது, இது பெரியது, எது கிடைத்தது?
- பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.
    - (எ.கா.) எழுதிய பாடல், எழுதாத பாடல்.
- இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் வல்லினம் மிகும்.
    - (எ.கா.) இலை பறித்தேன், காய் தின்றேன்
- உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது.
    - (எ.கா.) தின்று தீர்த்தான், செய்து பார்த்தான்.
- வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
    - (எ.கா.) எழுதுபொருள், சுடுசோறு.
- அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்கைளைத் தவிர, படி என முடியும் பிறசொற்களை அடுத்து வல்லினம் மிகாது.
    - (எ.கா.) எழுதும்படி, சொன்னேன், பாடும்படி கேட்டுக்கொண்டார்.

- உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.
    - (எ.கா.) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு.

## யாப்பு இலக்கணம்

- மரபுக்கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் எனப்படும்.
- யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு. அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாகும்.

### எழுத்து

- யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர்.
    - குறில் - உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்
    - நெடில் - உயிர்நெடில், உயிர்மெய்நெடில்
    - ஒற்று - மெய்யெழுத்து, ஆய்த எழுத்து

### அசை

- எழுத்துகள் ஒன்றோ, சிலவோ சேர்ந்து அமைவது அசை ஆகும். அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.
- குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். (எ.கா.) ந, நம், நா, நாம்.
- இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகம். (எ.கா.) கட, கடல், கடா, கடாம்.

### சீர்

- ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர்.
- சீர்களை ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என வகைப்படுத்துவர்.

### தளை

- சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். முதல் சீரின் இறுதியிலும் வரும் சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில், தளைகள் ஏழு வகைப்படும்.

### அடி

- இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது அடி ஆகும். அடி ஐந்து வகைப்படும்.

### தொடை

- செய்யுளில் ஓசை இன்பமும் பொருள் இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு அடியிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும். தொடை எட்டு வகைப்படும். முதன்மையான தொடைகள் வருமாறு
    1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை.
    2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.
    3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.
    4. ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை.

### பாவகைகள்

- பா நான்கு வகைப்படும். அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
- வெண்பா செப்பல் ஓசை உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
- ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது. கலித்தொகை நூல் கலிப்பாவால் ஆனது.
- வஞ்சிப்பா தூங்கள் ஓசை உடையது.

# அணி இலக்கணம்

## பிறிதுமொழிதல் அணி

- உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணரவைப்பது 'பிறிதுமொழிதல் அணி' எனப்படும்.

  (எ.கா.) "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்"

  (எ.கா) கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
  நாவயும் ஓடா நிலத்து

  இத்திருக்குறள், "நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது" என்று உவமை மட்டும் கூறுகிறது. இதன்மூலம் ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெறமுடியும், தமக்கு பொறுத்தமில்லா இடத்தில் வெற்றிபெற முடியாது என்னும் கருத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம். எனவே இக்குறட்பாவில் பிறிதுமொழிதல் அணி இடம்பெற்றுள்ளது.

## வேற்றுமை அணி

- இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்தி காட்டுவது 'வேற்றுமையணி' எனப்படும்.

  (எ.கா) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினால் சுட்ட வடு

- இத்திருக்குறளில் முதலில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும்தன்மை உடையவை என்று கூறப்படுகிறது. பின்னர், நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும், உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

## இரட்டுறமொழிதல் அணி

- ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது 'இரட்டுறமொழிதல் அணி' ஆகும். இதனை சிலேடை என்றும் கூறுவர்.

  (எ.கா.) ஓடும் இருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்
  நாடுங் குலைதனக்கு நாணாது - சேடியே
  தீங்காயது இல்லா திருமலைரா யன்வரையில்
  தேங்காயும் நாயும்நேர் செப்பு

- இப்பாடலில் பொருள் தேங்காய், நாய் ஆகிய இரண்டுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.
- தேங்காயில் ஓடு இருக்கும். தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும். தேங்காய் கோணல் இல்லாமல் குலையாகத் தொங்கும்.
- நாய் சிலசமயம் ஓடிக்கொண்டிருக்கும், சிலசமயம் ஓரிடத்தில் படுத்து இருக்கும். அதன் வாயின் உட்பகுதி வெண்மையாக இருக்கும், குரைப்பதற்கு வெட்கப்படாது.
- இவ்வாறு இப்பாடல் இரண்டு பொருள் தரும்படி பாடப்பட்டுள்ளதால் இஃது 'இரண்டுறமொழிதல் அணி' ஆகும்.

# 9 ஆம் வகுப்பு - தமிழ்

## திராவிட மொழிக்குடும்பம்

- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300 க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.
  அவை. 1. இந்தோ - ஆசிய மொழிகள் 2. திராவிட மொழிகள் 3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள் 4. சீன - திபெத்திய மொழிகள்.
- இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் - ச.அகத்தியலிங்கம்.
- திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் 'குமரிலப்பட்டர்'.
- தமிழ் என்ற சொல்லிருந்துதான் 'திராவிடா' என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதிகின்றனர்.
- ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகின்றார்.
- அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார்.
- முதன் முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதி 'தென்னிந்திய மொழிகள்' எனவும் பெயரிட்டார்.
- ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் 'தமிழியன்' என்று பெயரிட்டார்.
- 1856 இல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் குறிப்பிட்டார்.
- திராவிட மொழிக்குடும்பம் - மூன்று வகைப்படும்.

| தென்திராவிடம் | நடுத்திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு (கொடகு), துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா | தெலுங்கு, கூயி, கூவி (குவி), கோண்டா, கோலாமி, நாய்க்கி, பெங்கோ, முண்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா | குரூக், மால்தோ, பிராகுய் |

- மேலுள்ள பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்து திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர்.
- திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. கைவிரல்கள் - பெண்பால் என்றும் கால்விரல்கள் - ஆண்பால் என்றும். வாய் - ஆண்பால், மூக்கு - பெண்பால், கண் - பொதுப்பால் என்றும் வேறுபடுத்தப்படுகிறது.
- ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை.
- ஆனால் திராவிட மொழிகளில் திணை, பால், எண் (வந்தான் - உயர்திணை ஆண்பால் ஒருமை) என மூன்றையும் காட்டுகிறது.
- சில திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள்

| மொழிகள் | இலக்கியம் | இலக்கணம் |
|---|---|---|
| தமிழ் | சங்க இலக்கியம் | தொல்காப்பியம் |
| தெலுங்கு | பாரதம் | ஆந்திர பாஷா பூஷணம் |
| மலையாளம் | ராம சரிதம் | லீலா திலகம் |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | கவிராஜ மார்க்கம் |

## தமிழோவியம்

- ஆசிரியர் - ஈரோடு தமிழன்பன்.
- "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்" என்று குறிப்பிட்டார்.
- ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
- இவரது "வணக்கம் வள்ளுவ" என்னும் கவிதை நூலக்கு 2004 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- "தமிழன்பன் கவிதைகள்" தமிழக அரசின் பரிசுபெற்ற நூல்.
- பாடல் - காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே,
  எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே.

**தகவல் துளி**

- உலகத் தாய்மொழி நாள் - பிப்ரவரி 21.
- "இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்" - பிங்கல நிகண்டு.
- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" - பாரதியார்.
- தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் - இலங்கை, சிங்கப்பூர்.

## தமிழ்விடு தூது

- ஆசிரியர் - பெயர் தெரியவில்லை
- தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று.
- இது 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா' வால் இயற்றப்படுவதாகும்.
- 'தமிழ்விடு தூது' மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி , தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.
- இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது.
- இந்நூலை 1930 இல் உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார்.
- பாடல் - தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின்
  மேலான முத்திக் கனியேஎன் முத்தமிழே
- தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். தமிழாகிய நீயோ செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளாய்.
- மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. தமிழாகிய நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை **வண்ணம் முதலாக இடமெல்லிசை வண்ணம் ஈறாக** நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

- ○ சிந்து - ஒருவகை இசைப்பாடல்.
- ○ மூன்றினம் - துறை, தாழிசை, விருத்தம்.

சொல்லும் பொருளும்

சத்துவம் - அமைதி, இராசசம் - போர், தாமசம் - சோம்பல், தாழ்மை.

## வளரும் செல்வம்

- தமிழில் உள்ள பா என்ற சொல் கிரேக்க மொழியில் தொன்மையான காப்பியமான இலியாத்தில் பாய்யியோனா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போலோ என்னும் கடவுளுக்குக் பாடப்படுவது 'பா' எனக் கிரேக்கத்தில் குறிக்கப்படுகிறது.
- வெண்பாவின் ஓசையானது செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் 'சாப்போ' என அழைக்கப்படுகின்றன. இது கிரேக்கத்திலிருந்து இலத்தீன் மொழிக்கு வந்து பின் ஆங்கிலத்தில் 'சேப்பிக் ஸ்டேன்சா' என இன்று வழங்கப்படுகிறது.
- பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா என அழைக்கப்படுகின்றன.
- "எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ்" என்னும் இந்நூலின் பெயரிலேயே தமிழ்சொல் இருப்பதாகக் கூறுகின்றனர். எறிதிரை என்பதுதான் அந்த தமிழ்ச்சொல். கடலைச் சார்ந்த பெரிய புலம் என்பதே எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் என ஆகியுள்ளது.

கலைச்சொற்கள்

Ligguistics - மொழியியல், Philologist - மொழியறிவியலாளர், Phonologist - ஒலி சின்ன வல்லுநர், Literature - இலக்கியம், Polyglot - பன்மொழியாளர், Phonetics - ஒலியியல்.

கணினியில் பயன்படுத்தும் தமிழ் சொற்கள்

- சாப்ட்வேர் - மென்பொருள், ப்ரௌசர் - உலவி, க்ராப் - செதுக்கி, கர்சர் - ஏவி அல்லது சுட்டி, சைபர்ஸ்பேஸ் - இணையவெளி, சர்வர் - வையக விரிவு வலை வழங்கி, ஃபோல்டர் - உறை

## நீரின்றி அமையாது உலகு

- "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று இயற்கையை வாழ்த்திப் பாடியவர் - இளங்கோவடிகள்.
- "நீர் இன்று அமையாது உலகு" - திருக்குறள்.
- கரிகாலச் சோழன் கட்டிய கல்லணையின் நீளம் 1080 அடியாகவும், அகலம் 40 முதல் 60 அடியாகவும், உயரம் 15 முதல் 18 அடியாகவும் உள்ளது.
- மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
  காடும் உடையது அரண் .................. திருக்குறள்
- நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன என்பார் பேராசிரியர் தொ.பரமசிவன்.
- குள்ளக் குளிரக் குடைந்து நீராடி என்கிறார் ஆண்டாள்.
- தெய்வச்சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை 'திருமஞ்சனம் ஆடல்' என்று கூறுவர்.
- சிற்றிலக்கியமாகிய பிள்ளைத்தமிழில் நீராடல் பருவம் என்று ஒரு பருவம் உண்டு.
- திருமணமானபின் கடலாடுதல் என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகிறது.
- சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு.

தெரிந்துகொள்வோம்

- ஆழிக்கிணறு - கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு
- உறைக்கிணறு - மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு

- கட்டுக்கிணறு - சரளை நிலத்தில் தோண்டி கல் மற்றும் செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு
- குண்டம் - சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை
- கூவல் - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை
- சிறை - தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை
- புனற்குளம் - நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.
- பூட்டைக் கிணறு - கமலை நீர்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு.

- முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் "ஜான் பென்னி குவிக்".
- "இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை" என அறியப்படுபவர் - சர் ஆர்தர் காட்டன்.
- 1829 இல் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனி பொறுப்பாளராக ஆங்கிலேயே அரசால் சர் ஆர்தர் காட்டன் நியமிக்கப்பட்டார். கல்லணைக்கு "கிராண்ட் அணைக்கட்" என்ற பெயரையும் சூட்டினார்.
- கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டுதான் 1873 ஆம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.
- உலகச் சுற்றுச்சூழல் நாள் - ஜூன் 5.

## பட்ட மரம்

- ஆசிரியர் - கவிஞர் தமிழ் ஒளி.
- பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர்.
- நிலைப்பெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் ஆகியவை இவரின் படைப்புகள்.
- பாடல் - மொட்டைக் கிளையொடு நின்று தினம்பெரு மூச்சு விடும்மரமே.

சொல்லும் பொருளும் -

மிசை - மேல், விசனம் - கவலை, கந்தம் - மணம்.

## பெரியபுராணம்

- ஆசிரியர் - சேக்கிழார்.
- சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக இருந்தவர்.
- "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.
- "'சுந்தரரின் திருத்தொண்டத் தொகை" நாயன்மார்களின் பெருமையை ஓர் அடியில் குறிப்பிடுகிறது.
- நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட "திருத்தொண்டர் திருவந்தாதி" ஒவ்வொரு பாடலிலும் நாயன்மார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது.
- 'திருத்தொண்டத்தொகை' மற்றும் 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய இரண்டு நூல்களை அடிப்படையாகக் கொண்டு சேக்கிழாரால் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியாராக அறுபத்துமூவரின் சிறப்புகளை விளக்கிப் பாடப்பட்டது 'திருத்தொண்டர் புராணம்'. இதனுடைய பெருமை காரணமாக இந்நூல் 'பெரியபுராணம்' என்று அழைக்கப்படுகிறது.

சொல்லும் பொருளும்

- மா - வண்டு, வாவி - பொய்கை, வளர் முதல் - நெற்பயிர், தரளம் - முத்து, பணிலம் - சங்கு, வரம்பு - வரப்பு.
- கழை - கரும்பு, கா - சோலை, குழை - சிறு கிளை, மாடு - பக்கம், நெருங்குவளை - நெருங்குகின்ற சங்குகள், கோடு - குளக்கரை.

- மேதி - எருமை, சூடு - நெல் அரிக்கட்டு, சுரிவளை - சங்கு, வேரி - தேன், பகடு - எருமைக்கடா, பாண்டில் - வட்டம், சிமயம் - மலையுச்சி.
- நாளிகேரம் - தென்னை, கோளி - அரசமரம், சாலம் - ஆச்சா மரம், தமாலம் - பச்சிலை மரங்கள், இரும்போந்து - பருத்த பனைமரம், சந்து - சந்தனமரம், நாகம் - நாகமரம், காஞ்சி - ஆற்றுப்பூவரசு.

## புறநானூறு

- பாடல் - வான் உட்கும் வடிநீண் மதில்
  மல்லல் மூதூர் வய வேந்தே.
- பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது.
- தினை - பொதுவியல், துறை - பொருண்மொழிக்காஞ்சி
- யாக்கை - உடம்பு, புணரியோர் - தந்தவர்.

## தண்ணீர் - சிறுகதை

- ✓ ஆசிரியர் - கந்தர்வன். இயற்பெயர் - நாகலிங்கம்
- ✓ இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- ✓ தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத்துறையில் பணியாற்றியவர்.
- ✓ சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் ஆகியவை இவரின் சிறுகதைத் தொகுப்புகள்.

## ஏறு தழுவுதல்

- எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு, கலங்கினர் பலர் - கலித்தொகை.
- நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை - கலித்தொகை.
- கலித்தொகை தவிர சிலப்பதிகாரம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நுலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
- எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் 'கண்ணுடையம்மன் பள்ளு' பதிவு செய்துள்ளது.
- சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட "எருது பொருதார் கல்" ஒன்று உள்ளது. கோவுரிச் சகருவந்துறையிலே 'எருது விளையாடி பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு' என்பது அந்நடுகல் பொறிப்பு.
- எருதுகளைப் பலர் கூடி விரட்டுவதுபோன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது.
- சித்திரக்கல் புடவில் என்ற இடத்தில் திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.
- சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும்.
- காளைச் சண்டை ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு ஆகும்.
- எகிப்தில் உள்ள பெனி - ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

காங்கேயம் மாடுகள்

- தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது.
- இது ஏறுதழுவுதலுக்கு பெயர்பெற்ற இனம் ஆகும்.

- காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## மணிமேகலை

- ஆசிரியர் - கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இயற்பெயர்.
- திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்.
- கூலவாணிகம் (கூலம் - தானியம்) செய்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.
- இந்நூலுக்கு 'மணிமேகலைத் துறவு' என்னும் வேறு பெயரும் உண்டு.
- இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம். பௌத்த சமயச் சார்புடையது.
- முப்பது காதைகள் கொண்ட மணிமேகலையின் முதல் காதையே "விழாவறை காதை".
- பாடல் - மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
  இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்.

சொல்லும் பொருளும்

பாடைமாக்கள் - பல மொழிபேசும் மக்கள், குழீஇ - ஒன்றுகூடி, வேதிகை - திண்ணை, தூணம் - தூண், தாமம் - மாலை, கதலிகைக் கொடி - சிறு சிறு கொடியாக பல கொடிகள் கட்டியது, விலோதம் - துணியாலான கொடி, வசி - மழை, செற்றம் - சினம், கலாம் - போர்.

- ஐம்பெருங்குழு - 1. அமைச்சர் 2. சடங்கு செய்விப்போர் 3. படைத்தலைவர் 4. தூதர் 5. சாரணர் (ஒற்றர்)
- எண்பேராயம் - 1. கரணத்தியலவர் 2. கரும விதிகள் 3. கனகச்சுற்றம் 4. கடைகாப்பாளர் 5. நகரமாந்தர் 6. படைத்தலைவர் 7. யானை வீரர் 8. இவுளி மறவர்.
- அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
  மறவாது இதுகேள், மன்னுயிர்க் கெல்லாம்
  உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
  கண்டது இல் ........................ மணிமேகலை.

## அகழாய்வுகள்

- கீடி அகழாய்வு
  மதுரை அருகே உள்ள கீழடி 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- இராபர்ட் புரூஸ்ட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்த கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம்.
- ரோமானியர்களின் பழங்காசுகளை கோவையில் கண்டுபிடித்தனர்.
- அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன.
- 1914 ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- அரியலூரும் பெரம்பலூரும் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றை தெரிந்துகொள்ளும் அரிய ஊர்களாய் திகழ்கின்றன. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமம் இங்குதான் கண்டுபிடிக்கப்பட்டது. டையனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்றும் இவ்வூர்கள் அறியப்படுகின்றன.

## திருக்குறள்

- முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை என்ற பல சிறப்பு பெயர்களில் அழைக்கப்படுகிறது.
- திருக்குறள் பற்றிய உரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூலைப் போற்றும் பாடல்களில் தொகுப்பே 'திருவள்ளுமாலை'.
- தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் இந்நூல்.
- திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.
- திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
- திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.
- திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி
- திருக்குறளில் இரண்டுமுறை இடம்பெறும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்
- திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர்
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - மணக்குடவர்
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - ஜி.யு.போப்
- திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.
- ஏழு என்ற சொல் எட்டு குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
- திருக்குறள் இதுவரை 107 மொழிகளில் வெளிவந்துள்ளது.
- அகழாய்வு - Excavation கல்வெட்டியல் - Epigraphy நடுகல் - Hero Stone

## இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

### ஒளிப்படி இயந்திரம் (Photo Copier)

- நியூயார்க்கைச் சேர்ந்த செஸ்டர் கார்ல்சன் என்பார் கண்டறிந்தார்.
- கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக்கொண்டு 1938 இல் உலக்கில் முதல் ஒளிப்படியை எடுத்தார்.
- கிரேக்க மொழியில் சீரோகிரா∴பி (Xerography) என்றால் உலர் எழுத்துமுறை என்று பொருள்.
- அவரால் 1959 இல் இந்த இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

### தொலைநகல் இயந்திரம் (Fax)

- 1846 இல் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் பெயின் என்பார் கண்டறிந்தார்.
- இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் ஜியோவான்னி காசில்லி 'பான்டெலிகிரா∴ப் (Pantelegraph) என்ற தொலைநகல் கருவியை உருவாக்கினார்.
- 1985 இல் அமெரிக்காவின் ஹாங்க் மாக்னஸ்கி என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அந்த இயந்திரத்திற்கு காமா ∴பேக்ஸ் (Gamma Fax) என்று பெயரிட்டு விற்பனைக்கு கொண்டுவந்தார்.

## தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)

- இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான ஜான் ஷெப்பர்டு பாரன் என்பவர் தலைமையிலான குழுவொன்று, பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜூன் 27 இல் தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.
- நான் இங்கிலாந்திலோ உலகின் எந்த மூலையிலோ இருந்தாலும் என் வங்கிப் பணத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கொரு வழியைச் சிந்தித்தேன். சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து யோசனை கிடைத்தது. அங்கு சாக்லேட், இங்கே பணம். - ஜான் ஷெப்பர்டு பாரன்.

## ஆளறி சோதனைக் கருவி (Biometric Device)

- ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு என்பவர் 1962 இல் கடவுச்சொல்லுடன் கூடிய அட்டைக்கு இங்கிலாந்தில் காப்புரிமை பெற்றிருந்தார்.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வருகைப் பதிவுக்காகவும், வெளியேறுகைப் பதிவுக்காகவும் இக்கருவி பயன்படுகிறது.

## இணைய வணிகம்

- இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆல்ட்ரிச் 1979 இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார்.
- 1989 இல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக்கடை தொடங்கப்பட்டது.

## வையக விரிவு வலை (www - server)

- 1990 இல் டிம் பெர்னெர்ஸ் லீ என்பவர் வையக விரிவு வலை வழங்கியை (www - server) உருவாக்கினார்.
- "இணையத்தில் இது இல்லையெனில், உலகத்தில் அது நடைபெறவேயில்லை" என்பது லீயின் புகழ்பெற்ற வாசகம்.

## இணையப் பயன்பாடு

- ❖ 1991 இல இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது.
- ❖ 2002 ஆம் ஆண்டு இந்தியத் தொடர்வண்டி இணைய வழிப்பதிவு தொடங்கப்பட்டது.

## ஓ, என் சமகாலத் தோழர்களே

- ஆசிரியர் - கவிஞர் வைரமுத்து
- தேனி மாவட்டத்திலுள்ள மெட்டூர் எனும் ஊரில் பிறந்தார்.
- 'கள்ளிக்காட்டு இதிகாசம்' என்னும் புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும், மாநில அரசின் விருதினை நான்கு முறையும் பெற்றவர்.
- இந்திய அரசின் உயர்ந்த விருதுகளுள் ஒன்றான பத்மபூஷன் விருதினைப் பெற்றவர்.
- பாடல் - கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும் கிழக்கு வானம் தூரமில்லை.

## உயிர்வகை

- ❖ தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம்.
- ❖ இது எழுத்து, சொல், பொருள என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது.
- ❖ எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது.
- ❖ பொருளதிகாரத்தில் தமிழரின் அகம் புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும், தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது.

## விண்ணையும் சாடுவோம்

- அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி போன்றோர் வரிசையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன்.
- சிவன் இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் என்னும் சிறப்புகளுக்கு உரியவர்.
- 2015 ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- நாகர்கோவில் - வல்லங்குமாரவிளை என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.
- கணினி அறிவியலில் இளங்களைப் பட்டம், எம்.ஐ.டி - யில் வானூர்திப் பொறியியல் படிப்பு, விக்ரம் சாராபாய் நிறுவனத்தில் பொறியாளர்.
- 1983 ஆம் ஆண்டு முதன்முதலில் பி.எஸ்.எல்.வி திட்டத்தை தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்தது.
- செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேரிக்கும் ஒரு செயலியை உருவாக்கினார். அதற்கு "சித்தாரா" எனப் பெயரிட்டார் (SITARA - Software for Integrated Trajectory Analysis with Real time Application)
- இதுவரை இந்தியாவுக்காக 45 செயற்கைகோள்கள் செலுத்தப்பட்டுள்ளன.
- "நேவிக்" (NAVIC) என்ற செயலி கடல் பயணத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

**விக்ரம் சாராபாய்**

- இவர் 'இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.
- ஆரியப்பட்டா என்ற முதல் செயற்கைகோள் ஏவுதலுக்கு காரணமானவர்.
- இவரின் பெயரில் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது.
- இவருடைய முயற்சியால்தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.

**அப்துல் கலாம்**

- 11 ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர்.
- தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர்.
- "இந்திய ஏவுகணை நாயகன்" என்று போற்றப்படுகின்றார்.
- இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர்.

**வளர்மதி**

- அரியலூர் பிறந்த ஊர்.
- இவர், 2015 இல் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர்.
- 2012 இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.
- இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.

**அருணன் சுப்பையா**

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர் ஆவார்.
- இந்திய விண்வெளி மையத்தில் பணிபுரிகிறார்.
- 2013 இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

**மயில்சாமி அண்ணாதுரை**

- 'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், கோதவாடி என்னும் ஊரில் பிறந்தவர்.
- இதுவரை 5 முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளார்.
- 1982 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்த இவர் தற்போது இயக்குநராகப் பணிபுரிகிறார்.

- சந்திராயன் - 1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். சந்திராயன் - 2 திட்டத்திலும் பணியாற்றி வருகிறார்.
- சர்.சி.வி இராமன் நினைவு அறிவியல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
- தமது அறிவியல் அனுபவங்களை “கையருகே நிலா” என்னும் நூலாக எழுதியுள்ளார்.



## 9 - ஆம் வகுப்பு - தமிழ்

## கல்வியில் சிறந்த பெண்கள்

### சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்

- ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

### டாக்டர்.முத்துலெட்சுமி

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர். இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
- தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர்.
- அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

### பண்டித ரமாபாய்

- இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

### மூவலூர் இராமாமிர்தம்

- தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.
- தேவதாசி ஒழிப்புச் சட்டம் சிறைவேறத் துணை நின்றவர்.
- தமிழக அரசு, 8 ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

### ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் தமிழகத்திற்கு வந்து, மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

### சாவித்திரிபாய் பூலே

- 1848 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

### மலாலா

- பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கினார். அப்போது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).

### ஹண்டர் குழு

- 1882 இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவிதிரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினர்.

### கோத்தாரி கல்விக் குழு

- 1964 ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

### சாரதா சட்டம்

- பெண்கள் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

### பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்

- ஈ.வே.ரா - நாகம்மை இலவசக் கல்வி உதவித்திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

- சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் - கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

**நீலாம்பிகை அம்மையார்**

- மறைமலையடிகளின் மகள் ஆவார்.
- தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்-தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகியவை இவருடைய நூல்கள்.

**ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார்**

- திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.
- இராணிமேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியராக பணியாற்றினார்.
- சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## குடும்ப விளக்கு

- பாடல் - கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்
  புல்விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை.
- கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள்.
- ஆசிரியர் - பாரதிதாசன்.
- இயற்பெயர் - கனகசுப்புரத்தினம்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு , குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள்.
- இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

## சிறுபஞ்சமூலம்

- ஆசிரியர் - காரியாசான்.
- காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.
- மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.
- மதுரை தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- சிறுபஞ்சமூலம் - ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள்.
- அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியவை.
- சிறுபஞ்சமூலத்தின் ஒரு பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

## வீட்டிற்கோர் புத்தகசாலை

- வீட்டிற்கோர் புத்தகசாலை என்னும் இப்பகுதி பேரறிஞர் அண்ணாவின் வானொலி உரைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- “தென்னகத்தின் பெர்னாட்ஷா” என்று அழைக்கப்பட்டவர்.
- இவர் ‘சிவாஜிகண்ட இந்து சாம்ராஜ்யம்’ முதல் ‘இன்ப ஒளி’ வரை பல படைப்புகளைத் தந்தவர்.
- 1935 இல் சென்னை, பெத்தநாயக்கன்பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார்.
- ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார்.

- முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார்.
- சென்னை மாகாணத்தைத் “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.
- 2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது.
- 2010 ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

**பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகள்**

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு.
3. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
4. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
5. சட்டம் ஒரு இருட்டறை அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
6. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை, தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை. தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
7. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
8. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
9. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
10. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

**நூலகங்கள்**

- சீர்காழி இரா.அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள் தேசிய நூலக தினமாக கொண்டாடப்படுகிறது.
- ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.
- உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது. திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.
- கொல்கத்தாவில் 1836 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953 இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.
- உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.
  - வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும் - அறிஞர் அண்ணா.
  - உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே - கதே.

## வணிக வாயில்

- பண்டைய காலத்தில் முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு ”யவனப்பிரியா” என்ற பெயர் ஏற்பட்டது.
- யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறிக்கு வந்தன.
- சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
  யவனர் தந்த வினைமாண் நன்கலம்

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
வளங் கெழு முசிறி ........................ அகநானூறு.

- அரேபியர் சேரநாட்டு மிளகைக் கொண்டுபோய்ச் செங்கடல் துறை முகங்களிலும், எகிப்தின் நைல்நதி கடலில் கலக்கும் இடத்திலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகப்பட்டினத்திலும் விற்றனர்.
- அரேபியர் வணிகம் செய்த இடத்திற்குப் பந்தர் (கடைவீதி) என்று பெயர் இடப்பட்டிருந்தது.
- "நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்"
"பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" - பதிற்றுப்பத்து.
- 'முசிறி - அலெக்சாண்டிரியா ஒப்பந்தம்' என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகர் ஒருவருக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலெக்சாண்டிரியா நகரில் வாழ்ந்த கிரேக்க வணிகர் ஒருவருக்கும் கி.பி.150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இராமநாதபுரம் அழகன்குளத்தில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளில் வணிகக் கப்பலைக் குறிக்கும் கீறல் கோட்டோவியம் காணப்படுகிறது.
- தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை.
- 'கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்' - சிலப்பதிகாரம்
'மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்' - சிலப்பதிகாரம்
'மாலை திங்கள் வழியோன் ஏறினன்' - சிலப்பதிகாரம்
- ... திரை தந்த ஈரங்கதிர் முத்தம்
கவர்நடைப்புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை - அகநானூறு.
- கி.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி பருவகாற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அந்த பருவக்காற்றுக்கு யவனர், அதை கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பலாஸ் என்பதையே சூட்டினர்.
- "வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்" என அகநானூறு குறிப்பிடுகிறது.
- கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் உரோம் நாட்டின் அகஸ்டஸ் மன்னனின் அரசவைக்கு முத்துகளைப் பரிசாக அளித்தார்கள் என்று வரலாற்று அறிஞர் ஸ்டிராபோ குறிப்படுகிறார்.

## நான்மாடக் கூடல்

- சிந்துவகைப் பாடல்களை ஆராய்ந்தால் அவை சந்தமும் இயைபுத் தொடையும் அமைந்த கண்ணிகளைக் கொண்டவை என்பதை அறிய முடிகிறது.
- இதே காலத்தில் கும்மிப்பாடல்களும் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற சந்தப்பாடல்களும் ஆனந்தகளிப்பு, தெம்மாங்கு (தென்பாங்கு) முதலிய நாட்டுப்புறப்பாடல் வடிவங்களும் புதிய வடிவங்களாகத் தோன்றின.

1. ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்து பாவகையாகும்.
2. பாரதியார் சிந்து வகையினை அதிகமாகக் கையாண்டிருக்கிறார். அவர் 'சிந்துக்குத் தந்தை' என்று போற்றப்படுகிறார்.
3. சிந்து என்பது இசைத்தமிழ்ப் பாகுபாடுகளில் ஒன்று. பல்லவி (எடுப்பு), அனுபல்லவி (தொடுப்பு) இன்றிச் சரணங்களுக்குரிய (முடிப்பு) கண்ணிகளுடன் உடைய பாக்கள் சிலவகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.

4. சித்தர் பாடல்கள் பல சிந்துவகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். எ.கா. கடுவெளிச் சித்தரின் "'பாபம் செய்யாதிருமனமே" என்னும் பாடல்.

## மதுரைக்காஞ்சி

- ஆசிரியர் - மாங்கடி மருதனார்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்.
- எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.
- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி.
- காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது.
- இந்நூலைப் "பெருகுவள மதுரைக்காஞ்சி" என்பர்.
- இதன் பாட்டுடைத் தலைவன் 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்'.
- இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன.
- "பொறிமயிர் வாரணம்....
  கூட்டுறை வயமாப் புலியொடு குழும" ................ என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்கு சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.
- பாடல் - மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
  விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை

சொல்லும் பொருளும் -

புரிசை - மதில், அணங்கு - தெய்வம், புழை - சாளரம், மாகால் - பெருங்காற்று, முந்நீர் - கடல், பணை - முரசு, கயம் - நீர்நிலை, ஓவு - ஓவியம், நியமம் - அங்காடி.

## சிற்பக்கலை

- 'கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
  மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் .............. திவாகர நிகண்டு.
- உருவ அமைப்பு அடிப்படையில் சிற்பங்களை, முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.
- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர சோழன் கட்டிய கங்கைக்கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர்காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.
- விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் எழுப்பட்டன.
- நாயக்க மன்னர்கள் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் ஆகியவை.
- இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலை - மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அமைந்துள்ளது.
- சமன மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கினர்.

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.
- சிற்பக்கலைக் குறித்த செய்திகளை அனைவரும அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.
- பைஞ்சுதை (சிமெண்ட்).

## இராவண காவியம்

- ஆசிரியர் - புலவர் குழந்தை.
- இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம்.
- இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.
- இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என ஐந்து காண்டங்களையும், 3100 பாடல்களையும் கொண்டது.
- பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.
- யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- "இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" - பேரறிஞர் அண்ணா.

**சொல்லும் பொருளும்**

- மைவனம் - மலைநெல், முருகியம் - குறிஞ்சிப்பறை, சாந்தம் - சந்தனம்.
- பூவை - நாகணவாய்ப் பறவை, பொலம் - அழகு, கடறு - காடு,
  முக்குழல் - கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்,
  பொலி - தானியக்குவியல், உழை - ஒருவகை மான்.
- வாய்வெரீஇ - சோர்வால் வாய் குழறுதல், குருளை - குட்டி,
  உயங்குதல் - வருந்துதல், படிக்குஉற - நிலத்தில விழ, கோடு - கொம்பு
- முருகு - தேன், மணம், அழகு. மல்லல் - வளம், செறு - வயல்,
  கரிக்குருத்து - யானைத்தந்தம், புரைதப - குற்றமின்றி.
- தும்பி - ஒருவகை வண்டு, துவரை - பவளம், மரை - தாமரை மலர்,
  விசும்பு - வானம், மதியம் - நிலவு.

## நாச்சியார் திருமொழி

- ஆசிரியர் - ஆண்டாள்.
- பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- 'சூடிக்கொடுத்த சுடர்கொடி' என்று அழைக்கப்பட்டவர்.
- இவரை பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.
- ஆழ்வார்கள் பாடிய பாடல்களில் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" எனப்படுகிறது.
- இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன.
- நாச்சியர் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்டது.
- பாடல் - கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
  சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
- சொல்லும் பொருளும் - (சதிர் - நடனம், தாமம் - மாலை)

## செய்தி - தி.ஜானகிராமன்

- செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிச்சா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- தி. ஜானகிராமன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும், வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.
- "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டை உடையவர்.
- தி.ஜானகிராமன் தனது ஜப்பான் பயண அனுபவங்களை 'உதயசூரியன்' என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967 இல் நூலாக வெளியிடப்பட்டது.
- ரோம் மற்றும் செக்கோஸ்லோவோக்கிய சென்ற அனுபவங்களை 'கருங்கடலும் கலைக்கடலும்' என்னும் தலைப்பில் 1947 இல் நூலாக வெளியிட்டார்.
- தமது காவிரிக்கரை வழியான பயணத்தை "நடந்தாய் வாழி காவேரி" என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.
- இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை 'அடுத்த வீடு ஐம்பது மைல்' என்பதாகும்.
- தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே.சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர் கவிராயர்.
- ✓ 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் நாகசுரம் என்ற கருவியைப் பற்றி குறிப்பிடவில்லை. அதன்பின்தான் இக்கருவி தமிழகத்தில் அறிமுகமாகியிருக்க வேண்டும்.
- ✓ நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரம் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது.
- ✓ நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக்கொண்டு செய்யப்படுகிறது.

## இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

- பேராசிரியர் மா.சு.அண்ணாமலை "இந்திய தேசிய இராணுவம் - தமிழர் பங்கு" என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசுபெற்றவர்.
- இரண்டாம் உலகப்போரில் நடந்துகொண்டிருந்த 1942 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் நாள், ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ) என்ற படையை உருவாக்கினர்.
- நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, 91 நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார். 1943 ஆம் ஆண்டு சூலை மாதம் 9 ஆம் தேதி பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெரும் கூட்டத்தில் "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" (டெல்லி சலோ) எனப் போர்முழக்கம் செய்தார்.
- தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.
- இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் 'டோக்கியோ கேடட்ஸ்'.

- நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார் என்றவர் - பசும்பொன்.
- இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இவர்களில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி முதலானோர் விளங்கினர்.
- நோதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்.
- சிறந்த வீரர்களை உருவாக்க நோதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார்.
- கேப்டன் தாசன் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டு தூதுவராகப் பணியாற்றினார்.
- இந்திய தேசிய இராணுவம் ஜப்பானிய இராணுவத்தோடு சேர்ந்து, ஆங்கிலேயரோடு போரிடப் பர்மா வழியாக இந்தியா வரத் திட்டமிட்டது.
- ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார். 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்று சர்ச்சில் கூறினார்.
- இந்திய தேசிய இராணுவம் 1944 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று ஆங்கிலேயரை வென்று இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் "மொய்ராங்" என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது.
- இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள், 1943 - 45 ஆம் ஆண்டுகளில் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1944 ஆம் ஆண்டு பதினெட்டே வயதான இராமு என்பவர் தூக்கிலிடப்பட்டார். அவர் "நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை" என்று கூறினார்.
- மரணதண்டனைப் பெற்ற அப்துல்காதர் என்பவர் "வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்".

## நேதாஜியின் பொன்மொழிகள்

- அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.
- மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா? - அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.
- விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு, அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

# 9 ஆம் வகுப்பு - தமிழ்

## சீவக சிந்தாமணி

- சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும்.
- இலம்பகம் என்ற உட்பிரிவுகளைக் கொண்டது.
- 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல், 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது.
- ஆசிரியர் - திருத்தக்கதேவர். சமண சமயத்தைச் சேர்ந்தவர்.
- இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு.
- சீவக சிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக 'நரிவிருத்தம்' என்னும் 'நூலை இயற்றினார் என்பர்.

சொல்லும் பொருளும்

- தெங்கு - தேங்காய், இசை - புகழ், வருக்கை - பலாப்பழம், மால்வரை - பெரியமலை, மடுத்து - பாய்ந்து, கொழுநிதி - திரண்ட நிதி, மருப்பு - கொம்பு, வெறி - மணம், கழனி - வயல், சூல் - கரு, அடிசில் - சோறு, மடிவு - சோம்பல், கொடியனார் - மகளிர், நற்றவம் - பெருந்தவம்.

## முத்தொள்ளாயிரம்

- ஆசிரியரின் பெயர் அறியமுடியவில்லை.
- வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்.
- மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாக பாடுகிறது.
- நூல் முழுமையாக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன.
- சொல்லும் பொருளும்
  அள்ளல் - சேறு, பழனம் - நீர் மிக்க வயல், வெரீஇ - அஞ்சி, நாவலோ - நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து, கமுகு - பாக்கு, முத்தம் - முத்து.
- பாடல் - அள்ளல் பழனத்து அரக்காம்பல்
  வாயவிழ வெள்ளம் தீப்பட்ட

## சந்தை

- கிருட்டணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி சந்தை 18 ஏக்கர் நிலப்பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுகிறது.
- பொதியை ஏத்தி வண்டியிலே
  பொள்ளாச்சி சந்தையிலே - பாடலாசிரியர் மருதகாசி.
- பைங்கூழ் வளர்ந்தது - காரியவாகுபெயர். கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது.
- வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
  வளைந்துசெல் கால்களால் ஆறே. - வாணிதாசன்.

## பெரியாரின் சிந்தனைகள்

- வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுகிறார்.

- மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர் பெரியார்.
- பெரியார் எதிர்த்தவை
  இந்தித் திணிப்பு, குலக்கல்வித் திட்டம், தேவதாசி முறை, கள்ளுண்ணல், குழந்தைத் திருமணம், மணக்கொடை.
- மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.
- திருக்குறளை மதிப்புமிக்க நூலாக பெரியார் கருதினார்.
- மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும், அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும், அவ்வப்பொழுது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும் என்றார் பெரியார்.
- உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' என்வும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார். பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978 ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.
- நாட்டு விடுதலையைவிட, பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார்.
- கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை, பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றார் பெரியார்.
- வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும் என்றார்.
- 1938 நவம்பர் 13 இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வே.ரா.வுக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 27.06.1970 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு தந்தை பெரியாரைத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- பெரியார் விதைத்த விதைகள்.
  கல்வியிலும் வேலை வாய்பிலும் இடஒதுக்கீடு
  பெண்களுக்கான இடஒதுக்கீடு
  பெண்களுக்கான சொத்துரிமை
  குடும்ப நலத்திட்டம்
  கலப்புத் திருமணம்
  சீர்திருத்தத் திருமணம் ஏற்பு
- பெரியார் தோற்றுவித்த இயக்கம் - சுயமரியாதை இயக்கம். தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1925
- நடத்திய இதழ்கள் - குடியரசு, விடுதலை. உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)
- தொண்டு செய்து பழுத்த பழம்
  தூய தாடி மார்பில்
  மண்டை சுரப்பை உலகு தொழும்
  மணக்குகையில் சிறுத்தை எழும் - என்று பெரியாரை புரட்சிக்கவி பாரதிதாசன் பாராட்டுகிறார்.

## ஒளியின் அழைப்பு

- பிறவி இருளைத் துளைத்து சூழலின்

நிழலை வெறுத்து முகமுயர்த்தி - ந. பிச்சமூர்த்தி.

- விண் - வானம், ரவி - கதிரவன், கமுகு - பாக்கு.
- ந. பிச்சமூர்த்தி 'புதுக்கவிதையின் தந்தை' என அழைக்கப்பட்டார்.
- புதுக்கவிதையை இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.
- ந. பிச்சமூர்த்தி தொடக்காலத்தில் வழக்குரைஞராகவும், பின் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார்.
- ஹனுமான், நவஇந்தியா ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராக இருந்தார்.
- இவரின் முதல் சிறுகதை - " ஸயன்ஸுக்கு பலி " என்பதாகும்.
- 1932 இல் கலைமகள் இதழ் வழங்கிய பரிசைப் பெற்றார்.
- விக்ஷு, ரேவதி ஆகிய புனைபெயர்களில் படைப்புகள் எழுதினார்.

## தாவோ தே ஜிங்

- ஆசிரியர் லா வோட்சு.
- இவர் சீனாவில் கி.மு 2 ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர்.
- சீன மெய்யியலாளர் கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர்.
- லாவோட்சு " தாவோவியம் " என்ற சிந்தனைப்பிரிவைச் சார்ந்தவர்.
- ஒழுக்கத்தை மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார்.
- லாவோட்சுவோ இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார்.
- தாவோவியம் அதையே வலியுறுத்துகிறது.

## யதோதர காவியம்

- ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று.
- இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும்.
- இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர்.
- யசோதர காவியம், 'யசோதன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது.
- பாடல்களின் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கருதுவர்.

சொல்லும் பொருளும்

- அறம் - நற்செயல், வெகுளி - சினம், ஞானம் - அறிவு, விரதம் - மேற்கொண்ட நன்னெறி.

## மகனுக்கு எழுதிய கடிதம்

- வேப்பம்பூ மிதக்கும் எங்கள் வீட்டு கிணற்றில் என்னும் பாடல் நா.முத்துக்குமார் தூர் என்னும் தலைப்பில் எழுதிய பாடல்.

- ✓ யாதும் ஊரே யாவரும் கேளீர் - கணியன் பூங்குன்றனார்.
- ✓ இலத்தீன் புலவர் தெறென்ஸ் " நான் மனிதன், மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று " என்று கூறினார்.
- ✓ முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்கிறார் கோர்டன் ஆல்போர்ட்.
- ✓ குறிக்கோள் இல்லாதவன் பெறும் சதைப்பிண்டம் என்பதைப் "பூட்கையில்லோன் யாக்கை போல" (புறம்) என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார் நிலைநாட்டுகிறார்.
- ✓ விந்திய மலைத்தொடருக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூதி, வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும் என்பதே தருமசாத்திர நூல்களின் கருத்தாகும்.
- ✓ மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள், பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது என்றவர் ஸ்டாயிக்வாதிகள்.
- ✓ திருக்குறளைப் பற்றி "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்றார் ஆல்பர்ட் சுவைட்சர்.
- ✓ தமிழ் புலவர்கள் தமது பாடல்களில் பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு - மொழிபெயர் தேயம் என்றே கூறியுள்ளனர்.
- ✓ படுதிரை வையம் பாத்திய பண்பே - தொல்காப்பியம்.
- ✓ தமிழ் மக்கள் "சான்றோன்" எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் "sapens" (அறிவுடையோன்) எனப்படும் இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர்.
- ✓ செனக்கா என்னும் தத்துவ ஞானி கூறியதாவது "எல்லோருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும், நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்.
- ✓ நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன், நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன், நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன் - மார்க்ஸ் அரேலியஸ்.
- ✓ ஜி.யு. போப் திருவள்ளுவரை உலகப் புவலர் என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும் என்றார்.
- ✓ உள்ளற்க உள்ளம் சிறுகுவ - திருக்குறள்.
- ✓ உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் - திருக்குறள்
- ✓ உலகத்தமிழ் மாநாடுகள்

  1 - 1966 கோலாலம்பூர் மலேசியா.

  2 - 1968 சென்னை இந்தியா.

  3 - 1970 பாரீசு பிரான்சு.

  4 - 1974 யாழ்ப்பாணம் இலங்கை

  5 - 1981 மதுரை இந்தியா

  6 - 1987 கோலாலம்பூர் மலேசியா

7 - 1989 மொரீசியசு மொரீசியசு

8 - 1995 தஞ்சாவூர் இந்தியா

## அக்கறை

- ✓ ஆரிசியர் பெயர் கல்யாண்ஜி.
- ✓ கல்யாண்ஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்.
- ✓ 'வண்ணதாசன்' என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்புச் செய்துவருகிறார்.
- ✓ புலரி, முன்பின், ஆதி, அந்தியமற்ற நதி, மணல் உள்ள ஆறு ஆகியவை அவரின் கவிதை நூல்கள்.
- ✓ அகமும் புறமும் என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது.
- ✓ இவரின் பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு, சில இறகுகள் சில பறவைகள் என்ற பெயரில் வெளியானது.
- ✓ கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப்பறத்தல், ஒளியிலே தெரிவது உள்ளிட்டவை இவரது குறிப்பிட்ட சிறுகதை தொகுப்பாகும்.
- ✓ ஒரு சிறு இசை என்ற சிறுகதை தொகுப்பிற்பகாக இவருக்கு 2016ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது.

## குறுந்தொகை

- ✓ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை.
- ✓ இது தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.
- ✓ கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.
- ✓ இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டது.
- ✓ 1915 ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலை பதிப்பித்தார்.

சொல்லும் பொருளும்

- ✓ நசை - விருப்பம், நல்கல் - வழங்குதல், பிடி - பெண்யானை, வேழம் - ஆண்யானை, யா - ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது.
- ✓ பொளிக்கும் - உரிக்கும், ஆறு - வழி,

பாடல் - நசை பெரிது உடையர், நல்கலும் நல்குவர்

பிடிபசி களைஇய பெருங்கைவேழம் ................ குறுந்தொகை. (பெருங்கடுங்கோ)

- ✓ கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப்படுகிறார்.

## தாய்மைக்கு வறட்சி இல்லை

- ✓ ஆசிரியர் சு. சமுத்திரம்.
- ✓ 'வளத்தம்மா' - சு. சமுத்திரம் எழுதிய என் கதைகளின் கதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற்றது.
- ✓ சு. சமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டியைச் சேர்ந்தவர்.

- ✓ முந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.
- ✓ வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு போன்றவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகள்.
- ✓ 'வேரில் பழுத்த பலா' புதினம் சாகித்திய அகாதெமி விருதையும், 'குற்றம் பார்க்கில்' சிறுகதைத் தொகுதி தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன.

## நூல்கள்

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - ராபர்ட் கால்டுவெல்
- மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் - மணவை முஸ்தபா
- தமிழ்நடைக் கையேடு மாணவர்களுக்கான தமிழ் - என்.சொக்கன்.
- அழகின் சிரிப்பு - பாவேந்தர் பாரதிதாசன்
- தண்ணீர் தண்ணீர் - கோமல் சுவாமிநாதன்
- தண்ணீர் தேசம் - வைரமுத்து
- வாய்க்கால் மீன்கள் - வெ.இறையன்பு
- மழைக்காலமும் குயிலோசையும் - மா.கிருஷ்ணன்.
- கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும் - மா.அமரேசன்.
- தமிழர் நாகரிகமும் பண்பாடும் - அ. தட்சிணாமூர்த்தி
- தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் - மா. இராசமாணிக்கனார்
- தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் - க. ரத்னம்
- தொல்லியல் நோக்கில் சங்க காலம் - க. ராஜன்
- தமிழர் சால்பு - சு. வித்யானந்தன்.
- அக்கினிச் சிறகுகள் - அப்துல் கலாம்
- மின்மினி - ஆயிஷா நடராஜன்
- ஏன், எதற்கு எப்படி? - சுஜாதா
- ஓய்ந்திருக்கலாகாது - கல்விச் சிறுகதைகள் (தொகுப்பு - அரசி - ஆதிவள்ளியப்பன்)
- முதல் ஆசிரியர் - சிங்கிஸ் ஐத்மாத்தவ்
- கல்வியில் நாடகம் - பிரளயன்
- மலாலா - கரும்பலகை யுத்தம்.
- கருப்பு மலர்கள் - நா.காமராஜன் (கவிதை நூல்)
- தண்ணீர் தண்ணீர் - கோமல் சுவாமிநாதன் (நாடக நூல்)
- கிழவனும் கடலும் - எர்னஸ்ட் ஹெமிங்வே (குறுநாவல்)
- ஒரு கிராமத்து நதி - சிற்பி (சாகித்ய அகாதெமி விருது பெற்ற கவிதை நூல்)
- சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம் - எஸ்.ராமகிருஷ்ணன் (சிறார் நாவல்).
- நட்புக்காலம் - கவிஞர் அறிவுமதி
- திருக்குறள் கதைகள் - கிருபானந்தவாரியார்
- கையா, உலகே ஒரு உயிர் - ஜேம்ஸ் லவ்லாக் - தமிழில். சா. சுரேஷ்..
- ஆகாயத்துக்கு அடுத்த வீடு - மு.மேத்தா
- தமிழ்ப் பழமொழிகள் - கி.வா.ஜகந்நாதன்
- இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) - ச.தமிழ்ச்செல்வன்.
- பெரியாரின் சிந்தனைகள் - வே. ஆனைமுத்து.
- மணிபல்லவத் தீவிற்குப் பறந்து சென்றோம் - பாவலர் கருமலைத்தமிழாழன்.

தெரிந்துகொள்வோம்

- கல்லும் மலையும் குதித்துவந்தேன்
  பெருங்காடும் செடியும் கடந்துவந்தேன் - கவிமணி.

தெரிந்துகொள்வோம்

- குளம்தொட்டு கோடு பதித்து வழிசீத்து எனத்தொடங்கும் பாடல் - சிறுபஞ்சமூலம்.

- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - புறநானூறு
- உண்பது நாழி உடுப்பவை இரண்டே - புறநானூறு
- யாதும் ஊரே யாவரும் கேளிர் - புறநானூறு
- சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
  நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே - புறநானூறு
- உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,
  பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - புறநானூறு
- பட்டிமண்டபம்
  - பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கியவழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள்.
  - மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் என்று சிலப்பதிகாரத்திலும்,
  - பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் என்று மணிமேகலையிலும்
  - பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை, எட்டினோடு இரண்டும் அறியேனையே என்று திருவாசகத்திலும்
  - பன்ன அரும் கலைதெரி பட்டிமண்பம் என்று கம்பராமாயணத்திலும் (பாலகாண்டம், நகரப் படலம் 154) பட்டிமண்டபம் என்ற சொல் பயின்று வருகிறது.

இலக்கியங்களில் அறிவியல்

- ✓ புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
  **வலவன் ஏவா வான ஊர்தி** - புறநானூறு.
  - பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
    பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - பாரதி
  - மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
    செய்திடல் வேண்டுமம்மா.... - கவிமணி
  - பெண்ணனில் பேதை என்ற எண்ணம்
    இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
    உருப்படல் என்பது சரிப்படாது - பாவேந்தர் பாரதிதாசன்
- ✓ 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
- ✓ 11வது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.
- ✓ 15 ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.
- ✓ 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.
- ✓ 17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் கலீலியோ.
- ✓ பொதியை ஏத்தி வண்டியிலே, பொள்ளாச்சி சந்தையிலே - பாடலாசிரியர். மருதகாசி.
- ✓ நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் - முனைவர் சு.சக்திவேல்
- ✓ தரங்கம்பாடி தங்கப் புதையல் - பெ. தூரன்
- ✓ இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) - ச. தமிழ்ச்செல்வன்.

சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் சிறுகதை எழுத்தாளர்கள்

1. 1970 - அன்பளிப்பு (சிறுகதைகள்) - கு. அழகிரிசாமி
2. 1979 - சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) - தி.ஜானகிராமன்
3. 1987 - முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) - ஆதவன்
4. 1996 - அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) - அசோகமித்ரன்

5. 2008 - மின்சாரப்பூ (சிறுகதைகள்) - மேலாண்மை பொன்னுசாமி
6. 2010 - சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) - நாஞ்சில் நாடன்
7. 2016 - ஒரு சிறு இசை (சிறுகதைகள்) - வண்ணதாசன்

- ✓ 'தென்னாட்டின் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்பட்டவர் அறிஞர் அண்ணா
- ✓ அஞ்சல் தலைகளின் கதை - எஸ்.பி. சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு - வீ.மு. சாம்பசிவன்)
- ✓ தங்கைக்கு - வரதராசன், தம்பிக்கு - அறிஞர் அண்ணா.
- ✓ இந்தக் காட்டில்<br>எந்த மூங்கில்<br>புல்லாங்குழல்? - அமுதோன்.
- ✓ பிம்பங்களற்ற தனிமையில்<br>ஒன்றிலொன்று முகம் பார்த்தன<br>சலூன் கண்ணாடிகள். - நா. முத்துக்குமார்.
- ✓ வெட்டுக்கிளியின் சப்தத்தில்<br>மலையின் மௌனம்<br>ஒரு கணம் அசைந்து திரும்புகிறது - ஜப்பானியக் கவிஞர் பாஷோ
- ✓ எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார். - வள்ளலார்.
- ✓ கட்டிலாக் கவிதை - free verse, உவமையணி - simile, உருவக அணி - metaphor
- ✓ சிற்பியின் மகள் - பூவண்ணம்
- ✓ அப்பா சிறுவனாக இருந்தபோது - அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா.முகமது செரீபு)
- ✓ அந்தர தார்மய னேஎன ஐயறும் - சீவக சிந்தாமணி.

# 9ஆம் வகுப்பு – தமிழ் இலக்கணம்
## இயல் - 1
## தொடர் இலக்கணம்

### வினைவகைகள் – தன்வினை, பிறவினை

**பந்து உருண்டது** என்பது **தன்வினை.**
**உருட்டவைத்தான்** என்பது **பிறவினை.**

- எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.
- எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.
- பிறவினைகள், **வி, பி** போன்ற **விகுதி**களைக் கொண்டும் **செய், வை, பண்ணு** போன்ற **துணை வினைகளை** இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| தன்வினை | அவன் திருந்தினான் |
| | அவர்கள் நன்றாக படித்தனர் |
| பிறவினை | அவனைத் திருந்தச் செய்தான் |
| | தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார் |
| | பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார். |

- அப்பா சொன்னார் – **செய்வினைத் தொடர்**
- தோசை வைக்கப்பட்டது – **செய்யப்பாட்டு வினைத் தொடர்**
- இது போலவே, பாட்டும் பாடுகிறாள் - **செய்வினைத்தொடர்**
- பாட்டுப் (அவளால்) பாடப்பட்டது – **செயப்பாட்டுவினைத் தொடர்**
- 'படு' என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.
- 'படு' என்பதைப் போல, 'உண், பெறு' முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து 'ஆயிற்று, போயிற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.
  - கோவலன் கொலையுண்டான்.
  - ஓவியம் குமரனால் வரையப்பட்டது.
  - வீடு கட்டியாயிற்று.
  - சட்டி உடைந்து போயிற்று.
  - பணம் காணாமல் போனது.

### பயன்பாட்டுத் தொடர்கள்

| | |
|---|---|
| அப்துல் நேற்று வந்தான் | தன்வினைத் தொடர் |
| அப்துல் நேற்று வருவித்தான் | பிறவினைத் தொடர் |
| கவிதா உரை படித்தாள் | செய்வினைத் தொடர் |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | செயப்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனைந்தான் | உடன்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனையவில்லை | எதிர்மறைவினைத் தொடர் |
| என் அண்ணன் நாளை வருவான் | செய்தித் தொடர் |
| எவ்வளவு உயரமான மரம்! | உணர்ச்சித் தொடர் |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் | வினாத் தொடர் |

| | |
|---|---|
| *யார்?* | |
| *பூக்களை பறிக்காதீர்* | *கட்டளைத் தொடர்* |
| *இது நாற்காலி*<br>*அவன் மாணவன்* | *பெயர்ப் பயனிலைத் தொடர்* |

## பகுபத உறுப்பிலக்கணம்

- *பதம் (சொல்) இருவகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.*
- *பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.*

| | |
|---|---|
| **பகுதி** *(முதனிலை)* | *சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.* |
| **விகுதி** *(இறுதிநிலை)* | *சொல்லின் இறுதியில் நின்று திணை, பால். எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.* |
| **இடைநிலை** | *பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.* |
| ***சந்தி*** | *பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.* |
| ***சாரியை*** | *பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.* |
| **விகாரம்** | *தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.* |

## பகுதி

*ஊரன் – ஊர்,* *வரைந்தான் – வரை*
*நடிகன் – நடி,* *மடித்தார் – மடி*
*பார்த்தான் – பார்,* *மகிழ்ந்தாள் – மகிழ்*

## விகுதி

| | | |
|---|---|---|
| *படித்தான்* | *ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி* | *அன், ஆன்* |
| *பாடுகிறாள்* | *ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி* | *அள், ஆள்* |
| *பெற்றார்* | *ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி* | *அர், ஆர்* |
| *நீந்தியது* | *து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி* | *து, று* |
| *ஓடின* | *அ –பலவின்பால் வினைமுற்று விகுதி* | *அ,ஆ* |
| *சிரிக்கிறேன்* | *ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி* | *என், ஏன்* |
| *உண்டோம்* | *ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி* | *அம், ஆம், எம், ஏம், ஓம்* |
| *செய்தாய்* | *ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி* | *ஐ, ஆய், இ* |
| *பாரீர்* | *ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி* | *இர், ஈர்* |
| *அழகிய, பேசும்* | *அ, உம் – பெயரெச்ச விகுதிகள்* | *அ, உம்* |
| *வந்து, தேடி* | *உ, இ – வினையெச்ச விகுதிகள்* | *உ, அ* |

| | | |
|---|---|---|
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு……. |

### இடைநிலைகள்

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் – இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

### சந்தி

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

### சாரியை

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ. உ. ஐ. கு. ன் |

### எழுத்துப்பேறு

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துபேறு.

எடுத்துக்காட்டுகள்

வந்தனன் ------- வா (வ) + த் (ந்) + த் + அன் + அன்
வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
த் (ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த் – இறந்த கால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

செய்யாதே ----- செய் + ய் + ஆ + த் + ஏ
செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி.

## இயல் - 2
## துணைவினைகள்

### வினைவகைகள்

- வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

### தனிவினையும் கூட்டுவினையும்

- வினைச் சொற்களை அமைப்பின் அடிப்படையில் **தனிவினை, கூட்டுவினை** என இருவகைப்படுத்தலாம்.

### தனி வினை

படி, படியுங்கள், படிக்கிறார்கள்

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி, பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

### கூட்டுவினை

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினைகள் என்பர்.
- கூட்டுவினைகள் பொதுவாக **மூன்று வகையாக** ஆக்கப்படுகின்றன.

1) **பெயர் + வினை = வினை**
   தந்தி + அடி = தந்தியடி
   ஆணை + இடு = ஆணையிடு
   கேள்வி + படு = கேள்விப்படு

2) **வினை + வினை = வினை**
   கண்டு + பிடி = கண்டுபிடி
   சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு
   சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

3) **இடை + வினை = வினை**
   முன் + ஏறு = முன்னேறு
   பின் + பற்று = பின்பற்று
   கீழ் + இறங்கு = கீழிறங்கு

### முதல்வினையும் துணைவினையும்

நான் படம் பார்த்தேன்.
கண்ணன் போவதைப் பார்த்தேன்.

- இந்தச் சொற்றொடர்களின், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் எனும் வினையின் அடிப்படைப் பொருள் அல்லது சொற்பொருள் *(LEXICAL MEANING)* எனலாம்.

ஓடப் பார்த்தேன்.
எழுதிப் பார்த்தாள்.

- இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட, எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை

அந்தந்த வினைகளின் அடிப்படைப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.

- ஓடப் பார்த்தேன் --- இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.
- எழுதிப் பார்த்தாள் ---- இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.
- ஒரு கூட்டுவினையில் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை. முதல் வினை *(MAIN VERB)* எனப்படும். ஒரு கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டு விட்டு **முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.**
- கூட்டு வினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணிவினையே திணை, பார், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ **40 துணைவினைகள்** உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.
- பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை **இருவகை** வினைகளாகவும் செயல்படுகின்றன.

### துணைவினைகளின் பண்புகள்

1) துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
2) இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
3) பேச்சு மொழியிலோ துணைவினைகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

- தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது. | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| | என்னிடம் பணம் இருக்கிறது. | அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். | நீ என்னை அழ வைக்காதே. |
| | அவன் வானொலியில் பாட்டு வைத்தான். | அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? | மழை பெய்யப் போகிறது. |
| | நான் கடைக்குப் போனேன். | நான் பயந்து போனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர். |
| | எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | வானம் இருண்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| விடு | யாரையும் உள்ளே விடாதே. | அடுத்த மாதம் நான் போய்விடுவேன். |
| | மழைவிட்டதும் போகலாம். | அப்பா இனி வந்துவிடுவார். |
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். | அவர் கதைகதையாக எழுதித் தள்ளுகிறார். |
| | காய்கறிவண்டியைத் தள்ளி சென்றார். | அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |
| | தலையில் தொப்பியைப் போடு. | விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போட வேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். |
| | அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான். | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

## இயல் - 3
## வல்லினம் மிகும் இடங்கள்

வாணன் வேலைக் கொடுத்தான்.
வாணன் வேலை கொடுத்தான்.

- இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?
- வல்லெழுத்துக்கள் **க, ச, த, ப** ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை **நிலைமொழியுடன் புணர்கையில்** அவற்றின் மெய்யெழுத்துக்கள் தோன்றிப் புணரும். இதை **வல்லினம் மிகுதல்** என்பர். இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.
- தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.
- வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின் பாற்படும்.
- சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துக்களின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

### வல்லினம் மிகும் இடங்கள்

- தற்கால உரைநடையில் வல்லினம் மிக வேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | **அ, இ** என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும், **அந்த, இந்த** என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், **எ** என்னும் வினாவெழுத்தின் பின்னும், **எந்த** என்னும் வினாச் சொல்லின் பின்னும் |

| | | |
|---|---|---|
| | | வல்லினம் மிகும். |
| 2. | கதவைத்திற<br>தகவல்களைத்திரட்டு<br>காட்சியைப்பார் | **ஐ** என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 3. | முதியவருக்குக்கொடு<br>மெட்டுக்குப்பாட்டு<br>ஊருக்குச்செல் | **கு** என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும், |
| 4. | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு | **என, ஆக,** போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். |

## மேலும் சில வல்லினம் மிகும் இடங்கள்

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். |
| எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும். |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். |
| கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர, ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| கிழக்குப் பகுதி<br>வடக்குப் பக்கம் | திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |
| தாமமைரப் பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப்பேசினார்<br>தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| நிலாச்சோறு<br>கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். |
| வாழ்க்கைப்படகு<br>உலகப்பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |

## இயல் - 4
## வல்லினம் மிகா இடங்கள்

தோப்புக்கள் – தோப்புகள்

கத்தி கொண்டு வந்தான் – கத்திக்கொண்டு வந்தான்

- மேற்கண்ட சொற்களில் **வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும்** வருவதை அறியலாம். நாம் பேசும்போது எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

**வல்லினம் மிகா இடங்கள்**

| | |
|---|---|
| அது செய்.<br>இது காண். | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை, | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |
| தந்தையே பாருங்கள்.<br>மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு.<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்,<br>கூடு கட்டு. | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது, |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை<br>திருவளர்ச்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம், மூன்று<br>கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார்.<br>என்று தருவார்.<br>அவராவது தருவதாவது.<br>யாரடா சொல்.<br>ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற<br>கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள்.<br>அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை இத்தனை, எத்தனை,<br>அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு,<br>அத்தகைய, இத்தகைய, எத்தகைய,<br>அப்போதைய, இப்போதைய, எப்போதைய,<br>அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட,<br>நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| என்னோடு சேர்.<br>மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி. (ஐ)<br>கை தட்டு. (ஆல்)<br>வீடு சென்றாள். (கு)<br>கரை பாய்ந்தான்.<br>(இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று<br>தொண்டர் படை | நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த்தொகையில் வல்லினம் மிகாது. |
| உறு பொருள்<br>நனி தின்றான்.<br>கடி காவல். | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார்<br>சலசல | அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள்<br>பொருள்கள்<br>வாழ்த்துகள் | கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது (மிகும் என்பர் சிலர்) |
| பைகள், கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வரை, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. |

## இயல் - 5
## இடைச்சொல் – உரிச்சொல்

### இடைச்சொல்

- இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை ஆகும்.
- பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப் போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.
- இடைச்சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.
- இடைச்சொல் பலவகையாக அமையும்.

### இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், ஆய், ஈர் (கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று…… |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்….. |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை |
| வியங்கோள் விகுதிகள் | க, இய |

| | |
|---|---|
| சாரியைகள் | அத்து, அற்று, அம்,.... |
| உவம உருபுகள் | போல, மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்...... |

**இடைச்சொற்களின் வகைகள்**

| | |
|---|---|
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

- இவற்றுள் **உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட ஆ, ஆம்** ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**உம்**

- **'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.**

*எ.கா.*

- *மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை (எதிர்மறை உம்மை).*
- *பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு).*

**ஓ**

- **ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிமறை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.**
- தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூற முடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

*எ.கா.*

- *இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)*
- *பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள் (இது அல்லது அது)*
- *பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)*

**ஏ**

- **ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.**
- தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

*எ.கா.*

- *அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.*
- *நடந்தே வந்தான்.*

**தான்**

- **'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.**

*எ. கா.*

- *நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்.*
- *நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.*
- *நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.*
- *நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.*

*வேறுபாட்டை உணருங்கள்:*

- *நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)*
- *நிர்மலா தானும் பாடினாள். (தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் – பெயர்ச்சொல்)*

**மட்டும்**

- ***இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.***

*எ.கா.*

- *படிப்பு மட்டும் இருந்தால் போதும் (வரையறைப் பொருள்).*

**ஆவது**

- ***இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.***

*எ.கா.*

- *ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)*
- *அவனாவது, இவனாவது செய்து முடிக்க வேண்டும். (இது அல்லது அது)*
  *முதலாவது, இரண்டாவது,..... (வரிசைப்படுத்துதல்)*

**கூட**

- *என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)*
- *தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப்பொருள்)*
- *அவனுக்கு வரையக்கூட தெரியும். ( எச்சம் தழுவிய கூற்று))*

**ஆ**

- ***வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.***
- *ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.*

*எ.கா.*

- *புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?*
- *புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?*

**ஆம்**

- ***சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.***

*எ.கா.*

- *உள்ளே வரலாம். (இசைவு)*
- *இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்/செய்தி)*
- *பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி.*
- *அன்று என்பது ஒருமைக்கும் அல்ல என்பது பன்மைக்கும் உரியன.*
  *(எ,கா) இது பழம் அன்று.*
- *இவை பழங்கள் அல்ல.*
- *எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்*

- *எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்.*
  *(எ.கா) எத்தனை நூல்கள் வேண்டும்?*
- *எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது*

## உரிச்சொற்கள்

- *உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்த பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல், இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை.*
- *ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.*

| | |
|---|---|
| *கடி மலர் – மணம் மிக்க மலர்*<br>*கடி நகர் – காவல் மிக்க நகர்*<br>*கடி விடுதும் – விரைவாக விடுவோம்*<br>*கடி நுனி – கூர்மையான நுனி* | *ஒரு சொல் பல பொருளுக்கு உரியது* |
| *உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.*<br>*உறு பசி; தவச் சிறிது; நனி நன்று* | *பல சொல் ஒரு பொருள்* |

- *உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை*
  1) *ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு*
  2) *பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு*
- *மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.*

# 9 ஆம் வகுப்பு – தமிழ் இலக்கணம்
## இயல் - 6
## புணர்ச்சி

### நிலைமொழி – வருமொழி

- புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும் போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.
- புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்

### புணர்மொழியின் இயல்பு

| | |
|---|---|
| கலை + அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர்முதல் |
| வாழை + மரம் | மெய்ம்முதல் |

- மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண் + இ) + அடி = மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க் + இ) கிளை = மரக்கிளை |

### இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப்படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

  வாழை + மரம் = வாழைமரம்
  செடி + கொடி = செடிகொடி
  மண் + மலை = மண்மலை

- புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல்.

  நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)
  கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)
  பல் + பசை = பற்பசை ( திரிதல்)
  புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

### உயிரீற்றுப் புணர்ச்சி

### உடம்படுமெய்

- உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படு மெய் என்று சொல்வர்.

- நிலைமொழியின் ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்னும் உயிரெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.
  மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

  தீ + எரி = தீ + ய்+ எரி = தீயெரி

  ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

- 'இ, ஈ, ஐ 'தவிர, பிற உயிரெழுத்துக்கள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.
  பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

  பா + இனம் ' பா+ வ் + இனம் = பாவினம்

- நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

  சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

  சே + வ் + அடி = சேவடி

  தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

  இவனே + அவன் = இவனே + ய் + அவன் = இவனேயவன்

  இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
  உயிர்வழி வவ்வும் ஏமுனிங் விருமையும்
  உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (நன். 162)

### குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட் + உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.
  உறவு + அழகு = உற (வ் + உ) = உறவ் + அழகு = உறவழகு

| புணர்ச்சி | |
|---|---|
| **இயல்பு**<br>பொன் + வளை = பொன்வளை | **விகாரம்**<br>பூ + கடை = பூக்கடை<br>கல் + சிலை = கற்சிலை<br>கபிலர் + பரணர் = கபிலபரணர் |
| **உடம்படுமெய்**<br>மணி + அடி = மணியடி<br>குரு + அருள் = குருவருள்<br>தே + இலை = தேயிலை<br>தே + ஆரம் = தேவாரம் | **குற்றியலுகரம்**<br>எனது + உயிர் = எனதுயிர்<br>நாடு + யாது = நாடியது<br>நிலவு + ஒளி = நிலவொளி |

- தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு, அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குமற்றியலுகரம் |

## மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதைவலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துக்களும் இவ்வாறு மிகும்.

*1, 'ய' கர ஈற்றுச் சொற்கள் முன் மிகும்.*
*எ.கா – மெய் + மயக்கம் = மெய்ம்மயக்கம்*
*மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்*

*2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் மெல்லினம் மிகும்.*
*எ.கா – வேய் + குழல் = வேய்ங்குழல்*
*கூர் + சிறை = கூர்சிறை*
*பாழ் + கிண று = பாழ்ங்கிணறு*

*3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி மெல்லினமும் ஆகும்.*
*எ.கா – புளி + கறி = புளிங்கறி*
*புளி + சோறு = புளிஞ்சோறு*

*4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.*
*செய் + நன்றி = செய்ந்நன்றி*
*எ. கா – மா + பழம் = மாம்பழம்*
*விள + காய் = விளங்காய்*

*5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.*
*எ.கா – பூ + கொடி = பூங்கொடி*
*பூ + சோலை = பூஞ்சோலை*
*பூ + தொட்டி = பூந்தொட்டி*

## இயல் ஏழு
## ஆகுபெயர்

*'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'*
*'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'*

- இத்தொடர்களில் ஓர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை **இடவாகுபெயர்** என்பர்.
- ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர்கள் பதினாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| முல்லையைத் தொடுத்தாள் | **பொருளாகுபெயர் (முதலாகுபெயர்)** – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு) யாகிய பூவுக்கு ஆகி வந்தது. |
| வகுப்பறை சிரித்தது | **இடவாகு பெயர்** - வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது. |
| கார் அறுத்தான் | **காலவாகுபெயர்** – கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது. |
| மருக்கொழுந்து நட்டான் | **சினையாகு பெயர்** – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது. |
| மஞ்சள் பூசினாள் | **பண்பாகு பெயர்** - மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது. |
| வற்றல் தின்றான் | **தொழிலாகு பெயர்** – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது. |
| வானொலி கேட்டு மகிழ்ந்தனர் | **கருவியாகுபெயர்** - வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது. |
| பைங்கூழ் வளர்ந்தது | **காரியவாகுபெயர்** – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது. |
| அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன் | **கருத்தாவாகுபெயர்** – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது. |
| ஒன்று பெற்றால் ஒளிமயம் | **எண்ணலளவை ஆகுபெயர்** – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது. |
| இரண்டு கிலோ கொடு | **எடுத்தலளவை ஆகுபெயர்** - நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| அரை லிட்டர் வாங்கு | **முகத்தலளவை ஆகுபெயர்** – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| ஐந்து மீட்டர் வெட்டினான் | **நீட்டளவை ஆகுபெயர்** – நீட்டி அளக்கும் நீட்டளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |

## இயல் எட்டு
## யாப்பிலக்கணம்

### யாப்பின் உறுப்புகள்

- கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம். இது பாக்கள் பற்றியும் அவற்றின் உறுப்புகள் பற்றியும் விரிவாகப் பேசுகிறது.

- உறுப்பியலில் யாப்பின் ஆறு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை விளக்கப்படுகின்றன.

### எழுத்து

- யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துக்கள் குறில், நெடில், ஒற்று என மூவகைப்படும்.

### அசை

- எழுத்துக்களால் ஆனது 'அசை' எனப்படும். ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

### சீர்

- ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். இதுவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும்.
- நேர் என்பதோடு உகரம் சேர்ந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர். நிரை என்னும் அசையோடு உகரம் சேர்ந்து முடியும் அசைகள் நிரைபு என்று கூறப்படும். இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.
- ஈரசைச் சீர்களுக்கு, 'இயற்சீர்', 'ஆசிரிய உரிச்சீர்' என்னும் வேறு பெயர்களும் உண்டு.

| நேரசை | |
|---|---|
| தனிக்குறில் | ப |
| தனிக்குறில், ஒற்று | பல் |
| தனிநெடில் | பா |
| தனிநெடில், ஒற்று | பால் |

| நிரையசை | |
|---|---|
| இருகுறில் | அணி |
| இருகுறில், ஒற்று | அணில் |
| குறில், நெடில் | விழா |
| குறில், நெடில், ஒற்று | விழார் |

| ஓரசைச்சீர் | |
|---|---|
| அசை | வாய்ப்பாடு |
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

| ஈரசைச்சீர் | | |
|---|---|---|
| அசை | வாய்ப்பாடு | |
| நேர் நேர் | தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | புளிமா | |
| நிரை நிரை | கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | கூவிளம் | |

| மூவசைச்சீர் |
|---|

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்ப்பாடு | அசை | வாய்ப்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

- காய்ச்சீர்களை “வெண்சீர்கள்” என்று அழைக்கிறோம்.
- மூவகைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

### அலகிட்டு வாய்ப்பாடு கூறுதல்

- நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.
- வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும்; பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்; பிற தளைகள் வாரா.
- ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

*பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்*
*அறம்நாணத் தக்க துடைத்து.*

| வரிசை | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1 | பிறர் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | தக் / கது / | நேர் நிரை | கூவிளம் |
| 3 | தான் / நா / ணா / | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | னா / யின் / | நேர் நேர் | தேமா |
| 5 | அறம் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | தக் / க / | நேர் நேர் | தேமா |
| 7 | துடைத் / து | நிரைபு | பிறப்பு |

### தளை

- பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் ‘தளை’ எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.
  1. நேரொன்றா சிரியத்தளை ------------- மா முன் நேர்
  2. நிரையொன்றா சிரியத்தளை ---------- விளம் முன் நிரை
  3. இயற்சீர் வெண்டளை ---------- மா முன் நிரை, விளம் முன் நேர்
  4. வெண்சீர் வெண்டளை ---------- காய் முன் நேர்
  5. கலித்தளை -------------- காய் முன் நிரை
  6. ஒன்றிய வஞ்சித்தளை ----------- கனி முன் நிரை
  7. ஒன்றா வஞ்சித்தளை ------------ கனி முன் நேர்

### அடி

- இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து ‘அடி’ எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

- இரண்டு சீர்களைக் கொண்டது **குறளடி;** மூன்று சீர்களைக் கொண்டது **சிந்தடி;** நான்கு சீர்களைக் கொண்டது **அளவடி;** ஐந்து சீர்களைக் கொண்டது **நெடிலடி;** ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது **கழிநெடிலடி.**

### தொடை

- தொடை – தொடுத்தல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது 'தொடை' ஆகும். தொடை என்னும் செய்யுள் உறுப்பு, பாடலில் உள்ள அடிகள்தோறும் அல்லது சீர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை பொருந்தி வருமாறு பாடலை இயற்றுதல் பற்றி அமைகிறது.
- மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

**மேனைத் தொடை:** ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது.

(எ.கா)

**ஒ**ற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
**ஒ**ற்றினால் ஒற்றிக் கொளல்.

**எதுகைத் தொடை:** அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க. இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது.

(எ.கா)

தி**ற**னல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அ**ற**னல்ல செய்யாமை நன்று.

**இயைபுத் தொடை:** அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது.

(எ.கா)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு **கொஞ்சும்**
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் **கெஞ்சும்.**

## இயல் ஒன்பது
## அணியிலக்கணம்

### அணி – அழகு

- செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது 'அணி' இலக்கண இயல்பாகும்.

### உவமை அணி

- அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன.

    மலர்ப்பாதம் – மலர் போன்ற பாதம்

- இத்தொடரில் பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

  பாதம் – பொருள் (உவமேயம்)
  மலம் – உவமை
  போன்ற – உவம உருபு

  **இனிய உளவாக இன்னாத கூறல்**
  **கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

  இதில் உவமையணி அமைந்துள்ளது.

### உருவக அணி

- கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் இத்தன்மையே, 'உருவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

  *(எ.கா)*

  **இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
  **வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**
  **அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
  **பைங்கூழ் சிறுகாலைச் செய்.**

- இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

### பின்வருநிலை அணிகள்

- ஒருசெய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடங்களிலும் வருதலே 'பின்வருநிலை' அணியாகும். இது மூன்று வகைப்படும்.

### சொல்பின்வருநிலையணி

- முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலையணி ஆகும். *(எ.கா)*

  **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
  **துப்பாய தூஉம் மழை.**

- இக்குறளில் 'துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது.
- துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பு – நல்ல, நன்மை; துப்பு – உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்.

### பொருள் பின்வருநிலையணி

- செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின்வருநிலை அணி ஆகும். *(எ.கா.)*

  **அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா**
  **நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்**
  **விண்டன கொன்றை விரிந்த கருவிளை**
  **கொண்டன காந்தள் குலை.**

- இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன, ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தன.

  **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
  **மாடல்ல மற்றை யவை.**

- இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

### சொற்பொருள் பின்வருநிலையணி

- முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும். *(எ.கா)*

  **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
  **பொய்யா விளக்கே விளக்கு.**

- இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள்பின்வருநிலையணி ஆகும்.

### வஞ்சகப்புகழ்ச்சி அணி

- *வஞ்சகப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும். (எ.கா)*

    ***தேவ ரனையர் கயவர் அவருந்தாம்***
    ***மேவன செய்தொழுக லான்.***

- *கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.*

    ***பாரி பாரி என்றுபல ஏத்தி,***
    ***ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்***
    ***பாரி ஒருவனும் அல்லன்;***
    ***மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே.***

- *இப்பாடலின் பொருள் – புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைமாறு கருதாமல் கொடுக்கிறான்? மழையும்தான் கைமாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைப் புரக்கிறது. இது பழிப்பது போலப் புகழ்வது ஆகும்.*
- *இது பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.*

JACOB'S
GREAT MINDS

## 10 ஆம் வகுப்பு - தமிழ்
## அன்னை மொழியே

- பெயர் - பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
- இயற்பெயர் - துரைமாணிக்கம்.
- தென்மொழி, தமிழ்சிட்டு இதழ்கள் மூலம் தமிழுணர்வை ஊட்டியவர்.
- உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் முதலிய நூல்களைப் படைத்தவர்.
- இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்கு கருவூலமாய் அமைந்தது.

## தமிழ்சொல் வளம்

- ஆசிரியர் - தேவநேயப் பாவாணர்.
- 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுபவர்.
  தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
- அடி வகை
  ஒரு தவாரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்
  தாள் : நெல், கேழ்வரகு.
  தண்டு : கீரை, வாழை.
  கோல் : நெட்டி, மிளகாய்ச்செடி.
  தூறு : குத்துச்செடி, புதர்
- கிளைப்பிரிவுகள்
  கவை : அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை.
  கொம்பு அல்லது கொப்பு : கவையின் பிரிவு.
  கிளை : கொம்பின் பிரிவு.
  சினை : கிளையின் பிரிவு.
  போத்து : சினையின் பிரிவு.
  குச்சு : போத்தின் பிரிவு.
  இணுக்கு : குச்சியின் பரிவு.
- காய்ந்த அடியும் கிளையும் பெயர் பெறுதல்
  காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்
  சுள்ளி : காய்ந்த குச்சு.
  விறகு : காய்ந்த சிறுகிளை.
  வெங்கழி : காய்ந்த கழி.
  கட்டை : காய்ந்த கொம்பும் கவையும் அடியும்.
- இலை வகை
  இலை : புளி, வேம்பு முதலியன.
  தாள் : நெல், புல்.
  தோகை : சோளம், கரும்பு.
  ஓலை : தென்னை, பனை.
  சண்டு : காய்ந்த தாளும் தோகையும்.
  சருகு : காய்ந்த இலை
- கொழுந்து வகை
  தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்
  துளிர் அல்லது தளிர் : நெல், புல்.
  முறி அல்லது கொழுந்து : புளி, வேம்பு.
  குருத்து : சோளம், கரும்பு, தென்னை, பனை.

கொழுந்தட்டை : கரும்பின் நுனிப்பகுதி.

- பூவின் நிலைகள்

அரும்பு : பூவின் தோற்றநிலை.
போது : பூ விரியத் தொடங்கும் நிலை.
மலர் : பூவின் மலர்ந்த நிலை.
வீ : மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை.
செம்மல் : பூ வாடிய நிலை.

- பிஞ்சு வகை

பூம்பிஞ்சு : பூவோடு கூடிய இளம்பிஞ்சு.
பிஞ்சு : இளம் காய்.
வடு : மாம்பிஞ்சு.
மூசு : பலாப்பிஞ்சு.
கவ்வை : எள்பிஞ்சு.
குரும்பை : தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு.
முட்டுக் குரும்பை : சிறு குரும்பை.
இளநீர் : முற்றாத தேங்காய்.
நுழாய் : இளம்பாக்கு.
கருக்கல் : இளநெல்.
கச்சல் : வாழைப்பிஞ்சு.

- குலை வகை

கொத்து : அவரை, துவரை.
குலை : கொடி முந்திரி.
தாறு : வாழைக் குலை.
கதிர் : கேழ்வரகு, சோளம்.
அலகு அல்லது குரல் : நெல், தினை.
சீப்பு : வாழைத் தாற்றின் பகுதி.

- கெட்டுப்போன காய்கனி வகை

சூம்பல் : நுனியில் சுருங்கிய காய்.
சிவியல் : சுருங்கிய பழம்.
வெம்பல் : சூட்டினால் பழுத்த பிஞ்சு.
அளியல் : குளுகுளுத்த பழம்.
அழுகல் : குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்.
சொண்டு : பதராய்ப் போன மிளகாய்.

- பழத்தோல் வகை

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்.
தொலி : மிக மெல்லியது.
தோல் : திண்ணமானது.
தோடு : வன்மையானது.
ஓடு : மிக வன்மையானது.
குடுக்கை : சுரையின் ஓடு
மட்டை : தேங்காய் நெற்றின் மேற்பகுதி.
உமி : நெல், கம்பு முதலியவற்றின் மூடி.
கொம்மை : வரகு, கேழ்வரகு முதலியவற்றின் மூடி.

- மணிவகை

கூலம் : நெல், புல் முதலிய தானியங்கள்.
பயறு : அவரை, உளுந்து.
காழ் : புளி, காஞ்சிரை (நச்சு மரம்).
முத்து : வேம்பு, ஆமணக்கு.
கொட்டை : மா, பனை.

முதிரை : அவரை, துவரை முதலிய பயறுகள்.

- இளம் பயிர் வகை

நாற்று : நெல், கத்திரி.
கன்று : மா, புளி, வாழை.
குருத்து : வாழையின் இளநிலை.
பிள்ளை : தென்னையின் இளநிலை.
குட்டி : விளாவின் இளநிலை.
மடிலி அல்லது வடலி : பனையின் இளநிலை.
பைங்கூழ் : நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்.

தகவல் துளி

- தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.
- இவர் திருச்சிக்கு அருகில் 'திருவள்ளுவர் தவச்சாலை' ஒன்றை அமைத்துள்ளார்.
- பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.
- இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.
- உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே - பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார்.
- இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.
- போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் விசுபனில், 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் இரண்டு வண்ணங்களில் (கருப்பு, சிவப்பு) அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் **Carthila de lingoa Tamul e Portugues.**

## இரட்டுற மொழிதல்

- நூல் - தனிப்பாடல் திரட்டு. புலவர் பலரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு.
- சந்தக்கவிமணி எனப்படும் தமிழழகனார்.
- இவருடைய இயற்பெயர் - சண்முகசுந்தரம். இவர் பன்னிரெண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- பாடல் - முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
  மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்

**சொல்லும் பொருளும்**

துய்ப்பது - கற்பது, தருதல்
மேவலால் - பொருந்துதல், பெறுதல்

- கடலானது வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருவதாக தனது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இரட்டுற மொழிதல்**

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனை சிலேடைஅணி என்றும் அழைப்பர். செய்யுளிலும், உரைநடையிலும் மேடை பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

## உரைநடையின் அணிநலன்கள்

- ஆசிரியர் - எழில்முதல்வன்.
- இவரது இயற்பெயர் - மா.இராமலிங்கம்.
- குடந்தை ஆடவர் கல்லூரி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்துறைத் தலைவராக பணியாற்றியவர்.
- "புதிய உரைநடை" என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி பரிசுபெற்றவர்.
- இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**தகவல் துளி**

- திருவள்ளுவர் பெயரில் முதல் தமிழ்க் கணினி 1983 செப்டம்பரில் டி.சி.எம். டேட்டா புரொடக்ட்ஸ் என்னும் தனியார் நிறுவனம் உருவாக்கியது.
- "களம்புகத் துடித்து நின்ற உனக்கு வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய், உன் புன்னகைதான் அதற்குச் சான்று" - என்று அறிஞர் அண்ணா தனது உரைநடையில் குறிப்பிட்டார்.
- "குடிசைகள் ஒருபக்கம், கோபுரங்கள் ஒருபக்கம், பசித்த வயிறுகள் ஒருபக்கம், புளிச்சேப்பக்காரர்கள் ஒருபக்கம்" என்று எழுதியவர் - தோழர்.ப.ஜீவானந்தம்.
- "சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
  சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்". க. சச்சிதானந்தன்
- "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
  ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
  கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
  இத்திறத்த எட்டுத்தொகை"
- "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" நூல் - கால்டுவெல்.
- "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
  மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கி
  தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" .............. சிலப்பதிகாரம், காடுகாண் காதை.
- "தேணிலே ஊறிய செந்தமிழின் - சுவை
  தேரும் சிலப்பதி காறமதை
  ஊனியே எம்முயிர் உல்லலவும் - நிதம்
  ஓதி யுணர்ந்தின் புருவோமே" ................ கவிமணி தேசிக விநாயகனார்.

## இயல் - 2
## கேட்கிறதா என் குரல்

- திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.
- வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
  ஆயுள் பெருக்கம்உண் டாம் ............... ஔவை
- கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும் காற்றை தமிழர்கள் 'கொண்டல்' என்றனர்.
- மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் காற்றை 'கோடை' என்றனர்.
- வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் காற்றை 'வாடைக்காற்று' என்றனர். இதற்கு ஊதைக்காற்று என்ற மற்றொரு பெயருமுண்டு.
- தெற்கிலிருந்து வீசும் காற்றை 'தென்றல் காற்று' என்றனர்.
- "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" .......... என்கிறது சிலப்பதிகாரம்.
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் எழுதிய 'பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது' என்னும் சிற்றிலக்கியத்தில்,

“நந்தமிழ் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே“ என்கிறார்.

- “நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களிஇயல் யானைக் கரிகால் வளவ ................ புறநானூறு.
- கி.பி. (பொ.ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்திற்கு வழியைக் கண்டுபிடித்தார். அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பாலஸ் என்பதையே சூட்டினார்கள்,
- சங்ககால பெண் புலவர் வெண்ணியக்குயத்தியார் ‘வளி‘ என காற்றை குறிப்பிட்டு சிறப்பு செய்துள்ளார்.
- இந்தியாவில் ஜுன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகின்றது.
- இந்தியாவுக்கு தேவையான 70 விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கிறது.
- காற்றின் ஆற்றலை , “வளி மிகின் வலி இல்லை“ (புறம்) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.
- மதுரை இளநாகனார் (புறம்) கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
- உலக அளவில் காற்றாலை உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் வகிக்கிறது. இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.
- உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.
- காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைபடுகிறது என சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது.
- குளோரோ புளுரோ கார்பன் வெளிவிடும் நச்சுக் காற்றினால் புறஊதாக் கதிர் நேரடியாக ஓசோன் படலத்தைப் பாதிக்கிறது.
- குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும். இதனால் மனிதன் மற்றும் விலங்குகளில் கண்களும் தோலும் பாதிப்படைகின்றன.
- குளோரோ புளுரோ கார்பன் உபயோகத்தைக் குறைக்கும் விதமாக ஹைட்ரோ கார்பன் (HC) என்னும் குளிர்பதனியை இப்போது பயன்படுத்தப் தொடங்கியுள்ளனர்.
- கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்துவிடுவதால் அமிலமழை பெய்கிறது.
- ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் கார்பன் டை ஆக்ஸைடை நாம் எடுத்துக் கொள்கிறோம்.
- உலக சுற்றுச் சூழல் நாள் - ஜுன் 15

**தகவல் துளி**

- தாய்லாந்து மன்னர் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களை தாய் மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர் - தனிநாயக அடிகள்.

## காற்றே வா

- பாடல் - காற்றே வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு - பாரதியார் கவிதைகள்

**சொல்லும் பொருளும்**

மயலுறுத்து - மயங்கச்செய், ப்ராண - ரஸம் - உயிர்வளி, லயத்துடன் - சீராக

- பாரதியார் 'நீடுதுயில் நீக்க பாடி வந்த நிலா', 'சிந்துக்கு தந்தை' என்றெல்லாம் பாராட்டப்படுகிறார்.
- எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்.
- கவிஞர், கட்டுரையாளர், கேலிச்சித்திரம் (கருத்துப்படம்) போன்றவற்றை உருவாக்கியவர்.
- குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்களையும், கண்ணன் பாட்**டு**, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி முதலிய குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்.
- இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களில் ஆசிரியராக பணியாற்றியவர்.
- 'பாட்டுக்கொரு புலவன்' என பாராட்டப்பெற்றவர்.

**தகவல் துளி**

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுக்கு அப்பாற்பட்டு உருவாகும் கவிதை வடிவம் வசனகவிதை **(prose poetry)** ஆகும்.
- இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது..
- உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்ததால் இதனை கையாண்டார். இதுவே புதுக்கவிதை எனப்பட்டது.
- **பாடல்** - திக்குகள் எட்டும் சிதறி - தக்க
  தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட - பாரதியார்.

## முல்லைப்பாட்டு

- ஆசிரியர் - நப்பூதனார்.
- முல்லைப்பாட்டு பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று, இது 103 அடிகளை கொண்டது,
- இது ஆசிரியப்பாவால் ஆனது. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது.
- காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் எனப்பட்டார்.
- பாடல் - நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
  வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை

**விரிச்சி**

- ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய்த் தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்; அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும், தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்

## புயலிலே ஒரு தோணி

- 'புயலிலே ஒரு தோணி' புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம்.
- ஆசிரியர் - ப. சிங்காரம். **(1920-1997).**
- இவர் இந்தோனிசியாவில் இருந்தபோது, தென்கிழக்காசியப் போர் மூண்டது.
- ப.சிங்காரம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர். வேலைக்காக இந்தோனேசியா சென்றார். மீண்டும் இந்தியா வந்து தினத்தந்தி நாளிதழில் பணியாற்றினார். இவர் அன்றே ஏழரை இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

**தகவல் துளி**

- வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000 ஆம் ஆண்டில் தொடங்கியது.

- புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டது.
- சார்க் அமைப்பில் இருக்கும் வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன,
- இதில் இந்தியா கொடுத்து ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல்(நான்கு பூதங்கள்), கடைசியாக லெஹர் (அலை).
- இன்னும் வரவிருப்பவை மேக், சாஹர், வாயு, 'கஜா' புயலின் பெயர் இலங்கை தந்தது.
- அடுத்து வந்த 'பெய்ட்டி' புயல் பெயர் தாய்லாந்து தந்தது.

**இடம்புரி புயலும், வலம்புரி புயலும்**

- வங்கக் கடலில் வீசும் புயலும், அமெரிக்காவை, ஜப்பானை, சீனாவைத் தாக்கும் புயல்களும் இடம்புரிப் புயல்கள், ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை, ஹவாய் தீவுகளை தாக்கும் புயல்கள் வலம்புரிப் புயல்கள்.
- இதனை பிரெஞ்ச் நாட்டை சேர்ந்த கணித வல்லுநர் காஸ்பார்ட் குஸ்டாக் கொரியாலிஸ் 1835 இல் கண்டுபிடித்தார். இதற்கு கொரியாலிஸ் விளைவு என்று பெயர்.
- "பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி" - அகநானூறு
- மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
  வளரும் விழி வண்ணமே-வந்து - கவிஞர் கண்ணதாசன்.

**பூக்களைப் பற்றிய செய்திகள்**

- கண்ணிற்கு காட்சித் தராமல் காண்பதற்கு அரியதாய் இருக்கும் மலர்கள் - ஆல மலர், பலா மலர்.
- அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் - அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.
- மூங்கில் பூவில் காய்த் தோன்றி கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.
  - storm - புயல், Tornado - சூறாவளி, Tempest - பெருங்காற்று, Land Breeze-நிலக்காற்று, Sea Breeze - கடற்காற்று, Whirlwind - சுழற்காற்று.

## இயல் மூன்று
## விருந்து போற்றதும்

- ‘விருந்தே புதுமை’ என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.
- “மோப்பக் குழையும் அனிச்சம்” - முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்கிறது திருக்குறள்.
- “... ..... ..... ............ தொல்லோர் சிறப்பின்
  விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை“ - சிலப்பதிகாரம்
- “பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
  வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
  விருந்தும் அன்றி விளைவன யாவையே“ - கம்பராமாயணம்.
- “விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
  மேன்மேலும் முகமலரும் மேலோர் போல“ - கலிங்கத்துப்பரணி
- “உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
  அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
  தம்மியர் உண்டலும் இலரே.........“ - புறநானூறு.
- விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்று. இதனை,
  “அல்லில் ஆயினும் விருந்து வரின்
  உவக்கும்“ - நற்றிணை.
- குரல் உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து
  சிறிது புறப்பட்டன்றோ இலள் - புறநானூறு.
- நெருதை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
  இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
  கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்..... - புறநானூறு.
- பண்டைத் தமிழர்கள் விருந்தினர் திரும்பிச்செல்லும் போது, அவர்களை வழியனுப்ப ஏழு அடி நடந்து செல்வார்கள், இதனை பொருநராற்றுப்படையில், “காலின் ஏழடிப் பின் சென்று“ என குறிப்பிடப்பட்டுள்ளது.
- நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.
- “பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநீர்
  வருவீர் உளீரோ“ - குறுந்தொகை.
- “மருந்தே ஆயினும் விருந்தொடு உண்“ என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார்.
- அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் “வாழையிழை விருந்து விழா”வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

## காசிக்காண்டம்

- ஆசிரியர் - அமதிவீர்ராம பாண்டியர்.
- காசி நகரத்தின் பெருமைகளைக் குறிப்பிடும் நூல் காசிக்காண்டம்.
- முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீர்ராம பாண்டியர். இவர் தமிழ்புலவராகவும் திகழ்ந்தார்.
- இவரின் மற்றொரு நூலான ‘வெற்றி வேற்கை’ என்றழைக்கப்படும் ‘நறுந்தொகை’ சிறந்த அறக்கருத்துக்களை எடுத்துரைக்கிறது.
- அவருடைய மற்றொரு பெயர் சீவலமாறன் ஆகும்.
- இவர் இயற்றிய மற்ற நூல்கள் நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மப்புராணம் ஆகும்.

**சொல்லும் பொருளும்**

- ❖ அருகுற - அருகில்.
- ❖ முகமன் - ஒருவரை நலம் வினவி கூறும் விருந்தோம்பல் சொற்கள்.

**தகவல் துளி**

- விருந்தினர் ஒருவருக்கு ஒன்பது விருந்தோம்பல் செய்வது இல்லற ஒழுக்கம் என அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்.
- ஒப்புடன் முகம் மலர்ந்தே
உபசரித்து உண்மை பேசி .................... விவேகசிந்தாமணி.

## மலைபடுகடாம்

- ஆசிரியர் - பெருங்கௌசிகனார்.
- இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.
- மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதமென்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றது
- நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.

**ஆற்றுப்படை**

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகிறோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல்.

**சொல்லும் பொருளும்**

- அசைஇ - இளைப்பாறி, கடும்பு - சுற்றம், ஆரி - அருமை, வயிரியம் - கூத்தர், இறடி - தினை, அல்கி - தங்கி, நரலும் - ஒலிக்கும், படுகர் - பள்ளம், வேவை - வெந்தது, பொம்மல் - சோறு.

## கோபல்லபுரத்து மக்கள்

- ஆசிரியர் - கி.ராஜநாராயணன்.
- கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்டக் கதையே கோபல்லபுரத்து மக்கள்.
- இவருடைய ஊர் இடைசெல் ஆகும்.
- **“கோபல்லபுரத்து மக்கள்” என்ற புதினம்** 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி பரிசினைப் பெற்றது. இவர் கரிசல் எழுத்தாளர் ஆவார்.
- இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார்.
- இவர் தொடங்கிய வட்டார மரபு வாய்மொழி புனைக்கதைகள், கரிசல் இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது.
- எழுத்துலகில் இவர் கி.ரா என்று குறிப்பிடப்படுகிறார்.
- கரிசல் இலக்கியம்
- கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம். கரிசல் மண்ணின் படைப்பாளி கு.அழகிரிசாமி. கி.ரா வுக்கு முன் எழுதத் தொடங்கியவர்.
- கரிசல் எழுத்தாளர்கள் கு.அழகிரிசாமி, கி.ரா, பா.ஜெயபிரகாசம், பூமணி, வீரவேலுசாமி, சோ.தர்மன், வேல இராமமூர்த்தி.
- ‘மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து‘ ............. முக்கூடற்பள்ளு.
- ‘கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
- அத்தமிக்கும் போது அரிசிவரும் -..................... காளமேகப்புலவர்.

**கலைச்சொற்கள்**

செவ்விலக்கியம் - Classical literature
வட்டார இலக்கியம் - Regional literature
காப்பிய இலக்கியம் - Epic literature
பக்தி இலக்கியம் - Devotional literature
பண்டைய இலக்கியம் - Ancient literature
நாட்டுப்புற இலக்கியம் - Folk literature
நவீன இலக்கியம் - Modern literature

## இயல் நான்கு
## செயற்கை நுண்ணறிவு

- செயற்கை நுண்ணறிவு என்பது இயல்பான மொழிநடையை உருவாக்குதல் **(Natural Language Generation)** என்னும் மென்பொருள். அதற்கு வேர்டுஸ்மித் (எழுத்தாளி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.
- 2016 இல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
- சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன.
- இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி, 'இலா' **(ELA - Electronic Live Assistant)** என்னும் உரையாடு மென்பொருளை **(Chatbot)** உருவாக்கியிருக்கிறது. ஒரு வினாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும்.
- **பெப்பர்** - ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**தகவல் துளி**

- சீன நாட்டில் தமிழ்க் கல்வெட்டுகள்
  சீன நாட்டில் 'காண்டன்' நகருக்கு 500 கல் வடக்கே சூவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது.
- அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.
- குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது. இத்தமிழ் கல்வெட்டுகளில் சோழர்கால சிற்பங்கள் இன்றளவும் உள்ளன.

## பெருமாள் திருமொழி

- ஆசிரியர் - குலசேகராழ்வார்
- பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன.
- காலம் - எட்டாம் நூற்றாண்டு.

## பரிபாடல்

- ஆசிரியர் - கீரந்தையார்
- பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- இந்நூல் ஓங்கு பரிபாடல் என்னும் புகழுடையது.
- இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.
- எழுபது பாடல்கள் இருப்பதாக கூறியுள்ளனர். ஆனால் 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- பாடல் - விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்

கரு வளர் வானத்து இசையில் தோன்றி

- "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்" ............ (திருவாசகம்).

## விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

- ஜான் வீலர் - இவர் அமெரிக்க அறிவியல் அறிவியலாளர். இவர் தான் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர்.

### ஸ்டீபன் ஹாக்கிங்

- ஸ்டீபன் ஹாக்கிங்கின் பேரண்ட பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றிய ஆராய்ச்சி முடிவு 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று அழைக்கப்படுகிறது. அவர் கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று நிறுவினார்.
- கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும் என்றார்.
- ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகள் ;
  - அமெரிக்காவின் உயரிய விருதான, அதிபர் விருது **(Presidential medal of Freedom)**
  - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் விருது
  - உல்ஃப் விருது **(Wolf Foundation Prize)**
  - காப்ளி பதக்கம் **(Copley Medal)**
  - அடிப்படை இயற்பியல் பரிசு **(Fundamental Physics Prize)**
- தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்கள் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்து கடக்கிறார்கள்? - ஸ்டீபன் ஹாக்கிங்.
- ஸ்டீபன் ஹாக்கிங் 2012 இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் "தொடக்க விழா நாயகர்" என்ற சிறப்பைப் பெற்றார்.
- 'அடுத்த தலைமுறை' **(The Next Generation)**, பெருவெடிப்புக் கோட்பாடு **(The Bigbang Theory)** உள்ளிட்ட தொலைக்காட்சி தொடர்களில் பங்கேற்றார்,
- சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தன் 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.
- போயிங் 727 என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.
- ஹாக்கிங் கலீலியோவின் நினைவு நாளில் பிறந்து, ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தார்.
- ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.
- 'காலத்தின் சுருக்கமான வரலாறு' நூல் 1988 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.

### தகவல் துளி

- பெரியார் அறிவியல் தொழில் நுட்ப கழகம் 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை இங்குதான் உள்ளது. 2009ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- ஸ்டீபன் ஹாக்கிங் - இப்பேரண்டம் பெருவெடிப்பினால் **(Big Bang Theory)** உருவானதே என்பதற்கான சான்றுகளை கணிதவியல் அடிப்படையில் விளக்கினார்.

ஸ்டீபன் ஹாக்கிங் கூற்று

- "சில நேரங்களில் உண்மை புனைவை விடவும் வியப்பூட்டுவதாகவும் அமைந்துவிடுகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும். புனைவு இலக்கியம் படைப்பவர்களது கற்பனைகளையெல்லாம் மிஞ்சுவதாகவே

கருந்துளைகள் பற்றிய உண்மைகள் உள்ளன. அதனை அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயலுகிறது“.

- “வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்“ - ஸ்டீபன் ஹாக்கிங்.

ஐன்ஸ்டீன் கூற்று

- “அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத்திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்துகொள்ளப்போவதையும் உள்ளடக்கியது“
- “கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
  திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை“ . அகநானூறு

## இயல் ஐந்து
## மொழிபெயர்ப்புக் கல்வி

- மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.
- ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம்வைத்தும் என்னும் வாக்கியம் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பில் உள்ளது.
- இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபால் பரிசு கிடைத்தது.
- ராகுல் சங்கிருத்யாயன் 1942ஆம் ஹிஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது “வால்காவிலிருந்து கங்கை வரை“ என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார். 1949 ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

## நீதிவெண்பா

- ஆசிரியர் - கா.ப.செய்குதம்பிப் பாவலர்
- ‘சதாவதானம்‘ என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்.
- காலம் - (1874 - 1950). கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
- சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி ‘சதாவதானி‘ என்று பாராட்டப்பெற்றவர்.

## திருவிளையாடற்புராணம்

- ஆசிரியர் - பரஞ்சோதி முனிவர்,
- இந்நூல் 3 காண்டங்களும் 64 படலங்களும் உடையது.
- திருமறைக்காட்டில் பிறந்தவர். 17ஆம் நூற்றாண்டு.
- இயற்றிய வேறு நூல்கள் - வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி.

**தகவல் துளி**

- சொல்லேருழவனுக்குப் கவரி வீசிய வில்வேருழவன்
- உறங்கிய புலவர் - மோசிகீரனார், கவரி வீசிய மன்னர் - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.

- மன்னனை புகழ்ந்து மோசிகீரனார் பாடியது
  “மாசற விசித்த வார்புறு வள்பின் ………….. புறநானூறு.

## புதிய நம்பிக்கை

- “உனக்கு படிக்க தெரியாது“ - மேரி மெக்லியோட் பெத்யூன்.
- இம்மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை “உனக்கு படிக்க தெரியாது“ என்ற தலைப்பில் நூலாக படைத்துள்ளார் கமலாலயன்.
- இயற்பெயர் - வே. குணசேகரன்.
- இவர் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிந்தார்.

**தகவல் துளி**

- “கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை“ - ஐங்குறுநூறு.

## இயல் ஆறு
## நிகழ்கலை

**தேவராட்டம்**

- தேவராட்டம் இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். பொதுவாக உறுமி என அழைக்கப்படும். இசைக்கருவி - “தேவதுந்துபி“.
- எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது.

**சேவையாட்டம்**

- தேவராட்டம் போன்றே ஆடுகின்ற ஆட்டம் சேவையாட்டம். இதை இசைச் சார்புக் கலையாகவும், வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

**பொய்க்கால் குதிரையாட்டம்**

- “போலச்செய்தல்“ பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.

**தகவல் துளி**

- கூத்துப்பட்டறை ந. முத்துசாமி என்ற ‘கலைஞாயிறு’.
- தெருக்கூத்தைத் தமிழ்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.
- “நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்“ என்றவர்.
- இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதினையும் பெற்றவர்.

**தகவல் துளி**

- மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், ‘இராச சோழன் தெரு‘ என்பது இன்றும் உள்ளது.
- இது மாமன்னன் இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட சிறப்பினை உணர்த்துகிறது.
- இது ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பூத்தொடுத்தல்

- ஆசிரியர் - கவிஞர் உமா மகேஸ்வரி
- இவர் நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகளையும் படைத்துள்ளார்.

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

- ஆசிரியர் - குமரகுருபரர். 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று.
- பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.
- இயற்றிய வேறு நூல்கள் - கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை.
- ஆண்பாற் பிள்ளைத்தமிழ்(கடைசி மூன்று பருவம்) - சிற்றில், சிறுபறை, சிறுதேர்.
- பெண்பாற் பிள்ளைத்தமிழ்(கடைசி மூன்று பருவம்) - கழங்கு, அம்மானை, ஊசல்.
- இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.
- செங்கீரைப் பருவம் - செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

## கம்பராமாயணம்

- ஆசிரியர் - கம்பர்.
- கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் இராமவதாரம்.
- 6 காண்டங்களை உடையது. சந்த நயம் மிக்கது.
- ஊர் - திருவழுந்தூர்.
- ஆதரித்தவர் - திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல்.
- இயற்றிய வேறு நூல்கள் - சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலைஎழுபது.
- இவர், "கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்", விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என சிறப்பிக்கப்படுகிறார்.

## பாய்ச்சல்

- தக்கையின் மீது நான்கு கண்கள் என்ற சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- ஆசிரியர் - சா.கந்தசாமி.
- இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார்.
- 'விசாரணைக் கமிஷன்' என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.
- 'சுடுமண்' என்னும் குறும்படத்திற்காக அனைத்துலக விருதினையும் பெற்றார்.
- தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.
- "ஓங்கு இரும் பரப்பின்<br>வங்க ஈட்டத்து தொண்டியோர்" ............... சிலப்பதிகாரம், ஊர்காண்காதை.

## 10 ஆம் வகுப்பு - தமிழ்
## இயல் ஏழு
## சிற்றகல் ஒளி

**ம.பொ.சிவஞானம்**

- 'எனது போராட்டம்' என்னும் ம.பொ.சிவஞானத்தின் தன்வரலாற்று நூலில் இருந்து எடுக்கப்பட்டது.
- இவர் சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர். காலம் (1906 - 1995)
- விடுதலை போராட்ட வீரர்,, சட்டமன்ற மேலவை உறுப்பினர், தமிழரசு கழகத்தை தொடங்கியவர்.
- 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூலுக்காக 1966 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருதினை பெற்றார்.
- தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.
- சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பினார்.
- இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் தீவிர பற்றாளராக இருந்தார்.
- 1931 இல் காந்தி - இர்வின் ஒப்பந்தம் (மார்ச் 5) ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பேரணிகளிலும், கதர் விற்பனையிலும் கலந்துகொண்டார்.
- பம்பாயில் 1942 ஆகஸ்டு 8 ஆம் நாள் 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்று தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கட்சி நிறைவேற்றியது.

**தகவல் துளி**
**மார்ஷல் ஏ.நேசமணி**

- நாகர்கோவில் நகர்மன்ற தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.
- குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர். இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார்.
- 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது.
- இரண்டாம் இராசராச சோழன் - கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்று பட்டங்களால் அழைக்கப்பட்டார்.

## ஏர் புதிதா?

- ✓ ஆசிரியர் - கு.ப.ராஜகோபாலன். சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் என பன்முகத்தன்மை உடையவர்.
- ✓ 1902 ல் கும்பகோணத்தில் பிறந்தார்.
- ✓ தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராக பணியாற்றினார்.
- ✓ இவரது படைப்புகள் இவரது மறைவுக்கு பின் அகலிகை, ஆத்மசிந்தனை ஆகியன நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

## சிலப்பதிகாரம்

- ✓ சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- ✓ இளங்கோவடிகள் சேர மரபைச் சேர்ந்தவர்.
- ✓ சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என சிறப்பிக்கப்படுகிறது.
- ✓ புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. முப்பது காதைகளை உடையது.

- ✓ சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகிறது.
- ✓ மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்.
- ✓ சாத்தன் 'அடிகளே நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என இக்காப்பியத்தை படைத்தார் என்பர்.
- ✓ உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைபாங்கில் அமைந்திருக்கும் பாட்டு. இதனை "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" எனவும் வழங்குவர்.
- ✓ கண்ணகியும் கோவலனும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்கு செல்கையில் அவர்களோடு துணையாய் வந்தவர் கவுந்தியடிகள்.
- ✓ கணவனை இழந்த கண்ணகி மதுரையிலிருந்து நெடுவேள் குன்றம் (சுருளிமலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள் என்பதாக அறியப்படுகிறது.

சொல்லும் பொருளும்

- காருகர் - நெய்பவர்(சாலியர்), தூசு - பட்டு, துகிர் - பவளம், வெறுக்கை - செல்வம், பாசவர் - வெற்றிலை விற்போர், ஓசுநர் - எண்ணெய் விற்போர், மண்ணுள் வினைஞர் - ஓவியர், கிழி - துணி.

ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு

- "சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
  கந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா
  வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
  திளையாத குண்டலகே சிக்கும்" .................. திருத்தணிகையுலா.

## <u>மங்கையராய் பிறப்பதற்கே</u>

### எம்.எஸ்.சுப்புலெட்சுமி

- ✓ இசைப்பேரரசி என நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர் எம்.எஸ்.சுப்புலெட்சுமி
- ✓ முழுப்பெயர்....... சண்முகவடிவு சுப்புலட்சுமி
- ✓ இவர் ஒருமுறை காந்தியடிகளை தில்லியில் சந்தித்தபோது 'இரகுபதி இராகவ இராஜாராம்' பாடலை பாடினார்.
- ✓ 1954 ல் தாமரையணி விருது பெற்றபோது ஹெலன் கெல்லர் அவரை தொட்டுத் தடவி பாராட்டினார். 1963 ல் இங்கிலாந்திலும் 1966ல் ஐ.நா. அவையிலும் பாடினார்.
- ✓ அவர் பாடி பதிவு செய்யப்பட்ட வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத் தொடங்கியது.
- ✓ 1974 இல் நோபல் பரிசுக்கு இணையான 'மகசேசே விருது' கிடைத்தது.
- ✓ இந்தியாவின் மிக உயரிய விருதான "இந்திய மாமணி" விருதினை சுப்புலட்சுமி அவர்கள் பெற்றார்.

### பாலசரசுவதி

- ✓ பரதநாட்டிய கலைஞர்.
- ✓ தாமரைச் செவ்வணி விருதினை பெற்றவர் பாலசரசுவதி ஆவார்.
- ✓ டோக்கியோவில் உள்ள 'கிழக்கு மேற்கு சந்திப்பு' நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பாக நடனம் ஆடினார்.

### ராஜம் கிருஷ்ணன்

- ✓ வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருதினை பெற்ற முதல் பெண் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் ஆவார்.
- ✓ அவருடைய 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்னும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப்பெற்றது.

- ✓ உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையை "கரிப்பு மணிகள்" என்னும் தலைப்பில் புதினமாக எழுதினார்.
- ✓ நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்கள் குறித்து "குறிஞ்சித் தேன்" என்ற புதினமும்,
- ✓ கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களை பேசுவதாக "அலைவாய்க் கரையில்" என்ற புதினமும்,
- ✓ அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதை சுட்டிக்காடுவதற்காக "சேற்றில் மனிதர்கள்" மற்றும் "வேருக்கு நீர்" என்ற புதினத்தையும் படைத்தார்.
- ✓ தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையை "கூட்டுக் குஞ்சுகள்" என்ற தலைப்பில் புதினமாக வெளியிட்டார்.
- ✓ ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பெண்குழந்தைகளின் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து "மண்ணகத்துப் பூந்துளிகள்" என்ற தலைப்பில் எழுதினார்.
- ✓ இப்படி சமூக அவலங்களை உற்று நோக்கி எழுத்தின் வழியாக கட்டவிழ்த்து உலகிற்கு காட்டியவர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் ஆவார்.

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

- ✓ இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, தாய்லாந்து அரசின் காந்தி அமைதி விருது போன்ற உயரிய விருதுகளை பெற்று பெண்குலத்திற்கு பெருமை சேர்த்தவர்.
- ✓ காந்திய சிந்தனைகளால் கவரப்பட்டு சுதந்திர போராட்டத்தில் பங்குபெற்றார். கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தார்.
- ✓ "உழுபவருக்கே நில உரிமை இயக்கம்" **(LAND FOR THE TILLER'S FREEDOM - LAFTI)** தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார்.

**சின்னப்பிள்ளை**

- ✓ 'களஞ்சியம்' என்ற பெயரில் மகளிர் குழு ஆரம்பித்தவர். இன்று பல மாநிலங்களில் பல லட்சம் நபருக்கு வேலை கிடைக்கிறது.
- ✓ இவர் வாஜ்பாய் அவர்களின் கைகளால் 'பெண் ஆற்றல் விருது' (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு தமிழக அரசின் "ஔவை விருதையும்". தூர்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார்.
- ✓ அண்மையில் தாமரைத்திரு விருதையும் பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

## இயல் எட்டு
## சங்க இலக்கியத்தில் அறம்

- சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை 'அறநெறிக்காலம்' என்பர்.
- 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார்.
- நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி.
- 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறர்.
- எறியார் எறிதல் யாவணது எறிந்தார்<br>எதிர்சென்று எறிதலும் செல்லான் ............ புறநானூறு
- செல்வத்தின் பயனே ஈதல்<br>துய்ப்பேம் எனினே தப்புந பலவே ............ புறநானூறு
- வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் பாராட்டப்பட்டனர்.

- வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டியுள்ளார்.
- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.
- உதவி செய்தலை ஈழத்துப் பூதன்தேவனார் ‘உதவியாண்மை‘ என்று குறிப்பிடுகிறார்.
- பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்
  சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலித்தொகை)
- ‘பிழையா நன்மொழி‘ என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் ‘பொய் மொழிக் கொடுஞ்சொல்‘ என்று பொய்யைக் குறிப்பிடுகின்றது.

**தகவல் துளி**

- போதிதர்மர் ----- கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர்பூண்டு சீனாவுக்குச் சென்றார்.
- “ஜென் தத்துவம்“ என்ற ஒன்றை உருவாக்கினார்.
- போதி தருமருக்கு சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஞானம்

- ஆசிரியர் - தி.சொ.வேணுகோபாலன்
- இக்கவிதை தொகுப்பு “கோடை வயல்“ என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராக பணியாற்றியவர்.
- இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு ‘மீட்சி விண்ணப்பம்‘.

## காலக்கணிதம்

- காலக்கணிதம் என்னும் பகுதி கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
- கண்ணதாசன் இயற்பெயர் முத்தையா. சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தார்.
- “கலங்காதிரு மனமே“ என்ற பாடலை எழுதி திரைப்பட பாடலாசிரியரானார்.
- “சேரமான் காதலி” என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருதினை பெற்றார்.
- இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

**தகவல் துளி**

- நதியின் பிழையன்று
  நறும்புனலின்மை அன்றோ............. கம்பன்
- நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
  நதிசெய்த குற்றம் இல்லை........கண்ணதாசன்.
- “கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
  தேர்வண் பாரிதண் பறம்பு நாடே!“ ---- புறநானூறு

## இயல் ஒன்பது
## ஜெயகாந்தம்

- எதற்காக எழுதுகிறேன்? - ஜெயகாந்தன்.

**விருதுகள்**

குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன் - திரைப்படம்),
சாகித்திய அகாதெமி விருது - ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ (புதினம்),
சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்),
ஞானபீட விருது, தாமரைத்திரு விருது ஆகியவற்றை பெற்றுள்ளார்.

- “சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுகிறார்.

| சிறுகதைத் தொகுப்பு | குறும்புதினங்கள் | புதினங்கள் |
|---|---|---|
| **குருபீடம்**, **யுகசந்தி**, **ஒரு பிடி சோறு**, **உண்மை சுடும்**, **இனிப்பும் கரிப்பும்**, **தேவன் வருவாரா**, **புதிய வார்ப்புகள்**. | **பிரளயம்**, **கைவிலங்கு**, **ரிஷிமூலம்**, **பிரம்ம உபதேசம்**, **யாருக்காக அழுதான்**?, **கருணையினால் அல்ல**, **சினிமாவுக்குப் போன சித்தாளு**. | **பாரீசுக்குப் போ**, **சுந்தர காண்டம்**, **உன்னைப்போல் ஒருவன்**, **கங்கை எங்கே போகிறாள்**, **ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்**, **இன்னும் ஒரு பெண்ணின் கதை**, **ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்**. |

## சித்தாளு

- ஆசிரியர் - நாகூர்ரூமி. இயற்பெயர் - முகம்மதுர.ஃபி.
- தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர், 80 களில் ‘கணையாழி‘ இதழில் எழுதத் தொடங்கியவர்.
- இவர் எழுதிய மற்ற கவிதைத் தொகுப்புகள் - நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல்.
- இவர் எழுதிய நாவல் - ‘கப்பலுக்கு போன மச்சான்’ என்பது ஆகும்.

## தேம்பாவணி

- ஆசிரியர் - வீரமாமுனிவர்.
- இயற்பெயர் - கான்சுடான்சு சோசப் பெசுகி.
- காலம் - 17ஆம் நூற்றாண்டு.
- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடினார். அவர் ‘இஸ்மத் சன்னியாசி‘ என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார். இந்தப் பாரசீகச் சொல்லுக்கு தூய துறவி என்று பொருள்.
- தேம்பா+அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும், தேன்+பா+அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்னும் பொருள் அறியப்படுகிறது.
- தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), பரமார்த்த குருகதைகள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.

**சொல்லும் பொருளும்**

- சேக்கை - படுக்கை, உய்முறை - வாழும் வழி, உவமணி - மணமலர், துணர் - மலர்கள்.

## ஒருவன் இருக்கிறான்

- ‘கு.அழகிரிசாமி சிறுகதைகள்‘ என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- ஆசிரியர் - கு.அழகிரிசாமி.
- இவர் மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக் கதைகளைப் படைப்பதில் வல்லவர்.
- கரிசல் எழுத்தாளர் வரிசையில் மூத்தவர் எனலாம்.

**தகவல் துளி**

- “ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
  அரசு பட அமர் உழக்கி” ------------ மதுரைக்காஞ்சி.

**நூல்கள்**

- யானை சவாரி - பாவண்ணன்
- கல்மரம் - திலகவதி
- அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் - ந.முருகேசபாண்டியன்.
- நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் - முனைவர் சேதுமணி மணியன்
- தவறின்றித் தமிழ் எழுதுவோம் - மா.நன்னன்
- பச்சை நிழல் - உதயசங்கர்.
- குயில்பாட்டு - பாரதியார்.
- அதோ அந்தப் பறவை போல - ச. முகமது அலி.
- உலகின் மிகச்சிறிய தவளை - எஸ்.ராமகிருஷ்ணன்.
- திருக்குறள் தெளிவுரை - வ.உ.சிதம்பரனார்.
- சிறுவர் நாடோடிக் கதைகள் - கி.ராஜநாராயணன்.
- ஆறாம் திணை - மருத்துவர் கு.சிவராமன்.
- பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் - நீலமணி
- அன்றாட வாழ்வில் அறிவியல் - ச. தமிழ்ச்செல்வன்
- காலம் - ஸ்டீபன் ஹாக்கிங்
- சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று - தமிழில் வல்லிக்கண்ணன்.
- குட்டி இளவரசன் - தமிழில் வெ.ஸ்ரீராம்
- ஆசிரியரின் டைரி - தமிழில் எம்.பி.அகிலா.
- தேன்மழை - சுரதா
- திருக்குறள் நீதி இலக்கியம் - க.த.திருநாவுக்கரசு
- நாட்டார் கலைகள் - அ.கா.பெருமாள்
- என் கதை - நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்
- வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்
- நாற்காலிக்காரர் - ந. முத்துசாமி

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெய், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெய் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி,மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சி பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

- யாப்போசை தரும் பாவோசை;
    1. செப்பலோசை - இருவர் உரையாடுவது போன்ற ஓசை
    2. அகலோசை - ஒருவர் பேசுதல் போன்ற - சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை.
    3. துள்ளலோசை - கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந்துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது.
    4. தூங்கலோசை - சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை, தாழ்ந்தே வருவது.

யாப்பதிகாரம், புலவர் குழந்தை

JACOB'S GREAT MINDS

# 9ஆம் வகுப்பு - தமிழ் இலக்கணம்
## இயல் - 1
## தொடர் இலக்கணம்

### வினைவகைகள் – தன்வினை, பிறவினை

**பந்து உருண்டது** என்பது **தன்வினை.**
**உருட்டவைத்தான்** என்பது **பிறவினை.**

- எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.
- எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.
- பிறவினைகள், **வி, பி** போன்ற **விகுதி**களைக் கொண்டும் **செய், வை, பண்ணு** போன்ற **துணை வினைகளை** இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| தன்வினை | அவன் திருந்தினான் |
| | அவர்கள் நன்றாக படித்தனர் |
| பிறவினை | அவனைத் திருந்தச் செய்தான் |
| | தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார் |
| | பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார். |

- அப்பா சொன்னார் – **செய்வினைத் தொடர்**
- தோசை வைக்கப்பட்டது – **செய்யப்பாட்டு வினைத் தொடர்**
- இது போலவே, பாட்டும் பாடுகிறாள் - **செய்வினைத்தொடர்**
- பாட்டுப் (அவளால்) பாடப்பட்டது – **செயப்பாட்டுவினைத் தொடர்**
- 'படு' என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.
- 'படு' என்பதைப் போல, 'உண், பெறு' முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து 'ஆயிற்று, போயிற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.
    - கோவலன் கொலையுண்டான்.
    - ஓவியம் குமரனால் வரையப்பட்டது.
    - வீடு கட்டியாயிற்று.
    - சட்டி உடைந்து போயிற்று.
    - பணம் காணாமல் போனது.

### பயன்பாட்டுத் தொடர்கள்

| | |
|---|---|
| அப்துல் நேற்று வந்தான் | தன்வினைத் தொடர் |
| அப்துல் நேற்று வருவித்தான் | பிறவினைத் தொடர் |
| கவிதா உரை படித்தாள் | செய்வினைத் தொடர் |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | செயப்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனைந்தான் | உடன்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனையவில்லை | எதிர்மறைவினைத் தொடர் |
| என் அண்ணன் நாளை வருவான் | செய்தித் தொடர் |
| எவ்வளவு உயரமான மரம்! | உணர்ச்சித் தொடர் |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் | வினாத் தொடர் |

| | |
|---|---|
| யார்? | |
| பூக்களை பறிக்காதீர் | கட்டளைத் தொடர் |
| இது நாற்காலி<br>அவன் மாணவன் | பெயர்ப் பயனிலைத் தொடர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

- பதம் (சொல்) இருவகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.
- பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| **பகுதி** (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| **விகுதி** (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால். எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| **சந்தி** | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| **சாரியை** | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| **விகாரம்** | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

## பகுதி

ஊரன் – ஊர், வரைந்தான் – வரை
நடிகன் – நடி, மடித்தார் – மடி
பார்த்தான் – பார், மகிழ்ந்தாள் – மகிழ்

## விகுதி

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ –பலவின்பால் வினைமுற்று விகுதி | அ,ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, அ |

| | | |
|---|---|---|
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு……. |

### இடைநிலைகள்

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் – இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

### சந்தி

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

### சாரியை

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ. உ. ஐ. கு. ன் |

### எழுத்துப்பேறு

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துபேறு.

எடுத்துக்காட்டுகள்

வந்தனன் ------- வா (வ) + த் (ந்) + த் + அன் + அன்
வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
த் (ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த் – இறந்த கால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

செய்யாதே ----- செய் + ய் + ஆ + த் + ஏ
செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி.

## இயல் - 2
## துணைவினைகள்

### வினைவகைகள்

- வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

### தனிவினையும் கூட்டுவினையும்

- வினைச் சொற்களை அமைப்பின் அடிப்படையில் **தனிவினை, கூட்டுவினை** என இருவகைப்படுத்தலாம்.

### தனி வினை

படி, படியுங்கள், படிக்கிறார்கள்

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி, பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

### கூட்டுவினை

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினைகள் என்பர்.
- கூட்டுவினைகள் பொதுவாக **மூன்று வகையாக** ஆக்கப்படுகின்றன.

1) **பெயர் + வினை = வினை**
தந்தி + அடி = தந்தியடி
ஆணை + இடு = ஆணையிடு
கேள்வி + படு = கேள்விப்படு

2) **வினை + வினை = வினை**
கண்டு + பிடி = கண்டுபிடி
சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு
சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

3) **இடை + வினை = வினை**
முன் + ஏறு = முன்னேறு
பின் + பற்று = பின்பற்று
கீழ் + இறங்கு = கீழிறங்கு

### முதல்வினையும் துணைவினையும்

நான் படம் பார்த்தேன்.
கண்ணன் போவதைப் பார்த்தேன்.

- இந்தச் சொற்றொடர்களின், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் எனும் வினையின் அடிப்படைப் பொருள் அல்லது சொற்பொருள் (LEXICAL MEANING) எனலாம்.

ஓடப் பார்த்தேன்.
எழுதிப் பார்த்தாள்.

- இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட, எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை

அந்தந்த வினைகளின் அடிப்படைப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.

- ஓடப் பார்த்தேன் --- இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.
- எழுதிப் பார்த்தாள் ---- இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.
- ஒரு கூட்டுவினையில் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை. முதல் வினை *(MAIN VERB)* எனப்படும். ஒரு கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டு விட்டு **முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.**
- கூட்டு வினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணிவினையே திணை, பார், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ **40 துணைவினைகள்** உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.
- பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை **இருவகை** வினைகளாகவும் செயல்படுகின்றன.

**துணைவினைகளின் பண்புகள்**

1) துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
2) இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
3) பேச்சு மொழியிலோ துணைவினைகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

- தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது. | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| | என்னிடம் பணம் இருக்கிறது. | அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். | நீ என்னை அழ வைக்காதே. |
| | அவன் வானொலியில் பாட்டு வைத்தான். | அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? | மழை பெய்யப் போகிறது. |
| | நான் கடைக்குப் போனேன். | நான் பயந்து போனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர். |
| | எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | வானம் இருண்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| விடு | யாரையும் உள்ளே விடாதே. | அடுத்த மாதம் நான் போய்விடுவேன். |
| | மழைவிட்டதும் போகலாம். | அப்பா இனி வந்துவிடுவார். |
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். | அவர் கதைகதையாக எழுதித் தள்ளுகிறார். |
| | காய்கறிவண்டியைத் தள்ளி சென்றார். | அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |
| | தலையில் தொப்பியைப் போடு. | விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போட வேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். |
| | அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான். | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

## இயல் - 3
## வல்லினம் மிகும் இடங்கள்

வாணன் வேலைக் கொடுத்தான்.
வாணன் வேலை கொடுத்தான்.

- இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?
- வல்லெழுத்துக்கள் **க, ச, த, ப** ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை **நிலைமொழியுடன் புணர்கையில்** அவற்றின் மெய்யெழுத்துக்கள் தோன்றிப் புணரும். இதை **வல்லினம் மிகுதல்** என்பர். இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.
- தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.
- வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின் பாற்படும்.
- சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துக்களின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

### வல்லினம் மிகும் இடங்கள்

- தற்கால உரைநடையில் வல்லினம் மிக வேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | **அ, இ** என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும், **அந்த, இந்த** என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், **எ** என்னும் வினாவெழுத்தின் பின்னும், **எந்த** என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |

| | | |
|---|---|---|
| *2.* | கதவைத்**த்**திற<br>தகவல்களைத்**த்**திரட்டு<br>காட்சியைப்**ப்**பார் | ***ஐ*** என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| *3.* | முதியவருக்குக்**க்**கொடு<br>மெட்குக்குப்**ப்**பாட்டு<br>ஊருக்குச்**ச்**செல் | ***கு*** என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும், |
| *4.* | எனக்**க்**கேட்டார்<br>வருவதாகக்**க்**கூறு | ***என, ஆக,*** போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். |

## மேலும் சில வல்லினம் மிகும் இடங்கள்

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். |
| எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும். |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். |
| கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர, ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| கிழக்குப் பகுதி<br>வடக்குப் பக்கம் | திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |
| தாமமைரப் பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப்பேசினார்<br>தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| நிலாச்சோறு<br>கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். |
| வாழ்க்கைப்படகு<br>உலகப்பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |

## இயல் - 4
## வல்லினம் மிகா இடங்கள்

தோப்புக்கள் – தோப்புகள்
கத்தி கொண்டு வந்தான் – கத்திக்கொண்டு வந்தான்

- மேற்கண்ட சொற்களில் **வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும்** வருவதை அறியலாம். நாம் பேசும்போது எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

### வல்லினம் மிகா இடங்கள்

| | |
|---|---|
| அது செய்.<br>இது காண். | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை, | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |
| தந்தையே பாருங்கள்.<br>மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு.<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்,<br>கூடு கட்டு. | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது, |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை<br>திருவளர்ச்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம், மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார்.<br>என்று தருவார்.<br>அவராவது தருவதாவது.<br>யாரடா சொல்.<br>ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள்.<br>அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை இத்தனை, எத்தனை,<br>அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு,<br>அத்தகைய, இத்தகைய, எத்தகைய,<br>அப்போதைய, இப்போதைய, எப்போதைய,<br>அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட,<br>நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| என்னோடு சேர்.<br>மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி. (ஐ)<br>கை தட்டு. (ஆல்)<br>வீடு சென்றாள். (கு)<br>கரை பாய்ந்தான்.<br>(இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று<br>தொண்டர் படை | நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த்தொகையில் வல்லினம் மிகாது. |
| உறு பொருள்<br>நனி தின்றான்.<br>கடி காவல். | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார்<br>சலசல | அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள்<br>பொருள்கள்<br>வாழ்த்துகள் | கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது (மிகும் என்பர் சிலர்) |
| பைகள், கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வரை, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. |

## இயல் - 5
## இடைச்சொல் – உரிச்சொல்

### இடைச்சொல்

- இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை ஆகும்.
- பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப் போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.
- இடைச்சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.
- இடைச்சொல் பலவகையாக அமையும்.

### இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், ஆய், ஈர் (கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று…… |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்….. |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை |
| வியங்கோள் விகுதிகள் | க, இய |
| சாரியைகள் | அத்து, அற்று, அம், …. |

| | |
|---|---|
| உவம உருபுகள் | போல, மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்…… |

### இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

- இவற்றுள் **உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட ஆ, ஆம்** ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### உம்

- **'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.**

*எ.கா.*

- *மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை (எதிர்மறை உம்மை).*
- *பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு).*

### ஓ

- **ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிமறை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.**
- தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூற முடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

*எ.கா.*

- *இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)*
- *பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள் (இது அல்லது அது)*
- *பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)*

### ஏ

- **ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.**
- தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

*எ.கா.*

- *அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.*
- *நடந்தே வந்தான்.*

### தான்

- **'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.**

*எ. கா.*

- *நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்.*

- *நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.*
- *நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.*
- *நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.*

*வேறுபாட்டை உணருங்கள்:*

- *நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)*
- *நிர்மலா தானும் பாடினாள். (தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் – பெயர்ச்சொல்)*

**மட்டும்**

- ***இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.***

*எ.கா.*

- *படிப்பு மட்டும் இருந்தால் போதும் (வரையறைப் பொருள்).*

**ஆவது**

- ***இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.***

*எ.கா.*

- *ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)*
- *அவனாவது, இவனாவது செய்து முடிக்க வேண்டும். (இது அல்லது அது)*
  *முதலாவது, இரண்டாவது,..... (வரிசைப்படுத்துதல்)*

**கூட**

- *என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)*
- *தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப்பொருள்)*
- *அவனுக்கு வரையக்கூட தெரியும். ( எச்சம் தழுவிய கூற்று))*

**ஆ**

- ***வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.***
- *ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.*

*எ.கா.*

- *புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?*
- *புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?*

**ஆம்**

- ***சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.***

*எ.கா.*

- *உள்ளே வரலாம். (இசைவு)*
- *இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்/செய்தி)*
- *பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி.*
- *அன்று என்பது ஒருமைக்கும் அல்ல என்பது பன்மைக்கும் உரியன.*
  *(எ,கா) இது பழம் அன்று.*
- *இவை பழங்கள் அல்ல.*
- *எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்*
- *எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்.*

*(எ.கா) எத்தனை நூல்கள் வேண்டும்?*

- *எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது*

**உரிச்சொற்கள்**

- *உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்த பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல், இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை.*
- *ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.*

| | |
|---|---|
| *கடி மலர் – மணம் மிக்க மலர்*<br>*கடி நகர் – காவல் மிக்க நகர்*<br>*கடி விடுதும் – விரைவாக விடுவோம்*<br>*கடி நுனி – கூர்மையான நுனி* | *ஒரு சொல் பல பொருளுக்கு உரியது* |
| *உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.*<br>*உறு பசி; தவச் சிறிது; நனி நன்று* | *பல சொல் ஒரு பொருள்* |

- *உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை*
  1) *ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு*
  2) *பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு*
- *மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.*

## 10 ஆம் வகுப்பு – தமிழ் இலக்கணம்
## இயல் - 6
## புணர்ச்சி

### நிலைமொழி – வருமொழி

- புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும் போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.
- புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்

### புணர்மொழியின் இயல்பு

| | |
|---|---|
| கலை + அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர்முதல் |
| வாழை + மரம் | மெய்ம்முதல் |

- மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண் + இ) + அடி = மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க் + இ) கிளை = மரக்கிளை |

### இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப்படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

  வாழை + மரம் = வாழைமரம்
  செடி + கொடி = செடிகொடி
  மண் + மலை = மண்மலை

- புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல்.

  நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)
  கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)
  பல் + பசை = பற்பசை ( திரிதல்)
  புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

### உயிரீற்றுப் புணர்ச்சி

### உடம்படுமெய்

- உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படு மெய் என்று சொல்வர்.

- நிலைமொழியின் ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்னும் உயிரெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.
  மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

  தீ + எரி = தீ + ய்+ எரி = தீயெரி

  ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

- 'இ, ஈ, ஐ 'தவிர, பிற உயிரெழுத்துக்கள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.
  பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

  பா + இனம் ' பா+ வ் + இனம் = பாவினம்

- நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

  சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

  சே + வ் + அடி = சேவடி

  தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

  இவனே + அவன் = இவனே + ய் + அவன் = இவனேயவன்

  இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
  உயிர்வழி வவ்வும் ஏமுனிங் விருமையும்
  உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (நன். 162)

### குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட் + உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருத்தும்.
  உறவு + அழகு = உற (வ் + உ) = உறவ் + அழகு = உறவழகு

| புணர்ச்சி | |
|---|---|
| **இயல்பு**<br>பொன் + வளை = பொன்வளை | **விகாரம்**<br>பூ + கடை = பூக்கடை<br>கல் + சிலை = கற்சிலை<br>கபிலர் + பரணர் = கபிலபரணர் |
| **உடம்படுமெய்**<br>மணி + அடி = மணியடி<br>குரு + அருள் = குருவருள்<br>தே + இலை = தேயிலை<br>தே + ஆரம் = தேவாரம் | **குற்றியலுகரம்**<br>எனது + உயிர் = எனதுயிர்<br>நாடு + யாது = நாடியது<br>நிலவு + ஒளி = நிலவொளி |

- தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு, அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குமற்றியலுகரம் |

## மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதைவலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துக்களும் இவ்வாறு மிகும்.

*1, 'ய' கர ஈற்றுச் சொற்கள் முன் மிகும்.*
*எ.கா – மெய் + மயக்கம் = மெய்ம்மயக்கம்*
*மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்*

*2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் மெல்லினம் மிகும்.*
*எ.கா – வேய் + குழல் = வேய்ங்குழல்*
*கூர் + சிறை = கூர்சிறை*
*பாழ் + கிண று = பாழ்ங்கிணறு*

*3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி மெல்லினமும் ஆகும்.*
*எ.கா – புளி + கறி = புளிங்கறி*
*புளி + சோறு = புளிஞ்சோறு*

*4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.*
*செய் + நன்றி = செய்ந்நன்றி*
*எ. கா – மா + பழம் = மாம்பழம்*
*விள + காய் = விளங்காய்*

*5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.*
*எ.கா – பூ + கொடி = பூங்கொடி*
*பூ + சோலை = பூஞ்சோலை*
*பூ + தொட்டி = பூந்தொட்டி*

## இயல் ஏழு
## ஆகுபெயர்

*'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'*
*'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'*

- இத்தொடர்களில் ஓர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை **இடவாகுபெயர்** என்பர்.
- ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர்கள் பதினாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| முல்லையைத் தொடுத்தாள் | **பொருளாகுபெயர் (முதலாகுபெயர்)** – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு) யாகிய பூவுக்கு ஆகி வந்தது. |
| வகுப்பறை சிரித்தது | **இடவாகு பெயர்** - வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது. |
| கார் அறுத்தான் | **காலவாகுபெயர்** – கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது. |
| மருக்கொழுந்து நட்டான் | **சினையாகு பெயர்** – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது. |
| மஞ்சள் பூசினாள் | **பண்பாகு பெயர் -** மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது. |
| வற்றல் தின்றான் | **தொழிலாகு பெயர்** – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது. |
| வானொலி கேட்டு மகிழ்ந்தனர் | **கருவியாகுபெயர் -** வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது. |
| பைங்கூழ் வளர்ந்தது | **காரியவாகுபெயர்** – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது. |
| அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன் | **கருத்தாவாகுபெயர்** – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது. |
| ஒன்று பெற்றால் ஒளிமயம் | **எண்ணலளவை ஆகுபெயர்** – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது. |
| இரண்டு கிலோ கொடு | **எடுத்தலளவை ஆகுபெயர் -** நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| அரை லிட்டர் வாங்கு | **முகத்தலளவை ஆகுபெயர்** – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| ஐந்து மீட்டர் வெட்டினான் | **நீட்டளவை ஆகுபெயர்** – நீட்டி அளக்கும் நீட்டளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |

## இயல் எட்டு
## யாப்பிலக்கணம்

### யாப்பின் உறுப்புகள்

- கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம். இது பாக்கள் பற்றியும் அவற்றின் உறுப்புகள் பற்றியும் விரிவாகப் பேசுகிறது.

- உறுப்பியலில் யாப்பின் ஆறு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை விளக்கப்படுகின்றன.

### எழுத்து

- யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துக்கள் குறில், நெடில், ஒற்று என மூவகைப்படும்.

### அசை

- எழுத்துக்களால் ஆனது 'அசை' எனப்படும். ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

### சீர்

- ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். இதுவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும்.
- நேர் என்பதோடு உகரம் சேர்ந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர். நிரை என்னும் அசையோடு உகரம் சேர்ந்து முடியும் அசைகள் நிரைபு என்று கூறப்படும். இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.
- ஈரசைச் சீர்களுக்கு, 'இயற்சீர்', 'ஆசிரிய உரிச்சீர்' என்னும் வேறு பெயர்களும் உண்டு.

| நேரசை | |
|---|---|
| தனிக்குறில் | ப |
| தனிக்குறில், ஒற்று | பல் |
| தனிநெடில் | பா |
| தனிநெடில், ஒற்று | பால் |

| நிரையசை | |
|---|---|
| இருகுறில் | அணி |
| இருகுறில், ஒற்று | அணில் |
| குறில், நெடில் | விழா |
| குறில், நெடில், ஒற்று | விழார் |

| ஓரசைச்சீர் | |
|---|---|
| அசை | வாய்ப்பாடு |
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

| ஈரசைச்சீர் | | |
|---|---|---|
| அசை | வாய்ப்பாடு | |
| நேர் நேர் | தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | புளிமா | |
| நிரை நிரை | கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | கூவிளம் | |

| மூவசைச்சீர் |
|---|

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்ப்பாடு | அசை | வாய்ப்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

- காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.
- மூவகைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

### அலகிட்டு வாய்ப்பாடு கூறுதல்

- நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.
- வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும்; பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்; பிற தளைகள் வாரா.
- ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

| வரிசை | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1 | பிறர் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | தக் / கது / | நேர் நிரை | கூவிளம் |
| 3 | தான் / நா / ணா / | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | னா / யின் / | நேர் நேர் | தேமா |
| 5 | அறம் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | தக் / க / | நேர் நேர் | தேமா |
| 7 | துடைத் / து | நிரைபு | பிறப்பு |

### தளை

- பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் 'தளை' எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.
  1. நேரொன்றா சிரியத்தளை ------------- மா முன் நேர்
  2. நிரையொன்றா சிரியத்தளை ---------- விளம் முன் நிரை
  3. இயற்சீர் வெண்டளை ---------- மா முன் நிரை, விளம் முன் நேர்
  4. வெண்சீர் வெண்டளை ---------- காய் முன் நேர்
  5. கலித்தளை -------------- காய் முன் நிரை
  6. ஒன்றிய வஞ்சித்தளை ----------- தனி முன் நிரை
  7. ஒன்றா வஞ்சித்தளை ------------ கனி முன் நேர்

### அடி

- இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

- இரண்டு சீர்களைக் கொண்டது **குறளடி;** மூன்று சீர்களைக் கொண்டது **சிந்தடி;** நான்கு சீர்களைக் கொண்டது **அளவடி;** ஐந்து சீர்களைக் கொண்டது **நெடிலடி;** ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது **கழிநெடிலடி.**

### தொடை

- தொடை – தொடுத்தல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது 'தொடை' ஆகும். தொடை என்னும் செய்யுள் உறுப்பு, பாடலில் உள்ள அடிகள்தோறும் அல்லது சீர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை பொருந்தி வருமாறு பாடலை இயற்றுதல் பற்றி அமைகிறது.
- மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

**மேனைத் தொடை:** ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது.

*(எ.கா)*

**ஒ**ற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
**ஒ**ற்றினால் ஒற்றிக் கொளல்.

**எதுகைத் தொடை:** அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க. இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது.

*(எ.கா)*

தி**ற**னல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அ**ற**னல்ல செய்யாமை நன்று.

**இயைபுத் தொடை:** அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது.

*(எ.கா)*

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு **கொஞ்சும்**
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் **கெஞ்சும்.**

## இயல் ஒன்பது
## அணியிலக்கணம்

### அணி – அழகு

- செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது 'அணி' இலக்கண இயல்பாகும்.

### உவமை அணி

- அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன.

  மலர்ப்பாதம் – மலர் போன்ற பாதம்

- இத்தொடரில் பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

  பாதம் – பொருள் (உவமேயம்)
  மலம் – உவமை
  போன்ற – உவம உருபு

  **இனிய உளவாக இன்னாத கூறல்**
  **கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

  இதில் உவமையணி அமைந்துள்ளது.

### உருவக அணி

- ❖ கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் இத்தன்மையே, 'உருவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

  *(எ.கா)*

  **இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
  **வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**
  **அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
  **பைங்கூழ் சிறுகாலைச் செய்.**

- ❖ இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

### பின்வருநிலை அணிகள்

- ❖ ஒருசெய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடங்களிலும் வருதலே 'பின்வருநிலை' அணியாகும். இது மூன்று வகைப்படும்.

### சொல்பின்வருநிலையணி

- ❖ முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலையணி ஆகும். *(எ.கா)*

  **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
  **துப்பாய தூஉம் மழை.**

- ❖ இக்குறளில் 'துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது.
- ❖ துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பு – நல்ல, நன்மை; துப்பு – உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்.

### பொருள் பின்வருநிலையணி

- ❖ செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின்வருநிலை அணி ஆகும். *(எ.கா.)*

  **அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா**
  **நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்**
  **விண்டன கொன்றை விரிந்த கருவினை**
  **கொண்டன காந்தள் குலை.**

- ❖ இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன, ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தன.

  **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
  **மாடல்ல மற்றை யவை.**

- ❖ இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

### சொற்பொருள் பின்வருநிலையணி

- ❖ முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும். *(எ.கா)*

  **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
  **பொய்யா விளக்கே விளக்கு.**

- ❖ இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள்பின்வருநிலையணி ஆகும்.

### வஞ்சகப்புகழ்ச்சி அணி

- *வஞ்சகப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும். (எ.கா)*

  ***தேவ ரனையர் கயவர் அவருந்தாம்***
  ***மேவன செய்தொழுக லான்.***

- *கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.*

  ***பாரி பாரி என்றுபல ஏத்தி,***
  ***ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்***
  ***பாரி ஒருவனும் அல்லன்;***
  ***மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே.***

- *இப்பாடலின் பொருள் – புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைமாறு கருதாமல் கொடுக்கிறான்? மழையும்தான் கைமாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைப் புரக்கிறது. இது பழிப்பது போலப் புகழ்வது ஆகும்.*
- *இது பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.*

# 11 ஆம் வகுப்பு - தமிழ்

## இயல் - 1
## பேச்சுமொழியும் கவிதைமொழியும்

- ஆசிரியர் - இந்திரன். இயற்பெயர் - இராசேந்திரன்.
- ஒரிய மொழிக் கவிஞர் **மனோரமா பிஸ்வாஸின்** “பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்” என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூலுக்காக 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்.
- ‘முப்படை நகரம்’, ‘சாம்பல் வார்த்தைகள்’ உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகளும், தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.
- **வெளிச்சம், நுண்கலை** ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.
  - மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் ‘உலகம்’ என்பதும் ‘நான்’ என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன. - எர்னஸ்ட் காசிரர்.
  - “மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது” - மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.
  - பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உள்ளனர். முதல் வகையினர் வால்ட் விட்மனைப் போன்றவர்கள், இரண்டாம் வகையினர் கவிஞர் மல்லார்மே போன்றவர்கள், மூன்றாம் வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள்.
  - வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய “ புல்லின் இதழ்கள் “ (Leaves of grass) என்ற நூல் உலகப்புகழ் பெற்றது.
  - ஸ்டெ:பான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியராக பணியாற்றியவர். இவரை புரிந்துகொள்வதன் மூலமே குறியீட்டியத்தையும் (Symbolism) புரிந்துகொள்ள முடியும்.
  - தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் பிறந்தவர் பாப்லோ நெரூடா. இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்தக் கவிஞர். தன்னுடைய கவிதைகளுக்காக 1971 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

## யுகத்தின் பாடல்

- ஆசிரியர் - கவிஞர்.சு.செல்வரத்தினம்.
- யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர்.
- இவருடய கவிதைகள் மொத்தமாக ‘உயிர்தெழும் காலத்துக்காக’ என்ற தலைப்பில் 2001 இல் தொகுக்கப்பட்டது.
- “தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம், கூடில்லாத பறவை” - இரசூல் கம்சதோவ்.

## நன்னூல் - பாயிரம்

- ஆசிரியர் - பவணந்தி முனிவர்.
- நன்னூல் என்பது தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும்.
- கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும்.
- இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

- எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப்புணரியல் என 5 பகுதிகளாகவும்,
- சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என 5 பகுதிகளாகவும் அமைந்துள்ளன.
- சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது.
- ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவன் கோவில் உள்ளது. இங்கே பவணந்தியாரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.

## பாயிரம் அறிமுகம்

- நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறையைப் பேசுவது பாயிரமாகும்.
- பாயிரத்திற்குரிய ஏழு பெயர்கள்
  அ) முகவுரை ஆ) பதிகம் - ஐந்து பொதுவும், பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது. இ) அணிந்துரை ஈ) புனைந்துரை உ) நூன்முகம் ஊ) புறவுரை எ) தந்துரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.
- பாயிரம் என்பது பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.
- நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது **பொதுப்பாயிரம்**.
- நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், நூலில் குறிக்கப்படும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன் முதலான எட்டு செய்திகளையும் குறிப்பது **சிறப்புப் பாயிரம்**.
- இப்பாடல் நூற்பா வகையைச் சேர்ந்தது
- சொல்லும் பொருளும் / அமை - மூங்கில்

## ஆறாம் திணை

- ஆசிரியர் - அ.முத்துலிங்கம்.
- இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர்.
- அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட சிறுகதை தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார்.
- வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் பரிசினைப் பெற்றவர்.
- வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999 இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்.

- டேனியல் டி∴போ எழுதிய புத்தகம் - "ராபின்சன் குரூசோ".
- நற்றினைப் பாடலில் **தனிமகனார்** - சினம் கொண்ட அரசனின் கொடுமை தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரைவிட்டு ஓடியவர்களின் கதையை, "வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி, வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்" என்று குறிப்பிடுகிறார்.
- திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் கனடாவில் பிறந்தவர்.
- 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி - இலங்கை யாழ்ப்பாணம் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. அதைதான் '∴பாரன்ஹீட் 451' என்ற நூல் விவரிக்கிறது.

- 2012 ஆம் ஆண்டு தொடங்கி வரும் எல்லா வருடங்களிலும் ஜனவரி 14 ஆம் நாள் "தமிழர் பாரம்பரிய நாள்" எனக் கொண்டாடப்படுகிறது.
- கனடாவில் முதல்முறையாக ஒரு புதிய சாலை ஒன்றுக்கு 'வன்னி வீதி' என்று தமிழ்பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

## சான்றோர் சரித்திரம்
## மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

- தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பருக்கு பின்னர், ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்தபின் வாராது போலவந்துதித்த புலமை கதிரவன் என தமிழறிஞர்கள் போற்றிய தென்மொழிப் பெரும்புலவர் - மீனாட்சி சுந்தரனார்.
- திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர்.
- திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் என்று அழைக்கப்பட்டார்.
- திருவாடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.
- 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்' என்ற நூலை இயற்றினார்.
- தல புராணங்கள் பாடுவதில் வல்லவர்.
- யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்ணபா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ்பெற்றார்.
- மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடி பெருமை அடைந்தார்.
- உ.வே.சா. தியாகராசர், குலாம்காதிறு நாவலர் போன்றோர் இவரின் மாணாக்கர்கள்.

## இயற்கை வேளாண்மை

- தமிழ்நாட்டின் மாநில மரம் - பனைமரம்
- பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சம் என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.
- வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் **மசானபு ஃபுகோகா.** இவர் 1978 ஆம் ஆண்டு "**ஒற்றை வைக்கோல் புரட்சி**" என்னும் நூலை எழுதியவர்.
- உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக்கொள்ளி இல்லாத பயிர்பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து விவசாய மந்திரங்களை உலகுக்கு அளித்தவர்.
- "இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட, நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்" - மசானபு ஃபுகோகா.

## ஏதிலிக்குருவிகள்

- கவிதை - அழகிய பெரியவன். இவரது இயற்பெயர் அரவிந்தன்.
- 'தகப்பன் கொடி' என்னும் புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர்.
- குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதை தொகுப்புகளையும்,
- உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும்,
- மீள்கோணம், பெருகும் வேட்டை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரது படைப்புகள் ஆகும்.

- **மார்ச் 20 - உலக சிட்டுக்குருவிகள் தினம்.**

## திருமலை முருகன் பள்ளு

- நூலின் ஆசிரியர் - பெரியவன் கவிராயர். இவரின் காலம் 18 ஆம் நூற்றாண்டு.
- திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புணிப்பட்டணம். இவ்வூர் பண்பை என்றும் பண்பொழில் என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை.
- திருமலைக்குன்றில் உள்ள முருகனைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டுள்ளது.
- இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன.
- இந்நூல் 'பள்ளிசை' என்றும் 'திருமலை அதிபர் பள்ளு' எனவும் வழங்கப்படுகிறது.
- பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது 'உழத்திப் பாட்டு' எனவும் அழைக்கப்படுகிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.
- பாடல் - மலரில் ஆரளி இந்துளம் பாடும்

சொல்லும் பொருளும்

- வட ஆரிநாடு - திருமலை, தென் ஆரிநாடு - குற்றாலம், ஆரளி - மொய்க்கின்ற வண்டு, இந்துளம் - இந்தளம் எனும் ஒரு வகைப் பண், இடங்கணி - சங்கிலி, உளம் - உள்ளான் என்ற பறவை, சலச வாவி - தாமரைத் தடாகம், தரளம் - முத்து.
- கா - சோலை, முகில்தொகை - மேகக்கூட்டம், மஞ்ஞை - மயில், கொண்டல் - கார்கால மேகம், மண்டலம் - உலகம், வாவி தரங்கம் - குளத்தில் எழுந்த அலை, அளி உலாம் - வண்டு மொய்க்கின்ற, கண்காணி - நெல் அறுவடையை மேற்பார்வை செய்பவர்.

## ஐங்குறுநூறு

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு
- மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு 100 பாடல் வீதம் 500 பாடல்கள் அமைந்துள்ளது.
- குறிஞ்சித்திணை - கபிலர், முல்லைத்திணை - பேயனார், மருதத்திணை - ஓரம்போகியார், நெய்தல் திணை - அம்மூவனார், பாலைத்திணை - ஓதலாந்தையார்.
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுப்பித்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.
- பேயனார் - இவர் எழுதிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.
- பாடல் - காயா கொன்றை நெய்தல் முல்லை எனத்தொடங்கும்.

சொல்லும் பொருளும்

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் - மழைக்கால மலர்கள்.
போது - மொட்டு, அலர்ந்து - மலர்ந்து, கவினி - அழகுற.

## யானை டாக்டர்

- ஜெயமோகன் - நாகர்கோவிலைச் சேர்ந்தவர்.
- **விஷ்ணுபுரம், கொற்றவை** உள்ளிட்ட நாவல்களை எழுதியவர்.

- யானையைப் பாத்திரமாக வைத்து **ஊமைச்செந்நாய், மத்தகம்** ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார்.
- இந்த குறும் புதினம் 'அறம்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

- காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளை 'காட்டின் மூலவர்' என்பர்.
- நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்
  கயம், வேழம், களிறு, பிளிறு, களபம், மாதங்கம், கைம்மா, வாரணம், அஞ்சனாவதி, அத்தி, அத்தினி, அரசுவா, அல்லியன், அனுபமை, ஆனை, இபம், இரதி, குஞ்சரம், வல்விலங்கு, கரி, அஞ்சனம் ஆகியவை.
- யானைகளின் ஆயுள்காலம் ஏறத்தாழ 70 ஆண்டுகள்.
- காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
  யாழ்வரைத் தங்கி யாங்கு - கலித்தொகை.
- யானை டாக்டர் என்று அழைக்கப்படுபவர் - டாக்டர்.வி.கிருஷ்ணமூர்த்தி. வனக்காப்பாளருக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான **வேணுமேனன் ஏலிஸ்** விருதினை 2000 ஆம் ஆண்டில் பெற்றார். தமிழக கோவில் யானைகளுக்கு புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசின்மூலம் செயல்படுத்தியவர்.

## சான்றோர் சரித்திரம்
## ஆபிரகாம் பண்டிதர்

- "தமிழிசை இயக்கத்தின் தந்தை" என்று அழைக்கப்படுபவர்.
- தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர்.
- சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார்.
- சங்கீத வித்தியா, மகாஜன சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கி தமிழிசை மாநாடுகளை நடத்தினார்.
- அவருடைய இசைத்தமிழ் நூல் - 'கருணாமிர்த சாகரம்' ஆகும்.

## இயல் - 3
## பீடு பெற நில்

### மலை இடப்பெயர்கள் - ஓர் ஆய்வு

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.
- 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று உரைக்கிறது தொல்காப்பியம்.
- 'விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ' என்கிறது திருமுருகாற்றுப்படை.

மலை என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு உருவான இனக்குழு பெயர்கள்.

- மால் பஹாடியா - ஜார்கண்ட்
- மல அரயன் - மேற்குத்தொடர்ச்சி மலைகள் - கேரளம்
- மற குறவன் - நெருமங்காடு - கேரளம்.
- மல மூத்தன் - எர்நாட் - கேரளம்
- மல பணிக்கர் - வட கேரளம்.
- மலயன் - பாலக்காடு - கேரளம்.
- மல வேடா - இடுக்கி - கேரளம்
- மலேரு - தட்சிண கன்னடா - கர்நாடகம்
- கோட்டா - நீலகிரி, தமிழ்நாடு.
- கொண்டா தோரா - ஆந்திரப்பிரதேசம்
- கோண்டு, கொய்ட்டெர் - ஒடிஸா

- திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்களும் 'மலை', குன்று என்ற பொருள் தரும் சொற்களையே அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் பெற்றன.
- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.
- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான, மேடான அமைப்பை விளக்குகிறது.
- ஆந்திராவிலும் ஒடிஸாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழுங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் மலை உச்சியில் அமைந்துள்ளன.
- திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது.
- பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான் என்பது 'மலய' என்ற சொல்லின் திராவிட தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.
- வடமொழியில் 'மலய' என்ற சொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.
- தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது உயரமானது என்றும், 'குன்று' என்பது உயரம் குறைவானது என்றும் பொருள்படும்.
- இதைப்போலவே தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.
- 'கோடு' என்ற தமிழ் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருளும் உண்டு. மலையரசன், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள்.
- கொற்கை, வஞ்சி, தொண்டி, வளாகம் இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை.
- கோடை என்னும் தமிழ்ச்சொல் மலை என்னும் பொருளில் வழங்குவதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன். இ.ஆ.ப**

- திரு.ஆர்.பாலகிருஷ்ணன் இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளர்.
- "கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை" ஆய்வுலகின் கவனத்திற்கு கொண்டுவந்தவர்.
- தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும், கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார்.
- அன்புள்ள அம்மா, சிறகுகள் வானம் உள்ளிட்டவை இவர்தம் நூல்கள்.
- 1984 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணித் தேர்வை முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேச்சிப் பெற்றவர்.
- ஒடிஸா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருக்கிறார்.
- "சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்னும் இவரது நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

## காவடிச்சிந்து

- ஆசிரியர் - சென்னிகுளம் அண்ணாமலையார்.
- சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ் தாக்கத்தால் விளைந்த சிறந்த இலக்கியமாகும்.
- இப்பாடலின் மெட்டுகள் அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டதாகும்.

- தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால் 'காவடிச் சிந்தின் தந்தை' என்று அண்ணாமலையார் அழைக்கப்பட்டார்.
- 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பதேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார்.
- வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச் சிந்து எனலாம்.

சொல்லும் பொருளும்

ஐகம் - உலகம், புயம் - தோள், வரை - மலை, வன்னம் - அழகு, கழுகாசலம் - கழுகுமலை, த்வஜஸ்தம்பம் - கொடிமரம், சலராசி - கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள், விலாசம் - அழகு, நூபுரம் - சிலம்பு, மாசுணம் - பாம்பு, இஞ்சி - மதில், உம்பர் - தேவர், புயல் - மேகம், கறங்கும் - சுழலும்.

## குறுந்தொகை

- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
- 'நல்ல குறுந்தொகை' எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது.
- இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது.
- இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.
- வெள்ளிவீதியார் சங்ககால பெண்புலவர்களில் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.

## புறநானூறு

- புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.
- புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும். அகவற்பாக்களால் ஆனது.
- சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.
- பாண்டிய மன்னருள் பெருவழுதி என்பவர் புலமை பெற்றவராகவும் இருந்திருக்கிறார்.
- கடற்செலவு ஒன்றில் இறந்துபோனமையால் இவர் "கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி" என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார்.
- இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் பரிபாடலில் ஒரு பாடலும் இயற்றியுள்ளார்.

**சொல்லும் பொருளும்**

தமியர் - தனித்தவர், முனிதல் - வெறுத்தல், துஞ்சல் - சோம்பல், அயர்வு - சோர்வு, மாட்சி - பெருமை, நோன்மை - வலிமை, தாள் - முயற்சி.

## வாடிவாசல்

- சி.சு.செல்லப்பா சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

- ‘எழுத்து’ இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள் - வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ்.ராமையாவின் சிறுகதைப்பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- இவருடைய ‘சுதந்திர தாகம்’ புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

## சான்றோர் சரித்திரம்
## சி.வை.தாமோதரனார்

- ‘தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்’ என்று போற்றப்படும் சி.வை.தாமோதரனார் இலங்கை, யாழ்பாணத்தில் பிறந்தவர்.
- தம் இருபதாவது வயதிலேயே ‘நீதிநெறி விளக்கம்’ என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.
- கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் முதலிய பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.
- அவருடைய தமிழ்பணியை கண்ட பெர்விசல் பாதிரியார், அவரை தாம் நடத்திய ‘தினவர்த்தமானி’ என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார்.

## திருக்குறள்

- ✓ உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயருண்டு.
- ✓ பா வகை - குறள் வெண்பா
- ✓ பாவின் வகையைத் தன் பெயராகக்கொண்டு உயர்வு விகுதியாகத் திரு என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது.
- ✓ ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் நூல்.
- ✓ திருக்குறளின் சிறப்பினை விளக்கப் பல புலவர்கள் பாடிய பாடல்களில் தொகுக்கப்பட்ட நூலே திருவள்ளுவமாலை.
- ✓ பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.
- ✓ 1330 குறள் , 133 அதிகாரம்.

| பால் | அதிகாரம் | இயல் | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01. |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழிபியல் 13. |
| இன்பம் | 25 | 2 | களவியல் 07, கற்பியல் 18 |

- ✓ தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினால் சுட்ட வடு. - வேற்றுமை அணி
- ✓ மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
  பெருந்தகை யான்கண் படின் - உவமை அணி
- ✓ சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
  சுடச்சுட நோற்கிற் பவர்க்கு - உவமை அணி
- ✓ பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
  பற்றுக பற்று விடற்கு - சொல் பின்வரும் நிலையணி
- ✓ பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
  சால மிகுத்துப் பெயின்- பிறிது மொழிதல் அணி.

## இயல் - 4
## தலைமைச் செயலகம்

- சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன்,
- அறிவியல், புனைகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், திரைப்படம் என்று பல படைப்புகள் உள்ளன.
- கணிப்பொறியின் கதை, சிலிக்கன் சில்லுப்புரட்சி, அடுத்த நூற்றாண்டு ஆகியவை இவருடைய புகழ்பெற்ற அறிவியல் நூல்கள்.
- அறிவியலை எளிய தமிழில் ஊடகங்களில் பரப்பியதற்காக, மத்திய அரசின் விருது பெற்றவர்.
- இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு கருவியைக் கொண்டுவந்ததில் சுஜாதாவின் பங்களிப்பு அதிகம்.
- மூளைக்கு, ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது.
- உயிர்வளி ஆகியவற்றின் மொத்த தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை மூளையே அபகரித்துக் கொள்கிறது.
- மைக்ரோவாட் என்பது ஒரு வாட் சக்தியில் பத்து லட்சத்தில் ஒரு பாகம்.
- தேனீயின் மூளை கணக்கிடும் வேகம் பத்து டெர்ராஃப்ளாப் (Terraflop).
- மனித மூளை சுமார் 10 வாட் சக்தியை உற்பத்தி செய்கின்றது.
- சராசரி மனித மூளையின் எடை - 1349 கிராம்.
- மிக அதிக எடையுள்ள மனித மூளை 2049 கிராம்.
- மனித மூளையில் 80% தண்ணீரே உள்ளது.
- தாமஸ் ஆல்வா எடிசன் உங்கள் உடலின் முக்கியப் பணி உங்கள் மூளையைத் தாங்கிச் செல்வது என்றார்.

### பியர் பால் ப்ரோக்கா

- மொழி நம் மூளையில் எங்கு புரிந்துகொள்ளப்படுகிறது என்று 1861 ஆம் ஆண்டு பியர் பால் ப்ரோக்கா என்னும் பிரெஞ்சு சர்ஜன் கண்டுபடித்தார்.
- நம்முடைய பேச்சு திறமை நம் மூளையின் இடது முன்பகுதிச் சுளையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தார்.
- மூளையின் இந்தப் பகுதியை ப்ரோக்காவின் பேட்டை - ப்ரோக்காஸ் ஏரியா என்கிறார்கள்.

### நோம் சோம்ஸ்கி

- நோம் சோம்ஸ்கி என்னும் அமெரிக்க உளவியல் மொழியியலார் நாம் பிறக்கும் போதே சில ஆழ்ந்த அமைப்புகளுடன் பிறக்கிறோம் என்றார்.
- இந்த ஆழ்ந்த அமைப்புகளில் இலக்கண விதிகளும் அதனை அர்த்தம் பண்ணிக்கொள்ளும் திறமையும் பொதிந்திருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்.
- கற்க கற்க மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது.
- நியுரான்களின் இணைப்புச் சிக்கல்களும் அதிலுள்ள ப்ரோட்டீன் அளவும் அதிகமாகிறது.
- நியுரோ ட்ரான்ஸ்மிட்டர்களைக் கட்டுப்படுத்தும் வினையூக்கி அளவும் அதிகமாகிறது. பெப்டைட் என்னும் சங்கதியும் அதிகம் உண்டாகிறது.
- மூளையின் இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது.
- நிறைய மார்க், பிரச்சனைகளை அலசுவது. சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இதெல்லாம் இடதுபாதி.
- நம் மொழியறிவு முழுவதும் இடதுபாதியாகும்.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டு - பித்தகோரஸ்தான் முதலில் மனம் என்பது மூளையில் இருக்கிறது என்றார்.

- 1637 - டெஸ்கார்ட்டெஸ் என்னும் தத்துவ ஞானி மனமும் மூளையும் வேறு என்றார்.
- 1865 - ஆட்டோ டியட்டர்ஸ் என்னும் ஜெர்மானியர் நியூரானின் முதல் உண்மையான சித்திரத்தைப் பிரசுரித்தார்.
- 1874 - வெர்னிக் என்பவர் வார்த்தைகள் அறியப்படும் இடத்தைக் கண்டறிந்தார்.
- 1953 - நோம் சாம்ஸ்கி மொழி அறிவு மூளைக்குள் பதிந்திருக்கிறது என்று கண்டறிந்தார்.
- வலதுபாதியில் நாம் வடிவங்களை உணர்கிறோம்.
- வலதுபாதி சரியில்லை எனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம். சட்டை போட்டுக்கொள்ள முடியாமல் திணறுவோம் கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை வடிவங்கள் எல்லாம் வலது பாதியினால் தான் நடக்கிறது.
- உலகின் அதிவிரைவுக் கணினி ஒரு நொடிக்கு மேற்கொள்ளும் கணக்குகளைவிட அதிகமாக மனிதனால் மேற்கொள்ள முடியும். இதனை கூறியவர் ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் க்வாபெனா போன்ஹென்.

## விஞ்ஞானி

- விஞ்ஞானி எனும் தலைப்பிலான இக்கவியரங்க கவிதை, கவிஞர் கண்ணதாசன் தலைமையில் அரங்கேற்றப்பட்டதாகும்.
- மீ. ராசேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட மீரா மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு தளங்களிலும் பரவலாக அறியப்பட்டவர்.
- சிவகங்கை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காதிகங்கள் போன்ற கவிதை நூல்கள் சிறந்தவை.
- அன்னம் விடு தூது, கவி ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

## நீலகேசி

- நீலகேசி என்பது ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. விருப்பத்தப்பாவால் ஆனது.
- இதற்கு 'நீலகேசித் தெருட்டு' என்றும் பெயர்.
- இது குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது.
- தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் இது என்பர்.
- இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட, பதினொரு பகுகளிலும் மொத்தமாக 894 பாடல்கள் உள்ளன.
- இதை எழுதியவர் யார் என அறியப்படவில்லை.
- இதன் உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர். இந்நூலில் உள்ள மொக்கலவாதச் சருக்கத்திலிருந்து மூன்று பாடல்களும் புத்தவாதச் சருக்கத்திலிருந்து இரண்டு பாடல் இடம்பெற்றள்ளது.
- புத்தமத துறவியருடன் நீலகேசி வாதம் புரியும் பகுதியில் விரவியிருக்கும் அறிவியல் சிந்தனைகளை ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான நீலகேசி விளக்குகிறது.

**சொல்லும் பொருளும்**

மாழ்கி - தொட்டால் சுருங்கி எனும் தாவரம், மாழ்குதல் - மயங்குதல்,
சேதனை - அறிவு, அரும்புதல் - பருத்தல், இயைபுஇல் - பொருத்தமற்றது,
ஆக்கம் - உயிருடைத்து.
கற்றிலை - அறியவில்லை, பெருந்தவத்தாய் - பெரிய தவமுடையவர்
வாய்த்துரை - பொருத்தமான உரை. வாமன் - அருகன், தேறு - தெளிவாக/

செலவு - வழி, பரிப்பு - இயக்கம், துப்பு - வலிமை, கூம்பு - பாய்மரம், புகாஅர் - ஆற்றுமுனகம், தகாஅர் - தகுதியில்லார், பல்தாரத்த - பல்வகைப்பட்ட பண்டம்,

## இனிக்கும் இன்சுலின்

- உலகத்திலேயே இரண்டாம் வகை நீரிழிவுக் குறைபாடு என்னும் சர்க்கரை நோயின் தலைமையகமாக 5 கோடி மக்கள் தொகையுடன் இந்திய நாடு முன்னணியில் உள்ளது.

**நீரிழிவின் வகை**

- முதல் வகை : இன்சுலின்சார் நீரிழிவு நோய்
- இரண்டாம் வகை : இன்சுலின் எதிர்ப்பு நீரிழிவு நோய்
- மூன்றாவது வகை : நீரிழிவு நோயின் அறிகுறிகளுடன் காணப்படுபவர்.
- 'மூன்று மாத குளுக்கோஸ் சராசரிக்கு' என்று ஒரு ஆய்வு இருக்கிறது. அதனை HbA1c என்பர்.
- ஹீமோகுளோபின் Hb என்பது குருதியில் உயிர்வளியை உடம்பு முழுக்க எடுத்துச் செல்லும் பகுதி. A1c என்பது குருதியில் குளுக்கோஸை ஏற்றிச் செல்லும் பகுதி. இதனை வைத்து மூன்று மாத குளுக்கோஸ் சராசரியைச் சொல்லிவிடுவார்கள்
- இன்சுலின் என்பது நாளமில்லாச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஹார்மோன் ஆகும். இது கணையத்தில் காணப்படும் லாங்கர்ஹான் திட்டுகளில் இருக்கும் பீட்டா செல்களால் உற்பத்தி செய்யப்படும் புரத மூலக்கூறு.
- இது கார்போஹைடிரேட்டின் வளர்சிதை மாற்றத்துக்கு மிகவும் இன்றியமையாத புரதமாகும்.
- இன்சுலின் ஹைப்போதாலமஸைக் கட்டுப்படுத்துகிறது. ஹைப்போதாலமஸ் பசியைத் தூண்டுகிறது.
- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 70 முதல் 100 மில்லிகிராம் குளுக்கோஸ் இருந்தால், அது நீரிழிவுக் குறைபாடு அற்ற நிலை.
- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 100 முதல் 126 மில்லிகிராம் குளுக்கோஸ் இருந்தால், அது நீரிழிவின் ஆரம்ப நிலை.
- ஒரு டெசி லிட்டர் குருதிக்கு 126 மில்லிகிராமுக்குமேல் குளுக்கோஸ் இருந்தால், அது முதிர்ந்த நிலை.

**ஆரம்பகால ஆராய்ச்சிகள்**

- 1889 இல் ஆஸ்கர் மின்கோஸ்கி, ஜோசப் வான் மெரிங் என்ற இரு ஜெர்மானிய அறிவியல் அறிஞர்கள் நாய் ஒன்றின் கணையத்தை அகற்றி ஆராய்ச்சி செய்தனர். இந்த உலகுக்கு சர்க்கரைக்கும் கணையத்துக்கும் உள்ள தொடர்பை முதன் முதலாக அறிவித்த அறிவியல் அறிஞர்கள் ஆவார்.
- சர் எட்வர்டு ஆல்பர்ட் சார்பே சா஼பே அறிஞர் சர்க்கரை நோயாளிகளுக்கு கணையத்தில் ஒரு வேதிப்பொருள் குறைவதைக் கண்டறிந்து அந்த வேதிப் பொருளுக்கு இன்சுலின் என்று பெயர்.
- ஃபிரெடெரிக் பாண்டிங் மற்றும் சார்லஸ் பெஸ்ட் இருவரும் நாயின் கணையத்திலிருந்து இன்சுலினைப் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டனர். பின் இதில் ஜே.பி. காலிப் மற்றும் ஜான் மக்லியாடு இணைந்து குழுவாக செயல்பட்டனர்.
- 1923 இல் இவர்கள் அனைவருக்கும் நோபல் பரிசு கிடைத்தது. முதல் மரபணு பொறியியல் தொழில்நுட்பச் செயற்கை மனித இன்சுலின் 1978 இல் பாக்டீரியாவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.
- ஃப்ரெடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14-ஐ உலக நல நிறுவனம், 1991 முதல் 'உலக நீரிழிவு நோய்' நாளாக கடைபிடிக்கப்பட்டது.

**சர்க்கரை உயர்தல் குறியீட்டு எண்கள் (Glycemic Index)**

- குளுக்கோஸ் எனப்படும் சர்க்கரையின் ச.உ.கு எண் 100 ஆகும்.
- காய்கறி, கீரைகள், பழங்களில் கொய்யா, ஆப்பிள் போன்றவை குறைந்த சர்க்கரை குறியீடு எண்கள் உடையவை. ஆயுர்வேத மருத்துவ முறையில் இக்குறைபாட்டை 'மதுமேகம்' என்று சொல்கிறார்கள்.

## சான்றோர் சரித்திரம்
## பெ.நா.அப்புசாமி

- 'அறிவியல் தமிழர்' என்று போற்றப்படும் பெ.நா.அப்புசாமி
- அறிவியல் தமிழின் முன்னோடியெனப் போற்றப்பட்டார்.
- 'தமிழர் நேசன்' தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ்.
- பொங்கியெழு கேணி, நுண்துகள் கொள்கை, அறிவுக்குறி எண் போன்ற நல்ல தமிழ்த் தொடர்கள் அவர் உருவாக்கியவை.
- மின்சாரம், வானக்காட்சி, இன்றைய விஞ்ஞானமும் நீங்களும், அணுசக்தியின் எதிர்காலம், ராக்கெட்டும் துணைக்கோள்களும் உள்ளிட்ட பல நூல்கள் அவர் இயற்றியவை.
- பேனா என்ற புனைபெயரில் பல நூல்களை எழுதியுள்ளதோடு 25 அறிவியல் நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.
- மர்ரே நிறுவன அதிபர் எஸ். ராஜம் பல திமிழ் இலக்கியங்களைத் தொகுப்பாக கொண்டுவந்தபோது இவர் மிகவும் உறுதுணையாக இருந்துள்ளார்.
- மதுரை பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியது.

# 11 ஆம் வகுப்பு - தமிழ்

## இயல் 6
## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

- ❖ 'டைரியம்' என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான 'டைஸ்' என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.
- ❖ 1498 இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உடையவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ ஆனந்தரங்கர் பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரை பெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.
- ❖ இவருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன.
- ❖ திருவேங்கடம் என்பாரின் மகனே ஆனந்தரங்கர் ஆவார்.
- ❖ இவர் 1709 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் சென்னை பெரம்பூரில் பிறந்தார்.
- ❖ அனந்தரங்கள் பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமைத் துபாஷியாகப் பணியாற்றினார்.
- ❖ புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முதலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.
- ❖ ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் 12 தொகுதிளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.
- ❖ 'உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்பட்டவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை நாட்குறிப்பாக பதித்தார்.
- ❖ இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01,1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார்.
- ❖ 12.01.1761 அன்று ஆனந்தரங்கர் மறைந்தார்.
- ❖ 1761 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் நாளோடு ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு முடிவடைகிறது.
- ❖ இதனால், ஆனந்தரங்கர் 'இந்தியாவின் பெப்பிசு' என்று அழைக்கப்படுகிறார்.
- தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன - ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ.வே.சா.
- ❖ அந்த காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல் ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர். - என்று கூறியவர் பாரதியார்.

**ஆனந்தரங்கர் காலத்தில் இருந்த நாணயங்கள்**

- ❖ 480 காசு - ஒரு ரூபாய்
- ❖ 60 காசு - 1 பணம்
- ❖ 8 பணம் - 1 ரூபாய்

24 பணம் - ஒரு வராகன்
1 பொன் - ½ வராகன்
1 வராகன் - 3 (அ) 3.2 ரூபாய்

- ❖ 1 மோகரி - 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்.
- ❖ 1 சக்கரம் - ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்.

அனந்தரங்கரைப் பற்றிய நூல்கள்

- ஆனந்தரங்கன் கோவை - தியாகராய தேசிகர்
- ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - புலவரேறு அரிமதி தென்னகன்

## சீறாப்புராணம்

- இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது சீறாபுராணம்.
- சீறா என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு வாழ்க்கை என்பது பொருள். புராணம் - வரலாறு.
- நபிகள் இணங்க உமறுப்புலவர் சீறாப்புராணத்தை இயற்றினார் என்பர்.
- விலாத்துக் காண்டம், நுபுவ்வத்துக்காண்டம், ஹிஜிரத்துக் காண்டம் என மூன்று காண்டங்களை உடையது.
- 92 படலங்களையும், 5027 விருத்தப் பாடல்களையும் உடையது.
- நூலை எழுதி முடிக்கும் முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் பனு அகமது மரைக்காயர் என்பவர் இதைப் பாடி முடித்தார். இவர் பாடிய பகுதி 'சின்னச்சீறா' எனப்படும்.
- உமறுப்புலவர் எட்டயபுரத்தின் அரசவைப் புலவர். கடிகை முத்துப் புலவரின் மாணவர்.
- நபிகள் நாயகத்தின் மீது 'முதுமொழிமாலை' என்ற நூலையும் இயற்றினார்.
- வள்ளல் சீதக்காதி, அப்துல்காசிம் மரைக்காயர் ஆகியோர் இவரை ஆதரித்தனர்.
- ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள்.
- மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சொல்லும் பொருளும்

வரை - மலை, கம்பலை - பேரொலி, புடவி - உலகம், எய்துதல் - பொறுதல்,
வாரணம் - யானை, பூரணம் - நிறைவு, நல்கல் - அளித்தல்.
வதுவை - திருமணம், கோன் - அரசன்.
மறுவிலா - குற்றம் இல்லாத, துன்ன - நெருங்கிய, பொறிகள் - ஐம்புலன்,
தெண்டிரை - தெள்ளிய நீரலை, விண்டு - திறந்து, மண்டிய - நிறைந்த,
காய்ந்த - சிறந்த, தீன் - மார்க்கம்

.

## அகநானூறு

- அகநானூறு 145 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு.
- களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்நூலுக்கு "நெடுக்தொகை நாநூறு" என்ற பெயரும் உண்டு.
- வீரை வெளியன் தித்தனார் பாடிய ஒரேயொரு பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

அகநானூற்றில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை

- பாலைத்திணை : பாடல் வரிசை 1,3,5,7….. எண்ணிக்கை 200
- குறிஞ்சித்திணை : பாடல்வரிசை 2,8,12,18…. எண்ணிக்கை 80
- முல்லைத்திணை : பாடல்வரிசை 4,14,24,34…. எண்ணிக்கை 40
- மருத திணை : பாடல்வரிசை 6,16,26,36…. எண்ணிக்கை 40
- நெய்தல் திணை : பாடல்வரிசை 10,20,30,40,,,, எண்ணிக்கை 40

**சொல்லும் பொருளும்**

- கொண்மூ - மேகம், சமம் - போர், விசும்பு - வானம், அவரம் - ஆரவாரம், ஆயம் - சுற்றம், தழலை, தட்டை - பறவைகளை ஓட்டும் கருவிகள்.

## பிம்பம்

- புதுச்சேரியைச் சேர்ந்த பிரபஞ்சனின் இயற்பெயர் வைத்தியலிங்கம்.
- 1995 இல் இவருடைய வரலாற்றுப் புதினமான வானம் வசப்படும் சாகித்திய அகாதெமி விருது பெற்றது.
- இந்த உலகமே நாடகமேடை அதில் அனைத்து ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்களே. ஒவ்வொருவருக்கும் அறிமுகமும் முடிவும் உண்டு. ஒருவருக்கே பல வேடங்களும் உண்டு - என்ற ஷேக்ஸ்பியரின் கருத்தை பிம்பம் சிறுகதையுடன் ஒப்பிட்டு கூறுகிறார்.

## சான்றோர் சரித்திரம்
## இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர்

- இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாணயம் ஆகியவற்றுக்கு இவர் உரை எழுதினார்.
- சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும். அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்தவர் டி.கே.சி. ஆவார்.
- டி.கே.சி.யின் வீட்டுக் கூடத்தில்ஞாயிறு தோறும் மாலை ஐந்து மணிக்கு கூட்டம் கூட்டி இலக்கியத்தைப் பற்றி தமிழ் அறிஞர்கள் பேசினார்கள். இவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது.

## திருக்குறள்

- இளைதாக முள்மரம் கொக் களையுநர்<br>கைகொல்லும் காழ்த்த இடத்து - பிறிதுமொழிதல் அணி
- நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் செயல் - சொற்பொருள் பின்வரும் நிலையணி
- இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும் - உருவக அணி

## இயல் 7
## காலத்தை வென்ற கலை

- 11ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டுவரை கட்டினார்.
- 2010 இல் இக்கோவிலின் 1000 வது ஆண்டு நிறைவடைந்தது.
- சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோவில்களைக் கட்டியிருப்பதாகத் திருநாவுக்கரசர் தம் பதிகமொன்றில் கூறியுள்ளார்.
- 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்டவர் முதலாம் மகேந்திரவர்மன். இவர் குடைவரைக் கோவில்களை அமைத்தாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றது.
- இராசசிம்மனோ தம் முன்னோர்களையும் விஞ்சும் வகையில் உன்னதச் சிறப்பு வாய்ந்த காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலை அமைத்து அழியாப் புகழ் பெற்றான். இராசசிம்மேச்சுரம் என்று அழைக்கப்பட்ட்ட அக்கோவிலே இராசராசனுக்கு அதுபோன்றதொரு பெரிய கோவிலைக் கட்ட வேண்டுமென்ற ஆர்வத்தைக் தூண்டியது.
- தஞ்சை பெருவுடையார் கோவிலை 1886 ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் ஷூல்ஸ் ஆறு ஆண்டுகள் தீவிரமாக அங்குள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன் தான் கட்டினார் என்றார்.

- ❖ 1930 ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த எஸ்.கே. கோவிந்தசாமி தஞ்சைப் பெரிய கோவில் கருவறையில் உள்ள ஓவியங்களைக் கண்டறிந்தார்.
- ❖ சோழர் கால ஓவியங்கள் மீதே நாயக்கர் ஆட்சியில் ஓவியங்கள் வரையப்பட்டது என்பதை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.
- ❖ வெளிக்கோபுரங்களை உயரமாகவும், உட்கோபுரங்களை உயரம் குறைவாகவும் என இரண்டு கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றிவித்தவன் இராசராசன்.
- ❖ இராசராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி திருவையாற்றில் கட்டிய கோவில் ஒலோகமாதேவீச்சுரம் என்று வழங்கப்படும்.
- ❖ "உடன் கூட்டத்து அதிகாரம் செய்கிற கோவலூர் உடையான் காடன் நூற்றென்மரையும் அதிகாரிச்சி எருதந் குஞ்சர மல்லியையும்" இந்த வரிகள் எருதந் குஞ்சர மல்லி என்ற பெண் அதிகாரியைப் பற்றிக் குறிப்பிடப்பிடுகிறது.
- ❖ "கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை" என்றவர் பிரடிரிகா வொன்ஸ்லீவிங்

**ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்**

- ❖ ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் புதுமை என்று பொருள். சுண்ணாம்பு காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.

## ஆத்மாநாம் கவிதைகள்

- ❖ மதுசூதனன் என்ற இயற்பெயரைக்கொண்ட ஆத்மாநாம் தமிழ்க்கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர்.
- ❖ 'காகிதத்தில் ஒரு கோடு' என்பது அவருடைய முக்கியமான கவிதைத் தொகுப்பு.
- ❖ ' ழ ' என்னும் சிற்றிதழை நடத்தியவர்.
- ❖ இவருடைய கவிதைகள ஆத்மாநாம் கவிதைகள் என்னும் பெயரில் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளது.

## குற்றாலக் குறவஞ்சி

- ❖ ஆசிரியர் - திரிகூட ராசப்பக் கவிராயர்.
- ❖ இந்நூல் திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது.
- ❖ மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது.
- ❖ திருநெல்வேலியில் தோன்றியவர்.
- ❖ திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான் என்று சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர்.
- ❖ குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.
- ❖ குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக இலக்கிய வடிவமாகும்.
- ❖ இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று.
- ❖ குறித்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகிறது.

சொல்லும் பொருளும்

- ✓ கொத்து - பூமாலை, குழல் - கூந்தல், நாங்கூழ் - மண்புழு, கோலத்து நாட்டார் - கலிங்க நாட்டார், வரிசை - சன்மானம், நவை - குற்றம், படி - உலகம்.

## திருச்சாழல்

- ஆசிரியர் மாணிக்கவாசகர்.
- திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்,
- இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது.
- 51 திருப்பதிகங்கள் உள்ளன.
- 658 பாடல்கள் அடங்கியுள்ளன.
- இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப்பெற்றுள்ளது.
- "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது முதுமொழி.
- திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது.
- ஜி.யு.போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- மாணிக்கவாசகர் சைவ குரவர் நால்வரில் ஒருவர்.
- திருவாதவூரைச் சேர்ந்தவர்.
- அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.
- இவர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார்.

## இசைத்தமிழர் இருவர்

### சிம்பொனித் தமிழர் - இளையராஜா

- ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்து காட்டியவர் இளையராஜா
- தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர்.
- அவருடைய இயற்பெயர் இராசையா,
- அன்னக்கிளி படத்தில் அறிமுகமானவர்.
- 1970 களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச்செவிகள் விடுதலை பெற்று தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணமெனலாம்.
- எப்படிப் பெயரிடுவேன்? என்னும் இசைத்தொகுப்பும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட காற்றைத் தவிர ஏதுமில்லை என்னும் இசைத்தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.
- மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம்" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு 'ஆரட்டோரியோ' என்னும் இசை வடிவில் இசையமைத்தார்.
- இராஜாவின் ரமணமாலை, இளையராஜாவின் கீதாஞ்சலி என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் மூகாம்பிகை என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.
- பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.
- 2018 ல் பத்ம விபூஷண் விருது.
- 1985,1987, 1989, 2009 - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது (4 முறை)
- 2016 - சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது.
- 1980-81 தமிழகம் - கலைமாமணி விருது.
- 1988 - மத்தியப்பிரதேச - லதா மங்கேஷ்கர் விருது,
- 1995 - கேரளம் - நிஷாகந்தி சங்கீத விருது போன்ற விருதுகளைப் பெற்றவர்.
- பால்நிலாப் பாதை, வெட்ட வெளிதனில் கொட்டிக் கிடக்குது உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளர் ஆவார்.

- மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான நம்ரதா கே சாகர் என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார்.
- ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் இவரே. வெறும் பதின்மூன்று நாட்களில் இச்சாதனையை நிகழ்த்தினார்.

## ஆஸ்கர் தமிழர் - ஏ.ஆர். இரஹ்மான்

- 2009 ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.
- சிறந்த திரையிசைப் பாடலுக்கான விருதும் இவருக்கே வழங்கப்பட்டது.
- இரண்டு விருதுகளையும் பெற்ற பெருமைக்குரியவர் இசைப்புயல் ஏ.ஆர். இரஹ்மான்
- இவர் 1992 ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராக அறிமுகமானார்.
- தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார்.
- இரஹ்மானிடம் எல்லோரும் இரசித்துக் கேட்பது அரவது தாளம் உருவாக்கும் முறை.
- இவர் இசையமைத்த வந்தே மாதரம், ஜன கண மன என்னும் இசைத்தொகுதிகள் நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன.
- திரையிசையில் சூ∴பி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.
- ஸ்லம்டாக் மில்லியனர் என்ற திரைப்படத்தின் இசைக்காக, கோல்டன் குளோப் விருது பெற்றதன்மூலம் உலகளாவிய புகழ் பெற்றார். இவ்விருதை பெற்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.
- இசைக்காக அவர் கிராமி விருதையும் பெற்றார்.
- இந்திய அரசு - பத்ம பூஷண் விருது.
- தமிழகம் - கலைமாமணி விருது.
- கேரளம் - தங்கப் பதக்கம்.
- உத்திரப்பிரதேசம் - ஆவாத் சம்மான் விருது.
- மத்தியப்பிரதேசம் - லதா மங்கேஷ்கர் விருது.
- மொரிஷியஸ் - தேசிய இசை விருது.
- மலேசியா - தேசிய இசை விருது.
- ஸ்டான்∴போர்ட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச இசை விருதுகளையும் பெற்றார்.

## சான்றோர் சரித்திரம்
## சங்கரதாசு சுவாமிகள்

- புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று தமிழறிவைப் பெற்றவர் இவர்.
- நாடகங்களில் இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24.
- சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடக குழுவை உருவாக்கினார்.
- இந்த குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடக கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார்.
- 'தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார்.
- இவரை 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

## இயல் 8
## காற்றில் கலந்த பேரோசை

- ✓ நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி,
- ✓ பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர்.
- ✓ ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள் உள்ளிட்ட சிறுகதைகளை எழுதியிருப்பதுடன் ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் ஆகிய புதினங்களை எழுதியுள்ளார்.
- ✓ செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.

## புரட்சிக்கவி

- வடமொழியில் எழுதப்பட்ட 'பில்கணீயம்' என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் பாரதிதாசனால் 1937 இல் எழுதப்பட்டது 'புரட்சிக்கவி'.
- கனக சுப்புரத்தினம் என்னும் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.
- புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார்.
- பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர்.
- குயில் என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார்.
- இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- "வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே" என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலை புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

## பதிற்றுப்பத்து

- எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து.
- சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் இது பாடாண் திணையில் அமைந்துள்ளது.
- இந்நூலின் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.
- ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன.
- இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
- இவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றார்
- உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
- இவன் வடக்கே இமயமலைவரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, இமயத்தில் வில்லினைப் பொறித்தவன்.
- கடம்பர்களை வென்றவன்.
- இவரது சிறப்பை குமட்டூர்க் கண்ணனார் இப்பாடலில் புகழ்ந்துள்ளார்.
- திணை : பாடாண் திணை. பாடாண் திணையானது கைக்கிளைக்குப் புறனாகும்.
- துறை : செந்துறைப் பாடாண்பாட்டு
- வண்ணம் : ஒழுகு வண்ணம்.
- வண்ணந் தாமே நாலைந் தென்ப - தொல்காப்பியம்

- ஒழுகு வண்ண மோசையி னொழுகும் - தொல்காப்பியம்.
- தூக்கு : செந்தூக்கு
- வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்கே - தொல்காப்பியம்.

சொல்லும் பொருளும்

- பதி - நாடு, பிழைப்பு - வாழ்தல், நிரையம் - நரகம், தண்டா - ஓயாத, ஒரீஇய - நோய் நீங்கிய, புரைவோர் - சான்றோர், நயந்து - விரும்விய. யாணர் - புது வருவாய், மருண்டெனன் - வியப்படைந்தேன்.
- மன்னுயிர் - நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி, கடுந்துப்பு - மிகுவலிமை, ஏமம் - பாதுகாப்பு, ஒடியா - குறையா.

## சிந்தனைப் பட்டிமன்றம்

- எத்தனை உயரம் இமயமலை
  அதில் இன்னொரு சிகரம் உனது தலை - தாராபாரதி
- எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா - பாரதி
- வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய் - மகாகவி பாரதி
- தேடுகல்வி இராத்தோர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல் - பாரதி
- நல்லதோர் வீனை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ - பாரதியார்.
- பெண்மை வெல்க என்று கூத்திடுவோம் - பாரதி
- 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே' - பாரதிதாசன்.
- நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்றார் பவேந்தர் பாரதிதாசன்.
- வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும் என்று அறிஞர் அண்ணா கூறினார்.
- யாதும் ஊரே யாவரும் கேளிர் - கணியன் பூங்குன்றனின்.
- விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
  மானுட சமுத்திரம் நானென்று கூவு
  புவியை நடத்து, பொதுவில் நடத்து - பாரதிதாசன்
- பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் என்று மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகிறது.

## சான்றோர் சரித்திரம்
## மயிலை சீனி. வேங்கடசாமி

- ✓ மயிலை சீனி.வேங்கடசாமியின் இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின.
- ✓ கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள்.
- ✓ அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றைத் தடத்தைச் செப்பனிட்டது.
- ✓ மதுரைப் பல்கலைக்கழகம் 1980 ஆம் ஆண்டு 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது.
- ✓ கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றார்.



முதல் முயற்சியில்
சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ்
JACOB'S GREAT MINDS
444
காலிப்பணியிடங்கள்
கடந்த SI தேர்வில் அதிகளவில் மாணவர்கள் வெற்றி பெற்று தற்போது பயிற்சியில் உள்ளனர்
போலிஸ் தேர்வில் மாநிலத்தில் முதல் மாணவனை உருவாக்கிய பயிற்சி மையம்
தமிழகம் முழுவதும் மாணவர்களுக்கு ஆன்லைன் பயிற்சி
உடல்தகுதி தேர்வுக்கு சிறப்பு பயிற்சி
கட்டாயத் தமிழுக்கு அதிரடி பயிற்சி
₹9999 ₹6999
Only for 100 Students
பொது அறிவு மற்றும் உளவியல் பகுதிக்கு தனிக் கவனம்
JACOB'S GREAT MINDS
@sjacob369 (JACOB'S TNPSC FREE COACHING)
மரம் வளர்ப்போம்! இயற்கை வளம் பேணுவோம்! புவி காப்போம்!

## இயல் 9
## சித்தர் உலகம்

- சித்து என்னும் பேரறிவினைப் பெற்றவர்கள் சித்தர்கள்.
- தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் நிறைமொழி மாந்தர் என்னும் சொல்லுக்கும், சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் இடம்பெறும் சித்தன் என்னும் சொல்லுக்கும் உரியவர்கள்.
- மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டும். - அகத்திய ஞானம்.
- சித்தர்கள் என்றால் நிறைவடைந்தவர் என்பது பொருள்.
- தமிழில் சித்து என்னும் சொல் மனம், கருத்து, ஆன்மா என்ற பொருள்களைக் கொண்டது.
- பதினெண்சித்தர்கள் என்ற வழக்கில் 18 என்பது எண்ணிக்கையைக் குறிக்கவில்லை, மாறாக அவர்கள் பெற்ற 18 பேறுகளைக் குறிக்கிறது.
- எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில் - பாரதியார்.
- ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பது திருமூலரின் கடவுட்கொள்கை.
- இதனையே பட்டினத்தாரும் ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு என்று பாடுகிறார்.
- மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம், நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் என்ற பாடலடிகள் இதை மெய்ப்பிக்கின்றன.
- ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை என்கிறது திருமந்திரம்.
- நாடொணாத அமிர்தமுண்டு நான் அழிந்து நின்ற நாள் - சிவவாக்கியர்.
- சித்தர்கள் சமூகத்தில் நிலவிய பல்வேறு கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் பொருளற்ற செயல்களையும் போலிச் சடங்குசுகளையும் நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறமையோடும் கடுமையாகச் சாடியவர்கள்.
- எனவே அறிஞர் க. கைலாசபதி, சித்தர்களை கிளர்ச்சியாளர்கள் என்று கூறுகின்றார்.
- ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம் - பத்திரகிரியார்.
- சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ? என்று சிவ்வாக்கியவரும் சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடியுள்ளனர்.
- சித்தர்களை இரசவாதிகள் என்று கருதும் போக்கு, தமிழகத்தில் பரவலாக காணப்படுகிறது.
- உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே - திருமூலர்
- உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் - திருமந்திரம்
- நந்தவ னத்திலோர் ஆண்டி - அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி - கடுவெளிச் சித்தர்.
- மாங்காய்ப்பால் என்னும் சொல் குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும்.
- தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே
  ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே - வள்ளலார்.

### அட்டமா சித்திகள்

- அணிமா - அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல்
- மகிமா - வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல்
- லகிமா - காற்றில் மிதக்கும் ஆற்றல்
- கரிமா - எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல்

- பிராகாமியம் - இயற்கைத் தடைகளைக் கடக்கும் ஆற்றல்
- ஈசத்துவம் - படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல்
- வசித்வம் - உலகப் படைப்புகளை எல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல்
- காமாவசாயித்வம் - விரும்பியதை முடிக்கும் ஆற்றல்.

## ஜப்பானிய ஹைக்கூ

- விழுந்த மலர்
  கிளைக்குத் திரும்புகிறது
  அடடா... வண்ணத்துப்பூச்சி................... மோரிடாகே
- பட்டுப்போன மரக்கிளை,
  அமர்ந்து ஓய்வெடுக்கும் காகம்;
  இலையுதிர் கால மாலை....................... பாஷோ
- பெட்டிக்கு வந்த பின்
  எல்லாக் காய்களும் சமம்தான்
  சதுரங்கக் காய்கள்.................... இஸ்ஸா

## காவியம்

- பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம்.
- இலங்கையில் பிறந்தவர்.
- பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனைப்பெயர்களில் எழுதியவர்.
- 'லங்காபுரி ராஜா' சிறுகதைத் தொகுப்புகளும், 'நக்ஷத்திரவாசி' என்னும் நாடகமும் 'வெயிலும் நிழலும்' உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

## தொலைந்து போனவர்கள்

- ஆசிரியர் அப்துல் ரகுமான்.
- பா வகை சிந்து
- வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர்.
- பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், சுட்டுவிரல், ஆலாபனை முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.
- பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது, 'ஆலாபனை' என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.
- ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மௌலானா ரூமி என்பவரின் 'மஸ்னவி' என்ற உலகப்புகழ் பெற்ற பாரசீக ஞான காவியம் எழுதினார்.

## வில்லிபாரதம்

- வில்லிபுத்தூரார், வடமொழியில் வியாசர் எழுதிய மகாபாரதத்தைத் தழுவித் தமிழில் இயற்றினார்.
- வக்கபாகை என்னுமிடத்தை ஆண்டுவந்த மன்னனான வரபதி ஆட்கொண்டான் என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.
- வில்லிபாரதம், ஆதி பருவம் முதல் சௌப்திக பருவம் வரை பத்துப் பருவங்களைக் கொண்டது.

- 4351 விருத்தப் பாடல்களால் ஆனது.

சொல்லும் பொருளும்

- தரங்கம் - கடல், கவனம் - வேகம், துரகதம் - குதிரை, வென்றி - வெற்றி, விசயன் - அருச்சுனன், நான்மறை - நான்கு வேதங்கள், யாக்கை - உடல், ஓவுஇலாது - ஒன்றும் மிச்சமின்றி, அயன் - பிரமன், எழிலிஏறு - பேரிடி, அங்கை - உள்ளங்கை, அவுணன் - அரக்கன், மல்லல் - வளமை, தொடையல் - மாலை, சூரன்மாமதலை - கதிரவன்மகன், உற்பவம் - பிறவி.

## காஞ்சனை முன்னுரை

- புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம்.
- தமிழ்ச் சிறுகதைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய காரணத்தால் சிறுகதை மன்னர் என்று போற்றப்படுபவர்.
- காஞ்சனை என்னும் சிறுகதைத் தொகுப்பு அவரால் எழுதப்பட்டது.

## சான்றோர் சரித்திரம்
## இராமலிங்க அடிகள்

- வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் - வள்ளலார்.
- 'திருவருட்பா' தந்தவர் வள்ளலார்
- ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றுத் தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கியவர் வள்ளலார்.
- "மநு முறை கண்ட வாசகம்" என்னும் உரைநடை நூலை நமக்கு நல்கியவர்.
- ஒழிவில் ஒடுக்கம், தொண்ட மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர் வள்ளலார்.
- சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார்.
- சத்திய தருமச் சாலையைத் தொடங்கினார்.
- கடவுள் ஒருவரே. அவரைச் சோதி வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும். சிறுதெய்வ வழிபாடு கூடாது என்றவர் வள்ளலார்.

## இயல் 10
## தாகூரின் கடிதங்கள்

- பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்டவர் தாகூர்.
- இவர் தம் 16 ஆம் வயதில் கவிதைகள் எழுத தொடங்கினார்.
- 1931 ஆம் ஆண்டு கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்காக இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன்வாலா பாக் படுகொலையால் மனம் வருந்தி ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய சர் பட்டத்தை துறந்தார்.
- 1921 இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
- குருதேவ் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர் தாகூர்.
- இவரின் ஜனகணமன என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகிறது.
- இவர் எழுதிய 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகிறது.
- சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் த.நா. குமாரசுவாமி. வங்க அரசு, தமிழ்-வங்க

மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளித்துச் சிறப்பித்துள்ளது.

## ஒவ்வொரு புல்லையும்

- ஆசிரியர் - இன்குலாப்.
- இயற்பெயர் - சாகுல் அமீது
- அவருடைய கவிதைகள் 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- அவருடைய மரணத்திற்கு பிறகு அவர் விருப்பப்படி அவருடைய உடல் செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டது.

## மனோன்மணீயம்

- மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்.
- லிட்டன் பிரபு 1866 இல் எழுதிய இரகசிய வழி என்ற நூலை தழுவி 1881 இல் பேராசிரியர் சுந்தனார் இதைத் தமிழில் எழுதினார்.
- நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது.
- இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது.
- மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்'.
- சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தார்.
- திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு 'ராவ்பகதூர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- தமிழக அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறவியுள்ளது.
- நாடகத்துறைக்கு தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தீர்க்க வந்த மனோன்மணீயம் என்னும் இந்நாடக நூல், காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக விளங்குகிறது.

சொல்லும் பொருளும்

காண்டி - காண்க, பூம்பராகம் - பூவில் உள்ள மகரந்தம், ஆசு இலா - குற்றம் இலாத, தோட்டி - துறட்டி, அயம் - ஆடு, குதிரை , புக்க விட்டு - போகவிட்டு. நாங்கூழ்ப்புழு - மண்புழு, பாடு - உழைப்பு, ஓவா - ஓயாத, வேதித்து - மாற்றி.

### தமிழ் நாடக இலக்கண நூல்கள் சில

| | |
|---|---|
| 1. அகத்தியம் | 6. செயல்முறை |
| 2. குணநூல் | 7. செயிற்றியம் |
| 3. கூத்தநூல் | 8. முறுவல் |
| 4. சந்தம் | 9. மதிவாணனார் நாடக இலக்கண நூல் |
| 5. சயந்தம் | 10. நாடகவியல் |

## செல்வி

- நர்த்தகி நடராஜ் பெற்ற விருதுகள்
  தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதமி விருது, இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர், பெரியார் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர் என்ற சிறப்புகளைப் பெற்றவர்.
- இவர்தான் திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்.

- திருநங்கைகளுள் முதன்முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் என்ற பல்வேறு முதல் சாதனைகளுக்குச் சொந்தக்காரரானவர் நர்த்தகி நடராஜ்.
- தஞ்சை கிட்டப்பா என்பவரிடம் பரதக்கலையைப் முறையாகப் பயின்றார்.

சாதனை திருநங்கைகள்

- சேலத்தைச் சேர்ந்த பிரித்திகா யாஷினி. இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் என்ற பெருமை உடையவர்.
- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திருநங்கையான ஜோயிதா மோண்டல் மாஹி, லோக் அதாலத் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். லோக் அதாலத் நீதிபதி பதவிக்கு திருநங்கை ஒருவர் நியமிக்கப்படுவபது நாட்டிலேயே இதுவே முதல்முறையாகும்.
- தமிழ்நாட்டில் மூன்றாம் பாலினப் பிரிவில் பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமவர் தாரிகா பானு.

## சான்றோர் சரித்திரம்
## திரு.வி. கலியாணசுந்தரனார்

- பொறுமையைப் பூணுங்கள், பொறுமையின் ஆற்றலை உணருங்கள், உணர்ந்து உலகை நோக்குங்கள், நமது நாட்டை நோக்குங்கள், நமது நாடு நாடாயிருக்கிறதா? - திரு.வி.க
- வெஸ்லி பள்ளியில் படித்தபோது நா. கதிரைவேல் என்பவரிடம் தமிழ்ப்படித்தார்.
- தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்பட்டார்.
- பெண்ணின் பெருமை, முருகன்அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்திறவு, இந்தியாவும் விடுதலையும், பொதுமை வேட்டல், திருக்குறள் விரிவுரை முதலிய நூல்களை எழுதினார்.
- தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு ஆசிரியராக விளங்கினார்.
- தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்து தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார்.
- சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார்.

**நூல்கள்**

- பண்பாட்டு அசைவுகள் எனும் நூல் - தொ. பரமசிவன்
- நாடற்றவன் - அ.முத்துலிங்கம்
- நல்ல தமிழ் எழுத வேண்டுமா? - அ.கி.பரந்தாமனார்
- உயிர்த்தெழும் காலத்துக்காக - சு.வில்வரத்தினம்.
- இயற்கை வேளாண்மை - கோ.நம்மாழ்வார்.
- பனைமரமே பனைமரமே - ஆ.சிவசுப்பிரமணியன்
- யானைகள்-அழியும் பேருயிர் - ச.முகமது அலி, க.யோகானந்த்
- பறவைகள் உலகம் - சலீம் அலி
- இயற்கை வேளாண்மை - கோ.நம்மாழ்வார்.
- Elephants: Majestic Creatures of the Wild - Shoshani.J.
- காவடிச்சிந்து - சென்னிகுளம் அண்ணாமலையார்.
- குறுந்தொகை - வெள்ளிவீதியார்
- புறநானூறு - கடலுள் மாய்ந்த இடம்பெருவழுதி
- வாடிவாசல் - சி.சு.செல்லப்பா
- ஜீவா என்றழைக்கப்படுபவர் ப. ஜீவானந்தம்
- ஜீவா - வாழ்க்கை வரலா'று - கே. பால தண்டாயுதம்.
- சொல்லாக்கம் - இ. மறைமலை.

- என் வாழ்க்கை என் கையில் - ஞாநி
- மனிதவாழ்வை மாற்றியமைத்த கண்டுபிடிப்பாளர்கள் - ஆர்.கே.வி. கோபாலகிருஷ்ணன், மொழிபெயர்ப்பு - அய்யாசாமி.
- ஒவ்வொரு புல்லையும் - இன்குலாப்
- மனோன்மணீயம் - பெ. சுந்தரனார்.
- தாமரை நெஞ்சம் - அகிலன்.
- சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" - ஆர். பாலகிருஷ்ணன்
- காவடிச் சிந்து - அண்ணாமலையார்.
- வாடிவாசல் - சி.சு. செல்லப்பா
- எழுத்து இதழ்த் தொகுப்பு - தொகுப்பாசிரியர் - கி.அ. சச்சிதானந்தன்.
- தலைமைச்செயலகம் - சுஜாதா
- விஞ்ஞானி - மீரா
- வானம் வசப்படும் - பிரபஞ்சன்
- அக்னிச்சிறகுகள் - அப்துல் கலாம்.
- அறிவியல் தமிழ் - வா.செ. குழந்தைசாமி,
- கணினியை விஞ்சும் மனித மூளை - கா. விசயரத்தினம்

## தகவல் துளி

- சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் - அறிஞர் அண்ணா.
- தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் -
- உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் - பாரதிதாசன்
- பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளில் ஒருவர் - ஜீவா.
- 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று குறிப்பிடுவது - பிங்கல நிகண்டு.
- "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்று குறிப்பிடுவது - புறநானூறு.
- தமிழ்கெழு கூடல் -
- "தமிழ் தழீஇய சாயலவர்" - கம்பர்
- முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்று குறிப்பது சிறந்தது.
- ✓ சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும் சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ? - நாமக்கல் கவிஞர்.
- ✓ பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு முத்தமிட்டுச் சொன்னது பூமி ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ - ஈரோடு தமிழன்பன்.
- ✓ எப்போதும் மத்தாப்பு கொளுத்தி விளையாடுகிறது மலையருவி - கழனியூரன்.
- ✓ உத்திகள் - strategies, சமத்துவம் - equality, தொழிற்சங்கம் - trade union, பட்டிமன்றம் - debate, பன்முக ஆளுமை - multiple personality, புனைபெயர் - pseudonym
- ✓ இந்தியாவில் வடமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம். தமிழில் - கம்பராமாயணம், வில்லிபாரதம்.
- ✓ கிரேக்கமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி இரு காப்பியங்களுமே பெண்ணுக்கு முதன்மை தருகின்றன.
- ✓ தமிழ்க் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.
- ✓ பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி<br>பேணி வளர்த்திடும் ஈசன் - பாரதியார்.
- உ.வே.சா 1894 ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.
- பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் என்பவரால் புறநானூறு (The four hundred songs of war and wisdom/an an-thology of poems form classical tamil, the purananuru) என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

## படைப்பாக்க உத்திகள்

- ✓ உருவகத்திலும் வினை உருவகம், பயன் உருவகம், வடிவ (மெய்) உருவகம், உரு (நிறம்) உருவகம் என்ற பகுப்பு உண்டு.
- ✓ எண்ணவலை பின்னும் மூளைச் சிலந்தி (சிந்தனை) - வினை
- ✓ ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ (சூரியன்) - பயன்
- ✓ நீலவயலின் நட்சத்திர மணிகள் (வானமும் விண்மீன்களும்) - மெய்
- ✓ மலைக்கிழவியின் நரைத்த கூந்தல் (அருவி) - நிறம்.

## கலித்தொகையில் ஏறுதழுவுதல்

- கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
  புல்லாளே, ஆய மகள்
  அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை
  நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர் துறந்து
  நைவாரா ஆய மகள் தோள்.
- அளவில் சிறுகதைவிட நீளமாகவும் புதினத்தைவிட சிறியதாகவும் இருக்கும் கதை குறும் புதினம். இதனை 'குறுநாவல்' என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

## சித்திரகவி

- ✓ தமிழ் கவிதைகளுள் சித்திரகவி ஒன்று. சித்திரகவி என்பது ஏதேனும் ஒரு பொருளை காட்சிப்படுத்தி கவிதையினை அதற்குள்ளாக அமைத்து எழுதுவது ஆகும்.

மாலைமாற்று

- ✓ மாலைமாற்று சித்திரகவி வகைகளுள் எளிமையானது.
- ✓ ஆங்கிலத்தில் PALINDROME என்னும் வடிவமும் இத்தகையது என்று ஒருவாறு கூறலாம்.
- ✓ தேரு வருதே நீ வா பாப்பா
  பாப்பா வா நீ தேரு வருதே

- ✓ இனக்குழு - ethnic group, புவிச்சூழல் - earth environment, முன்னொட்டு - prefix
- ✓ பின்னொட்டு - suffix, வேர்ச்சொல் அகராதி - rootword dictionary
- ✓ பண்பாட்டுக்கூறுகள் - cultural elements

## தகவல் துளிகள்

- தில்லி வானொலி நிலையம் உருது மொழியில் முஷைரா என்னும் கவியரங்கத்தை முதன்முறையாக ஒலிபரப்பியது.
- சிட்டியும் (சுந்தர ராஜன்) சோமுவும் கவியரங்கம் என்று பெயரிட்டும் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர்.
- திருச்சி வானொலி நிலையம் இம்முதல் கவியரங்கத்தைத் தமிழ்ப்புத்தாண்டு நாளையொட்டி 13.04.1944 அன்று ஒலிபரப்பியது
- எழில் என்ற தலைப்பில் நடந்த இக்கவியரங்கமே தமிழ்நாட்டில் நடந்த முதல் கவியரங்கமாகும்.
- அறிவியல் உலகியல், தாவரங்களுக்கும் உயிர் உண்டு உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர் 19 ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஜகதீச சந்திரபோஸ்.
- 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமர் ஒளியின் திசைவேகத்தையும், பியரி கேசன்டி ஒலியின் திசைவேகத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தினர்.
- ஒலியின் திசைவேகம் 331 மீ/வி.
- ஒளியின் திசைவேகம் 3 பெருக்கல் 10 அடுக்கு 8 மீ/வி.
- எனவே ஒலி ஒளியும் ஒரே நேரத்தில் தோன்றினாலும் ஒளியே நம்மை விரைவில் வந்தடையும்.
- அரும்பும் மலரும் - எண்ணும்மை, அரும்பிணி - பண்புத்தொகை, வெப்பம் குளிர் - உம்மைத்தொகை, கொளல் - தொழிற்பெயர்.

# 12 ஆம் வகுப்பு - தமிழ்

## இயல் - 1
## இளந்தமிழே

- ஆசிரியர் - சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.
- மொழிபெயர்ப்புக்காகவும் “ஒரு கிராமத்து நதி” என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.
- இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

## தமிழ்மொழியின் நடை அழகியல்

- ‘தொல்காப்பியம்’ இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணம் நூல் ஆகும்.
- ‘நடைபெற்றிலும்’ (கிளவியாக்கம், 26) என்றும் நடைநவின்றொழுகும், என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
- ‘கிடை’ எனும் குறுநாவலை எழுதியவர் கி.ராஜநாராயணன்.

ஆசிரியர் - தி.சு.நடராசன் எழுதிய ‘தமிழ் அழகியல்’

- திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு.நடராசன் குறிப்பிடத்தக்கவர்.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.
- கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்.

## தன்னேர் இலாத தமிழ்

பாடல் - ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
எங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் அனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்காரம்.

- அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் - தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்.
- அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் - தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்.
- தண்டியலங்காரம், அணி இலக்கணத்தைக் கூறம் சிறப்பான நூல்களில் ஒன்று.
- ‘காவியதர்சம்’ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் ‘தண்டி’ ஆவார். இவர் கி.பி 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூல் ‘பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்’ என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

## தம்பி நெல்லையப்பருக்கு

- எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் 'கவிகேசரி சாமி தீட்சிதர்' என்பவர் 'வம்சமணி தீபிகை' என்னும் நூலை 1879 இல் வெளியிட்டார். அப்பகுதியை திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதியார் அப்பொழுது ஆட்சிசெய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6.8.1919 இல் கடிதம் எழுதினார்.
- வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசைமணி என்பவரால் 2008 இல் அப்படியே வெளியிடப்பட்டது.

- பரலி சு.நெல்லையப்பர் என்பவர் விடுதலைப் போராட்ட வீரர். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர்.
- பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பணியாற்றியவர்.
- இவர் நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.
- மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா.அ.பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நுலில் இடம்பெற்றிருக்கிறது.
- பாரதி பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல் அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேவருக்கு எழுதிய கடிதம்வரை அனைத்தையும் எழுதியுள்ளார்.

- பழையன கழிதலும் புதியன புகுதலும்
  வழுவல கால வகையி னானே. - நன்னூல்
- மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
  மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே, கூவி வா வா. - சிற்பி பாலசுப்பிரமணியம்.

## சான்றோர் சித்திரம்

- "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர்.
- தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர்.
- திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார்.
- இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன.
- புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவமாக மாற்றினார்.
- திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது.
- பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

## இயல் - 2
## பெய்யெனப் பெய்யும் மழை

- 2005 ஆம் ஆண்டு மும்பையில் ஒரே நாளில் 994 மி.மீ மழை பெய்தது. 2010 ஆம் அண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலம் 'லே' பகுதியில் 30 நிமிடங்களில் 250 மி.மீ வரை மழையளவு பதிவானது.
- இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் எழுத்தாளர் டேவிட் கிங் "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே" எனறு திட்டவட்டமாக்க் கூறுகின்றார்.

- ஐக்கிய நாடுகள் அவை 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை UNFCCC - (United Nations Framework Convention on Climate Changes) உருவாக்கியது. அந்த அமைப்பில் தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன. பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது.
- பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கணக்கெடுத்தால் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இந்த பட்டியலில் இந்தியாவும் உள்ளன.

**புயலுக்கு பெயர்**

சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைப்பதற்காக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியள்ளது. அதன்படி வங்கக்கடலிலும், அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்க இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டுப் பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கின்றன. அந்த பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

- இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009 ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர். 2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு புவியின் வெப்பம் ஆண்டிற்குப் ஆண்டு உயர்ந்துகொண்டே போகிறது.
- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- குஜராத்தில் ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இதன் விஞ்ஞானிகள் மழையைக் கணிக்கும் அறிகுறிகளை வெளியிட்டுள்ளனர்.
- ஜூன் 5, உலக சுற்றுச்சூழல் நாள்.

## பிறகொரு நாள் கோடை

- அய்யப்ப மாதவன் இதழியல் துறை, திரைத்துறை சார்ந்து இயங்கி வருபவர்.
- 'இன்று' என்ற கவிதைக் குறும்படத்தையும் மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி முதலான கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## நெடுநல்வாடை

- பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை.
- இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று, 188 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
- தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாகவும் போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

## முதல்கல்

- உத்தமசோழன் (செல்வராஜ்) எழுதிய "முதல்கல்" கதை பாடமாக உள்ளது.
- மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல்பூக்கள் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்.
- "கிழக்கு வாசல் உதயம்" என்ற மாத இதழை கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

## சான்றோர் சித்திரம்

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் 'தாது வருடப் பஞ்சம்' (கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876 - 1878) என்பர்.
- இந்த பேரிடர் காலத்தில் மாயூரம் வேதநாயகம் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார் "நீயே புருஷ மேரு" என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார்.
- தமிழின் முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' ஐ இயற்றியவர்.
- மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றினார்.
- கி.பி.1805 முதல் கி.பி.1861 ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதல்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்.
- பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, குசுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.
- இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்.

### தகவல்கள்

- 1977 ஆம் ஆண்டில் கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி வங்காரி மத்தாய் பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். 2004 ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## இயல் - 3
## தமிழர் குடும்ப முறை - பக்தவத்சல பாரதி

- ஆசிரியர் - பக்தவத்சல பாரதி. பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது.
- இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானுடவியல், தமிழர் மானுடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

- இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வருகிறது.
- சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை.
- "இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
  மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே
  மனையகம் புகாஅக் காலை யான" - எனும் தொல்காப்பிய நூற்பா 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களை குறிப்பிடுகின்றது.
- இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.

- மருதத்தினைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினை காண முடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனவும் வழங்கப்பெற்றுள்ளன.
- 'மனையோள்' எனும் சொல்லும் சங்கப்பாடல்களில் பயின்றுவரும் சொல்லாகும். இதன்மூலம் மனை என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை அறியலாம்.
- மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும்வரை உள் காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.

## தாய்வழிக் குடும்பம்

- சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.

  - சிறுவர்தாயே பேரிற் பெண்டே - புறம்
  - செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் - புறம்
  - வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் - புறம்
  - முளரிமருங்கின் முதியோள் சிறுவன் - புறம்
  - என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் - கலித்தொகை.

  முதலான தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டது. இவனது மகன் என கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. இவை அனைத்தும் சங்க காலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

## தந்தைவழிக் குடும்பம்

- மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் 'சிலம்புகழி' நோன்பு செய்திருக்கிறாள்.
  நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
  எம்மனை வதுவை நல்மணம் கழிக - ஐங்குறுநூறு
- "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே"
  என்னும் குறுந்தொகை பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது.

## தனிக்குடும்பம்

- "மறியிடைப்படுத்த மான்பிணைபோல்" - ஐங்குறுநூறு.
  மகனை நடுவணாகக்கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர்.

## விருந்தினர் இல்லம்

- ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் அழகாக மொழியாக்கம் செய்தவர் கோல்மன் பார்க்ஸ். அதனைத் தமிழில் "தாகங்கொண்ட மீனொன்று" என்ற தலைப்பில் என்.சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ளார்.
- ஜலாலுத்தீன் ரூமி ஆப்கானிஸ்தான் நாட்டில் கி.பி.1207 ஆம் ஆண்டில் பிறந்தார். பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்க்களில் ஒருவர். இவரது சூஃபி தத்துவப் படைப்பான **'மஸ்னவி'** 25,600 பாடல்களைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மஸ்னவி என்பது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு.

- ஜலாலுத்தின் ரூமியின் புகழ்பெற்ற மற்றொரு நூல் 'திவான்-ஈ-ஷம்ஸ்-ஈ-தப்ரீஸி என்பதாகும்.

## கம்பராமாணம்

- வேடுவர் தலைவன் குகன்.
- இராமன் இளவரசான இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்கிறான். பின்னாளில் அவனைச் சந்திக்கும் பரதன் கூட "எனக்கும் மூத்தோன்" எனக் குகனை ஏற்கிறான்.
- இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்து சண்டையிட்டுக் காயப்படுகிறான்.
- இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள் இவள். அவ்வகையில் காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள் சவரி.
- சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான்.
- நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம். குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றிவரும் கதிரவனின் மகனான சுக்ரீவனும் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே. உன்னுடன் (வீடணன்) சேர்ந்து எழுவர் ஆனோம் என்று இராமன் குறிப்பிடுகிறார்.
- சொல்லும் பொருளும்
  அமலன் - இராமன், இளவல் - தம்பி, நளிர்கடல் - குளிர்ந்தகடல், உன்னேல் - எண்ணாதே, அனகன் - இராமன், உவா - அமாவாசை, உடுபதி - சந்திரன், செற்றார் - பகைவர், கிளை - உறவினர்.
  அருங்கானம் = அருமை+கானம்
- இந்நூலுக்கு கம்பர் இராமாவதாரம் என்னும் பெயர் சூட்டினார். கம்பரது காலம் 12 ஆம் நூற்றாண்டு.

## உரிமைத்தாகம்

- 'உரிமைத்தாகம்' என்னும் இச்சிறுகதை 'பூமணி சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் உள்ளது.
- பூமணி கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர்.
- பூ.மாணிக்கவாசகர் என்ற தனது பெயரைச் சுருக்கிப் பூமணி என்ற பெயரில் எழுதி வருகிறார்.
- அறுப்பு, வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுப்புகள்.
- வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை உள்ளிட்ட புதினங்களை எழுதியுள்ளார்.
- 'கருவேலம்பூக்கள்' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார்.
- 'அஞ்ஞாடி' என்னும் புதினத்திற்காக 2014 இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றள்ளார்.

## சான்றோர் சித்திரம்

- பரிமாற் கலைஞர்
- 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை.தாமோதரனாரால் போற்றப்பட்டார் பரிதிமாற் கலைஞர்.

- தந்தையாரிடம் வடமொழியையும், மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்.
- எப்.ஏ (F.A - First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார்.
- சென்னைக் கறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்றார்.
- 1893 ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.
- ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் 'களவழி நாற்பது' நூலைத் தழுவி 'மான விஜயம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.
- ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது 'தனிப்பாசுரத் தொகை' என்னும் நூல் ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.
- மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய 'ஞானபோதினி' அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது.
- தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின் மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே.
- பின்னாளில் 2004 ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்று அறிவித்தது.
- பெறோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரை தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்து கொண்டார்.
- தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றி சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாக்க் கொண்டிருந்த இவர் தம் 33 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.
- "பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. "திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி". ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழியாம்" என்றார்.

- சொல்லும் பொருளும்
  நவ மதி - புதுமையான ஒளிமயமான அறிவு, வசி - உயர்ந்த, அடவி பெருகுதல், காடு, திரவியம் - செல்வம்

## திருக்குறள்

- இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று.
- திருக்குறள் என்பது அடையடுத்த கருவி ஆகுபெயர் ஆகும்.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இவற்றுள் நால் என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
  வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - பாரதி
- வள்ளுவனைப் பெற்றால்
  பெற்றதே புகழ் வையகமே - பாரதிதாசன்

| பால் | அதிகாரம் எண்ணிக்கை | இயல் எண்ணிக்கை | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் - 4<br>இல்லறவியல் - 20 |

| | | | |
|---|---|---|---|
| | | | துறவறவியல் - 13<br>ஊழியல் - 1 |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் - 25<br>அமைச்சு இயல் - 32<br>ஒழிபியல் - 13 |
| இன்பம் | 25 | 2 | களவியல் - 7<br>கற்பியல் - 18 |
| | 133 | 9 | |

JACOB'S
GREAT MINDS

## 12 ஆம் வகுப்பு - தமிழ்
## இயல் - 4
## பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள்

- ஆசிரியர் தமிழ்த்தாத்தா உ.வே.சா.
- மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி உள்ளட்ட பட்டங்களை பெற்றவர்.
- கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- 1932 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
- அவரின் திருவுருவச் சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் உள்ளது.
- சென்னையில் திருவான்மியூரின் இவர் பெயரில் நூலகம் உள்ளது.

- மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர் உயிரின மருத்துவருமான வெள்ளக்கால் ப. சுப்பிரமணியனார்..
- வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான மா. இராசமாணிக்கனார் மௌனகுருவிடம் கல்வி கற்றவர்.
- இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை என்னும் நூல் - பேராசிரியர் அ.கா. பெருமாள்.

| | |
|---|---|
| வித்தியாரம்பம் | கல்வித் தொடக்கம் |
| வித்தியாப்பியாசம் | கல்விப் பயிற்சி |
| உபாத்தியாயர் | ஆசிரியர் |
| அக்ஷராப்பியாசம் | எழுத்துப் பயிற்சி |
| கீழ்வாயிலக்கம் | பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| மேல்வாயிலக்கம் | பின்ன எண்ணின் மேல்தொகை |
| குழிமாற்று | பெருக்கல் வாய்ப்பாடு |
| சீதாள பத்திரம் | தாழை மடல் |
| நவத்வீபம் | வங்காளத்தில் உள்ள ஓர் ஊர் |

### வித்தியாரம்பம்

- முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது பெற்றோர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக கொடுத்து வந்தார்கள்.
- உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றி சொல்லுவான்.
- இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்ப' தென்று கூறுவார்கள்.
- உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களில் 'சட்டாம்பிள்ளை முறை' வைப்பதுண்டு.

### மையாடல்

- இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று சொல்வார்கள்.
- 'ஐயான் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் என்கிறது சீவகசிந்தாமணி.
- மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - தமிழ்விடு தூது.
- 'பிரபவாதி சுவடி' என்ற புத்தகத்தை பேராசிரியர் அ.கா. பெருமாள் எழுதினார்.

- இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு 'நாராசம்' என்று பெயர்.

**எழுத்தாணிகள்**

- மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள்.
- மாணவர்கள் எழுத்துத் திறனை மேம்படுத்த ஆசிரியர் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்கு சட்டமென்று பெயர்.
- சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு 'தூக்கு' என்று பெயர். இதனை 'அசை' என்றும் சொல்வதுண்டு.

## இதில் வெற்றி பெற

- இக்கவிதை சுரதாவின் துறைமுகம் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- இயற்பெயர் - இராசகோபாலன்.
- அப்பெயரை பாரதிதாசன் மீது கொண்ட பற்றினால் சுப்புரத்தினதாசன் என்று மாற்றி, அதன் சுருக்கமான சுரதா என்னும் பெயரில் மரபுக் கவிதைகளை எழுதினார்.
- **'காவியம்'** என்ற இதழை நடத்தியதோடு **இலக்கியம், விண்மீன், ஊர்வலம்** போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியுள்ளார்.
- தேன்மழை, துறைமுகம், மங்கையர்கரசி, அமுதும் தேனும் உள்ளிட்ட பல நூல்களை படைத்துள்ளார்.
- தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

## இடையீடு

- இக்கவிதை சி. மணியின் இதுவரை என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- இயற்பெயர் - சி.பழனிச்சாமி.
- இவர் 'நடை' என்னும் சிற்றிதழை நடத்தியவர்.
- இலக்கணம் பற்றிய 'யாப்பும் கவிதையும்' என்னும் நூலும், வரும் போகும், ஒளிச்சேர்க்கை ஆகிய கவிதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.
- ஆங்கிலப்பேராசிரியரான இவர் 'தாவோ தே ஜிங்' எனும் சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- இவர் புதுக்கவிதைகளில் அங்கத்தை மிகுதியாக பயன்படுத்தியவர்.
- இருத்தலின் வெறுமையைச் சிரிப்பும் கசப்புமாகச் சொன்னவர்.
- விளக்கு இலக்கிய விருது, தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழக விருது, ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது போன்றவற்றை பெற்றுள்ளார்.
- வே, மாலி, செல்வம் என்ற புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

## புறநானூறு

- சொல்லும் பொருளும்
  வள்ளியோர் - வள்ளல்கள், வயங்குமொழி - விளங்கும் சொற்கள், உரன் - வலிமை, வறுந்தலை - வெறுமையான இடம், காவினெம் - கட்டிக்கொள்ளுதல், கலன் - யாழ், மழு - கோடரி.
- சிற்றரசரான அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் தராமல் காலம் நீட்டித்தபோது ஔவையார் பாடிய பாடலே இப்பாடப்பகுதி.

- ஔவையார் பாடியதாக அகநானூற்றில் 4, குறுந்தொகையில் 15, நற்றிணையில் 7, புறநானூற்றில் 33 என 59 பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

## பாதுகாப்பாய் ஒரு பயணம்

- சாலைப்போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் 103 ஐ தொடர்பு கொள்ளலாம்.
- இந்தியா உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு.
- ஏறக்குறைய 55 இலட்சம் கி.மீ. சாலைகள் இந்தியாவில் உள்ளன.
- பாரிஸ் நகரத்தில் 1909 ஆம் ஆண்டு நடந்த முதல் பன்னாட்டு சாலை அமைப்பு (International Road Congress) மாநாட்டில் ஒரு பொதுவான சாலை விதி வேண்டும் என்னும் உடன்படிக்கை ஏற்பட்டது.

## சான்றோர் சரித்திரம்

- சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்கு சென்றார் ஒருவர். அங்கு தமிழ்ப் போராசிரியர் பரிதிமாற் கலைஞர் ஆவார்.
- பரிதிமாற்கலைஞர் "குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள் என்றார் பேராசிரியர்.
- 'அஃது' என்பது ஆய்தத் தொடர் குற்றியலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம், 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகம் என்றும் விளக்கினார் பரிதிமாற்கலைஞர்.
- மலைமலையடிகளின் இயற்பெயர் சுவாமி வேதாசலம் ஆகும்.
- ஞானசாகரம் (1902), ORIENTAL MYSTIC MYNA (1908). OCEAN OF WISDOM (1935). முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாசிரியர் ஆக திகழ்ந்தார்.
- முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.

## இயல் 5
## மதராசப்பட்டினம்

சென்னையின் தொன்மை

- சென்னையில் ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களிலே ஒன்று எனலாம்.
- பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடாரி, இந்திய அகழாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது.
- இன்று சென்னையில் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் கி.பி 2 ம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.
- பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது.
- பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி, வேங்கடசாமி, ப. ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்த செய்தியை 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதையாக்கியிருக்கின்றார்.

- சென்னைப் பகுதியில் போர்த்துக்கீசியர் காலத்தில் கூவம் அழகான ஆறாக கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது பற்றி செய்தி உள்ளது. அதற்கு திருவல்லிக்கேணி ஆறு என்றும் அதனை அழைத்தனர்.
- சென்னை, வட சென்னைக்குக் கொற்றலையாறு, மத்திய சென்னைக்குக் கூவம், தென்சென்னைக்கு அடையாறு, அதற்கும் கீழே பாலாறு இந்த நான்கு ஆறுகளையும் இணைக்க்கூடிய பக்கிங்காம் கால்வாய் மற்றும் காட்டன் கால்வாய் ஆகியவை சென்னையின் நீர் ஆதாரமாக திகழ்கின்றது.
- கூவத்தினை சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639 ல் '**பிரான்சிஸ் டே**' வாங்கினார்.
- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.
- அதேபோல் வணிகர்கள் மற்றும் வெள்ளையர்களின் தேவைகளை நிறைவேற்றும் பகுதி 'கருப்பர் நகரம்' எனப்பட்டது. இவ்விரு பகுதிகளுமே மதராசப்பட்டினம் ஆகும்.
- அதற்குப் பின் வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டது. இதனை ஆங்கிலேயர் இரண்டும் சேர்ந்து மதராஸ் என்றனர்.
- ஆங்கிலேயர் 'எலி யேல்' (Elihu Yale) சென்னை மாகாணத்தின் முதன் தலைவர் ஆனார். அவரைத் தொடர்ந்து தாமஸ் பிட் தலைவரானார்.
- தாமஸ் பிட்டின் ஆட்சிக் காலத்தில் சென்னையின் பொற்காலம் என்பர்.
- 1715 ல் உருவான புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறை பள்ளியாகும்.
- சென்னை பல்கலைக்கழகம் 1857ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- 1914 இல் பெண்களுக்கென தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.
- ஆங்கிலேயரின் உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி.

### இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை

- முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்திய பாரம்பரிய பாணி ஆகியவற்றை கலந்து உருவாக்கப்பட்டது. 1768ல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனையே ஆகும்.
- ஆவணங்களை முறையாக கையாளும் பழக்கம் கொண்ட ஆங்கிலேயர் உருவாக்கிய 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்துள்ளது. இது இன்றைய தமிழ்நாடு ஆவணக் காப்பகமாக செயல்படுகிறது.
- இந்தோ - சராசனிக் கட்டடக்கலைப் பாணியில் அமைந்தது சென்னை நீதிமன்றம்.
- 1856 ல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

### சென்னை இலக்கிய சங்கம்

1812 ல் கோட்டை கல்லூரியின் இணைவாக உருவானது இந்நூலகம்,

### கன்னிமாரா நூலகம்

1860 ல் அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்நூலகம், இந்தியாவின் முதல் பொது நூலகமாகும்.

### கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக்கொண்டு 1869 ல் உருவாக்கப்பட்டது.

### அண்ணா நூற்றாண்டு நூலகம்

2010ல் தொடங்கப்பட்ட இந்நூலகம் ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய நூலகம் ஆகும்.

**தமிழாய்வு நூலகங்கள்**

சிறப்பு நிலையில் தமிழாய்வு நூல்களைக் கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மறைமலையடிகள் நூலகம், செம்மொழித் தமிழாய்வு நூலகம், உ.வே.சா நூலகம் போன்றவை முக்கியமானவை.

## தெய்வமணிமாலை

- ஆசிரியர் - இராமலிங்க அடிகளார்
- பாடல் - ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
  உத்தமர்தம் உறவுவேண்டும்.
- இப்பாடல் இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள தெய்வமணிமாலை என்னும் பாமாலையில் உள்ளது.
- இப்பாடல் சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டும் 'தெய்வமணிமாலை' ஆகும்.
- சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவரும் பசிப்பிணி போக்கியவருமான அடிகள் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தார்,
- "வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வரிகள் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை.
- திருவருட்பா, ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை இவருடைய உரைநடை நூல்கள் ஆகும்.

## தேவாரம்

- சொல்லும் பொருளும்
  கலிவிழா - எழுச்சி தரும் விழா, மடநல்லார் - இளமை பொருந்திய பெண்கள், பலிவிழா - திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா.
- பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்பு.
- இவர் பாடல்கள் இசைப் பாடல்களாகவே திகழ்கின்றன.
- இப்பாடல்கள் நம்பயாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளன.
  இப்பாடல்களக்சகு 'தேவாரம்' என்று பெயர்.

## அகநாநூறு

- சொல்லும் பொருளும்
  வேட்டம் - மீன் பிடித்தல், கழி - உப்பங்கழி, செறு - வயல், கொள்ளை - விலை, என்றூழ் - சூரியனின் வெப்பம், விடர் - மலைவெடிப்பு, கதழ் - விரைவு, உமணர் - உப்பு வணிகர், எல்வளை - ஒளிரும் வளையல், ஞமலி - நாய், வெரீஇய - அஞ்சிய, மதர்கயல் - அழகிய மீன், புனவன் - கானவன், அள்ளல் - சேறு, பகடு - எருது.
- உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர். பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர்.
- பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு.
- அகநானூறு எட்டுத்தொகை நூல்களுன ஒன்று. 3 பிரிவுகளை உடையது.

- களிற்றியானைநிரை - 120, மணிமிடை பவளம் - 180, நித்திலக்கோவை - 100 எனப் பாடல்கள் உள்ளன.
- அகப்பாடல் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார் ஆவார். நெய்தல் திணை பாடல்களை பாடுவதில் வல்லவர்.
- அம்மூவனார் பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

## தலைக்குளம்

- ஆசிரியர் - தோப்பில் முகமது மீரான்.
- தோப்பில் முகமது மீரான் எழுதிய 'ஒரு குட்டித் தீவின் வரைபடம்' என்ற சிறுகதை தொகுப்பில் இடம்பெற்ற இந்த தலைக்குளம் கதை. .
- இவர் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினம் என்னும் சிற்றூரில் 1944ல் பிறந்தார்.
- இவர் எழுதிய 'சாய்வு நாற்காலி' எனும் புதினம் 1997ல் சாகித்திய அகாதெமி விருதினை பெற்றது.
- துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளது.

- வட்டார வழக்கு - புதுமைப்பித்தன் நெல்லைத் தமிழும், சண்முகசுந்தரம் கோவைத்தமிழும், ஜெயகாந்தன் சென்னை வட்டாரத் தமிழிலும், தி.ஜானகிராமன் தஞ்சைத் தமிழிலும், தோப்பில் முகமது மீரான் குமரித் தமிழிலும் எழுதிப் புகழ் பெற்றவர்கள்.
- கி.ராஜநாராயணன் கோவில்பட்டி வட்டாரத் தமிழைப் பயன்படுத்திப் படைத்தார். தம்முடைய வட்டார எழுத்திற்கு அவர் "கரிசல் இலக்கியம்" என்று பெயரிட்டார்.
- சிறுகதைகள் வட்டாரம் சார்ந்து தொகுக்கப்பட்டுத் "தஞ்சைக் கதைகள்" என்பது போன்று வெளியீடு பெறுகின்றன.

## படிமம்

- படிமம் என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்.
- தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறினார். காட்சி தருகிற உவமைகள், காட்சி தரா வெறும் உவமைகள் என இரு பிரிவாக உவமைகள் பிரிக்கலாம்.
- படிமம் என்பது உவமையினாலும் அமைவது. படிமம் காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது.

## சான்றோர் சரித்திரம்

### சோமசுந்தர பாரதியார்

- காலம் (1879 -1959).
- நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார்.
- வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு வ.உ.சி. யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.
- 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிட்டுள்ளார்.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றியுள்ளார்.

- தேசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.
- தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார்.
- சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார்.
- வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத்தக்கது.

### ஆங்கில சொல்லுக்கான தமிழ் சொல்

- Affidavit - ஆணை உறுதி ஆவணம், Allegation - சாட்டுரை, Conviction - தண்டனை, Jurisdiction - அதிகார எல்லை, Plaintiff - வாதி.

## இயல் - 6
## திரைமொழி

- தாமஸ் ஆல்வா எடிசன் அசையும் உருவங்களைப் படிம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தார்.
- அதன் பிறகுதான் படிபிடிப்புக் கருவியோடு, திரையிடும் கருவியையும் (Projector) சேர்த்து 1895 ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள், பிரான்சின் தலைநகரமான பாரீசில் ‘கிராண்ட் கபே’ விடுதியில் லூமியர் சகோதரர்கள் மூலம் திரைப்படம் எனும் கலை அறிமுகப்படுத்தப்பட்டது.
- அன்று ‘கிராண்ட் கபே’ விடுதியில் லூமியர் சகோதரர்கள் திரையிட்ட சில துண்டுப் படங்களில் ஒன்று ‘ரயிலின் வருகை’.
- அடுத்த நிலையில் திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் என கண்டுபிடித்தவர் ஜார்ஜ் மிலி என்பவர்.
- நாடகத்தை ஒற்றைக் கோணக்கலை எனக் கூறுவர்.
- நாடகங்கள் காலத்தில் ஒலிபரப்புக் கருவிகள் இல்லாததால் வசனங்களை உரக்கப் பேச வேண்டிய தேவையிருந்தது.
- திரையரங்கில் மவுனப்படங்கள் ஓடிக்கொண்டிருக்க, திரைக்கு அருகே ஒருவர் ஒலிவாங்கியைப் பிடித்து, கதை சொல்லும் காலமும் இருந்தது. அவருக்கு ஆங்கிலத்தில் ‘நேரேட்டர்’ என்று பெயர்.

### சார்லி சாப்ளின் வாழ்க்கை

- இலண்டனில் பிறந்தவர்.
- ‘லிட்டில் டிராம்ப்’ **(Little Trump)** என்று அவர் உருவாக்கிக் கொண்ட தோற்றம் அவரைப் பேசப்பட்ட நாயகனாக்கியது.
- வறுமை மிக்க தன் இளமை வாழ்வை **The Kid** என்ற வெற்றிப் படமாக்கினார்.
- ‘யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்’ என்ற பட நிறுவனத்தைத் தொடங்கினார்.
- அவரது மேதைமையும் திறமையும் ‘தி கோல்டு ரஷ்’ (The Gold Rush), ‘தி சர்க்கஸ் (The Circus) போன்ற காவியப் படங்களாக உருவாகின.
- அவர் பேசும்படங்கள் உருவான காலத்தில், தோற்பார் என எதிர்பார்த்தனர். எதிர்பார்ப்புகளை முறியடித்து ‘சிட்டி லைட்ஸ்’ (City Lights) என்ற படத்தை எடுத்ததன் வாயிலாக எதிரிகளின் வாய்களை அடைத்தார்.
- மூன்று ஆண்டு உழைப்பில் ‘மாடர்ன் டைம்ஸ்’ **(Modern Times)** படத்தை வெளியிட்டார். இதில் அன்றைய தொழில்மய உலகில் கேடுகளை விமரிசனம் செய்தார்.
- அவரது சாதனைப்படமான ‘தி கிரேட் டிக்டேட்டர்’ ( The Green Dictator) 1940 ல் வெளியானது. ஹிட்லர் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த காலத்தில் அவரை விமரிசித்து வந்த முதல்படம் அது.

- 'மனித குலத்திற்கு தேவை போரல்ல, நல்லுணர்வும் அன்பும்தான்' என்பதைப் 'தி கிரேட் டிக்டேட்டர்' படம் உணர்த்தியது.
- இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.

## கண்களும் மூளையும் காட்சி மொழியும்

- நாம் கடற்கரையில் நின்று கடலை பார்ப்பது மீ சேய்மைக் காட்சித்துணிப்பு (EXTREME LONG SHOT) என்பர்.
- பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இருபக்கங்களிலும் பார்ப்பது சேய்மைக் காட்சித் துணிப்பு(LONG SHOT) என்பர்.
- நாம் நடந்து வரும்போது எதிர்ப்படும் ஆட்களை நாம் இடுப்பு வரை மட்டுமே பார்க்கிறோம், இங்குக் கண் ஆளை முழுதாகப் பார்த்தாலும் நம் கவனம், இடுப்புவரை மட்டுமே எடுத்துக் கொள்கிறது இதனை நடுக் காட்சிதுணிப்பு (MID SHOT) என்பர்.
- வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மாவின் முகத்தை மட்டுமே பார்க்கிறோம். அம்மாவின் முகம் மட்டுமே நமக்கு பதிவாகிறது இதனை அண்மைக் காட்சித்துணிப்பு (CLOSE UPSHOT) என்பர்.
- காலிலிருந்து செருப்பைக் கழற்றி வாசலில் விடும்போது, கண் கீழே குனிந்து செருப்பை மட்டும் பார்க்கிறது இது மீ அண்மைக் காட்சித்துணிப்பு (EXTREME CLOSEUP SHOT) என்கிறோம்.
- தென்னிந்திய சினிமாவில் முதலில் சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர் பிரெஞ்சுக்காரர் டுபான் என்பவரிடமிருந்து 2500 ரூபாய்க்கு ஒரு புரொஜக்டரையும் சில துண்டுப்படங்களையும் வாங்கி படம் காட்ட ஆரம்பித்தார்.

## படத்தொகுப்பு

- 'மாடர்ன் டைம்ஸ்' (1936) திரைப்படத்தில் ஒரு காட்சியில் செம்மறியாடுகள் முண்டியடித்துச் செல்கின்றன. மற்றொரு காட்சியில் மனிதர்கள் தொழிற்சாலைக்குள் முண்டியடித்து செல்கின்றனர். இக்காட்சி மூலமே காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன்மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்கிக் காட்ட முடியும். இவ்வாறு காட்டுவதை 'குலஷோவ் விளைவு'(KULESHOV EFFECT) என்பார்கள்.
- தி கிரேட் டிக்டேட்டர் என்னும் கதையில் ஹிட்லரை உருவகப்படுத்தி ஹென்கோல் என்னும் கதைப்பாத்திரத்தை, சாப்ளின் உருவாக்கினார்.

## கவிதைகள்

- கவிஞர் நகுலன் (இயற்பெயர் - டி.கே. துரைசாமி) கும்பகோணத்தில் பிறந்தவர்.
- மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், வாக்குமூலம், சுருதி உள்ளிட்ட சிறு சிறு தொகுதிகளாக வந்துள்ளன இவருடைய கவிதைகள்.
- பாரதியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
- இருப்பதற்கென்றுதான்
  வருகிறோம்
  இல்லாமல்
  போகிறோம் - நகுலன்

## சிலப்பதிகாரம்

- சொல்லும் பொருளும்
  கழை - மூங்கில், விரல் - ஆடவர், ஓவிய விதானம் - ஓவியம் தீட்டப்பட்ட பந்தல், நித்திலம் - முத்து, விருந்து - புதுமை, நாவலம்பொலம் - சாம்பூநதம் என்னும்

உயர்ந்த வகைப் பொன், தலைக்கோல் - நாடகக் கணிகையர் பெறும் பட்டம், அரசு உவா - பட்டத்து யானை, பரசினர் - வாழ்த்தினர், பல்இயம் - இன்னிசைக் கருவி, குயிலுவ மாக்கள், - இசைக் கருவிகள் வாசிப்போர், தோரிய மகளிர் - ஆடலில் தேர்ந்த பெண்கள், வாரம் - தெய்வப்பாடல், ஆமந்திரிகை - இடக்கை வாத்தியம், இலைப்பூங்கோதை - அரசன் அணிந்துள்ள பச்சை மாலை, கழஞ்சு - ஒரு வகை எடை அளவு.

- யாழின் வகைகள்
  21 நரம்புகளைக் கொண்டது பேரியாழ்
  17 நரம்புகளைக் கொண்டது மகரயாழ்
  16 நரம்புகளைக் கொண்டது சகோடயாழ்
  7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டியாழ்
- தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது.
- அரசகுடி அல்லாதவர்களைக் காப்பியத்தின் தலைமக்களாக வைத்துப் பாடியதால் அது 'குடிமக்கள் காப்பியம்' எனப்படுகிறது.
- புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்கள் முறையே சோழ, பாண்டிய, சேர மன்னர்களைப் பற்றியவை என்பதால் 'மூவேந்தர் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது.
- முதன் முதலாக பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, அவள் அரசனை எதிர்த்து வழக்காடியதைப் பாடியதால் 'புரட்சிக் காப்பியம்' எனப்படுகிறது.
- இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கூறுகளும் இடம்பெற்றுள்ளதால் 'முத்தமிழ்க் காப்பியம்' எனப்படுகிறது.
- செய்யுளாகவும், பாடலாகவும், உரைநடையாகவும் பாடப்பட்டுள்ளதால் இது 'உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப்படுகிறது.
- இந்நூல் 'பொதுமைக் காப்பியம்', 'ஒற்றுமைக் காப்பியம்', 'வரலாற்றுக் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'இரட்டைக் காப்பியங்கள்' என அழைக்கப்படுகின்றன.
- சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- வரந்தரு காதையில் இளங்கோவடிகள் தன்னைப்பற்றிக் குறிப்பிடுகையில் தான் சேரன் செங்குட்டுவன் தம்பி என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.
- 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாரதி குறிப்பிட்டுள்ளார்.

## மெய்ப்பாட்டியல்

- சொல்லும் பொருளும்
  நகை - சிரிப்பு, இளிவரல் - சிறுமை, மருட்கை - வியப்பு, பெருமிதம் - பெருமை, வெகுளி - சினம், உவகை - மகிழ்ச்சி
- நூற்பா பொருள்
  சிரிப்பு, அழுகை, சிறுமை, வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி, என்று மெய்ப்பாடு எண் வகைப்படும்.

- இலக்கணக் குறிப்பு
  நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை - தொழிற்பெயர்கள்.
- தொல்காப்பியத்தின் ஆசிரியரான தொல்காப்பியரை தமிழ்ச் சான்றோர் 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன்' என்று போற்றுகின்றார். தொல்காப்பியம் நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார்.

## நடிகர் திலகம்

- “என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது” - மார்லன் பிராண்டோ (ஹாலிவுட் நடிகர்).
- சிவாஜி கணேசன் பெற்ற விருதுகள்
  - ஆப்பிரிக்க - ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ) சிறந்த நடிகருக்கான விருது.
  - கலைமாமணி விருது
  - பத்ம ஸ்ரீ விருது ( தாமரைத் திரு)
  - பத்ம பூஷன் விருது (தாமரை அணி)
  - செவாலியர் விருது
  - தாதாசாகெப் பால்கே விருது
- மலையாளக் கவிஞரும் நடிகருமான பாலச்சந்திரன் சுள்ளிக்காடு எழுதிய ‘சிதம்பர ஸ்மரண’ என்னும் நூலில் சிவாஜி பற்றி எழுதியுள்ளார். இவரின் இந்நூலை கே.வி.சைலஜா ‘சிதம்பர நினைவுகள்’ என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## காப்பிய இலக்கணம்

- பெயர்க்காரணமும் சொல்லாட்சியும்
  காப்பியத்தை ஆங்கிலத்தில் EPIC என்பர். இது EPOS என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. EPOS என்பதற்கு சொல் அல்லது பாடல் என்பது பொருள். இது வடமொழியில் காவியம் என வழங்கப்படுகிறது
- ஐம்பெருங்காப்பியம் என்ற வகைமை எப்போது தோன்றியது என்று அறிதியிட்டு கூறு முடியவில்லை.
- நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், தனது உரையில் ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரையும், தமிழ்விடுதூது பாடிய புலவர் அந்நூலில் பஞ்சகாப்பியம் என்னும் சொற்றொடரையும் குறிப்பிடுகின்றனர். ‘பொருள்தொகை நிகண்டு’, திருத்தணிகை உலா ஆகிய நூல்கள், பெருங்காப்பியம் ஐந்து எனக் குறிப்பிட்டு அவற்றின் பெயர்களையும் வழங்கியுள்ளன.
- வடமொழியில் ‘காவ்யதர்சம்’ என்னும் நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல் ‘தண்யலங்காரம்’ ஆகும்.
- காப்பியத்தைக் குறிக்கும் பிறயெர்கள்
  பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தெடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மகாகாவியம்.
- காதை - சிலப்பதிகாரம், மணிமேகலை
  சருக்கம் - சூளாமணி, பாரதம்
  இலம்பகம் - சீவக சிந்தாமணி
  படலம் - கந்தபுராணம், கம்பராமாயணம்
  காண்டம் - சிலப்பதிகாரம், கம்பராமாயணம்.

### பெருங்காப்பியம்

- அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பெருங்காப்பியத்தின் திரண்ட பொருளாக அமைந்திருக்க வேண்டும்.
- பதினெட்டு உறுப்புகளும் இயற்கை வருணனைகளாக அமைதல் வேண்டும்.
- சிலப்பதிகாரம் முதலான ஐம்பெருங்காப்பியங்களும் சிறப்பு வாய்ந்தவையே. எனினும், பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் சீவகசிந்தாமணியே என்பர்.

**சிறுகாப்பியம்**

- அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.

**பாவிகம்**

- காப்பியத்தின் பண்பாகப் 'பாவிகம்' என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றன.
- காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.
- "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப்" என்பது கம்பராமாயணத்தின் பாவிகம்.
- "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினையை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது சிலப்பதிகாரத்தின் பாவிகம்.

**அணி இலக்கணம்**

- அணிகளின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் முதன்மையானது தண்டியலங்காரம். இந்நூல் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை ஆகிய செய்யுள் வகைகளைக் கூறுகிறது. இந்நான்கனுள் தொடர்நிலை என்னும் வகை, காப்பியத்தைக் குறிப்பதாகும்.
- தெடர்நிலை ஒரு பாடலையும், மற்றொரு பாடலையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள் வகையைக் குறிக்கும். இது பொருள்தொடர்நிலை, சொல்தொடர்நிலை என்று இருவகைப்படும்.
  எ.கா.பொருள்தொடர்நிலை - சிலப்பதிகாரம், கம்பராமாயணம்
  சொல்தொடர்நிலை - அந்தாதி இலக்கியங்கள்.
- விருத்தம் என்னும் ஒரேவகைச் செய்யுளில் அமைந்தவை சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்.
- பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்த்து சிலப்பதிகாரம்.

| | |
|---|---|
| பாரதியார் | பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு |
| பாரதிதாசன் | பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சஞ்சீவி பர்வத்த்தின் சாரல், வீரத்தாய், புரட்சிக்கவி |
| கவிமணி | மருமக்கள் வழி மான்மியம் |
| கண்ணதாசன் | ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, ஏசுகாவியம் |
| கவியோகி சுத்தானந்த பாரதியார் | பாரசக்தி மகா காவியம் |
| புலவர் குழந்தை | இராவண காவியம் |

## சான்றோர் சரித்திரம்

- வை.மு.கோ (வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்)
- இவருடய முதல் நூல் "இந்திர மோகனா" என்ற நாடக நூல் ஆகும். இவர்தான் "நாவல் ராணி", 'கதா மோகினி', ஏக அரசி என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்டார்.
- இவர் 'ஜகன் மோகி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். 115 நாவல்கள் எழுதியுள்ளார்.
- 'தபால் வினோதம்' என்பது இவரது குறுநாவல் ஆகும்.

# 12 ஆம் வகுப்பு - தமிழ்
## இயல் - 7
## இலக்கிய மேலாண்மை

- இப்பாடப்பகுதி வெ.இறையன்பு எழுதிய 'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலில் உள்ளது.
- தமிழ்நாடு அரசின் இந்திய ஆட்சிப்பணி அலுவலராகப் பணியாற்றி வரும் இவர் இ.ஆ.ப.தேர்வுக்குத் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றவர்.
- வாய்க்கால் மீன்கள், ஐ.ஏ.எஸ் வெற்றிப் படிக்கட்டுகள், ஏழவது அறிவு, உள்ளொளிப் பயணம், மூளைக்குள் சுற்றுலா உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய 'வாய்க்கால் மீன்கள்' என்னும் கவிதை நூல் 1995 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது.

"பலர் துஞ்சவும் தான் துஞ்சான்
உலகு காக்கும் உயர் கொள்கை" - புறநானூறு
"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்து நீர் கடல் பரப்பவும்" - பட்டினப்பாலை

- கடலுக்கான வேறுபெயர்கள் - அரலை, அரி, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, ஆழி, ஈண்டுநீர், உவரி, திரை, பானல், பெருநீர், சுழி, நீராழி, புணர்ப்பு, தென்நீர், பௌவம், முந்நீர், வரி, ஓதம், வலயம் என்பன.
- உரோமாபுரிச் சிப்பாய்கள் பாண்டியப் போர்ப்படையில் இடம் பெற்றிருந்தார்கள் என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் உள்ளது. பட்டினப்பாலையில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது பற்றி 'நுரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
  மழைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும் - பட்டினப்பாலை.
- சங்க இலக்கியங்களின் வாயிலாக முசிறி மிகப்பெரிய துறைமுகமாக, யவனர்களின் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாக இருந்ததை அறிய முடிகிறது.
- ஸ்ட்ரேபோ என்பவர், அகஸ்டஸ் சீசரைப் பாண்டிய நாடுத் தூதுக்குழு ஒன்று கி.மு.20 ஆம் ஆண்டு சந்தித்ததைப் பற்றித் தெரிவிக்கிறார்.
- புறநானூற்றில் யவனரது கப்பல்கள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தெழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்தினான் என்ற செய்தி பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் இடம்பெற்றுள்ளன.
- 126 ஒற்றை வரிகளில் எழுதிய 'துளிகள்' என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்றவர் ஹிராக்ளிடஸ். அவர் கிரேக்க நாட்டவர். "இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது" என்றும், "ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது" என்றும் புகழ்மிக்க கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறார்.

## அதிசய மலர்

- தமிழ்நதி (கலைவாணி) ஈழத்தின் திருகோணமலையைப் பிறப்பிடமாக் கொண்ட கவிஞர்.
- "அதன் பிறகும் மிஞ்சும்" என்னும் கவிதை நூலை இயற்றியவர்.

- நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது (சிறுகதைகள்), சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி (கவிதைகள்), கானல் வரி (குறுநாவல்), ஈழம்: கைவிட்ட தேசம், பார்த்தீனியம் (நாவல்) முதலியவை இவரது படைப்புகள்.

## தேயிலைத் தோட்டப் பாட்டு

ஆசிரியர் - முகம்மது இராவுத்தர்
கும்மி பாடல்கள் 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற 'தேயிலைத் தோட்டப்பாட்டு' என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டவை.

## புறநானூறு

சொல்லும் பொருளும்

காய் நெல் - விளைந்த நெல், மா - ஒருநில அளவு, செறு - வயல், யாத்து - சேர்த்து, தப - கெட, பிண்டம் - வரி

- புறநானூறு புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்பெறுகிறது. இதனை 1894 ஆம் ஆண்டு உ.வே.சா அச்சில் பதிப்பித்தார்.
- கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஜார்ஜ எல் ஹார்ட் **The Four Hundred Songs of War and Wisdom : An Anthology of Poems from Classical Tamil. The Purananuru** என்னும் தலைப்பில் 1999 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- புறநானூறு பாடல்கனை பாடிய புலவர்களுள் ஒருவர் பிசிராந்தையார், பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர். ஆந்தையார் என்பது இப்புலவரின் இயற்பெயர். இவர் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன், அறிவுடைநம்பி, பிசிராந்தையார் அரசனுக்கு அறிவுரை சொல்லக் கூடிய உயர்நிலையில் இருந்த சான்றோராவார்.

## சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் - ஐராவத மகாதேவன்

- கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது சேரல் இரும்பொறை மன்னர்களைப் பற்றிய கல்வெட்டு செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளன.
- ஆதன் என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம். தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் 'பிராம்மி' வரிவடிவத்துடன் தமிழி, தாமிழி, திராவிடி என்று அழைக்கப்டுகிற வேறுபட்ட வரிவடிவங்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் என்ற வரிகள் கல்வெட்டுகளில் கண்டெடுக்கப்பட்டது.
- ஐராவதம் மகாதேவன் தன்னுடைய ஆய்வு நூலான 'எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துகிறார்.
- தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் என்றோ அழைக்க வேண்டும் என்று வேண்டுகோல் விடுக்கிறார்.
- திரு.கே.வி.சுப்பிரமணியனார் என்பவர் பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் என்று குறிப்பிடுகிறார்.
- 1965 ல் மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் சங்க காலப் பாண்டிய மன்னனாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கண்டுபிடித்தார்.

- ஐராவதம் மகாதேவன் எழுதிய இக்கட்டுரை ‘கல்வெட்டு’ இதழில் வெளிவந்தது. இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக இருந்தார்.
- சிந்துவெளி எழுத்துருவை ஆராய்ந்து அவை திராவிட எழுத்துகள் என்பது என்பதை உறுதி செய்தது வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது.
- அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்தன.
- ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது 1970 ல், இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது 1992, தாமரைத்திரு விருது 2009 ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

## தொன்மம்

- தொன்மம் (myth) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது.
- அறத்திற்கு தருமன், வலிமைக்குப் பீமன், நீதிக்கு மனுநீதிச் சோழன், வள்ளல் தன்மைக்குக் கர்ணன் என்று பலவாறு தொன்மக் கதைமாந்தர்களைப் பண்புக் குறியீடுகளாக மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.
- இராமாயணத்தின் அகலிகை கதையை வைதுப் புதுமைப்பித்தன் சாபவிமோசனம், அகலிகை ஆகிய கதைகளை எழுதினார்.
- திருவிளையாடற்புராணத்துச் சிவன், நக்கீரனைக் கொண்டு அழகிரிசாமி என்பவர் ‘விட்டகுறை’, ‘வெந்தழலால் வேகாது’ என்னும் சிறுகதைகளைப் படைத்துள்ளார்.
- தொன்மங்களைக் கொண்டு ஜெயமோகன் (பத்மவியூகம்), எஸ்.ராமகிருஷ்ணன் (அரவாணன்) முதலானோர் புதினங்களை எழுதியுள்ளனர்.
- “முருகு உறழ் முன்பொடு
  கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை” - நற்றிணை.

### இந்திய, கிரேக்க தொன்ம ஒப்புமைகள்

- இந்திரன் - சீயஸ்பிடர், வருணன் - ஊரானாஸ், பலராமன் - டயானிசிஸ், கார்த்திகேயன் - மார்ஸ், சூரியன் - சோல், சந்திரன் - லூனஸ், விஸ்வகர்மன் - வன்கன், கணேசன் - ஜோனஸ், துர்க்கை - ஜீனோ, சரஸ்வதி - மினர்வா, காமன் - இராஸ் என்று பல ஒப்புமைகள் உள்ளன.

## சான்றோர் சித்திரம்

- மா.இராசமாணிக்கனார்.
- தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாவது வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார்.
- சங்ககாலம் தொடங்கி பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர், சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் ‘மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்’ என்ற நூலை இயற்றியவர்.
- இவர் சோழர் வரலாறு, பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.
- 2006 - 2007 இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

## இயல் - 8
## நமது அடையாளங்களை மீட்டவர்

- மயிலை சீனி.வேங்கடசாமி சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.

- ச.த.சற்குணர், கிறித்துவமும் தமிழும் என்ற பொருள் குறித்து உரையாற்றினார். அவ்வுரையைக் கேட்ட ஆர்வத்தினால் 'கிறித்துவமும் தமிழும்' என்னும் முதல் நூலை எழுதினார்.
- 'பௌத்தமும் தமிழும்', சமணமும் தமிழும்' ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.
- மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் குறித்த நூல்களைத் தொடர்ந்து மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனைப் பற்றியும் அவர் எழுதினார். இது தமிழில் அம்மன்னனைப் பற்றி எழுதப்பட்ட முதல் நூலாகும்.
- 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலை எழுதியுள்ளார்.
- 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல் கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும். இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும்.
- தமது நூல்களில் படங்களைத் தானே வரைந்து வெளியிட்டது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.
- களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு-சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.
- சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள் ஆகிய நூல்களை எழுதினார். இவருடைய பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் எனும் நூல் ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் எனலாம்.
- 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணபணிகளில் ஒன்றாகும்.
- தாங்கெட நேர்ந்த போதும்<br>தமிழ்கெட லாற்றா அண்ணல்<br>வேங்கடசாமி என்பேன் என்றார் - பாரதிதாசன்.
- 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.
- எனவே, மகேந்திரவர்மன் இயற்றிய 'மத்த விலாசம்' என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கியுள்ளார்.
- சுவாமி விபுலானந்த அடிகள், 'மியிலை சீனி. வேங்கடசாமி வயதில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர், நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.
- 1962 இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டிக் கேடயம் வழங்கியது. மதுரை காமாராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதினை அளித்தது.
- சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினர்.
- சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சன்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

## முகம்

- தமிழின் நவீன பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர் சுகந்தி சுப்பிரமணியன்
- புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் ரகசியம் ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளைப் படைத்தவர்.

## இரட்சணிய யாத்திரிகம் -

## எச்.ஏ.கிருட்டிணனார்

### சொல்லும் பொருளும்

- உன்னலிர் - எண்ணாதீர்கள், ஓர்மின் - ஆராய்ந்து பாருங்கள், ஏதமில் - குற்றமில்லாத, நுவன்றிலர் - கூறவில்லை, கூவல் - கிணறு, ஒண்ணுமோ - முடியுமோ, உததி - கடல், கண்டகர் - கொடியவர்கள், மேதினி - உலகம், கீண்டு - பிளந்து, வாரிதி - கடல், சுவறாதது - வற்றாதது.
- திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்முன்று ஆண்டுகள் தொடராக வெளிவந்த்து.
- இரட்சணிய யாத்திரிகம், 1894 ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.
- 'ஜான் பன்யன்' என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.
- இது 3766 பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம்.
- இது ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது.
- இதன் ஆசிரியர் எச்.ஏ.கிருட்டிணனார்.
- போற்றி திருஅகவல், இரட்சணிய மனோகரம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.
- இவரை 'கிறித்துவக் கம்பர்' என்று போற்றுவர்.

## சிறுபாணாற்றுப்படை

- சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் நல்லூர் நத்தத்தனார். இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. ஒய்மாநாட்டு மன்னான நல்லியக்கோடானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 269 அடிகளில் எழுதப்பட்ட நூல்.

    - பேகன் (ஆவினன்குடி) - பொதினி மலை (பழநி)
    - பாரி - பரம்பு மலை (பிரான் மலை)
    - காரி - மலையமான் நாடு (மலாடு)
    - ஆய் - பொதியமலை
    - அதியமான் - தகடூர்
    - நள்ளி - நளிமலை
    - ஓரி - கொல்லிமலை இவர்களோடு
    - நல்லியங்கோடான் - ஓய்மா நாடு

- **சொல்லும் பொருளும்**

  வளமலை - வளமான மலை (மலைநாடு) இன்று பழநி மலை என்று அழைக்கப்படுவது.

  கலிங்கம்- ஆடை, சுரும்பு - வண்டு, நாகம் - சுரபுன்னை, ஆலமர் செல்வன் - சிவபெருமான், சாவம் - வில், மால்வரை - பெரியமலை, நளிசினை - செறிந்த கிளை, போது - மலர், நாகு - இளமை, குறும்பொறை - சிறு குன்று, மலைதல் - போரிடல், உறழ் - செறிவு, நுகம் - பாரம்.

- கடையேழு வள்ளல்களில் ஒருவர். மயிலுக்கு போர்வை தந்தவன் என்று போற்றப்படுவர் பேகன், இவர் ஆவியர் குலத்தில் தோன்றியவர். பொதினி மலைக்கு தலைவர்.
- கடையேழு வள்ளல்களின் கொடையை பழமொழி நானூறு 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறுகிறது.

- புறநானூறு குறிப்பிடும் மற்றொரு வள்ளல் குமணன். இவன் முதிர மலையை (பழனிமலைத்தொடர்களில் ஒன்று) ஆட்சி செய்த குறுநில மன்னன். தன் தலையை அரிந்து சென்று, தன் தம்பி இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு" கேட்டுக்கொண்டான். இவன் "தமிழுக்கு தலை கொடுத்த குமண வள்ளல்" என்று போற்றப்படுகிறான்.

## கோடை மழை

- சாந்தா தத் காஞ்சிபுரத்தை சேர்ந்த பெண்படைப்பாளர். அமுதசுரபியில் வெளியான "கோடை மழை" என்னும் இச்சிறுகதை "இலக்கிய சிந்தனை" அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றது.
- ஹைதராபாத்தில் வெளியாகும் "நிறை" என்ற மாத இதழின் ஆசிரியராக உள்ளார். "திசை எட்டும்" என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார்.

## குறியீடு

- 19 ஆம் நுற்றாண்டில் 'குறியீட்டியம்' ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
- பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானோர் இக்கோட்பாட்டை விளக்கி வளர்த்தார்கள்.
- குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று. சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இலக்கிய உத்தியும் இன்றைக்குக் குறியீடு என்று நாம் குறிப்பிடும் உத்தியும் ஒன்றுதான்.

## சான்றோர் சரித்திரம்

- 'தமிழின் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சு.ப.மாணிக்கம்.
- 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர்.
- அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றியபோது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்தார்.
- 'தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.
- தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்நெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர்.
- தமிழக அரசு அவருடைய மறைவிற்கு பிறகு திருவள்ளுவர் விருது வழங்கியதுடன் 2006 ஆம் ஆண்டு அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்கிச் சிறப்பு செய்தது.

- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
- "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியேர்சன்.
- வானரங்கள் கனிகொடுத்து மந்தியொரு கொஞ்சும்
  மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் - திரிகூட ராசப்ப கவிராயர்.

- நூல்கள்
    - பாரதியின் கடிதங்கள் - ரா.அ.பத்மநாபன்
    - இலக்கண உலகில் புதிய பார்வை - டாக்டர் பொற்கோ
    - தமிழ் அழகியல் - தி.சு.நடராசன்
    - காட்டுவாத்து - ந.பிச்சமூர்த்தி
    - நெல்லூர் அரிசி - அகிலன்
    - சுவரொட்டிகள் - ந.முத்துசாமி.
    - பத்துப்பாட்டு ஆராய்ச்சி - மா.இராசமாணிக்கனார்
    - இயற்கைக்கு திரும்பும் பாதை - மசானா:புகோகா
    - சுற்றுச்சூழல் கல்வி - ப.ரவி
    - கருப்பு மலர்கள் - நா.காமராசன்
    - வானம் வசப்படும் - பிரபஞ்சன்
    - சக்கரவர்த்தி திருமகன் - இராஜாஜி
    - வயிறுகள் - பூமணி (சிறுகதை)
    - புளிய மரத்தின் கதை - சுந்தர ராமசாமி
    - சிறை - அனுராதா ரமணன்.
    - தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகளார்.
    - தேவாரம் - திருஞான சம்பந்தர்
    - அகநானூறு - அம்மூவனார்
    - தலைக்குளம் - தோப்பில் முகமது மீரான்.
- ஒரு குட்டித் தீவின் வரைபடம் (சிறுகதைத் தொகுப்பு) - தோப்பில் முகமது மீரான்
- ஒரு பார்வையில் சென்னை நகரம் - அசோகமித்திரன்
- சென்னைப் பட்டணம் - ராமச்சந்திர வைத்தியநாத்
- இராமலிங்க அடிகள் வரலாறு - ஊரன் அடிகள்
- கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் - புதுமைப்பித்தன்
- காப்பியத்தமிழ் - இரா.காசிராஜன்
- மெய்ப்பாடு - தமிழண்ணல்.
- பூமிச்சருகாம் பாலையை முத்து பூத்த கடல்களாக்குவேன் - நா.காமராசன்.
- தொல்தமிழ் எழுத்துக்கள் ஓர் அறிமுகம் - செந்தீ நடராசன்
- முச்சந்தி இலக்கியம் - அ.இரா.வெங்கடாசலபதி
- கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள் - குடவாயில் பாலசுப்ரமணியன்
- நீர்க்குமிழி - கே.பாலசந்தர்
- வெள்ளை இருட்டு - இன்குலாப்
- முள்ளும் மலரும் - உமா சந்திரன்.

JACOB'S GREAT MINDS